# விஞ்ஞானமாலை

## மூலமும் உரையும்

நாராயணசுவாமிகள்

சென்னை

1881

உ

சிவமயம்.

சுத்தவைதிகவேதியரும்

அடியவர்பூசைகளுட் சிறந்துவிளங்கும்

ஸ்ரீ விஷ்ணுவணக்கத்

திருவிரதாநுசாரியும்

வடமொழிதென்மொழிச் சோதிடநூல்களில்

மகாவல்லசாஸ்திரியுமாகிய

கடுவைகாவலன்

நாராயணசுவாமிகள்

இயற்றிய

# விதானமாலை.

மூலமும் உரையும்.

யாழ்ப்பாணம் - காரைநகர்

இயற்றமிழ்ப்போதகாசிரியர்

மு. கார்த்திகேயையரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து

தஞ்சாவூர்-சதாவதானம்

சுப்பிரமணியஐயரது

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்.

விஷு ௵ புரட்டாசி ௴.

1881

Registered Copyright.

165404

600 008

O—,194MNS7V
M81

## ஆக்கியோன் பெயர்.

பாரார்புகழும் பரிசார்விதானமா லைப்பனுவல்
பேரார்விதானம் பிழையாதுரைத்தனன் பேருலகிற்
காரார்பொழிற்கு வைக்கிறை*பாற்கட லரன்பயந்த
நாராயணன்பொன்னி நாடன்மறைதெரி நாவினனே.

* அமிர்தசாகரன்.



## படலவகராதி.


| | பக்கம். |
|---|---|
| அரசர்வினைப்படலம் | ௧௫௭ |
| உதயாரூடக்கவிப்புப்படலம் | ௭௩ |
| உற்பாதப்படலம் | ௧௭௩ |
| எச்சவினைப்படலம் | ௧௭௯ |
| ஏர்மங்கலப்படலம் | ௧௩௫ |
| கடிமணப்படலம் | ௯0 |
| கர்ப்பாதானப்படலம் | ௧0௫ |
| காலச்சக்கரப்படலம் | ௮௨ |
| குணகுணப்படலம் | ௨௨ |
| கோசரப்படலம் | ௬௭ |
| சந்திரகெதிப்படலம் | ௬௫ |
| சட்டுவர்க்கப்படலம் | ௭௮ |
| சாதகப்படலம் | ௧௧௩ |
| தீவினைப்படலம் | ௧௬௭ |
| தெருட்சிப்படலம் | ௧0௬ |
| தெய்வப்பிரதிட்டைப்படலம் | ௧௪௧ |
| தெய்வவழிப்படலம் | ௧௪௫ |
| நட்பாட்சியுச்சம்பகைநீசப் படலம் | ௭௬ |
| நல்வினைப்படலம் | ௧௬0 |
| பஞ்சாங்கப்படலம் | ௯ |
| மரபியற்படலம் | ௭ |
| மகாதிசைப்படலம் | ௭௯ |
| மகளிர்வினைப்படலம் | ௧௧௧ |
| மைந்தர்வினைப்படலம் | ௧௨௨ |
| யாத்திரைப்படலம் | ௧௪௯ |


## சூசிகை.

### அ


| | பக்கம். |
|---|---|
| அங்கச்சந்திரன்பலன் | ௧௯௪ |
| அங்கச்சனிபலன் | ௧௯௯ |
| அங்கச்செவ்வாய்பலன் | ௧௯௫ |
| அங்கபுதன்பலன் | ,, |
| அங்கவியாழன்பலன் | ,, |
| அங்கவெள்ளிபலன் | ௧௯௬ |
| அங்காதித்தியன்பலன் | ௧௯௪ |
| அங்குரவிதி | ௯௮ |
| அசுவசாந்தி | ௧௫௯ |
| அட்டகை | ௧௭௨ |
| அட்டமராசியாதியபவாதம் | ௫௧ |
| அதிகமாதம் | ௪௯ |
| அதிகமாதாபவாதம் | ௫0 |
| அத்தமனநட்சத்திரதோஷாபவாதம். | ௫௭ |
| அத்தோதயம் | ௧௪௯ |
| அந்தகாரசித்தோஷாபவாதம் | ௪௩ |
| அந்தரதிசை | ௮0 |
| அபிசித்துமுகூர்த்தம் | ௪௯ |
| அமுதகடிகை | ௨௯ |
| அயனதிசங்கிரமம் | ௫௬ |
| அரக்கர்வயித்தியம் | ௧௬௮ |
| அரிட்டம் | ௧௧௩ |
| அரிட்டாபவாதம் | ௧௨0 |
| அவயோகம் | ௨௨ |
| அவையடக்கம் | ௨ |
| அனபாயாதியோகம் | ௧௨0 |
| அனலாதிகிரகதோஷம் | ௩௪ |
| அன்னப்பிராசனம் | ௧௨௫ |
| அக்ஷராரம்பம் | ௧௨௮ |


### ஆ


| | பக்கம். |
|---|---|
| ஆசிவிஷம் | ௩௩ |
| ஆசிவிஷாபவாதம் | ,, |
| ஆடல்பாடலரங்கேற்ற | ௧௯௩ |
| ஆடிப்பஞ்சமி சித்திரைசங்கிரமபலன். | ௧௮0 |
| ஆண்டுநிறைவு | ௧௨௬ |

பக்கம்.

ஆண்பெண்அலி ௧௫
ஆயுதம்பயில ௧௫0
ஆரூடசக்கரம் ௭௪

இ

இரச்சு ௯௫
இரச்சுமி ௪௨
இரணமோசனம் ௧௬௭
இரத்ததூணம் ௯௪
இராசபிரபுதெரிசனம் ௧௫௬
இராசயோகம் ௧௨௧
இராசிநாழிகை ௭௩
இராசியதிபதி ௯௪
இராப்பகற்கொள்ளும்விரதம் ௧௪௮
இலக்கினதிசை ௮௯
இலக்கினபலன் ௧0௪
இலக்கினமிருத்து ௫௯
இலக்கினவிஷாதிநிஷூத்தாபவாதம். ௪௪

உ

உச்சம் அத்யுச்சம் நீசம் அதிநீசம் ௭௬
உட்ணசிகை ௫௨
உதயபெலம் ௬௩
உத்தராயனம் ௪௬
உபசயகேந்திரம் ௮
உபதேசம் ௧௬௫
உபநயனம் ௧௯0
உபாகர்மம் ௧௩௪
உற்பாதம் ௫௯

ஊ

ஊர்த்துவமுகாதி நாள்களிற்செய்வன ௧௬
ஊர்த்துவாதோதிரய்முகம் ௧௫
ஊர்த்துவாதோதிரிய முகவிராசி ௪௫

ஏ

ஏகாதசி ௧௪௮
ஏகார்க்களம் ௧௯
ஏர்ப்பூட்ட ௧௯௬

ஐ

ஐவகைப்பலம் ௮௭

ஔ

ஔஷதமுண்ண ௧௬௭

க

கடவுள்வணக்கம் ௧
கணம் ௯௨
கண்டகத்தூணம் ௩௯
கண்டகாதிதோஷாபவாதம் ௩௪
கண்டகாதியபவாதம் ௩௫
கதிரறுக்க ௧௩௯
கத்திரிகிரணதோஷம் ௯௭
கர்ப்பாதானத்துக்குநாள் ௧0௫
கர்ப்பம் மூன்றுவருஷம்பன்னிரண்டுவருஷஞ்சென்றுபிறத்தல் ௧0௯
கர்ப்பாரிட்டம் ௧0௮
கர்ப்போற்பத்திமுதற்சென்னமளவு முண்டாகுமங்கம் ௧௧0
கலப்பைச்சக்கரம் ௧௩௬
கவிப்பு ௭௫
கன்னவேதை ௧௨௪

கா

காலபலன் ௧௮௨
காலஹோரை ௩௯
காற்றுக்குறி ௧௮௯

கி

கிணறுகுளங்கல்ல ௧௫௫
கிரகசங்கியை ௭௯
கிரகசத்தமவர்க்கம் ௧௬௧
கிரகசாந்தி ௧௭௨
கிரகணசூலம் ௫௬
கிரகணபலன் ௧௮௧
கிரகநோக்கு ௯
கிரகபலம் ௫௭
கிரகபலிதம் ௮௯
கிரகப்பிரவேசம் ௧௬௯
கிரகவீதி ௭௪



பக்கம்.

கிராரம்பம் ௧௬௨
கிருத்திகாதீபம் ௧௪௭

கு

குருசுக்கிரவத்தமனம் ௫௫
குருடாதியபவாதம் ௪௪
குருடுசெவிடுமுடம் ௪௯
குளிகாதிதோஷம் ௯௮
குளிகாதிதோஷாபவாதம் ,,

கெ

கெவுளி ௯௮
கெற்பக்குறி ௧0௬
கெஜசாந்தி ௧௫௯

கே

கேந்திரபெலம் ௫௭

கொ

கொடியேற்ற ௧௪௫
கொள்ளக்கொடுக்க ௧௫௬

கோ

கோசக்கிரகம் ௧௯0
கோசரபலன் ௬௮
கோட்கதிர் ௮௨
கோமூத்திரிசக்கரம் ௧௧௨
கோயாத்திரை ௧௫௪

ச

சகடதோஷம் ௯௬
சகடதோஷாபவாதம் ௯௭
சகலதோஷாபவாதம் ௬௪
சகலப்பிரதிட்டை ௧௪௯
சங்கிரமபலன் ௧௭௯
சடசிதி ௯௨
சதாபிஷேகம் ௧௬௬
சத்தமவர்க்கதினம் ௧௭
சத்துருவசியம் ௧௯௧
சந்திரகோதெரிசனம் ௧௨௫
சந்திரதெரிசனம் ௧௮௨
சந்திராட்டமம் ௫௧
சமதிருட்டிதோஷமும் அபவாதமும். ௯௭
சமாவர்த்தனம் ௧௯௪
சரசுவதியோகம் ௧௨௯
சரந்திரமுபயமும்வர்க்கோத்தமமும். ௮
சலயாத்திரை ௧௫௪

சா

சாதகன்மம் ௧௧௯
சாந்திரமாசாதி ௪௯
சாமுகூர்த்தம் ௫௯

சி

சித்தாமிர்தநாசயோகம் ௨௭
சிராத்தம் ௧௬௯
சிவப்பிரதிட்டை ௧௪௨

சீ

சீமந்தம் ௧௧௧

சு

சுத்தி ௧௯௨
சுபகன்மங்கட்காகாதவை ௫௫
சுபமுகூர்த்தம் ௬0
சுபயோகமான்மியம் ௨௬
சுபயோகம் ௨௪
சுபராசியசுபராசி ௧௪
சுபாசுபக்கிரகம் ௭

சூ

சூனியாபவாதம் ௯௨

செ

செக்கர்மேகக்குறி ௧௮௮
சென்மநட்சத்திரநிஷூத்தம் ௪௭
சென்மவிலக்கினநிஷூத்தம் ௫௨

சே

சேட்டமாதவற்சியம் ௪௭

சோ

சோதிடனிலக்கணம் ௯0

சௌ

சௌளம் ௧௨௭

த

தம்பத்தாபனம்கதவு ௧௬௨
தயிலாப்பியங்கம் ௧௬௬

பக்கம்.

தலைகடையாவுதிக்குமிராசியும் பெலமும் ௪௪

தா

தானியப்பிரவேசம் ௧௬௦
தானியம்வைக்க ,,

தி

திசாபலன் ௮௮
திசையாத்திரை ௧௫௦
திசையிற்கழிக்குநாள் ௧௫௧
திதித்திரயதினத்திரயம் ௫௯
திதிப்பலன் ௧௦௩
திதிப்பிரசங்கை ௧௧
[illegible]பெலம் ௫௮
[illegible]ம் ௩௬
[illegible]ஷாபவாதம் ,,
திரஞ்சர[illegible] தாரணசாதாரணம் ௧௬
திரிபுட்கரயோகம் ௧௬௯
திரியாத்திரை ௧௫௩
திருப்பிரவேசயோகம் ௬௩
திருவாண்டெழுத்திட ௧௫௭
திவாநிசிகன்மம் ௪௫
திவாநிசிபெலக்கிரகம் ௫௮
திவாநிசிமுகூர்த்தம் ௪௬
திவாநிசிவிழிக்குமிராசி ௪௩
திவரோகம் ௨௮
தினமிருத்து ௨௭
தினமிருத்துத்திவாரோகாபவாதம். ௨௮
தினம் ௯௧

து

துவாதெசநாமம் ௮

தூ

தூமாகிபுடம் ௩௯

தெ

தெத்தசுவாலாதூமதோஷாபவாதம். ௫௪

பக்கம்.

தே

தேவக்கிரகாரம்பம் ௧௬௪

தொ

தொட்டிலேற்ற ௧௨௪

ந

நக்ஷத்திரதிருட்டி ௪௨
நட்சத்திரபலன் ௧௦௩
நவபூஷணம் ௧௬௪
நவவஸ்திரம்பூண ௧௬௫

நா

நாசயோகநிஷுத்தம் ௨௪
நாசயோகாபவாதம் ,,
நாமகரணம் ௧௨௩
நாராயணபலி ௧௭௧
நாராயணப்பிரதிட்டை ௧௪௧
நாலாநீர் ௧௦௨
நாள்விஷம் ௨௮
நாள்விஷாபவாதம் ௨௯
நாற்றுநட ௧௩௯

நே

நேரபலன் ௧௦௩

நோ

நோய்மிருத்துநாள் ௧௬௮
நோய்மாறிக்குளிக்க ,,

ப

பக்கச்சித்திரை ௯
பஞ்சதிசை ௮௩
பஞ்சமிருத்திகை ௯௮
பஞ்சாங்ககுணம் ௬௩
பஞ்சாங்கயோகமான்மியம் ௬௨
பஞ்சாயுதம் ௧௨௨
பஞ்சார்க்கதோஷம் ௪௦
பஞ்சார்க்கதோஷாபவாதம் ,,
பதிகம் ௨
பரிவேடக்குறி ௧௮௮
பலநூல்கற்க ௧௨௯
பலபயிரிட ௧௩௮
[illegible]வாதிகரணம் ௨௦





பக்கம்.

பவித்திரதமனகம் ௧௪௬

பா

பாபநட்சத்திரம் ௧௫
பாபாங்கதோஷாபவாதம் ௬௨
பாபோராதிவற்சியம் ௩௯
பால்பருக்க ௧௨௪
பாஷாணத்தாபனம் ௧௭௧

பி

பிரதமெட்டிகை ௧௬௨

பு

புங்சவனம் ௧௧௧
புடவேதை ௪௧
புட்கரபாகம் ௬௧
புட்கரபாதம் ,,
புதிதுண்ண ௧௪௦

பூ

பூகம்பாதி ௩௨.
பூமிக்கிரகணம் ௧௮௯
பூமிப்பிரவேசம் ௧௩௫
பூருவாணுதி ௪௫

பே

பேற்றகம் ௧௧௧

பொ

பொல்லாவிடங்களினிற்குங்கிரகதோஷாபவாதம். ௧௦௧

போ

போககாமியபிரியம் ௫௪

ம

மகக்குறி ௧௮௪
மகரசங்கிரமபலன் ௧௮௦
மகோதயம் ௧௪௯
மணப்பொருத்தம் ௯௦
மரம்வெட்ட ௧௯௧
மழைக்குறி ௧௮௫
மனைப்பொருத்தம் ௧௬௧

மா

மாகேந்திரமுந்திரிதீர்க்கமும் ௯௨

பக்கம்.

மாதசூனியம் ௩௦
மாததினம் ௬௦
மாதமழைக்குறி ௧௮௯
மாணுவி ௧௫௮

மு

முடிசூட்ட ௧௫௭
முன்னூலாசிரியர்கள் வணக்கம் ௨

மூ

மூலத்திரிகோணம் ௭௭

மே

மேடசங்கிரமபலன் ௧௮௧
மேடமுதலியராசிகளின்கூறு ௯௫

யா

யாத்திரைக்காகாதநாள் ௧௪௯
யாத்திரைக்குச் சுபாசுபங்வாசம் ௧௫௩
யாத்திரைக்குத் திதிவாரங்களிற்புசிப்பவை ௧௫௨
யாத்திரைக்குநட்சத்திரங்களிற் புசிப்பவை ,,

யு

யுத்தஞ்செய்ய ,,
யுத்தயாத்திரை ௧௫௮

யோ

யோகஉற்பவம் ௧௮
யோகங்கட்குப்புறனடை ௨௭
யோகவற்சியம் ௧௮
யோகினிவருந்திசை ௧௯௩
யோகினிவடிவம் ,,
யோனி ,,

வ

வக்கிராதிசாரம் ௭௩
வசந்தோற்சவம் ௧௪௭
வசியம் ௯௪
வருஷகெற்பம் ௧௮௭
வலநாளிடநாள் ௮௨
வலநாளிடநாள்தத்து ௮௬

## சூ சி கை.


| | பக்கம். |
|---|---|
| **வா** | |
| வாகன்மேற | ௧௫௭ |
| வாத்துமன்கிடை | ௧௬௦ |
| வாத்துவிடக்குடிபுக | ,, |
| வாயசபெலி | ௬௮ |
| வாயிற்பொருத்தம் | ௧௬௫ |
| வாரதிருட்டி | ௪௨ |
| வாரநயம் | ௧௨ |
| வாரபலன் | ௧௦௪ |
| வாரப்பிரசங்கை | ௧௨ |
| வாரயோகமான்மியம் | ௬௨ |
| வாரவர்க்கம் | ௧௭ |
| **வி** | |
| விட்டுக்கரணம் | ௨௦ |
| விட்டுப்பவாதம் | ௨௧ |
| விட்[illegible]பெலி | ௧௧௧ |
| விதைக்க | ௧௫௭ |
| வித்தியாரம்பம் | ௧௨௮ |

| | பக்கம். |
|---|---|
| வியதிபாததோஷாபவாதம் | ௬௨ |
| விவாகத்துக்காகாதநாள் | ௧௦௮ |
| விவாகமாதம் | ௯௧ |
| விற்குறியரிவேடக்குறி | ௧௮௮ |
| **வே.** | |
| வேதக்கயிறு | ௯௬ |
| வேதாரம்பம் | ௧௫௪ |
| வேதைச்சக்கரம் | ௪௦ |
| வேதைச்சக்கரநிஷேத்தம் | ௪௧ |
| வேதைட்புடம் | ௭௦ |
| **வை.** | |
| வைதிருதிதோஷாபவாதம். | ௬௨ |
| வைநாசிகதோஷாபவாதம் | ௫௧ |
| **ஸ்ரீ.** | |
| ஸ்ரீஜயந்தி | ௧௪௭ |
| ஸ்ரீதிவசாதி | ௪௮ |


---

### இப்போது அச்சிற்பதிக்கும் புத்தகம்.

ஆசௌசதீபிகை.
மாவிந்தம்.
தன்னை யமகவந்தாதி.
பிராயச்சித்தசமுச்சயம்.

---

### இனிமேல் அச்சிற்பதிக்கும் புத்தகம்.

சிவஞானசித்தியார் சுபட்சம் ஞானப்பிரகாச தம்பிரான் உரை.
சிவஞான சித்தியார் மறைஞானதேசிகருரை.
திக்கையந்தாதி.
தெட்சணகைலாச புராணம்.
கூர்மபுராணம்.
கந்தபுராணம்-உபதேசகாண்டம்.
தத்துவப்பிரகாசம் மூலமும் உரையும்.
நீர்வைவெண்பா.
சோதிடசாரசங்கிரகம்.
சீவகசிந்தாமணி மூலமும் உரையும்.
இரகுவம்மிசம்.
புலியூரந்தாதி.
சிவநெறிப்பிரகாசம்.
வைத்தியசாரசங்கிரகவிளக்கம்.
அமுதாகரம்.
சத்தியாரூடம்.
சாதிநிர்ணயம்.
சதாசிவசொரூபம்.

---



உ

## சிறப்புக்கவிகள்.

தஞ்சாவூர்
**சதாவதானம்-சுப்பிரமணியஐயர்**
சொல்லியது.

நீர்கொண்டகடலாடை நிலவலயத்துயிர்களுக்கு நிலவோர்கண்ணும்
வார்கொண்டசோதிட-நூல் பலவற்றுட்பொறிவாழ்பூ மானவோங்கி
யேர்கொண்டுறுவிதான மாலைதனையச்சிடுவித் தீந்தான்காணச்
சீர்கொண்டபுகழ்மறையோன் கார்த்திகேயையன்சோ திடவரோறே.

---

சென்னைப்-புரசை
**அஷ்டாவதானம் சபாபதிமுதலியார்**
சொல்லியது.

இந்திரன்முதலிய விறையவர்பழிச்சும்
மந்திரமெவற்றுமா மந்திரமென்ன
வளர்ந்தசீரைந்துருக் கிளர்ந்தமூலாகமத்
திருவருட்கமஞ்சால் சேற்கணிமணாளன்
அருணிலைத்தமர்ந்த வரும்பெருஞ்சங்கப்
புலமையோராதிய புனிதராற்போற்று
நலனிறையவ்வை நாயனார்திருக்குறள்
இன்னனநூலிற் பன்னுறுசிறப்பின
எண்ணுமெழுத்துங் கண்ணெனவாருயிர்க்
கலைவறுமிந்திய மனைத்தினுஞ்சீர்த்தா
நிலைபெறுநாட்ட நீர்மையிற்பதிந்தவவ்
விரண்டினுண்முதற்கண் ணியம்பியதாஉந்திரை
புரண்டெழுநெடுநீர்ப் புவியகத்தென்று
மின்றியமையா திருக்கைபிறங்கத்
துன்றுமாவடமொழித் தொன்னூற்கணிதம்
பலவுளநன்கு பயப்பதென்றுய்ந்து
காலவிதான மாலையின்விவிதம்
விளங்குறத்தானும் விதானமாலையென்
றுளங்களிசிறப்பக் கிளந்துநல்கிய

வடுவைமாதரார் மைவிழியெனமருண்
டிடுமள்ளிசூழ்பொழிற் கடுவையம்பதிக்கட்
சீராயணவஞ் செழுஞ்சதும்மறைதேர்
நாராயணபண் டிதநாமத்தோன்
புகழ்வளன்யாண்டும் பொலிதரப்பரவித்
திகழ்வுறவன்னதைத் தெளிவுறீஇப்பாட
பேதமெத்துணையும் பிறந்துபடாமை
ஈடுறவாராய்ந் தெழுதாவெழுத்தில்
இயைவித்தளித்தன னெழில்யாழ்ப்பாணத்
துயல்வுறுகேதனந் தொகுபன்னிறங்கவின்
பற்பலமாளிகை யற்புறநோக்கினேர்
நாற்புறத்தினுங்கட லாற்சுலவும்பதி
இன்னதுநெய்த லெனுந்திணையென்ப
விம்மிதங்குறிஞ்சி விபுலமுமுள்ள
தெனவியந்துவக்கு மிசைகெழுதிருவநீள்
காரைநகரான் வீரைமிசைந்தருள்
முனிவரனித்திசை யனிதவவுய்குவான்
தந்தசெந்தமிழிற் சிந்தனைமிக்கோன்
குலவுமந்தணகுல திலகனென்றொளிநிறூஉம்
இயற்றமிழ்ப்போதகாசிரியன்
நயத்தகுகார்த்தி கேயநாவலனே.

---

யாழ்ப்பாணம்
சி. வை. தாமோதரம்பிள்ளை
சொல்லியது.

மேதினியில் வேதாங்க மாதி மெய்ந்நூல் விதித்தகிரி யைக்குமதி
திநாளோரை, யாதிநிய மங்கடுவை யிறைவ னாரா யணமறையோ
னறைந்த தமிழ் விதான மாலை, மீதினில வியவழுக்கள் விலக்கி யாரும்
வியந்திடவச் சினில்வகுத்தான் வேத பார, காதினிலை முருகேச னருள்
சேய் காரை யமர்கார்த்தி கேயனெனு மறிஞ ரேறே.

அந்த ணாளர்முன் னறைமறை யங்கத்தின் வழியோ
ரந்த ணான்சொல் விதானமா லையைவழு வாய்ந்தின்
றந்த ணாளனே யந்தண னச்சினிற் றாமற்
றந்த ணாரான் வதற்கினை யாரறை பவரே,



சென்னைத்துரைத்தனவித்தியாசாலைத்தமிழ்ப்புலவர்
தொழுவூர் வேலாயு[illegible]லியார்
சொல்[illegible]

வினைவளத்தி னியலறிவான் மெய்யு[illegible]ம்ச்சி வெப்பந் தீர
முனைவனெழிற் றென்கடுவை வருநாரா ய[illegible] விதான மாலை
யினைவுறுமக் கரப்பொழியா திவ்வுலக மினித[illegible]தா னென்ப
தனைநிகரந்தணன்கார்த்தி கேயன்கா ரைப்பதியான் [illegible]லோனே.

---

இந்நூல்பரிசோதித்தவரின் புத்திரர்
நாகமுத்தையர்
சொல்லியது.

பாரிற் பராசர ராதியர் சோதிடம் பண்டுரைத்த
சீரிற் றிருநீ டவிதானமாலை தெரித்தனன்மே
லோரிற்கடுவைமன் னாராயணனச்சி லுய்த்தனன்பொற்
காரைப்புரிமறையோன் கார்த்திகேய கலாநிதியே.

---

யாழ்ப்பாணம்
சி. தா. அமிர்தலிங்கபிள்ளை
சொல்லியது.

கார்த்திகே யக்கலைஞன் காரைமுரு கேசையன்
சீர்த்தனயன் ஸ்ரீவற்ச கோத்திரத்தான்—பார்த்துலகு
மெச்சுந் திறல்சேர் விதானமா லைப்பனுவ
லச்சியற்றி னன்வழுவா ராய்ந்து.

---

இராயபுரம்மத்தியபோதனாசாலைப்புலவர்
ச. ஜெகராவு முதலியார் மாணாக்கன்
க. திருவேங்கடநாயுடு
சொல்லியது.

சீரேறு செந்தமிழிற் சோதிடமுஞ் சிறந்தேற விதான மாலைப்
பேரேறுகடுவையினாராயணன்செய் நூன்மறையோர் பெருமானீபத்
தாரேறு முதல்வனடி புனைகார்த்தி கேயனெனுந் தகைதென்காரை
யூரேறு சிலையெழுத்தி லுயர்ந்தேற வழுநீக்கி யுதவினனே.

## சிறப்புக்கவிகள்.

காரைநகர்ச் சைவவித்தியாசாலை உபாத்தியாயரும்
இந்நூல்பரிசோதித்தவரின் மாணாக்கரு ளொருவருமா
சி. கந்தப்பபிள்ளை
சொல்லியது.

பொன்பொலிந்திடுசீர்த் தென்கடுவைப்பதி
மன்பதைபோற்றுநாராயணமகிபதி
சோதிடசாஸ்திரத் தாரீர்க்கடலை
மேதகவுண்ட வியன்காளமேகம்
முன்னாள்வழங்கிய முதன்மைசேர்விதான
மன்னுநூலின் வழூஉக்களைந்திந்தனன்
திங்கட்டிருமுகச் சேயிழைமங்கையர்
கங்குற்கூந்தலை மங்குலென் றயிர்த்து
மாங்குயிலொடுக்க மயிலினநடமிடுந்
தேங்கமழ்சோலை செறியாழ்ப்பாண
மங்கைதன் னுதலிற் றங்கியதிலகமென்
றெங்கும்விளங்கி யெறிதிரைபொருகரைக்
காரையம்பதியெனக் கவின்பெறுநகரினன்
சீரியவிலக்கிய விலக்கணத்திறனெலா
நன்றாய்ந்தறிந்த நான்மறையாளன்
பொன்றாப்பவத்தைப் போக்கிடுந்தூய
கோதாவிரிநதி குலவுசையாசல
வேதியர்மரபினில் மேவியமேரு
கிரியெனுமறையோன் கிளர்தருவமிசன்
திரிபிலாவண்புகழ்ச் ஸ்ரீவத்ஸகோத்திரத்
தரியதோராஸ்வி லாயனசூத்திரன்
பரசிவனடிதொழூஉம் பான்மையன் றமிழ்க்கவி
ஆயுநர்க்கருள்புரி யாசான்கார்த்தி
கேயநாவலப்பெயர் கெழுமியோனே.

சிறப்புக்கவிகள் முற்றிற்று.



கடவுள்துணை.

# விதானமாலை

மூலமும் உரையும்.

## கடவுள்வணக்கம்.

பூமகள்கேள்வன்பொன் னாடையன்புட்கொடி யோன்புனித
னாமகள்கோனைத்தன் னாபியிற்றந்தவ னான்மறையின்
பாமயனச்சுதன் பங்கயக்கண்ணன் பஞ்சாயுதன்றாள்
சேமமென்றெண்ணியென் சிந்தையிற்சென்னியிற் சேர்த்துவனே.

(என்றது.) ஸ்ரீமகாலட்சுமிக்கு நாயகரும், பீதாம்பரத்தையுடையவரும், கருடக்கொடியையுடையவரும், பரிசுத்தரும், கலைமகள் கணவனாகிய பிரமனைப்பெற்றவரும், சதுர்வேதரூபியும், அழிவில்லாதவரும், தாமரைக்கண்ணரும், பஞ்சாயுதகரத்தருமா யெழுந்தருளிய ஸ்ரீமத் நாராயணமூர்த்தியினுடைய பாதத்தைக் காவலென்று சிந்தித்து மனதிற் றியானித்துச் சிரசிற் சூடிவணங்குவேன்—என்றவாறு. (க)

### இதுவுமது.

ஒன்றாய்ப்பலவாய்ச் சுடரிரண்டாயொளி மூன்றுருவா
யன்றாயவையிற்றி னுருவாயப னாதியும்பர்
சென்றுதொழுதிடச் சங்காழியேந்தித் திருவினொடுங்
குன்றாதுநின்ற குணன்சரணம்புயங் கூறுவனே.

(எ-து.) ஏகமாய்ப் பலவாய்ச் சோமசூரியராயத்துடனே யக்கினியுங்கூடிய மூவடிவாயல்லவாய்அவைகளினுண்மாவாய்ப் பிரமன்முதலிய தேவர்கள் போய்த் தத்தம குறையை நீக்கும்படி ஒளியைப்பரப்புஞ் சங்குசக்கர தாரனாய் மகாலட்சுமியுடனே திருவருள் குறையாமலெங்கு நிறைந்துநின்ற குணநாயகராகிய ஸ்ரீமத் நாராயணமூர்த்தியினது திருவடித்தாமரையைத் துதித்து வணங்குவேன்—எ-று.

## முன்னூலாசிரியர்கள் வணக்கம்.

பார்க்கவனை நாரதனைக்குருவைப் பாராசரனைக்
கார்க்கியன்பாரத்து வாசன்வசிட்டனைக் கைகுவித்துத்
தீர்க்கவணக்கஞ்செய் தாங்கவர்சொன்னசெஞ் சொற்பனுவ
லேர்க்கமனங்கொண் டிறைஞ்சியென்னகத் திருத்துவனே.

(எ-து.) பார்க்கவனையும், நாரதனையும், தேவகுருவையு
ம், பாராசரனையும், கார்க்கியனையும், பாரத்துவாசனையும், வசி
ட்டனையும், கைகுவித்துத் தீர்க்கதெண்டம் செய்து, அவர்கள்
சொல்லிய செவ்விதாகிய சொல்லையுடைய நூலையும் உளங்கொ
ண்டு வணங்கி யெனதிருதயத் திருத்துவேன்—எ-று. (௧)

## அவையடக்கம்.

முன்னீர்க்கடல்க ளனைத்தினையுமொரு மூர்த்தத்தினிற்
கைந்நீத்துநீந்துவ னென்பவன்போலக் கலைவடசொற்
றென்னூற்பலவிதச் சோதிடமுற்றுமென் புன்சொற்களா
னன்னூலெனச்சொல்லி வந்துநின்றேனகை செய்குவனே.

(எ-து.) ஆற்றுநீர், வேற்றுநீர், ஊற்றுநீராகிய சமுத்தி
ர முழுதையும், ஒரு மூர்த்தத்துக்குள் கையினால் வலித்து நீ
ந்துவனென்பவன்போல வடமொழியிற்கூறிய பலவகையாகி
ய சாத்திரமுழுதையும் எனதெளிய சொற்களால் நல்ல நூலீ
தென்றுகூறி வாராநின்று நகைப்பன்—எ-று. (௨)

---

## பதிகம்.

குற்றமனைத்துங் குணமனைத்துங்கோளி னன்மைதின்மை
யுற்றநிலையு முதயவாரூடக் கவிப்புமுச்சச்
சுற்றமுதலைந்தும் வற்கங்களாறுந்தொன் மாதிசையும்
பற்றியதற்கால சக்கரத்தாண்டும் பகர்குவனே.

(எ-து.) திதி, வாரநட்சத்திரம், யோககரணம், சரரா
யாதியும், சுபாசுபக்கிரகமும், உபசயத்தானமும், கேந்தி
தானமும், சென்மராசி யாதிதுவாதெச பாவநாமமும், ச
திர மூபயராசியும், திரீர்சியும், புருடராசியும், சவுமியராசியு
ம், வருக்கோத்தமமும், கிரகதிருட்டியும், திதியுந்திதிப் பிரச



ங்கையும், வாரமும் வாரப்பிரசங்கையும், சுபாரூசியும், பாபரா
சியும், இராசியாதி மத்தியந்த பலமும், பாபநட்சத்திரமும்,
திரிபுமான் நபுங்சக நட்சத்திரமும், ஊர்த்துவமுகவதோ மு
கதிரய முகநட்சத்திரமும், திரசரமிருது, இலகு குரூரதாரு
ண சாதாருண நட்சத்திரமும், நட்சத்திர விதியும், யோக
வச்சிர விதியும், யோக வுற்பத்தியும், ஏகார்க்களமும், பவாதி
கரணமும், திரகரணமும், விட்டிதோஷமும், விட்டியபவா
தமும், சத்தவார யோகமும், நாசயோக நிஷூத்தமும், நாச
யோக வபவாதமும், சுபயோகமும், சுபயோக மகத்துவமு
ம், சித்தாமுத நாசயோகமும், தினமிருத்து திவாரோகமு
ம், தற்பங்கமும், தியாச்சியமும், தியாச்சிய பங்கமும், அ
மிர்த கடிகையும், மாதசூனியமும், தற்பங்கமும், சடசீதியு
ம், பூகம்பமும், உற்கப்பிரமதண்ட காலத்துவசமும், அத்
ததோஷமும், ஆசிவிடமும், தற்பங்கமும், கண்டமுந் தூ
ணமும், கண்டகத்தூணமும், இரத்த தூணமும், அத்த
தோஷ பங்கமும், அனலாதிக்கிரக குரூர வெகுதோஷமு
ம், அத்ததோஷ அபவாதமும், திதிராசி தோஷமும், தற்ப
ங்கமும், சகடதோஷமும், தற்பங்கமும், கத்திரியும், கிரா
ணதோஷ சாண்மாதமும், சமதிருட்டியும், குளிகாதி தோ
ஷமும், தற்பங்கமும், காலவோரையும், பாபவோராதி வச்சி
ரமும், தற்பங்கமும், பஞ்சாற்கமும், தற்பங்கமும், வேதைச்
சக்கரமும், புடவேதையும், கிரகாச்சுமியும், வாரதிருட்டியும்,
கராநந்த நட்சத்திரமும், திவாநிசிவிளிக்கு மிராசியும், தற்ப
ங்கமும், அந்தகவெதிர் பங்குராசியும், தத்சவவாரமும், இல
க்கினச்சிய சர்பவராகு கிரந்திரவிஷமும், சிரோதயாதிலக்
கின திவாநிசிபலமும், ஊர்த்துவ அதோமுகதிரி மூகவிராசி
யும், பூர்வாண மத்தியான வபராண விதியும், திவாநிசிக
மமும், அவசித்து முகூர்த்தமும், திவா முகூர்த்தமும், நி
முகூர்த்தமும் அயனத்துவய விதியும், சேட்டமாத வச்சி
ரமும், சென்மமாதாதி வச்சிரமும், சென்மநட்சத்திர நிஷூ
த்தமும், சிறிதிவாநியும், சவுரசாந்திர சிராவணநட்சத்திர
மாதமும், அதிகமாதமும், தன்மாத நிஷூத்த காரியமும்,
தற்பங்கமும், அனுகூலப் பிரதிகூல நட்சதிரமும், சந்திராட்
டம வைநாசியமும், தற்பங்கமும், சென்மலக்கினநிஷூத்தமும்
தற்பங்கமும், நட்சத்திர பாதாங்கிஷ்மும் உட்ணசிகையும்,

இலக்கின மிருத்து முகூர்த்தமும், தெத்தசுவாலா தூமநட்சத்திரமும், தற்பங்கமும, யோககாமியப் பிரியநட்சத்திரமும், பாபக்கிரகாதி யிராசி நட்சத்திர வச்சிரமும், குருசுக்கிரவத்தமனமும், தற்காரிய நிஷித்தமும், தற்பால விருத்த நிஷித்ததினமும், சங்கையும், கிராணசூலமும், விட்டுணுவாயன சங்கிரமசூலமும், திருந்தாதி வச்சிரமும், அத்தமன வச்சிரநட்சத்திரமும், வக்கிர நட்சத்திரமும், தற்பங்கமும், கேந்திரபெலமும், கிரகபெலமும், திவாநிசிபெலமும், அன்னியோன்னிய பெலமும், திதியாதி பெலமும், உற்பாதமும், திதித்திரயந் தினத்திரயமும், உற்சவதின நிஷித்தமும், மகாதினமும், சுபமுகூர்த்தமும், புட்கர பாதமும், புட்கர பங்கமும், வாரயோகமகத்துவமும், பஞ்சாங்க யோகபெலமும், பாபாங்கிஷாபவாதமும், உதயபெலமும், பஞ்சாங்க குணமும், ஸ்ரீப்பிரவேச முகூர்த்தமும், சகலதோஷாபவாதமும், சந்திரகெதியும் கோசர பலமும், கோசரவேதையும், கிரகசாரமும், வக்கிர அதிகாரமும், முகூர்த்த கடிகையும், மேடாதிவிதியும், ஆரூட சக்கரமும், கவிப்பும், நவாங்கிஷ கடிகாதியாட்சியும், உச்சத்தானமும, மூலத்திரிகோணமும், சத்துரு மித்துருவும், தற்கால சத்துரு மித்துருவும், சட்டுவற்கமும், மகாதிசையும், அந்தரதிசையும், அந்தரத் தந்தரத்திசையும், காலசக்கராதி பஞ்சதிசையும், கிரகபலம் பதிதகாலமும், தெய்வசிலாட்சணமும் கிரமமாக விரித்துச் சொல்லுவன்—எ-று.

கடிமணம்பூப்புக் கருப்பெய்தல்புங்ஸ வனங்கரும
மடவரல்சீமந்தம் மாயோன்பலியரிட் டம்மகப்பே •
ரிடலணாஞாண்டொட்டில் பாலடைகாதுகுத் தெண்ணுசல்வாய்
முடிநிறையாண்டு மயிர்வினைகல்வி மொழிகுவனே.

(எ-து.) தெசப்பொருத்தமும், விவாகமும், அனுகூலவிசேடமும், அனுகூலப் பிரதானமும், அங்குராற்பணமும், வாயசாதி நிமித்தமும், விவாக கோசரமும், விவாகமாதமும், இருதுவும், கெற்பாதானமும், புங்ஸவனமும், சீமந்தமும், விட்டுணுபெலியும், கோமூத்திரிச் சக்கரமும், பிரசூதிகாக்கிரகப் பிரவேசமும், சாதகன்மமும், அரிட்டமும், அரிட்டபங்கமும், அனபாயாதி யோகமும், இராசயோகமும், அங்கரக்ஷையும், பஞ்சாயுத தாரணமும், நாமசன்மமும், கடிசூத்திரமு



கட்டுவாரோகணமும், சங்கட்சிரமும், கன்னவேதனமும், சந்திர கோதெரிசனமும், அன்னப்பிராசனமும், ஆர்த்திக பூர்த்தியும், சௌளமும், அட்சராரம்பமும், வித்தியாரம்பமும், சரகுவதியோகமும், கோசக்கிரகமும் சொல்லுவன்—எ-று. ()

வேதியர்நூலிடல் வேதந்தொடங்கல் விரதநன்னீர்
நீதியிலாட லிவைமங்கலவினை நீணிலத்தைச்
சேர்தலுழல்வித்தல் நட்டலறுத்தனெற் சேரவைத்த
லீதுபுதிதுண்ண லேர்மங்கலங்க ளியம்புவனே.

(எ-து.) உபநயனமும், வேதாரம்பமும், உபாகன்மமும், விரதமும், சமாவர்த்தனமும், பூமிப்பிரவேசமும், கிருஷியாரம்பமும், அலச்சக்கரமும், பீசவாபனமும், தானியபேதமும், விருட்சதாபனமும், தானியப் பிரவேசமும், தானியசங்கிரகமும், நவபோசனமுஞ் சொல்லுவன்—எ-று. (அ)

தாவில்பிரதிட்டை திருநாட்டமனகஞ் சாத்தறத்தங்
காவில்பவித்திரங் கண்ணன்சயந்திவிற் காமபூசை
யேவும்விளக்கிடு மத்தோதயமு மியாத்திரையுங்
கூவல்தடாகமுங் கொண்டுகொடுத்தலுங் கூறுவனே.

(எ-து.) தேவப்பிரதிட்டையும், உற்சவமும், உற்சவாரோகணமும், தமனகமும், பவித்திரா ரோகணமும், ஸ்ரீசயந்தியும், வசந்தோற்சவமும், கிருத்திகாதிபமும், அத்தோதயமும், ஏகாதசிவிரதமும், திதிப்பிரதானமும், நட்சத்திரப்பிரதானமும், யாத்திரையும், யாத்திராபட்சமும், திரியாத்திரை கோயாத்திரை செலயாத்திரையும், கூபதடாக முண்டாக்கலும், பருவத பாதாளயோகமும், கிரய விக்கிரயமுஞ் சொல்லுவன்—எ-று. (௯)

மன்முடிசூட்ட லெழுத்திடல்வாகன மேறல்வாள்வே
லின்னபயிற்ற லிசையாதவர்மே லெடுத்துவிடல்
சொன்னமனுவிகள் சோதிசம்பாத மிவைதொகுத்துப்
பன்னுவன்வெண்ணகைச் செவ்வாய்க்கருங்குழற் பைந்தொடியே.

(எ-து.) இராசதெரிசனமும், இராசாபிடேகமும், திருவாண்டெழுத்தும், வாகனமேறலும், அத்திரசத்திராப்பியாசமும், யுத்தமும், மகாநவமியும், மானுவிகளும், செசசாந

தியும், அசுபசாந்தியும், சுவாதிசம்பாதயோகமுஞ் சொல்லுவன்—எ-று. (கo)

புத்தில்லெடுத்தல் குடிபுகல்பொன்பூணல் பட்டுடுத்தல்
சித்தமகிழு முபதேசமாயிரந் திங்கள்கண்டு
தத்துநீராட் டலைக்கெண்ணெய்வார்த்த றனிசுதீர்த்த
லொத்தவிக்காரியம் யாவையுங்கூறுவ னெண்ணுதலே

(எ-து.) வாத்துநியாசமும், கிரகசட்டுவற்கமும், கிரகாரம்பமும், தம்பத்தாபனமும், கதவும், கிரகப்பிரவேசமும், தேவக்கிரகப்பிரவேசமும், ஆர்த்தவெட்டிகைதாவியும், நவபூஷணமும், நவவஸ்திரமும், மந்திரோபதேசமும், ஆயிரப்பிறைதொழுதலும், சதாபிடேகமும், எண்ணெய்வார்த்தலும், இரணமோசனமும், இவையெலலாஞ்சொல்லுவன்—எ-று.()

ஒத்தமருந்தூ ணறுத்தல்சுடல்கார மூட்டலுண்ணோய்
முத்திபிறந்து குளித்தன்முடிந்தோர்க்கு முற்றுங்கல்லு
வைத்தலெடுத்தல் சிராத்தஞ்செயன்மாய வன்றனக்குச்
சுத்தபலியிடல் சாந்தியொடட்டகை சொல்லுவனே.

(எ-து.) அவுடதசேர்வையும், சத்திரமிடுதலும், காரமிடுதலும், வியாதியாரம்பமும், வியாதிக்குக்குழித்தலும், திரிபுட்கரயோகமும், பாஷாணத்தாபனமும, உத்தியாபனமும், வெகுசிராத்தவிதியும், சபிண்டியும், நாராயணபெலியும், கிரகசாந்தியும், அட்டகையுஞ்சொல்லுவன்—எ-று. (கஉ)

உற்பாதஞ்சங்கிர மஞ்சொற்கிராணம் பிறையுறுதல்
கற்பாருங்கோட்பலன் மாசிமகமழை காற்றுக்குறி
மூற்பார்கொளல்சத் துருவசியமர மூலம்வெட்ட
லற்பிணியோகினி யாங்கேறன்மெய்க்கோ ளறைகுவனே.

(எ-து.) உற்பாதமும், பரிவேடமுமு, மார்கழிக்குறியும், நட்சத்திரபதனமும், சங்கிரமமும், சங்கிரமபலமும், விஷுவயனமும், தோஷதினசங்கையும், தற்பலமும், கிராணமும், வருணக்கினிவிருத்தி வாயுமண்டலமும், சந்திரதெரிசனமும், காலபலமும், குருசவுரியோகமும், ஆர்சவுரியோகமும், மாகமாதமகக்குறியும், வருஷக்குறியும், வருஷக்கெற்பக்குறியும், வாயுக்குறியும், கிராணவெகுவிதியும சத்துருவசி



யமும், விருட்சசேதனமும், பாபசுத்தியும், யோகினிதிசையும், ஆடல்பாடலரங்கேற்றலும், அங்கக்கிரகமும், கிரமமாகச் (கங)
சொல்லுவன்—எ-று.

*இத்திறமான விதியறிந்தோர்க ளிருநிலத்தின்
முத்தனவெண்ணகைச் செப்பேந்திளமுலை மொய்குழலாய்
சுத்தருமாகி யறம்பொருளின்பந் துறக்கமென்ற
வத்திறம்வாழ்குவ ரென்றனமரர் புரோகிதனே.

(எ-து.) செனனமுதலாக மரணாந்தமாகச்சொல்லப்பட்ட விந்த விதானசாத்திரத்தை யாவனொருவனங்கிகரிக்கின்றானோ, அவனிந்தப்பூலோகத்திலே சுத்தான்மாவாய்த் தருமார்த்தகாமியங்களை யனுபவித்துப் பரலோகத்திலுஞ் சுகங்களை (கச)
யனுபவிப்பரென்றனன் வியாழபகவான்—எ-று.

பதிகம் முற்றிற்று.

## மரபியற்படலம்.

நாட்டுந்திதிக்குப் பிரதமைமுதல்வார ஞாயிறுதி
யீட்டுந்தினமைப் பசிமுதல்யோகம்விட் கம்பமாதி
கூட்டுங்கரணம் பவமுதலோரை கொறியதாதி
தீட்டுங்கதிர்முதற் கோளாதிசித்திரை திங்களுக்கே.

(எ-து.) பக்கம் பிரதமைமுதல், வாரம் ஞாயிறுமுதல், கரணம் பவமு
நாள் அசுபதிமுதல், யோகம் விட்கம்பமுதல், மாதம் சி
தல், இராசி மேடமுதல், கிரகம் ஆதித்தன்முதல், (க)
த்திரைமுதல், இப்படி யறியப்படும்—எ-று.

சுபாசுபக்கிரகம்,

புந்திகுருப்பொலி திங்கட்புகர்நல்ல கோட்கதிர்சேய்
மந்தன்குறைமதி பாம்பினன்கூடிய மாலிந்திக்கோ
ளிந்தவகையன்றி யிந்துவும்புந்தியு மேந்திழையாய்
தந்தநிலையினின் மத்திமக்கோளெனச் சாற்றினரே.

(எ-து.) புதனும், பிரகஸ்பதியும், பூருவபக்கத்துக்குச் சந்திரனுஞ் சுக்கிரனுஞ் சுபக்கிரகம். ஆதித்தனுஞ் செவ்வாயுஞ்சனியும் அபரபக்கச்சந்திரனும், இராகுவுங்கேதுவும், ஆ

கித்தனுடன் கூடிநின்ற புதனும் பாபக்கிரகம். சந்திரனும் புதனுஞ் சிலநாட் சுபக்கிரகமுஞ், சிலநாட் பாபக்கிரகமுமாதலால், இவர்கள் மத்திமக்கிரகமென வோராசிரியர் சொன்னார்—எ-று. (௨),

உபசயகேந்திரம்.

மூன்றாறுபத்துப் பதினொன்றுபசய மென்றிவற்றை
*யேன்றோர்கணான்குபத் தேழுதயத்தையு மெண்ணின்மிக்க
சான்றோர்கள்கேந்திரங் கண்டஞ்சதுட்டய மென்றுவைத்தார்
மான்றாவியவிழி மைதாவியகுழல் வாணுதலே.

(எ-து.) இலக்கினத்துக்கு, ௩ம் இடம், ௬ம் இடம், ௧௦ம் இடம், ௧௧ம் இடம், என்றிந்த நான்கிடத்துக்கும் உபசயமென்று பெயராம். இலக்கினத்துக்கும், ௪ம் இடத்துக்கும், ௭ம் இடத்துக்கும், ௧ம் இடத்துக்குங் கேந்திரம், கண்டம், சதுட்டயம், என்னும் பெயராக வழங்கப்படும்—எ-று. இராசிகளுடைய உதயத்துக்கு, இலக்கினமென்று பெயர். (௩)

துவாதசநாமம்.

உதயந்தனமுட னேபிறப்பொண்டோ ழமைமசவு
சிதையும்பகைபெண்டிர் தேய்வுறுஞ்சாவு செழும்புண்ணிய
மிதமொன்றியகன்ம மாயம்வியமெனு மாறிரண்டும்
விதமொன்றியவோரைப் பேரெனச்சான்றோர் விதித்தனரே.

(எ-து.) உதயம், தனம், பிராதுரு, வெந்து, புத்திரன், சத்துரு, பாரி, மிருத்தியு, புண்ணியம், சருமம், ஆயம், வியம், என்ற பன்னிரண்டு பாவமுமாவன வொருவனுக்குச் சென்ம விலக்கின முதலாகப் பெயராம்—எ-று. (௪)

சரந்திரமுபயமும், வர்க்கோத்தமமும்.

உற்றசரந்திர மோதுபயமென்று மாண்பெண்ணென்றுங்
குற்றந்துணமென்றுங் கொச்சைமுதலெண்ணுங் கொம்பனையாய்
மற்றுஞ்சராதி முதலிடையீறுவர்க் கோத்தமமாய்ச்
சொற்றனன்றென்கடு வைக்கிறைசோதி டநூற்றுருக்கே.

(எ-து.) மேடமுதல் மீனாந்தமாகப் பன்னிரண் டிராசியுஞ் சரந்திர முபயமென் றெண்ணுவது. பின்பு, மேடமுத

* என்றல்-எற்றல்; ஏலென்னு மடியாற்பிறந்தது.



லடைவே ஆண் பெண்ணென்றுங் குரூரராசி சவுமிய ராசியென்று மடைவே மாறிமாறியெண்ணப்படும். சரராசியின் முற்கூறுந் திரராசியி னடுக்கூறு முபயராசியின் கடைக்கூறும், வர்க்கோத்தம மென்று வழங்கப்படும்—எ-று. (௫)

கிரகநோக்கு.

அருண்மூன்றுபத்துமஞ் சொன்பதுநான்கெட்டு மாதியேழுங்
கருதூன்றுகால்முதற் கண்ணுறுநோக்கென்பர் காரிகுரு
வருசேயலாதவர் நோக்கின்முறையே வலியரென்று
திருவேபராசரன் செப்பியநூன்முறை தேர்ந்துரையே.

(எ-து.) யாதாயினுமொரு கிரகங்களின் நோக்கறியு மிடத்து, அவனின்ற விராசிமுதல் மூன்றும் பத்துங்கால் நோக்கு. ஐந்துமொன்பது மரைநோக்கு; நாலுமெட்டு முக்கால்நோக்கு; ஏழுந்தானின்றவிராசியு முழுநோக்கு. இவற்றிற்கால்நோக்கிற் சனிவலியன். அரைநோக்கில் பிரகஸ்பதிவலியன், முக்கால்நோக்கிற் செவ்வாய்வலியன். முழுநோக்கில் அல்லாதகிரகங்கள் வலியர்—எ-று. (௬)

மரபியற்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை ௨௦

---

# பஞ்சாங்கப்படலம்.

---

பக்கச்சித்திரை.

வளர்பிறையுத்தம மற்றைப்பிறைமத் திமமதமங்
தளர்வுறுபொல்லாங்கு மென்பர்தடங்கட் டிருவனையா
யளவுறுநான்கொன்ப தாறெட்டீராறீரே ழானபக்கம்
விழைவுறுதீப்பக்கச் சித்திரையென்று விதித்தனரே.

(எ-து.) திதிகளிற் பூருவபக்கமுத்தமம், அபரபக்கம் மத்திமம், அதமம் அதமாதமமென்று சொல்லப்படும். இவ்விரண்டுபக்கத்திற் சதுர்த்தியும், நவமியும், சட்டியும, அட்டமியும், துவாதசியும், சதுர்த்தசியும், பக்கச்சித்திரையென்றுதவிரப்படும்—எ-று. (௧)

### இதுவுமது.

ஒன்பதிருபத்தைஞ் சொன்பதுபன் னான்கும் பத்துமைந்தும்
வந்திடுநாழிகை சித்திரைக்காதியில் வாட்டநன்று
நந்தையும்பத்திரை நற்செயிருத்தை வளர்ச்சியென்று
முந்தியபக்க முதன்முறையேமொழி மொய்குழலே.

(எ-து.) பக்கச்சித்திரையென்ற பக்கங்களிற் ஶ்ரேஷ்டமானநாழிகை, சதுர்த்திக்கொன்பது நவமிக்கிருபத்தைஞ்சு, சட்டிக்கொன்பது, அட்டமிக்குப்பதினாலு, துவாதசிக்குப்பத்து, சதுர்த்தசிக்கஞ்சு, இந்நாழிகைகளைக் கழித்தாலித்திதிகள் நன்றென்க. பிரதமைமுதலாக நந்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணையென் றடைவேபெயராகப்பதினைந்துபக்கமும், மூன்று பரிவிருத்தியாக வெண்ணப்படும்—எ-று. (௨)

### இதுவுமது.

சிறந்தநன்மங்கல காரியம்யாவிற்குஞ் சித்திரைநீத்
தறைந்தபக்கத்துநற் பக்கமிடையுவா நன்றதனி
னிறைந்தபக்கத்துமுன் னைஞ்சுங்கிறைவேல் பொருதகண்ணாய்
குறைந்தபக்கத்துக் கடையுற்றவஞ்சுங் குணமில்லையே.

(எ-து.) சகலமங்கல காரியத்துக்கும், பக்கச்சித்திரையொழிந்ததிதியும், பூரணையும் நன்றாம். பூருவபக்கத்துப்பிரதமைமுதற் பஞ்சமி யறுதியும் அபரபக்கத் தேகாதசிமுதல் அமாவாசை யறுதியுந் தவிரப்படும்—எ-று. பூருவபக்கத்துப் பஞ்சமியும், அபரபக்கத் தேகாதசியு முக்கியமென்பாருஞ் சிலருளர். (௩)

### இதுவுமது.

ஒற்றித்தபக்கத்தி லாதியுமந்தமு மொன்பதுமே
குற்றமுடைத்தல் லவைநன் றிரட்டையிற் கூறுமீரைந்
துற்றவிரண்டுநன் றல்லவைதீதொள் ளியவினைக்குச்
சொற்றில்கல்விக்குப் டன்மூன்றுடேழையுஞ் சோதிடரே.

(எ-து.) சிலர் சுபகருமங்களுக் கிரண்டுபக்கத்தும், ஒற்றித்த பக்கத்துப் பிரதமையும், பௌரணையும், நவமியுமொழிந்ததிதிகள் நன்றென்றும், இரட்டித்த திதிகளில் தசமியும் துதியையுமொழிந்தவை தீதாமென்று சொல்லுவார்கள். அவ்விரண்டு பக்கத்துவந்த சத்தமியும், திரையோதசியும், வித்தியாரம்பத்துக்கு விசேஷித்துத் தவிரப்படும்—எ-று. (௪)



### திதிப்பிரசங்கை.

நிலையானகாரியஞ் சாந்திபிரதமை நீடுசுபந்
தலையானமந்திரங் கற்றலிரண்டிற்றம் மில்லெடுத்தல்
கலையார்மணமுடி பட்டகன்ம கல்வி மூன்றினன்றிற்
கொலையானைகட்டல் விருத்தங்கொளல்போர் தனையிடலே.

(எ-து.) பிரதமையிற் றிரகன் மங்களான காரியங்களுஞ் சாந்தியும், துதியையிற் சுபகன்மங்களும் மந்திரோபதேசமும் திரிதியையில் வாஸ்துவின்னியாசமும், விவாகமும், இராசாபிஷேகமும், பட்ட பெந்தனமும், வித்தியாரம்பமும், சதுர்த்தியில் யானை கட்டலும் விருத்தங் கொள்ளலும்; யுத்தஞ் செய்தலும், நிகள பந்தனமும் பண்ணலாம்—எ-று. (௫)

### இதுவுமது.

கடிமணந்தானியம் வைத்தல்குளங்கல்ல லஞ்சில்வாத்து
விடல்விடவாத மிடர்செய்வினைதனை யாறிற்போக்குப்
படியுழல்பூணணி நற்காரியமணம் பண்ணுமெழி
லடுவினையட்டகை யைம்முகன்பூசையு மட்டமிக்கே.

(எ-து.) பஞ்சமியில், விவாகம், தனம், தானியசங்கிரகம், குளங் கூபங்கல்லுதலாம். சட்டியில், வாத்துவிடுதல், விஷவாதவப்பியாசம், குரூரகன்மம், ஔஷத சாத்திரகாரதனங்கள், சத்துருதெரிசனம், நிகளபந்தனம் பண்ணலாம். சத்தமியில், யாத்திரை, அலப்பிரவாகம், ஆபரணதாரணம், சகலசுபகன்மம், விவாகம், பண்ணலாம். அட்டமியில், அறுததல், சுடுதல், அட்டைவிடுதல், காரமிடுதல், மருந்துண்ணல், சத்துருவைச்செயிக்கை, அட்டகை, உருத்திராபிஷேகம் பண்ணலாம்—எ-று. (௬)

### இதுவுமது.

நவமியிலட்டகை நாராயணிபூசை நாட்டும்பத்திற்
றவமணமூரிற் புகல்தனதானியம் வைத்தல்பன்னொன்
றுவுநயங்கன்னி பசுத்தானம்பன்னிரண் டுற்றபூங்காய்
புவனியிற்றன்ம மலவனரிபூசை பொன்பூணலே.

(எ-து.) நவமியில், அட்டகையும், துர்க்காபூசையும்பண்ணலாம். தசமியில் தபசும், விவாகமும், கிராமசங்கிரகப் பிரவேசமும், தனதானிய சங்கிரகமுமாம். ஏகாதசியில், உபநய

ளம், கன்னிகாதானம், கோதானம், பூதானம், பண்ணலாம்.
துவாதசியிற் சோலைவைத்தல் பூமரம்வைத்தல், தன்மம் ப
ண்ணுதல், உழல், விதைத்தல், நெல்லறுத்தல் தானியசங்கிர
கம், விட்டுணுபூசை ஆபரணம்பூணலிவையாம்—எ-று. நாட்
டும்,என்றவும்மையாலே, அட்டமிக்குச்சொன்னகன்மங்கள்
நவமியிலுஞ்செய்யலாமென்பது பெற்றும் (எ)

இதுவுமது.

வாகனநன்மணஞ் சித்திரம்பன்மூன் றின் மந்திரங்க
ளாகமநூன்மருந் தாராய்தல்சாந்திபன் னன்கினுவா
வோவைசேர்மங்கலந் தன்மங்குடிபுக லொண்குருவிற்
சாகரநீர்கட றர்ப்பணந்தானஞ் சிராத்தமுமே.

(எ-து.) திரயோதசியில் வாகனமேறல், விவாகம், சித்
திர கன்மங்கள், பண்ணலாம். சதுர்த்தசியில் குருரமந்திரா
ப்பியாசம், ஆகமம், ஔஷதவப்பியாசம், சாந்தியிவையாம்.
பௌரணையில் மங்கலகன்மம், தன்மகாரியம், கிரகப்பிரவேச
மிவையாம். அமாவாசையில் சமுத்திரஸ்நானம், பிதிர்தர்ப்ப
ணம், தானம், சிராத்த மிவையாம்—எ-று. (அ)

வாரநயம்.

வெள்ளிவியாழம் புதன் றிங்கள்வார மிகவுநன் றாந்
தெள்ளியஞாயிறு சேய்சனிதீயன செப்புவரா
முள்ளியவோதும் பலமிரவில்லையோ ரைச்சனிசேய்க்
கொள்ளியவாட்சியு நல்வினையாவிற்கு மோதிலரே.

(எ-து.) வாரங்களில், வெள்ளியும், வியாழனும், புதனு
ம, திங்களும், நன்றும். ஞாயிறு, சனி, செவவாயிவைசன்
நன்றன்று. இவற்றின்பலம பகற்குண்டு. இராத்திரிக்கில்லை.
இராசிகளிற் சனி, செவ்வாய், ஆட்சியான மகாகும்ப மேட
விருச்சிகமிவற்றினுதயங்கள் சுபகாரியங்களுக்காகாது—எ-று.

வாரப்பிரசங்கை.

மணிமுடிமன்னரைக் காணன்மருந்துண்ணல் காரமிடல்
பணிகரிமாவேறல் மந்திரமாராய்தல் பானுவாரத்
தணிமரம்வைத்தல் வயனங்குடிபுக லாடல்பாடல்
கணிபுதுப்பூழ்த் தணிகல்விமுற்றல் கலைமதிக்கே,

(எ-து.)ஞாயிற்றுக்கிழமையில் இராசாபிஷேகமும்,இரா
சதெரிசனமும், ஔடதசேர்வையும், அறுத்தலும், சுடலும்,



காரமிடலும், யானை குதிரை யேறலும், ஆயுதவப்பியாசமும்,
மந்திரோபதேசமும், மந்திரசாதனையுஞ் செய்யலாம். திங்க
ட்கிழைமையில் நல்லமரம் வைத்தல் சவுளகன்மம், குடிபுகு
தல், ஆடல் பாடல் சாதித்தல், கமலமுதலான புட்பாக்கிரா
ணம், முத்தாரம் பூணல், ஆபரணம் பூணல், வித்தியாப்பியா
சம் சமாஸ்தியென்ற கன்மங்கள் பண்ணலாம்—எ-று. (௧௦)

இதுவுமது.

நிலம்பார்த்தல்பட்டம் பவனம்புனைத னெடும்போர்செய்தல்
கலங்காதுசத்திரங் காரமிடல்செய்யோன் வாரத்திலா
நலந்தூதுபெண்பேசல் ஞானம்பெறலோதல் சாந்திபெண்பாற்
புலந்தேறுபோகநற் காரியம்யாவும் புதனிற்செய்யே.

(எ-து.) க்ஷேத்திரம்பார்த்தல், உழல், பட்டபெந்தனம்,
பூமிபபிரவேசம், யுத்தஞ்செய்தல், களப்பலியூட்டுதல், சத்
திரம், காரமிடுதல், செவ்வாய்க்கிழமையிலாம். புதன்கிழமை
யில தூதுபோதல், பெண்காரிய மறுதியிடல், ஞானோபதேச
ம், வித்தியாப்பியாசம், சாந்தி, கெற்பாதானம், புஙசவனம்,
சீமந்தம், சவுளம், மற்றுமுள்ள சுபகன்மங்க ளிவை பண்ண
லாம்—எ-று. (௧௧)

இதுவுமது.

இனங்கல்விபூண்போக் குழன்மணமாதிநூ லிட்டன்மருந்
தெனுங்குருவாரத் தெழின்மணங்கல்விபோக் கிராகம்பாடல்
தனந்தானியம்பசும் பூணணிகாண்டல் சயனமாதி
புனைந்தவைமன்னுதல் போகம்புணர்தல் புகர்தனிலே.

(எ-து.) வியாழக்கிழமையிற் பலநூலப்பியாசம், வஸ்தி
ராபரணம் பூணல், யாத்திரை, அலப்பிரவாகம்,விவாகமுதலா
னமங்கலகாரியங்கள், உபநயனம, தனக்கிட்டமான காரியம்,
ஔடதச்சேர்வை யிவையாம். வெள்ளிக்கிழமையில் விவாகம்,
உழவு, வித்தியாரம்பம், யாத்திரை, இராகம்பாடுதல், தன
தானியம் பார்த்தல் வைத்தல், பசுக்காணல், ஆபரணங்காண
ல், நவரத்தினங்கள் பார்த்தல் பூணல், சயனநிசுகங்கள் பரி
சித்தல், வஸ்திராபரணம், திரிசங்கமனம், பரிச்சின்னங்கள்,
தழுவல் பார்த்தல்,பலபோகங்கள் புசித்தலிவையாம்—எ-று.

### இதுவுமது.

நிலையாவனகாண் டலிற்புகனெல்லறுத் தல்செறித்தல்
கொலையானைகட்ட லிரணங்கொடுத்திடல் கோம்பிவாரத்
துலையாதுசொன்ன வினையனைத்திற்குமொவ் வோருதயந்
தலையாவனவென் றுசான்றோருணர்த்தினர் தார்குழலே.

(எ-து.) சனிக்கிழமையிற் றிரகன்மங்களும், பந்துக்களைக் காண்டலும், விருந்துண்டல், கொடுத்தலும், குடிபுகுதலும், நெல்லறுத்தலும், சங்கிரகித்தலும், யானைகட்டலும், இரணமோசனமுமாம். இப்படியே வாரத்திற் சொன்ன காரியங்கள் அவரவர் உதயத்திலுங் கொள்ளலாம்—எ-று. (கங)

### சுபராசி யசுபராசி.

அலவன்றடிவிடை யாயிழைவிற்றுலை மீனமிவை
நலமுள்ளவோரைநற் கோள்குணமாமேடஞ் சீயநற்றேள்
கலைகுடந்தீக்கோ ளிலங்கொடிதாங்கரு தெட்சியினிற்
சலமுறுதீவினை சத்துருநாசமுந் தான்செயலே.

(எ-து.) கற்கடகம், மிதுனம், இடபம், கன்னி, தனு, துலாம், மீனம், இவை சௌமியக்கிரகங்கள். ஆட்சியாதலிற் குணராசியென்று பெயராம். மேடம், சிங்கம், விருச்சிகம், மகரம், கும்பம், இவை பாபக்கிரகங்கள். ஆட்சியாதலிற் குரூரராசியென்று பெயராம், குணராசி யுதயமாகச் சகல மங்கலகாரியங்களும் பண்ணலாம். குரூரராசியுதயமாகக் குரூர கன்மங்களும், சத்துரு பீடையும் பண்ணலாம்—எ-று. (கச)

### இதுவுமது.

புண்ணியக்கோளின தோரைநன் றல்லத் தீயோர்பொருந்தி
நண்ணியதீக்கோளி னாட்சியினல்லோ ருறினல்லவாம்
பண்ணியவோரை முதலிடையீறு பலம்பகரி
னெண்ணினர்தாமதி கஞ்சமமற்ப மெனவகுத்தே.

(எ-து.) சகல மங்கல கன்மங்களுக்குஞ் சுபக்கிரகங்களை யுடைய ராசி யுதயமாகிற் சுபமாம். அசுபராசியிற் சுபோதயமுண்டாகி லுத்தமமாம். அசுபராசியில் சுபோதயத்திற் குரூரகன்மங்கள் செய்யலாம். ஒரு ராசியை மூ



ன்று கூறிட்டால் முதற்கூறு நன்று. நடுக்கூறு மத்திமம். கடைக்கூறு அதமமாம்—எ-று. (கரு)

### பாபநட்சத்திரம்.

ஆதிரைகேட்டை யரவம்பரணி யழன்முறையே
தீதுமுப்பூரங்கள் நல்வினைசெய்திடிற் றீவினையா
மோதியநாளுடன் றீயவர்வாரங்க ளுற்றிருத்தை
மீதுடரோக மிருத்துவென் றோதினர் வித்தகரே.

(எ-து.) திருவாதிரை, கேட்டை, ஆயிலியம், பரணி, கார்த்திகை, பூரமூன்றும், இந்நாட்களிற் சுபகாரியங்கள் பண்ணலாகாது. இந்நட்சத்திரங்களுடனே பாவவாரங்களுற்றிருத்தைகள் கூடி லவமிருத்து யோகமென்று சொல்லப்படும். இதிற் செய்த காரியங்கள் நாசமாம். இந்த யோகத்தில் வியாதிகொள்ளின் மிருத்துவாம்—எ-று. (கசு)

### ஆண்பெண்அலி.

பரணியழற்றேர்பூ சங்களத்தம்பனை யோணம்பாத
முரசிவையாண்மான் றலைசுண்டன்மூல மலியல்லபெண்
டரைமகன்பொன்கதி ராண்சனிமாலலி வெள்ளிதிங்கள்
வரியரவம்பெண் ணெனவறிவார்குழன் மாமயிலே.

(எ-து.) பரணி, கார்த்திகை, உரோகிணி, புநர்பூசம், பூசம், அத்தம், அனுடம், திருவோணம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இவை புருஷநட்சத்திரம். மிருகசிரிடம், சதயம் மூலம், இவையலி. ஒழிந்த அசுபதி, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், சித்திரை, சோதி, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், இரேவதி யிவை பெண்ணாளாம். கிரகங்களிற் செவ்வாய், வியாழன், ஆதித்தியன், இவையாண். சனி புதன், இவையலி. வெள்ளி, சந்திரன், இராகு, கேது, இவை பெண்ணாம்—எ-று. (கஎ)

### ஊர்த்துவா தோதிரயமுகம்.

சகடங்குருமாயோன் புள்ளுத்திரங்கள் சதயஞ்செங்கை
புகறருமென்முக முற்றிலராவழல் பூரமூன்று
மகம்விற்பரணி யதோமுகமல்லன மானனையாய்
பகரப்படுந்தி ரயமுகமாக விப்பாரிடத்தே.

(எ-து.) உரோகிணி, பூசம், திருவோணம், அவிட்டம், உத்திரமூன்றும், சதயம, திருவாதிரை, இவை மேல்நோக்கி

ன முகமான நாள். விசாகம், ஆயிலியம், கார்த்திகை, பூரமூன்றும், மகம், மூலம், பரணி, இவை கீழ்நோக்கின முகமான நாள். ஒழிந்த அசுவதி, மிருக சிரிடம், புநர்பூசம், அத்தம், சித்திரை, சோதி, அனுடம், கேட்டை, இரேவதி இவை திரயமுகமான நாளாம—எ-று. (கசு)

### ஊர்த்துவமுகாதி நாள்களிற்செய்வன.

வாத்துவிடுதன் முடிசூடல்வாகன மேறல்வித்தல்
கோத்தனமேன்முகத் தான்குளங்கூபங் குழித்தல்கருச்
சேர்த்தறனதா னியங்கள்சேமித்த லதோமுகத்தாம்
யாத்திரைகோளை கொடைதிரயமுகத் தாமென்பரே.

(எ-து.) வாத்து கனமம், இராசாபிடேகம், வாகனமேறல், வித்து விதைத்தல், மரங்கள் வைத்தல், ஊர்த்துவமுகமான நாளொன்பதினுங் கொள்ளலாம். குளங்கிணறு கல்லுதல், கருவைத்தல், தன தானிய சங்கிரகம், மூல வித்துவைத்தல், அதோமுகமான நாளொன் பதினுங் கொள்ளலாம், யாத்திரை, கோளை, கொடை, படர்கொடிப்பயிர், திரயமுகமானநாளொன்பதினுங் கொள்ளலாம்—எ-று. (கசு)

### திரஞ்சரமிருதுதாரணசாதாரணம்.

உருளுத்திரங்க டிரஞ்சோதிவேயோண மூன்றுஞ்சரம்
பரியத்தம்பூசம் லகுமகம்பூரம் பரணியுக்கிரங்
குருகரவங்கேட்டை யாதிரைதாரணங் தாலங்தொழூத்
தருமதிதச்சனெய் தல்லாதநாட்கள் சாதாரணமே,

(எ-து.) ரோகிணி, உத்திரமூன்று, இவை திரநட்சத்திரம். சோதி, புனர்பூசம், திருவோணம், அவிட்டம், சதயம் இவை சரநட்சத்திரம். அசுவதி, அத்தம், பூசம், இவை இலகுநட்சத்திரம். மகம், பூரம், பரணி, இவை உக்கிரநட்சத்திரம். மூலம், ஆயிலியம், கேட்டை, திருவாதிரை, இவை தாரணநட்சத்திரம். அனுடம், இரேவதி, மிருகசிரிடம், சித்திரை, இவை மிருத்துநட்சத்திரம். ஒழிந்த கார்த்திகை, விசாகம், பூராடம், பூரட்டாதி, இவை சாதாரண நட்சத்திரமாம்—எ-று (உ0)



### சத்தமவர்க்கதினம

நிலையின்முடியறஞ் சாந்திமரம்வைத்த னெல்விதைத்தல்
கலைதேர்மருந்தூண் கலனணிபோதல் சிற்பம்லகுவிற்
கொலைகூளிமந்திரந் தாரணத்தானை குதிரையேற
லலைநீர்க்கரைகட்டல் யாத்திரைபூந்தோட்ட மாஞ்சரத்தே.

(எ-து.) இராசாபிடேகம், தன்மகாரியம், சாந்தி, மரம்வைத்தல், நெல்லுவிதைத்தல், திரகாரியங்கள், இவை திரநட்சத்திரத்திலே கொள்ளப்படும். வித்தியாப்பியாசம், தேர் வைத்தல், மருந்துண்ணல் புசிதுண்ணல், ஆடையாபரணம் பூணல், யாத்திரைபோகல், சிற்பகன்மங்கள், இவை லகுநட்சத்திரத்திலே கொள்ளப்படும். அபிசாரிக்கை பைசாசமந்திரசாதனை, இவை தாரணநட்சத்திரத்திலே கொள்ளப்படும். யானைகுதிரையேறுதல், கொள்ளுதல், ஆறுகுளங்கரைகட்டுதல், யாத்திரைபோகல், மாத்தோப்பு பூந்தோட்டம்வைத்தல், இவை சிரநட்சத்திரத்திலே கொள்ளப்படும்—எ-று. (உக)

### இதுவுமது.

ஆடையும்பூணு மணிகுதறேவரை யாதரித்தல்
பாடுதன்மங்கல காரியம்நொய்தென்ப பன்னுநாளிற்
பீடுறச்சுட்ட லறுத்தல்விடபந்த முக்கிரத்தாங்
தேடுமவுடதம் வாகடமந்திரந் தீக்ஷணமே.

(எ-து.) புடவையுடுத்தல், ஆபரணம்பூணல், தேவாராதனை, மந்திரோபதேசம், ஆடல்பாடல், மற்றுமுள்ள மங்கல காரியங்கள், மிருதுநட்சத்திரத்திலே கொள்ளபபடும். வியாதிகளறுத்தல், சுடுதல், காரமிடல், விடகாரணம், விடமந்திரோபதேசம், இவையுக்கிரநட்சத்திரத்திலே கொள்ளப்படும். வியாதிதீரமருந்துண்ணல், வாகடம், மந்திரசாதனை, தீக்ஷணகன்மங்கள், இவை சாதாரண நட்சத்திரத்திலே கொள்ளபபடும்—எ-று. (உஉ)

### வாரவர்க்கம்.

சாஞ்சந்திரன் றிர ஞாயிறுதாரணஞ் சுன்னுக்கிரம்
வருங்குசன்சீவன் லகுநொய்துவெள்ளிமால் சாதாரணந்
திருந்தியநாளின் முறைவினையாவையுஞ் செய்கவென்று
கருந்தடங்கண்ணாய் கடுவைக்குநாதன் கழறினனே.

(எ-து.) கிரகங்களிற் சந்திரன்சரம். ஆதித்தியன்திரம், சனிதாரணம். செவ்வாயுக்கிரம். வியாழன்லகு. வெ

ள்ளிமிருது. \ புதன் சாதாரணம். ஆகையாலிவர்கள் வாரோதயங்களும் முன்பு நாளுக்குச்சொன்னபடி விதிக்கப்பெறும்—எ-று. (௨௩)

யோகவற்சியம்.

ஓதியநித்திய யோகத்தொழிவன வொன்றுமாறுங்
ரீதியிலொன்பதும் பத்தும்பன்மூன்று நிகழ்பதினைங்
தேதமில்பன்னேழும் பத்தொன்பதுமிரு பத்தேழுமாய்ச்
சோதிடநூலவர்சொல்லினர்தூய கரிகுழலே.

(எ-து.) நித்திய யோகமாவன, விட்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிஷணம், வச்சிரம், சித்தி, வியதிபாதம், வரியான், பரிகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிராமியம், மாகேந்திரம், வைதிருதி, என்றவிருபத்தேழு யோகங்களில், சுபகாரியங்களுக்குத் தவிரப்படுவன, விட்கம்பம், அதிகண்டம், சூலம், கண்டம், வியாகாதம், வச்சிரம், வியதிபாதம், பரிகம், வைதிருதி, என்னுமொன்பதுமாம்—எ-று. (௨௪)

இதுவுமது.

கண்டாதிகண்டத்துக் கேழ்கன்னல்சூலத் தினுக்கெட்டென்ப
ருண்டாயவச்சிரத் திற்கும்வியாகாதத் திற்குமொன்பான்
பண்டாயவிட்கம்பத் தாதியிலைந்து பரிகத்துடன்
விண்டாவும்வைதி ருதிவியதிபாத முற்றும்விடே.

(எ-து.) தவிரப்பட்ட நித்தியயோகங்களில், கண்டத்துக்கும், அதிகண்டத்துக்கும், ஆதியிலேழுநாழிகை கழிக்கப்படும். சூலத்துக் கெட்டுநாழிகை கழிக்கப்படும். வச்சிரத்துக்கும் வியாகாதத்திற்கு மொன்பதுநாழிகை கழிக்கப்படும். விட்கம்பத்துக்கு ஐந்துநாழிகை யாதியிலே கழித்தாற் சுபகன்மங்கள்செய்யலாம். பரிகம், வைதிருதி, வியதிபாதம், இவைமுழுதுந் தவிரப்படும்—எ-று. (௨௫)

யோகஉற்பவம்.

ஒத்தகதிர்மதி யுற்றவன்னாட்டிரட் டொன்றொழித்தா
னித்தவியோக நிலைபெறுமாநீங்கும் யோகங்கடான்



வைத்தகயிற்றெதிர் மாமதிஞாயிறு மன்னிற்றீதாஞ்
சுத்தபரிகத்துப் பின்னரைநன்றெனச் சொல்லினரே.

(எ-து.) அசுவதிமுத லாதித்தனின்ற நாளளவுமெண்ணிச், சந்திரனின்ற நாளையுங்கூட்டி யிதிலொன்று கழித்தால் நின்றதொகை நித்தியயோகமாம். இதிற்றவிரச்சொன்ன யோகங்களை, யேகார்க்களத்தொரு கயிற்றிலே சந்திராதித்தர் நிற்பிற் றவிரப்படும். பரிகத்திற் பின்னரைசுபகன் மங்களுக்காம்—எ-று. (௨௬)

ஏகார்க்களம்.

நிலையாகவொன்றும் விலங்குபன்மூன்று நிலத்தெழுதித்
தலையாமியோகத்து நாள்வைத்துச்சந்திர னின்றநாளும்
வலமாங்கதிரவன் மன்னியநாளொ டெதிருறுமேற்
கொலையானவேகார்க் களங்குறுகும்மிது குற்றமென்னே.

(எ-து.) கீழ்மேலாக வொரு ரேகையைக்கீறி யிதிற்றெற்கு வடக்காகப் பதின்மூன்று, இரேகையைக்கீறியிது இரண்டுபக்கமு முச்சியுமாக விருபத்தேழாம். இதில் விட்கம்ப மாதியாகக்கழித்த வொன்பது யோகங்களுக்குச் சொல்லுகிறநாளை யுச்சியில் வைத்துத்தொடங்கி, ஆதித்தியனின்ற நாளளவும் வலமாகவெண்ணிக் குறிசெய்து, பின்பு முச்சியிலே தொடங்கிச் சந்திரனின்ற நாளளவும் வரவெண்ணினால், இருவர்நாளு மொருகயிற்றிலே யிருக்குமாகில், இந்த யோகமுற்றநாள் மிகுதியுஞ் சுபகன்மங்களுக் காகாவாம்—எ-று. (௨௭)

இதுவுமது.

தாலமதிகண்டஞ் சித்திரைவைதி ருதிதைவச்சிரஞ்
சூலமதிபரி விட்கம்பம்பாத மரவுகண்ட
மூலம்பரிகம் மகம்வியாகாதம்வே யிம்முறையே
யேலுங்கதிர்மதி தானெதிர்நோக்கிலே கார்க்களமே.

(எ-து.) தோஷமான யோகங்களுக்குச்சியிலே வைக்குநாள், அதிகண்டத்துக் கனுஷம், வைதிருதிக்குச் சித்திரை, வச்கிரத்துக்குப் பூசம், சூலத்துக்கு மிருகசீரிடம், விட்கம்பத்துக்கு அசுபதி, வியதி பாதத்துக்கு ஆயிலியம், கண்டத்துக்கு மூலம், பரிகத்துக்கு மகம், வியாகாதத்துக்குப் புனர்பூசம், இவற்றைவைத்துச் சந்திராதித்

தர்நின்ற நாளளவுந் தனித்தனியேயெண்ணிக் காண்கவெ கார்க்களமாம்—எ-று. (௨௮)

பவாதிகரணம்.

பவமாதியேழெட் டொளிப்பிரதமைப்பிற் கூறுமுதற்
குலவைசேரவுற்று வருங்குறைபக்கச் சதுர்த்தசிபின்
னவைசேர்சகுனஞ் சதுர்ப்பதநாகங் கிந்துக்கினமென்
றவைதீதுமுன்னவற் றேழாவதுந்தீ தணிவளையே.

(எ-து.) கரணமாவன, பவம், பாலவம், கௌலவம், தைதுலம், கரசை, வணிசை, விட்டி, இவையேழுஞ் சரகரணம், சகுனம், சதுஷ்பாதம், நாகவம், கிமஸ்துக்கினம், என்ற நாலுந்திரகரணம். இவைவருமாறு பூருவபக்கத்துப்பிரதமை பிற்கூறுதி, அபரபக்கத்துச்சதுர்த்தசி முற்கூறந்தம், ௫௬ கரணமும், ஒருதிதிக்கு ௨ கரணமாகவரும். அவைவருமாறு: பூருவபக்கத்துப்பிரதமை பிற்கூறுபவம், துதியைமுற்கூறு பாலவம், பிற்கூறுகௌலவம், திரிதியைமுற்கூறு தைதுலம், பிற்கூறுகரசை, சதுர்த்திமுற்கூறுவணிசை, பிற்கூறுவிட்டி, பஞ்சமிமுற்கூறு முதலட்டமிமுற்கூறளவும், அட்டமி பிற்கூறு முதலேகாதசி பிற்கூறளவும், துவாதசிமுற்கூறு முதற்பௌர்ணை முற்கூறளவும், பௌர்ணைபிற்கூறுமுதல், அபரபக்கத்திரிதியை பிற்கூறளவும், சதுர்த்திமுற்கூறு முதற்சத்தமிமுற்கூறளவும், சத்தமி பிற்கூறுமுதற் றசமிபிற்கூறளவும், ஏகாதசிமுற்கூறுமுதற் சதுர்த்தசிமுற்கூறளவும், இப்படிச்சரகரண மேழும்வரும். சதுர்த்தசிபிற்கூறுமுதலாகத் திரகரணங்கள் நாலும்வரும். அவைவருமாறு: சதுர்த்தசி பிற்கூறு சகுனம், அமாவாசைமுற்கூறு சதுஷ்பாதம், பிற்கூறுநாகவம், பிரதமைமுற்கூறு கிம்ஸ்துக்கினம். இவை நாலுஞ்சரகரணத்திலேழாவதானவிட்டியுந்தவிரப்படும்—எ-று

விட்டிக்கரணம்.

எட்டிற்பதினைந்தி லாதியாம்பன்னொன் றி லீரிரண்டிற்
பட்டகடைக்கூற்றில் விட்டிமுற்பக்க விதியதுவாங்
கட்டியவேழிற் பதினொன்றின்முன்கடை மூன்றிற்பத்தில்
விட்டிவருமெட் டிடத்துமென்றோதினர் வித்தகரே.

(எ-து.) விட்டிவருமாறு: அட்டமியிலும் பௌர்ணமியிலு முற்கூறு, சதுர்த்தியிலு மேகாதசியிலுங் கடைக்கூறு



இது பூருவபக்கத்துவிதியாம். அபரபக்கத்துக்கு, சத்தமியிலுஞ் சதுர்த்தசியிலும் முற்கூறு, திரிதியையிலுந் தசமியிலுங் கடைக்கூறுவிட்டியாம். ஆகவொரு சாந்திரமானத்துக்கெட்டுவிட்டியாம்—எ-று. (௩0)

விட்டியபவாதம்.

ஒன்றுமிரண்டு மொருமூன்றுநான்கு மிரண்டுமூன்று
நின்றுயர்நான்கொன்று நீத்துறுஞ்சாமத்து விட்டிநன்றாங்
குன்றுதமுற்கூ றிரவுபிற்கூறு பகற்குறுகி
நன்றாகும்விட்டி விபரீதமானவை நல்வினைக்கே.

(எ-து.) எட்டு விட்டிக்கு மடைவே, முதற்சாமம், இரண்டாஞ்சாமம், மூன்றாஞ்சாமம், நாலாஞ்சாமம், இரண்டாஞ்சாமம், மூன்றாஞ்சாமம், நாலாஞ்சாமம், முதற்சாமம், இவற்றை யொழிந்த சாமங்களில் விட்டிதோஷமில்லையாம். ஒருசாமம், மூன்றேமுக்கால் நாழிகையாகக்கொள்க. அன்றி முதற்கூற்றிலே வரும் விட்டி யிரவுவரினும், பிற் கூற்றிலே வரும் விட்டி பகல்வரினுங் குற்றமில்லை; சுபகன்மங்கள் செய்யலாம்—எ-று. (௩௧)

இதுவுமது.

மன்னும்பவம்பால வங்கௌலவந்தை துலம்வணிச
மென்னுங்கரண நன்றாங்கரசமத் திமமாகுமால்
முன்னுந்திரமுற்றும் விட்டியிற்சாம முறையிற்றீதா
மன்னதினுந்தத்தி னாழிகைமூன் றினி லாங்குநன்றே.

(எ-து.) பவம், பாலவம், கௌலவம், தைதுலம்: வணிசை, என்ற, ௫, கரணமுஞ் சுபகன்மங்களுக் குத்தமம். கரசைமத்திமம், திரகரணங்கள், ௪-ம், விட்டியிற் றோஷாங்கமான சாமங்களுந் தவிரப்படும். விட்டியின் முடிவிலே, ௩ நாழிகை நன்றாம்—எ-று. (௩௨)

பஞ்சாங்கப்படலம் முற்றிற்று.

ஆகக்கலித்துறை-௫௨.

# குணகுணப்படலம்.

## அவயோகம்.

இரவிதன்வாரத்துப் புட்பனையிந்திர னிர்துமுற
மரவமகமடுப் பைப்பசிபக்கத்தி லாறேழெட்டுப்
பாவுதுவாத சியிருத்தைபன்மூன்று பஞ்சமிநாட்
டரவருங்கார்த்திகை நாசயோகம்மென் றளிரடியே.

(எ-து.) ஞாயிற்றுக்கிழமை கூடின அவிட்டம், அனுடம், கேட்டை, மிருகசிரிடம், விசாகம், ஆயிலியம், மகம், பரணி, அசுவதி, சஷ்டி, சத்தமி, அஷ்டமி, துவாதசி, இருத்தைகளான சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, திரயோதசி, பஞ்சமியுடன் கூடின கார்த்திகை, இவை நாசயோகம்—எ-று. (க)

### இதுவுமது.

உரைதிங்கள்வாரத் துடைகுளமுத்திர மூன்றுமக
நிரைபனைவைகாசி நீள்கனல்பூச நிறைபரணி
துரைவுறுசஷ்டியு மேகாதசியுந் துதியையொடு
புரைவுறுசித்திரை சத்தமிநாசமென் பூங்கொடியே.

(எ-து.) திங்கட்கிழமை கூடின பூராடம், உத்திரமூன்று, மகம், அனுடம், விசாகம், கார்த்திகை, பூசம், பரணி, சஷ்டி, ஏகாதசி, சத்தமி, துதியையுடன் கூடின சித்திரை, இவை நாசயோகம்—எ-று. (உ).

### இதுவுமது.

பூமகன்வாரத் துடன்வருபூராடம் பூசமராத்
தாமருள்கேட்டை சதயம்விசாகந் தசமியுடன்
பாமருசெங்கைபுட் சத்தமிபஞ்சமி பங்கயனு
ளுமமர்பூரணை நாசயோகம்மென் னறுநுதலே.

(எ-து.) செவ்வாய்க்கிழமை கூடின பூராடம், பூசம், ஆயிலியம், கேட்டை, சதயம், விசாகம், தசமி, திருவாதிரை, அவிட்டம், சத்தமி, பஞ்சமி, உரோகணியுடன் கூடின பௌரணை, இவை நாசயோகம்—எ-று. (ங)

### இதுவுமது.

மதிமகன்வாரத் துடன்வருமூலம் மகம்பரிபுட்
பதிபெறுரேவதி சத்தமிகூடும் பரணியராய்



பிதிர்தருபாதந் துதியைதிரிதியை பேசுசஷ்டி
விதிபெறுமஷ்டமி நாசயோகம்மென் விளங்கிழையே.

(எ-து.) புதன்கிழமை கூடின மூலம், மகம், அசுவதி, அவிட்டம், இரேவதி, ஆயிலியம், பூரட்டாதி: துதியை, திதிரியை, சஷ்டி, அஷ்டமி, சத்தமியுடன் கூடின பரணி, இவை நாசயோகம்—எ-று. (ச)

### இதுவுமது.

குருவுடைவாரத்துச் சித்திரையுத்திரங் கூரொரிநா
ளுருண்முதன்மூன்றும் பரணிவிசாக மூலக்கைகேட்டை
தருபனைசேர்திரை யோதசிதுவாதசி சஷ்டியெட்டாய்
வருதிதிநாசஞ்செய் யொகமென்றோதினன் வாசிட்டனே.

(எ-து.) வியாழக்கிழமை கூடின சித்திரை, உத்திரம், கார்த்திகை, உரோகணி, மிருகசிரிடம், திருவாதிரை, பரணி, விசாகம், திருவோணம், கேட்டை, துவாதசி, சஷ்டி, அஷ்டமி, அனுடத்துடன் கூடின திரயோதசி, இவை நாசயோகம்—எ-று. (ரு)

### இதுவுமது.

புகருடைவாரத்துப் புட்பனைபூசமு ரோகிணியு
நிகரிலறுவை மகமாயில்கேட்டை நெடுஞ்சுழகு
திகழ்தருசட்டி சேரோணந்தசமிமூன் றெட்டிரண்டு
மிகவுறுபன்னொன்று நாசமென்றோதின ரிங்கிலத்தே.

(எ-து.) வெள்ளிக்கிழமை கூடின அவிட்டம், அனுடம், பூசம், உரோகிணி, சித்திரை, மகம், ஆயிலியம், கேட்டை, விசாகம், தசமி, திரிதியை, அஷ்டமி, துதியை, ஏகாதசி, சஷ்டி கூடின திருவோணம், இவை நாசயோகம்—எ-று. (சா)

### இதுவுமது.

சனிசெறியுத்திர மாதிமூன்றோணஞ் சதயங்கழை
நினைவுறுபூராட முத்திராடம்பூச நீள்பரணி
கனிவருசத்தமி மூன்றுபன்னொன்று நவமிகலம்
புனைதருமஷ்டமி நாயயோகம்மென் புணர்முலையே.

(எ-து.) சனிக்கிழமை கூடின உத்திரம், அத்தம், சித்திரை, திருவோணம், சதயம், புநர்பூசம், பூராடம், உ

த்திராடம், பூசம், பரணி, சத்தமி, திரிதியை, ஏகாதசி, நவமி, இரேவதியுடன் கூடின அஷ்டமி, இவை நாசயோகம்—எ-று. (௭)

### நாசயோக நிஷித்தம்.

நாட்டியநாசயோ கத்திடைநல்வினை செய்யவெண்ணிற்
கூட்டியதென்கடு வைக்குணசீலர்தங் கூடலர்போ
லீட்டியதீவினை யாலிடர்கூர்ந்தெழு நல்குரவா
லோட்டிலிரந்துண்ப ரென்றறிநல்ல வொளிவளையே.

(எ-து.) சொல்லிய நாசயோகத்திற் சுபகன்மங்கள் செய்தால், அசுபமாய் வியாதியுமாய்க் கடுவைக்கு வேந்தனுடைய சத்துருக்களைப்போலப் பிச்சையிரந்துண்பர்.—எ-று. (௮)

### நாசயோகாபவாதம்.

வளருமதியநட் பெய்திநற்காலின் மகிழ்ந்துநிற்ப
வளவினில்வாரத் திறைவலியின்றி யமைந்துசாலத்
தளர்வொன் றிநின்றிடிற் சாற்றியநாசயோ கத்திலந்நாள்
வளமுண்டுநல்வினைக் கென்றுநன் மந்திரி வைத்தனனே.

(எ-து.) சந்திரன் பூரணனாய் நட்பாட்சியுச்சத்துச் சுபாங்கிசத்து நிற்ப வாராதிபதி வலியின்றியே பகைநீசத்தில் நிற்பிற் சொல்லப்பட்ட நாசயோகங்களெல்லா மிக்க சுபயோகமாமென்று பிரகஸ்பதிபகவான் சொல்லினன்—எ-று. (௯)

### சுபயோகம்.

பரிதிதருமூலம் பூராடமத்தம்பஞ் சாயுதனை
ளிருவகைப்பூசமூன் றுத்திரநாவா யிவைசுபமாந்
தருநந்தைகூடுஞ் சதயங்கனல்சங் கரனறுவை
பெருநன்மைசெய்யும் வரயோகநந்தையும் பேரமுதே.

(எ-து.) ஞாயிற்றுக்கிழமை கூடின மூலம், பூராடம், அத்தம், திருவோணம், புநர்பூசம், பூசம், உத்திரத்திரயம், இரேவதி, இவை சுபயோகமாம். நந்தையுடன்கூடின சதயம், கார்த்திகை, திருவாதிரை, சித்திரை, இவை வரயோகம். நந்தையுஞ் சுபயோகமாஞ் சஷ்டிதவிர—எ-று.



### இதுவுமது.

திங்கட்கருங்கழை சோணைமகயிரஞ் செக்குருட்டே
ரங்கத்தவிட்டம் விளக்குப்பதங்கேட்டை யாங்குநல்ல
சங்கச்செயைபத்திரை யுடன்கூடிடிற் சாலநன்றாங்
கொங்கைத்தருங்குழலாய் சித்தயோக மெனக்குறியே.

(எ-து.) திங்கட்கிழமை கூடின புநர்பூசம், திருவோணம், மிருகசீரிடம், சதயம், உரோகிணி, அத்தம், அவிட்டம், சோதி, பூரட்டாதி, கேட்டை, இவைசுபயோகமாம். பக்கங்களிற் பத்திரை,செயை கூடிற்சித்தயோகமென்றும், அமிர்த யோகமென்றும்,சுபயோகமென்று பெயராக் வுளங்கப்படும் சத்தமிதவிர—எ-று. (௧௧)

### இதுவுமது.

செய்யவன்வாரஞ் செறியுத்திரமூன்று சேர்பரணி
வெய்யசகடம் பரிசெயைபத்திரை மிக்கசுப
மையகலங்கொக்குச் சோதியரவ மணைந்தநந்தை
வையந்தரும்வர யோகமென்றோதினன் வாசிட்டனே.

(எ-து.) செவ்வாய்கிழமை கூடின உத்திரத்திரயம், பரணி, உரோகிணி, அசுவதி, செயை, பத்திரை,இவைசுபயோகம். இரேவதி, மூலம், சோதி, ஆயிலியம், இவற்றுடன் நந்தைகூடில் வரயோகம். சத்தமிதவிர நந்தையுஞ் சுபயோகம்—எ-று. (௧௨)

### இதுவுமது.

புந்திதருங்கனல் மான்றலைபெண்ணுமுப் பூரஞ்செங்கை
யுந்துமுருளுத் திரமுத்திராட முயர்ந்தசெயை
சுந்தரபத்திரை நித்தஞ்சுபஞ்செயும் யோகமென்றே
மந்திரிநூன்முறை வைத்தனன்விற்பொலி வாணுதலே.

(எ-து.) புதன்கிழமை கூடின கார்த்திகை, மிருகசீரிடம், அனுடம், பூரத்திரயம், திருவாதிரை, உரோகிணி, உத்திரம், உத்திராடம், செயை, பத்திரை, இவை சுபயோகம். துதியை, திரிதியை, அட்டமிதவிர—எ-று. (௧௩)

### இதுவுமது.

வியாழந்தரும்பரி பூசம்புனர்தம் விளக்குமக
மியாயந்தருங்கலம் பூராடஞ்சுண்ண னெறியரவங்

தயாவிலிருத்தை வளர்ச்சியுங்கூடிடிற் சாலநன்றென்
றுயாவிநெறிகின் றுரையிந்துவாணுத லொண்ணகையே.

(எ-து.) வியாழக்கிழமை கூடினஅச்சுவினி, பூசம், புநர்பூசம், சோதி, மகம், இரேவதி, பூராடம், சதயம், ஆயிலியம், இருத்தை, பூரணை, இவைசுபயோகம்—எ-று. (௧௪)

இதுவுமது.

வெள்ளிதருபூர மூலம்பரணி விளக்குக்கல
மொள்ளியவுத்திர மத்தமறுவை சதயமோணந்
துன்னும்பரிசெயை பத்திரைநந்தை சுபமனைத்துங்
கொள்ளுங்குணங்க டருஞ்சித்தயோகங் கொடியிடையே.

(எ-து.) வெள்ளிக்கிழமை கூடினபூரம், மூலம், பரணி, சோதி, இரேவதி, உத்திரம், அத்தம், சித்திரை, சதயம், திருவோணம், அச்சுவினி, செயை, பத்திரை, நந்தை, இவை சித்தயோகம். துதியை, திரிதியை, அட்டமி ஏகாதேசி தவிர—எ-று. (௧௫)

இதுவுமது.

சனிதருகார்த்திகை கேட்டைசதயஞ் சகமுறம்
பனிதருபெண்ணை மாக்கால்பறவையும் பத்திரையு
நனிசேரிருத்தை வளர்ச்சியிவைநல்ல யோகமென்றே
கனியிதழ்வாய்மயிலே கலைவல்லவர் காட்டினரே.

(எ-து.) சனிக்கிழமை கூடின கார்த்திகை, கேட்டை, சதயம், உரோகிணி, விசாகம், அனுடம், சோதி, அவிட்டம், பத்திரை, இருத்தை, பூரணை இவைசுப யோகம், சத்தமி, நவமிதவிர—எ-று. (௧௬)

சுபயோகமான்மியம்.

திருந்தியயோகத்து நல்வினைசெய்திடிற் றென்கடுவைப்
பொருந்தியவேளாண் டலைவரைப்போலப் புகழுடனே
விருந்துடனுண்டலு மெய்யுஞ்சிறப்பு மிகவிளங்கி
நிரந்தாஞ்செல்வத்து நீடூழிவாழ்வரிந் நீணிலத்தே.

(எ-து.) இந்தச்சுபயோகத்திற் சுபகன்மங்கள்பண்ணினால், கடுவைக் கிறைவனைச் சேர்ந்துள்ளாரைப்போலத் தனதானிய பூர்த்தியுண்டாய்ச், சகலமங்கலங்களோடுங்கூடிச் சற்கீர்த்தியும், பூரணாயுளும் பொருந்திக்கிரகத்தராவார்—எ-று. (௧௭)



யோகங்கட்குப்புறனடை.

கூவுமோரேழ்கவி யாஞ்சுபயோகத்திற் கூறுபக்கஞ்
சாவுண்டதிற்சில சட்டிவெய்யோன்சத் தமிமதியங்
தாவுசேயேழ்புதன் மூன்றெட்டிரண்டு தருஞ்சல்லிய
னேவுபன்னொன் றிரண் டெட்டுமூன்றந்த னேழ்நவமே.

(எ-து.) வாரமேழுக்குஞ் சுபயோகக்கவிசொல்லப்பட்டதிற், கூறினபக்கத்திலே சிறிதுபக்க முன் நாசயோகத்திலே யோதினபக்கமுமுண்டு. ஞாயிற்றுக்கிழமைச் சட்டி, திங்கட்கிழமைச்சத்தமி, செவ்வாய்க்கிழமைச்சதமி, புதன்கிழமைத்துதியை, திரிதியை, அட்டமி, வெள்ளிக்கிழமைத்துதியை, திரிதியை, அட்டமி, ஏகாதசி, சனிக்கிழமைச் சத்தமி, நவமி, கழித்துக்கொள்ளப்படும்—எ-று. (௧௮)

சித்தாமிர்த நாசயோகம்.

அத்தமகயிர மாதிபனைபூச மந்தம்பண்டி
சித்தங்குருகு முதலாய்நன்னூலுகாட் சேர்ந்தமுதாய்
நித்தம்விசாக முதனிலைமூன்றுதீ தொன்றமிர்தாய்
வைத்தனர்யோகங்கள் ஞாயிறேயாதிவா ரத்தடைவே.

(எ-து.) ஞாயிற்றுக் கிழமை முதலான வாரங்கள் ஏழும் அடைவே, அத்தம், மிருகசீரிடம், அச்சுவினி, அனுடம், பூசம், இரேவதி, உரோகிணி, இவைசித்தயோகமாம். ஞாயிறுதி மூலமுதல், அபிசித்துட்பட வாரமொன்றுக்கு, ௪. நாளமுதயோகம். ஞாயிறுதி விசாகமுதல் அடைவே, ௩. நாள் நாசயோகம். ௧. நாளமுத யோகமென்று வாரந்தோறு மறியப்படும். எ-று. அமுதயோகம், சித்தயோகம், சுபயோகம், என்று உத்தம யோகத்துக்குப் பெயர்—எ-று. (௧௯)

தினமிருத்து.

அத்தமவிட்டம் விசாகமொடாதிரை யாயிலிய
முத்திரட்டாதி பரணிமூலம்முதற் காலடைவே

வைத்ததினமிரண்டிற் கொருபாதம் வரன்முறையே
சத்தமறிவோர் தினமிருத்தென்றனர் தாழ்குழலே.

(எ-து.) அத்தம், அவிட்டமுதற்கால், விசாகம், திருவாதிரை யிரண்டாங்கால், ஆயிலியம், உத்திரட்டாதி மூன்றுங்கால், பரணி, மூலம்நாலாங்கால், இவை தினமிருத்துவாம்—எ-று. (உ௦)

## திவாரோகம்.

முதற்கால்களைவையப் பசிக்கிரண்டாம்பத மூலமபேப்
பதற்காலுலக்கை யதனொடுபெங்குனி யந்தத்திற்கு
மதிக்காயநாட்சோதி யானதிவாரோக மென்றுதீதாய்
விதித்தார்கணாலின் றிறம்வழுவாதுணர் வித்தகரே.

(எ-து.) ஆயிலியம், அச்சுவினி முதற்கால், பரணி, மூலமிரண்டாங்கால், திருவோணம், உத்திர மூன்றுங்கால், மிருகசீரிடம், சோதிநாலாங்கால், இவை திவாரோகமென்றுபெயராம்—எ-று. (உக)

## தினமிருத்துத்திவாரோகாபவாதம்.

சொற்றதினமிருத் துந்திவாரோகமுஞ் சூழ்ந்தகால்கள்
குற்றம்பகலுள வாமிரவில்லைக் குளிர்மதிய
முற்றும்வளர்வுறு காலத்துமொண்கோட்கள் சேர்விடத்தும்
விற்றருபூணுதலாய் பகற்கால மிகவுநன்றே.

(எ-து.) தினமிருத்துத் திவாரோகங்களிற் சுபகன்மங்கள் பண்ணலாகாது. இந்நாட்களி லிக்கால்களிற் பகற் பண்ணுஞ் சுபகன்மங்கள் தவிரப்படும். இக்கால்களிரவிற்காம். சந்திரன் பூரணனுமொரு சுபக்கிரகத்துட னின்றபோது, பகலுந் தோஷமில்லை—எ-று. (உஉ)

## நாள்விஷம்.

அத்தமிருபத் திரண்டிலரா முப்பத் தொன்றிலீச
னொத்தமுறம்பதி னொன்றிற்கலையினிற் பாதமுப்பான்
வைத்தகலங்கழை யாரன்மகமிரு பத்துநான்கி
னுத்திரட்டாதி பரணியுடைகுளத் தாண்விடமே.

(எ-து.) அத்தத்துக் கிருபத்திரண்டின் மேலும், ஆயிலியத்துக்கு முப்பத்தொன்றின் மேலும், திருவாதிரை[redacted]



குப் பதினொன்றின் மேலும், பூரட்டாதிக்குப் பதினாறின் மேலும், அடைவே நாலுநாழிகை விஷம். இரேவதி, புனர்பூசம், கார்த்திகை, மகம், இவற்றுக்கு முப்பதின்மேல் ச-நாழிகை விஷம். உத்திரட்டாதி, பரணி, பூராடம், இவற்றுக்கு இருபத்து நாலின்மேல், ச-நாழிகை விஷம்—எ-று. (உ௩)

## இதுவுமது.

இருபதிற்பூசங் கடைக்குளமூல மெலியறுவை
யொருபதிற்புட்பனை யோணமெனைப்பசி யைம்பதின்மேல்
வருபதினான்கின் மதிமரக்கால்கேட்டை நாற்பதின்மே
லருள்பதினெட்டின்மே லுத்திரஞ்சுண்ணகஞ் சூறிடமே.

(எ-து.) பூசம், உத்திராடம், மூலம், பூரம், சித்திரை, இவற்றுக்கு இருபதின்மேல், ச-நாழிகை விஷம். அவிட்டம், அனுடம், திருவோணம, இவற்றுக்குப் பத்தின்மேல். ச-நாழிகை விஷம். அச்சுவினிக்கு ஐம்பதின்மேல். ச-நாழிகை விஷம். மிருகசீரிடம், சோதி, கேட்டை, இவற்றுக்குப் பதினாலின்மேல். ச-நாழிகை விஷம். உரோகிணிக்கு நாற்பதின்மேல், ச-நாழிகை விஷம். உத்திரம், சதயம், இவற்றுக்குப் பதினெட்டின்மேல். ச-நாழிகை விஷம்—எ-று. (உச)

## நாள்விஷாபவாதம்.

முன்னியநாளில் விடமுறுகாலின் முறையில்வைத்த
நன்னெறிநாழிகை மேனான்குகன்னனஞ் சென்பர்நற்கால்
மன்னுமதியைநற் கோளொன்றினுங்கூடி வந்தெழினும்
பொன்னவன்கண்டத் துறினுமுதெனப் போற்றுவரே.

(எ-து.) சொன்ன நாட்களிற் சொன்ன நாழிகைக்குமேல். ச - நாழிகை விஷம். இதிற் சகலமங்கலகாரியங்களுந் தவிரப்படும். இந்த விஷகடிகை சந்திரன் சுபாங்கிசத்து நிற்பசுபக்கிரகத்தாற் பார்க்கப்பெறினும், சுபக்கிரகத்துடன் கூடி நிற்பினும், பிரகஸ்பதி கேந்திர திரிகோணத்திலே நிற்றல்செய்யினும், விஷகடிகைத் தோஷமில்லை. அப்பொழு தமுதத்தைப் பண்ணுஞ் சந்திரன்—எ-று. (உரு)

## அமுதகடிகை.

பூதமதியெலி முப்பதிற்புன்னொன்றிற் பூசமூவே
ளாதியையம்பானழ றூற்பதிற்பாம்பொ டானமுதாம்

பாதம்புனல்பத்தி னேழுத்தம்பன்னெட்டி னீண்மூரசு
சோதியிருபத் திரண்டினிற்றேணியி லாறிரண்டே.

(எ-து.) பரணி, மிருகசீரிடம், பூரம், இவற்றுக்குமுப்பதின்மேலும், பூசத்துக்குப் பதினொன்றின் மேலும், அச்சுவினிக்கிருபத் தொன்றின்மேலும், கார்த்திகைக்கைம்பதின்மேலும், திருவாதிரை, ஆயிலியம், இவற்றுக்கு நாற்பதின்மேலும், பூராடம், பூரட்டாதி, இவற்றுக்கும்பத்தின்மேலும், அத்தத்துக்கு ஏழின்மேலும், உத்திரட்டாதிக்குப் பதினெட்டின்மேலும், சோதிக்கிருபத்திரண்டின்மேலும், இரேவதிக்குப் பன்னிரண்டின்மேலும் அடைவே ௪-நாழிகை யமிர்தகடிகையாம்—எ-று. (௨௬)

இதுவுமது.

தாலங்குருகாடி புள்வேய்சகடமீ ரேழிகலை
மேலுமறுவையிற் கேட்டைமுப்பத்தொன் றின் மேல்விசாகம்
பாலுமரிமகங் குன்றிருபானுத் திரமுப்பதி
னூலுங்கடிகைமூன் றுங்கதன்மேனுன் கமுதமென்னே,

(எ-து.) அனுடம், மூலம், உத்திராடம், அவிட்டம், புனர்பூசம், உரோகிணி, இவற்றுக்குப் பதினாலின்மேலும், சித்திரைக்குப் பதினாறின்மேலும், கேட்டைக்கு முப்பத்தொன்றின்மேலும், விசாகம், திருவோணம், மகம், சதயம், இவற்றுக்கிருபதின்மேலும், உத்திரத்துக்கு முப்பத்துமூன்றின்மேலும், அடைவே ௪-நாழிகையமிர்தகடிகையாம்—எ-று. சிலர் முன்சொன்ன விஷகடிகைக்கு மேல், ௪-நாழிகை யமிர்தகடிகையென்பர் (௨௭)

மாதசூனியம்.

சித்திரைக்குப்பரி தேரட்டமிகுட மேகாதசி
சுத்தவைகாசிக்குச் சோதியறுவை துவாதசியு
முத்திரட்டாதி குருமீனஞ்சூனிய மொண்கழைசே
வைத்திரயோதசி யானிக்கோதினன் வாசிட்டனே.

(எ-து.) மாதசூனியம், சித்திரைமாதத்துக்கு அச்சுவினி, உரோகிணி, அட்டமி, ஏகாதசி, கும்பம், வைகாசிமாதத்துக்குச் சித்திரை, சோதி, உத்திரட்டாதி, பூசம், துவாதசி, மீனம், ஆனிமாதத்துக்குப் புனர்பூசம், திரயோ



தசி, இடபம்—எ-று. வைகாசிக்கு மாதவமென்றுபெய
ராகையால் சுத்தவைகாசி என்றார். (௨௮)

இதுவுமது.

விட்டம்புனலுத் திராடம்பன்னான்கு மிதுனமாடிக்
கொட்டியவாவணிக் கானிநீர்பூரணை யொண்கொறியா
மிட்டகலஞ்செக்குச் சத்தமிகன்னி யிவைபுரட்டை
சுட்டொன்பதும்பத்துந் தேளும்பதந்துலை சூனியமே.

(எ-து.) ஆடிமாதத்துக்குப் பூராடம் உத்திராடம், அ
விட்டம், சதுர்த்தசி, மிதுனம், ஆவணிமாதத்துக்குப் பூ
ராடம், உத்திராடம், பௌரணை, மேடம், புரட்டாசிமா
தத்துக்குச் சதயம், இரேவதி, சத்தமி, கன்னி, ஐப்பசிமா
தத்துக்குப் பூரட்டாதி, நவமி, தசமி, விரிச்சிகம், சூனி
யம்—எ-று. (௨௯)

இதுவுமது.

பூசங்கனன்மக மான்றலைபஞ்சமி பொற்றிரிதியை
மூசுந்துலையிவை கார்த்திகைக்காமூறந் தாலந்தனு
மாசின்மூரசிரண் டொன்பதுமார்கழிக் காகுமத்த
மீசனரவம் பிரதமைதையிற்குச் சூனியமே.

(எ-து.) கார்த்திகைமாதத்துக்குப் பூசம், கார்த்திகை,
மகம், மிருகசீரிடம், பஞ்சமி, திரிதியை, துலாம், மார்கழிமா
தத்துக்கு விசாகம், அனுடம், உத்திரட்டாதி, துதியை, ந
வமி, தனு, தைமாதத்துக்கு அத்தம், திருவாதிரை, ஆயிலி
யம், பிரதமை, கற்கடகம, சூனியம—எ-று. (௩0)

இதுவுமது.

மூலமுருந்தன் சதுர்த்தியுமற்றுஞ் சுருத்தசமி
யேலுமன்மாசிக் கெழிலடுப்பிந்திர னேர்கொள்சிங்கஞ்
சாலுஞ்சதுர்த்தசி சூனியமாகச் சகலகலை
நூலிங்குணர்ந்தவர் பங்குனிக்கென்று நுவன்றனரே.

(எ-து.) மாசிமாதத்துக்கு மூலம், திருவோணம், சது
ர்த்தி, தசமி, மகரம், பங்குனிமாதத்துக்குப் பரணி, கேட்டை,
சதுர்த்தசி, சிங்கம், இவை சூனிய நட்சத்திர திதி ராசியா
ம்—எ-று. (௩௧)

### சூனியாபவாதம்.

திங்களிற்சூனியஞ் சாந்திரமாதத்துச் சேர்கைதிடம்
வெங்கதிர்மாதத் தினும்விதியாம்வெண் ணிலாவலவன்
செங்கண்விடையினிற் சேரினுங்கோணகண் டங்களிற்பொன்
றங்குதல்நோக்குதல் செய்யினுஞ்சூனியஞ் சாலநன்றே.

(எ-து.) மாதசூனியங்களைச் சாந்திரமானமாதங்களிலே கொள்ளப்படும். சௌரமாதத்தினுங் கொள்ளப்படும். சந்திரன்கற்கடகத்திலே யாயினும், இடபத்திலே யாயினும், நிற்க இவனுக்குக் கேந்திரத்திலே யாயினும், திரிகோணத்திலே யாயினும், பிரகஸ்பதி நிற்றல், நோக்குதல் செய்யினும் மாதசூனிய மென்கின்ற நட்சத்திர திதிராசி தோஷமில்லை.—எ-று. (௩௨)

### சடசீதி.

சரத்தினிலேழுந் திரத்தினிலைந்துந் தடங்கதிரோ
னுருத்துறுபாக முபயத்துளொன்பது முற்றவங்ஙா
ணிரைத்தசடசீதி யென்றொழித்தார்கன்ன னீங்குபாகைக்
குரைத்தவறுபது மாகாதனவென் றொழிவளையே.

(எ-து.) ஆதித்தியன் சரராசியினின்று ஏழாம்பாகமும், திரராசியினின்று ஐந்தாம்பாகமும், உபயராசியினின்று ஒன்பதாம் பாகமும், சடசீதியென்னுந் தோஷமாம். இந்தப் பாகங்களுற்றநாளிற் சுபகன்மங்கள் செய்யலாகாது—எ-று. (௩௩)

### பூகம்பாதி.

பாகஞ்செறிசுடர் மன்னியநாளாதி யேழும்பத்தும்
மோகந்தரும்பதி னைந்திருபத்தொன் றுமுன்முறையே
பூகம்பமுற்கம் பிரமதண்டங்கொடி யென்றுபொல்லா
யோகங்கணல்வினைக் காகாதெனவுரை யொண்ணுதலே.

(எ-து.) ஆதித்தியனின்ற நாளுக் கேழாநாட்பூகம்பம், பத்தாநாளுற்கம், பதினைந்தாநாட் பிரமதண்டம், இருபத்தொராநாட் காலத்துவசம், என்று பெயராம் இந்தச். யோகங்களினுஞ் சுபகாரியஞ் செய்யலாகாது—எ-று. (௩௪)



### ஆசிவிஷம்.

வெய்யோன்மதியுடன் சேர்நாட்கிரண்டு விரோதமொன்பான்
செய்யபரிசம் பதின்மூன் றுவச்சிர மாறுதண்டந்
துய்யபதினாறு கண்டம்பதினெட்டுச் சூலம்பாத
மையபத்தொன்பது மாசிவிஷமென் றறைந்தனரே.

(எ-து.) ஆதித்தியனுஞ் சந்திரனுங் கூடின நாளான வமாவாசையுற்றநாளுக் கிரண்டாநாள் விரோதமும், ஒன்பதாநாட் பரிகம், பதின்மூன்றாநாள் வச்சிரம், ஆறாநாட் தண்டம் பதினாறாநாட் கண்டம், பதினெட்டாநாட் சூலம், பத்தொன்பதாநாள் வியதிபாதம், என்று சொல்லப்பட்ட ஏழியோகத்துக்கும் ஆசிவிஷ மென்று பெயராம். இதிற் சகல மங்கலகாரியங்களுந் தவிரப்படும்—எ-று. (௩௫)

### ஆசிவிஷாபவாதம்.

தேசுறுவெண்மதி வெய்யவனற்கால் சிறந்தவுடைய
மாசில்குருத்திரிகோண கண்டத்தும்வர்க் கோத்தமத்துங்
காசணிபூண்முலையாய் நிற்பினந்நாட் கணிதம்வல்லோர்
பேசியவாசி விடந்தானுநன்றெனப் பேசினரே.

(எ-து.) பூருவபக்கத்துச் சந்திரன், ஆதித்திய னிவர்கள் சுபாங்கிசத்துநிற்ப, பிரகஸ்பதி கேந்திரத்திலாதல், திரிகோணத் திலாதல், வர்க்கோத்த மத்தினுதல் நிற்கிற், சொல்லப்பட்ட ஆசிவிஷதோஷமில்லை—எ. று. (௩௬)

### கண்டகத்தூணம்.

சுடரவன்செய்யவ னின்றநாளாதிமூ லாந்தத்தொகை
யடைவுறுமூலாதி நாட்கண்டகந்தூண மாங்கிரண்டின்
படர்தொகைமூலாதி நாட்கண்டகத்தூணம் பான்மொழியா
யடைவிலைநல்வினைக் கென்றமரேச னறைந்தனனே.

(எ-து.) ஆதித்தியனின்ற நாள்முதல் மூலமிறுதியாக வெண்ணிவந்த தொகையை, மூலமுதலாகக்கழித்தால் உற்றநாட் கண்டகமென்று பெயராம். செவ்வாய்நின்ற நாள்முதல் மூலமிறுதியாக வெண்ணிக் கண்டதொகையை மூலமுதலாகக் கழித்தால் உற்றநாள் தூணமென்று பெயராம். இவ்விரண்டுதொகையுங் கூட்டி மூலமுதலாகக்கழித்தால்உற்றநாள்

கண்டகத்தாணமென்று பெயராம். இம்மூன்றுவகையி லும்
ற்நாளுஞ் சுபகன்மங்களுக் காகாதென்று பிரகஸ்பதிபகவா
ன் சொல்லினன்—எ-று. (௧௭)

## இரத்ததாணம்.

சோனரியிற்பதி னெட்டாயபாகத் திடைக்குசனை
மீனவெடுத்த நிலையவனுளில் விளங்கியெழு
நாளுறுகாலங்க ணல்வினைசெய்திடிற் றீவினையாம்
வாளமர்கண்மட வாய்ரத்ததாணமா நாளென்பரே.

(எ-து.) ௪. இராசியும், ௧௮. பாகையும் வைத்திதிலே
யற்றைச் செவ்வாயுடைய சுத்த புடத்லைதக் கழிந்து நின்
றதனை,நாள்பார்க்கும்படியே பார்த்தால் அற்றை நாளுறி வந்
நாளிரத்த தாணமென்று பெயராம். இந்நாட் சுபகன்மங்களு
க்காகாது—எ-று. (௧௮)

## கண்டகாதிதோஷாபவாதம்.

தம்முடையில்லிலுச் சத்திற்குசன்கதிர் சார்வுறுமேல்
விம்முறுகண்டகத் தாணங்கண்மிக்க விரத்ததாணஞ்
செய்மையினன்றென்பர் செங்கதிரோனுட்சி துங்கஞ்சேர
விம்முறைநன்னோக்கிற் பூகம்பமாதிக ணன்றென்பரே.

(எ-து.) ஆதித்தியனுஞ் செவ்வாயுந் தத்த முச்சத்தி
லே நிற்றலாட்சியிலே நிற்றல் செய்யிற் கண்டகமுந் தாணமு
ங் கண்டகத்தாணமும் இரத்த தாணமுமென்ற தோஷங்க
ளில்லை. ஆதித்தியனுட்சி யுச்சத்திலே நின்று நோக்கில் பூக
ம்பம், உற்கம்டம், பிரமதண்டம், காலத்துவசமென்ற தோ
ஷங்க ளில்லையாம்—எ-று. (௧௯)

## அனலாதி கிரகதோஷம்.

செய்யவனின்றநாட் கேழிருபத்தைந்து சேர்பதின
றையபன்னான்கு மனலமென்றாணி மானிலைக்குத்
துய்யபதினெட்டுந் தொக்கவிருபத்து நான்கினையும்
வெய்யவென்றார்குரு நின்றநாட்கொண்டதேழ் வைப்பென்பரே.

(எ-து.) செவ்வாய் நின்றநாளுக்கு,ஏழாநாள், பதினைவா
நாள், பதினாறுநாள்,இருபத்தைந்தாநாள், இவை அனல்நட்ச



த்திரமாம். புதனின்ற நாளுக்குப் பதினெட்டாநாள், இருபத்
துநாலாநாள், இவை யுக்கிர நட்சத்திரமாம். பிரகஸ்பதிநின்
ற நாளுக்கு ஏழாநாள், ஒன்பதாநாள், இவை வெப்பு நட்சத்
திரமென்று பெயராம்—எ-று. (௨௦)

## இதுவுமது.

பத்தாஞ்சிதனிலை நாசமாவைந்தும் பத்தொடொன்றும்
வைத்தார்பதின்மூன்று மந்தற்கிருபது மாறும்பன்னொன்
றொத்தானபத்தும் விடமோகயோகமென் றொண்ணுதலா
யித்தாரணியினல் லோர்கண்டகமென் றிசைப்பர்களே.

(எ-து.) சுக்கிரனின்ற நாளுக்குப் பத்தாநாள் நாசநட்ச
த்திரம். இராகுநின்ற நாளுக்கு ஐந்தாநாள், பதினொராநா
ள், பதின்மூன்றாநாள் விஷநட்சத்திரம்.சனிநின்ற நாளுக்கு
ஆறாநாள், பத்தாநாள், பதினொராநாள், இருபதாநாள், இவை
மோகநட்சத்திரம். இப்படிச் சொல்லப்பட்ட, அனலம், உக்கி
ரகம்,கூரம், நாசம், விஷம், மோசம், என்ற யோகநாட்கட்குக்
கண்டகமென்று பெயராம். இவையிற் சுபகன்மங்கள் தவிரப்
படும்—எ-று. (௨௧)

## இதுவுமது.

வெய்யவனால்வரு நாட்கண்டகந்தனைக் காயிலேக்கண்
செய்யவனால்வரு நாட்டுணைதீங்கு தான்மிகுதி
பையரவால்வரு நாள்விடமாம்பகை வஞ்சங்காரி
கையுறுநாசனல் லவர்க்குற்றநாட்க ளலமிலவே.

(எ-து.) ஆதித்தியனால், வருநாள் கண்டகமென்றுங் கா
த்தாவுக்குத்துக்கமென்றும், செவ்வாயால்வருநாள் துணை
மென்றும், மிகுந்தபீடையென்றும், இராகுவால்வருநாள் வி
ஷமென்றும், சனியால்வருநாள், பகையென்றும், அல்லாதசு
பக்கோள்களால் வந்தநாட்கள் வஞ்சநாளென்று மறிச. எ-று.
நலமிலவே என்றதனு லிவற்றில்வியாதியுறின் மரிக்கும் என்
பாருமுளர் (௨௨)

## கண்டகாதியபவாதம்.

இயல்பாயவாட்சியி லுச்சத்திலுற்றிட வெய்துகற்கோள்
செயலாயகோக்கொடி வர்க்கோத்தமஞ்சோல் செம்பொனெழு

லுயர்வாமதியாத லவ்வவர்வாரம துற்றுளதேற்
கயலாம்விழிமயிலே கண்டகாதிக ணன்றென்பரே.

(எ-து.) சொல்லப்பட்ட கிரகங்களால் வந்தகண்டகாதி யான நாட்களுற்றகோட்கள், ஆட்சியிலுச்சத்தினிற்றல், ஒருசுபக்கோள்பார்த்தல், வர்க்கோத்தமத்திலேநிற்றல், பிரகஸ்பதியுதயமாதல், பூரணசந்திரனுதயமாதல், தந்தம்வாரமாதலுண்டாகி லிந்தத்தோஷங்களில்லை—எ-று. (௬௩)

## திதிராசிதோஷம்.

அரிகலைமூன்றி லலவன்வில்லேழி லரிவைதடி
பரிவுறுமஞ்சில் விடைமீன்பதின்மூன்றிற் பான்மொழியாய்
தெரிசிலைமீனம் பதினொன்றிற்றேளரி யொன்பதினி
லொருகலைகோன்முதற் பக்கத்தினுங்கழி யோரையென்னே.

(எ-து.) திரிதியையில் சிங்கம் மகரம், சத்தமியில் கர்க்கடகம் தனு, பஞ்சமியிற் கன்னி மிதுனம், திரயோதசியி லிடபம்மீனம்,ஏகாதசியிற் றனுமீனம்,நவமியில் விரிச்சிகஞ் சிங்கம்,பிரதமையில் மகரந்துலாம்,இந்தத் திதியில்,இந்த ராசிகளுதயமாகச் சுபகன்மங்கள் பண்ணலாகாது—எ-று. (௬௪)

## திதிராசிதோஷாபவாதம்.

மறியரியாறின் மகடிடியெட்டில் லரிவின்மீனம்
பெறுதுமிரண்டிற் றுலைகலையீராறிற் பேசுறுதேட்
செறியரியீரைந்திற் சால்சேவொருநாலிற் றீதுசிவ
னெறியுதயங்கண்ட மில்லுடையோருட னிற்கினன்றே.

சஷ்டியில் மேடஞ் சிங்கம், அஷ்டமியில் மிதுனங் கன்னி, துதியையிற் றனுமீனம், துவாதசியிற் றுலாமகரம், தசமியில் விரிச்சிகஞ் சிங்கம்,சதுர்த்தியி லிடபங்கும்பம், இந்தத் திதிகளி லிந்தராசி யுதயமாகச்சுபகன்மங்கள்செய்யிற் கர்த்தாவுக்குப் பொல்லாங்காம். வியாழனுதயமாகில், இவன் கேந்திரத்து நிற்கில், அன்றி யிந்தராசி யதிபதியுடனேகூடி நிற்கி லிப்படிச் சொல்லப்பட்ட திதிராசி தோஷமில்லை—எ-று. ()

## சகடதோஷம்.

அந்தணனின்ற விராசிதனக்காங் கணிமதியம்
வந்துறுமோரை யாறெட்டெனீராறு மாயிடுமேற்



சந்தமறிபவர் தாஞ்சகடம்மென்பர் தாழ்ந்திருண்ட
கந்தநறுங்குழற் பூங்கமலக்கட் கனங்குழையே.

(எ-து.) பிரகஸ்பதிநின்ற விராசிக்கு, ஆறில், எட்டிற் பன்னிரண்டிற் சந்திரன்நிற்கப்பட்ட விராசியினுள் சகடதோஷமாம். இந்நாட்களிற் சுபகன்மங்கள் செய்யலாகாது—எ-று.

## சகடதோஷாபவாதம்.

தாராபதியுஞ் சுரர்குருவுநற்கால் சாரினற்கோ
ளோராருநோக்குறி லுச்சத்துறினினி யோரொடெழிற்
காராருநெஞ்சத்துக் கஞ்சன்விடுஞ்சக டம்முதைத்த
கூராழிமாயனன் ஞான்கூறுநாளிற் குளிர்மதியே.

(எ-து.) சந்திரனும், வியாழனுஞ் சுபாங்கிசத்துநிற்றல், ஒருசுபக்கோள் சந்திரனைப்பார்த்தல், சந்திரனாட்சி யுச்சத்தினிற்றல், சுபக்கோளினுட னிற்றல்செய்தாற் சகடதோஷத்தைச் சந்திரன்கெடுக்கும்—எ-று. (௬௭)

## கத்திரிகிராணதோஷம்.

தீக்கோள்கள்வக்கிர முற்றவிராசிக் கிருமருங்குங்
காக்குமிராசிநாட் கத்திரியென்று கழித்தனர்கள்
பூக்குங்கிராணம் பொருந்தியநாட்டனை நல்வினைக்கு
நீக்கினராறு பிறைகொடிதெட்சியு நீளரவே.

(எ-து.) பாபக்கிரகங்கள் வக்கிரித்த விராசிக்கு, உம். இராசியும், கஉம். இராசியும் உற்றநாள், கத்திரி யென்றுபெய ராம். இந்நாளிற் சுபகன்மங்கள் தவிரப்படும். சருவக்கிரகணம் பற்றினநாள் ஆறுமாதத்துக் காகாது. முக்கூறு நாலு மாதம், அரைக்கூறு மூன்றுமாதம், காற்கூறிரண்டுமாதம், இப்படித் தவிரப்படும். பொருந்தியநாள் என்றதனால், இப்படிச் சொல்லப்பட்ட நாளுக்குள்ளே வேறோரிராசியிலே கிரகண முண்டாகிலும், இராகுகேது வேறோரிராசியிலே போகிலும், அவ்வளவுந் தோஷமாம். இராகு கேதுக்களுதய முமிப்படியே தவிரப்படும்—எ-று. (௬௮)

## சமதிருட்டி தோஷமும் அபவாதமும்:

புலரியில்வெள்ளி கிழக்கெழப்பொன்படு நாளனைத்து
நலமிலைநல்வினைக் காங்கொருகோளொடு நண்ணிலிடை

நிலையினற்கோணிற்பி னன்றென்பர்நீள்புகர் மாலைபடத்
தலமுறுபொன்னெழுநாட் சமபார்வை தகாதென்பரே.

(எ-து.) சிறுகாலையிற் சுக்கிரன் கிழக்கேயுதிப்ப, அக்கா லத்திலே வியாழன் மேற்கேயத்தமிக்கச் சமதிருட்டியென் ற தோஷமுண்டாம். அக்காலத்துச் சுபகன்மங்கள் தவிரப்ப டும். இருவரி லொருவர் வேறொரு கிரகத்துடனே கூடிநிற்பி னும், இருவருக்கு நடுப்பட்ட விராசிகளிற் சுபக்கிரகங்கணிற் பினுஞ் சமதிருட்டி யென்ற தோஷமில்லை. சுக்கிரன் மேற் கேநிற்க வியாழனிவனுக்கு எம். இடத்துக்கிழக்கே நிற்பினு ஞ் சமதிருஷ்டி தோஷமாகாது—எ-று.' (௪௯)

### குளிகாதிதோஷம்.

உற்றவாரத்திற் பகலடைவேசனிக் கோதும்யாமம்
பெற்றகுளிகன் யமகண்டகத்துக்குப் பீதகனோர்
பற்றியயாமமெ னத்தப்பிரகான் பகலடைவே
யுற்றிடுவோன்கேழி ரண்டைந்துமெட்டுமூன் றாறுமென்னே.

(எ-து.) பகலளவையெட்டுச்சாமமாக்கியற்றை வாரமு தலாகச் சனிக்கிழமை வரையாகவெண்ணிக் கண்டசாமங்களி ற் சனிக்கிழமை கண்டசாமங் குளிகனும். அற்றைவாரமுத லெண்ணிக் கண்டசாமங்களிலே வியாழக்கிழமை கிடந்தசாம ம் யமகண்டகம். அத்தப்பிரகாரனறியும்படி, ஞாயிற்றுக்கிழ மைமுதற்சனிக்கிழமை வரையாக, நாலாஞ்சாமம், ஏழாஞ்சா மம் இரண்டாஞ்சாமம், ஐந்தாஞ்சாமம், எட்டாஞ்சாமம் மூ ன்றாஞ்சாமம், ஆறாஞ்சாமமென்க—எ-று. (௫௦)

### குளிகாதி தோஷாபவாதம்.

காலற்குத்தேண்மறி கன்னிகொறிகுளிர் நண்டுவிடை
மேலுற்றயாமமென் மேவியவாரா திபர்வலியிற்
சாலச்செறிந்தெழிற் றன்னோரையுற்றிடிற் றானுளதேற்
கோலக்குளிகன் முதலுறுகுற்றங்கள் கூறிலரே.

(எ-து.) காலனறியும்படி, ஞாயிற்றுக் கிழமைமுத லெட்டாஞ்சாமம், முதற்சாமம், ஆறாஞ்சாமம், முதற்சாமம், நாலாஞ்சாமம், நாலாஞ்சாமம், இரண்டாஞ்சாம மெனவறிக. குளிகன், யமகண்டம், அத்தப்பிரகாரன், காலன் என்னுமநா



ன்குதோஷமு முற்றசாமங்களிலே வாராதிபன் வலிபெற்று நிற்பினும், அன்றித் தன்னுடைய வாட்சியிராசி யுதிப்பி னும், உதயலக்கினத்திலே நிற்பினும், இந்தத் தோஷமில் லை—எ-று. (௫௧)

### காலவோரை.

வையந்தரும்புதன் வாரத்துக்காதியில் வாட்கணல்லாய்
வெய்யவன்வெள்ளி புதன்மதிகாரி வியாழன்சேயென்
றையிரண்டரை நாழிகைகாலவோ ரையடைவே
யெய்தியவாரத்திற் கைந்தநற்காறெனு மென்பெறவே.

(எ-து.) காலவோரைக்குக்கால மிரண்டரை நாழிகை யாகக் கொண்டு, புதன்கிழமைக்கு அதற்கு ஐந்தாங்கிழமை யுதயகாலத்திலே இரண்டரைநாழிகை யாதித்தியனாம்;பின் பதற்கு ஆறாங்கிழமையுடைய வெள்ளி யிரண்டரைநாழிகை; இப்படியடைவே அருக்கன், புகர், புந்தி, இந்து, மந்தன், அந்தணன், சேய் என்றெண்ணிக் கொள்ளப்படும். இதிற் பா பக்கோளினோரைநாழிகை சுபகன்மங்களுக்குத் தவிரப்படு ம்; சுபக்கோளினோரை நாழிகை கொள்ளப்படும்—எ-று. ()

### பாபவோராதி வற்சியம்.

தீயவர்வாரந் திரேக்காணமஞ்சங் காலவோரை
யேயகுளிக னவாஞ்சகமென்ற வினையியல்பி
ஞயகனல்ல வுயிர்க்குமுடற்கு நறுநுதலாய்
தூயபன்னொன்றாறு மூன்றிடநிற்பிற் சுகமென்பரே.

(எ-து.) பாபவாரமும், பாபத் திரேக்காணமும், பாபா ஞ்சகமும், பாபகால வோரையும், குளிகனும், பாபநவாஞ்சக முமென்ற வினை தவிரப்படும். இவற்றுக் கதிபரானவ ருத யத்திற்கும், சந்திரனுக்கும், ௩-ம் இடம், ௬-ம் இடம், ௧௧-ம் இடம் நிற்பராகி லவ்வவர் தோஷமில்லை—எ-று. உயிர் எ-து, (௫௨)
உதயலக்கினம். உடல் எ-து, சந்திரலக்கினம்—

### தூமாதிபுடம்.

வெங்கதிர்மேனுன் கிராசிபன்மூன்று விளங்குபாகந்
தங்கிடத்தூம மிதனைத்தருமண் டலத்தெடுப்பச்

செங்கண்வெதிபாத மாருளைசேரப் பரிவேடமா
மங்கதுமண்டலத் திற்களையத்தனு வாமென்பரே.

(எ-து.) சுத்தாதித்தியன் புடத்தைவைத்து, அதிலே நாலிராசியும் பதின்மூன்றுபாகையுங் கூட்டி நின்றநிலை தூம புடமாம். இதனை மண்டலராசியிற் களைந்துநின்றது வியதிபாதபுடமாம். இதிலே ஆறிராசி கூட்டப்பரிவேட புடமாம். இதனை மண்டலராசியிற்களைந்து நின்றது இந்திரதனுப்புடமாம்—எ-று. (௫௪)

பஞ்சார்க்கதோஷம்.

இந்திரவில்லிற் பதினேழுபாக மிசையவிட
வந்திடுங்கேதநி லேயோரையொன் றிட வான்சுடர்க்கு
முந்திவகுத்த நிலையிவைபஞ்சார்க்கன் மெய்யுடற்காஞ்
சிந்தனைநல்லுயி ரின்றிறத்துந்தி தெனத்தெளியே.

(எ-து.) இந்திரதனுவிலே பதினேழுபாகையைக்கூட்டக் கேதுபுடமாம். இதிலே ஓரிராசியைக்கூட்டப் பழையசுத்தாவிபுடமாம். இந்தப்புடங்களை நாட்பார்க்கும்படியே பார்த்துற்றநாளும் சந்திரனுமொருநாளாக நின்றதாகிற் பஞ்சார்க்கதோஷமுண்டாம். இதிலே சுபகன்மங்கள் தவிரப்படும். இப்படியே இலக்கினத்தையுந் தவிரப்படும். இலக்கினமாவது, உற்றநாளுடையவிராசி—எ-று. (௫௫)

பஞ்சார்க்கதோஷாபவாதம்.

விடையேறுநண்டின் மதிவீற்றிருக்குதல் வெங்கதிரோற்
கடையாயவில்லுச்ச மாகுதலன் றி யுபசயத்திற்
புடையேபொருந்துதல் செய்யிற்பொல்லாதபஞ் சார்க்கமன்ன
நடையேநலனுடைத் தாம்வாரஞாயிறு நன்றென்பரே.

(எ-து.) சந்திரன் இடபங்கற்கடகத்து நிற்பினும், ஆதித்தியன் சிங்கமேடத்து நிற்பினும், ஆதித்தியனுக்குச் சந்திரனுபசயத்தானத்து நிற்பினும், பஞ்சார்க்கதோஷமில்லை. அன்றிப் பஞ்சார்க்கமுற்றநாள் ஞாயிற்றுக்கிழமை யாகினுந் தோஷமில்லை—எ-று. (௫௬)

வேதைச்சக்கரம்.

குணக்குவடக்கு றவைந்தைந்துகோணங் களிலிரண்டும்
புணைத்தகயிற்றில் வடகீழிரேகையிற் றேர்பொருந்த



53

வுணர்த்தும்வலமுத் திராட[illegible] மோணமென்று
கணக்குறவைத்தெண்ண வேதைப்பிறப்புக் கடிதுறுமே.

(எ-து.) கிழ்மேலைந்தும், தென்வடக்கிலைந்துமாக ரேகையைக்கீறி, கோணங்களினுமுற விரண்டிரண்டிரேகைகீற விருபத்தெட்டுக்கயிறும். இதில் வடகிழக்கிலே கோணமான கயிற்றுக்குத் தெற்கிற்செவ்விதான ரேகையின்கீழ்த்தலையிலே, உரோகிணியைவைத்துப் பிரதக்கணமாகவெண்ணுவது. எண்ணுமிடத்து, உத்திராடம், அபிசித்து, திருவோணமென்றெண்ணுவது—எ-று. இதுவேதைச்சக்கரமாம். (௫௭)

வேதைச்சக்கரநிஷ்டத்தம்.

எண்ணியகோணின்ற நாளின்கயிற்றுக் கெதிருறுநா
ளெண்ணியவேதையெ னற்கோளின்வேதைமா நாளதனிற்
பண்ணிடுமங்கலம் பாறிடுமென்பவக் கோளின்வேதை
கண்ணுறிற்செய்வினை தன்னொடுதானுங் கழிவுறுமே.

(எ-து) இந்தவேதைச்சக்கரத்து நிறுத்தினநாளில் இரேகையின்தலையிலே, யாதாமொருகோள் நின்றதாகில் அந்நாட் சுபகாரியங்களுக்காகாது. சுபக்கோள்நின்றதாகிற் செய்தகாரியநசியும். பாபக்கோணின்றதாகிற் செய்தகாரியமுங் கர்த்தாவுநசிவர்என்று சொல்லப்படும்—எ-று. மங்கலமென்றதனால் விவாகத்துக்குப்பார்க்கவேண்டுமென்பாருமுளர். (௫௮)

புடவேதை.

கலைதருபத்தாய பாகத்திடைகண்ட கோளனைத்தி
னிலையினைநீக்கிப்பின் னேர்ப்பட்டநாளையும் வேதையென்பர்
நிலைதருபூதுத லாய்செப்பிவுற்ற விரண்டுநாளுங்
கொலைதருமல்லது நன்மைபயக்குங் குணமிலவே.

(எ-து.) ௯ இராசியும், ௧0 பாகையையும்வைத்து, இதில் ஆதித்தியன்முதலான கிரகங்களின் புடங்களைக்கூட்டி நின்றது வேதைப்புடமாம். நிலவினைநீக்கியென்று மோர்பாடமாதலால், இவ்விடத்துச் சந்திரனையொழித்துக்கொள்ளப்படும். இந்தவேதைப்புடத்தை நாட்பார்க்கும்படியேபார்த்துக் கண்டநாள் தான்கருதினநாளாகில், அந்நாட் புடவேதையென்று தவிரப்படும்—எ-று. (௫௯)

## இராச்சுபுடம்.

தேளிடைப்பத்திற் கதிர்குடத்தெட்டிற்பொன் சேய்கலையிற்
றும்பதினேழ்மால் புகர்மகளொன்பான்சுன் றேளிலேழில்
யாழ்பதின்மூன்றிற் சிகிமறியெட்டி லரவுபாகை
நீளுடைநீத்த நிலைமதிதீதொழி நேரிழையே.

(எ-து.) ஏழிராசியும் பத்துப்பாகையும் வைத்து இதிலே யாதித்தியன் சுத்தபுடத்தைக்களைவது. பத்திராசியும் எட்டுப்பாகையும்வைத்து இதிலே செவ்வாய் வியாழனுடைய சுத்தபுடத்தைக்களைவது. ஒன்பதிராசியும் பதினேழுபாகையும் வைத்து இதிலே புதன்சுத்தபுடத்தைக்களைவது. ஐந்து இராசியும் ஒன்பதுபாகையும்வைத்து இதிலே சுக்கிரன் சுத்தபுடத்தைக்களைவது. ஏழிராசியும் ஏழுபாகையும்வைத்து இதிலே சனி சுத்தபுடத்தைக்களைவது. இரண்டிராசியும் பதின்மூன்றுபாகையும் வைத்து இதிலே கேதுவின் சுத்தபுடத்தைக்களைவது. எட்டுப்பாகையைவைத்து இதிலே இராகுவின் சுத்தபுடத்தைக்களைவது. இப்படிக்களைந்து நின்றசேடம் இராச்சுமிப்புடமென்றுபெயராம். இதனை நாட்பார்க்கும்படியே பார்த்து, உற்றநாளிற் சுபகாரியங்கள் தவிரப்படும்—எ-று. ()

## வாரகிருட்டி.

பரிதிமுதற்சென்ற வாரமூற்றித்த பயனதனைப்
புரவிமுதலாய நாடனைப்போக்கிப் பொருந்துநிலை
வருமொன்பதும்பன் னிரண்டுமொராறும் வரன்முறையே
யொருகணிருகண் குருடென்றறிந்துரை யொண்ணுதலே.

(எ-து.) ஞாயிற்றுக்கிழமை முதற்சென்ற வாரத்தை மூற்றித்த தொகையை, அசுவதிமுதலாக வெண்ணிப்போகவிட்டு, நின்றதொகையி லொன்பதுநா ளொருகண்ணென்றும், பன்னிரண்டுநா ளிருகண்ணென்றும், ஆறுநாட்குருடு என்று மறிவது—எ-று. (௬௧)

## நக்ஷத்திரகிருட்டி.

இரவிநிலைத்திடு நாளும்பின்மூன்றுமுன் மூன்றுவெுங்
குருடுபின்னுமுன் னோர்நாலுமோர்கண் குறிக்குமற்றை
வருதினமீராறுங் நோக்கமிரண்டென மாதவர்முன்
கருதியுரைத்தனர் நூலிடைவேல்விழிக் காரிகையே.

(எ-து.) ஆதித்தியன் நிற்கிறநாளும் அதற்கு முன்மூன்றுநாளும் பின் மூன்றுநாளுங் குருடாம். அதற்குமுன் நாலுநாளும் பின் நாலுநாளும் ஒரு கண்ணுள்ளநாளாம். ஒழிந்த ௧௨-நாளும் இருகண்ணுள்ள நாளாம்—எ-று. (௬௨)



## திவாநிசிவிழிக்கு மிராசி.

வில்லுச்சுறுவல வன்வீணைமேடம் விடைபகற்க
ணில்லையிரவில் விழிக்குமென்சீய மெழிற்கடறே
ணல்லபொற்கும்பந் துலையுடன்கன்னி நாடோறுநாட்ட
மல்லிடையில்லை பகற்கணுண்டென்றுரை யாரணங்கே.

(எ-து.) தனு, மகரம், கர்க்கடகம், மிதுனம், மேடம், இடபம், இவை சந்திரனுடைய கூறும். பகற்குருடா யிரவு விழிக்கும். சிங்கம், மீனம, விரிச்சிகம், கும்பம், துலாம், கன்னி, இவை யாதித்தியனுடைய கூறும், இராக்குருடாய்ப் பகல் விழிக்கும்—எ-று. (௬௩)

## அந்தகராசித் தோஷாபவாதம்.

உதிப்புறுமோரைக் குபசயத்தேமதி யொண்கதியில்
வதிப்பினுமாங்கவன் றன்றேரையுச்சத்து மன்னிடினும்
பதிப்படநற்கா லடைந்தபின்னுன்குபத் தாமிடத்தும்
விதித்தனவோரை குருடல்லவென்று விளங்கிழையே.

(எ-து.) உதயராசிக்கு உபசயத்தானத்திலே சந்திரன் நிற்பினும, அன்றி, இடப கர்க்கடகத்திலே நிற்சுபாங்கிசகனாய் நிற்பினும, அன்றிச் சுபாங்சகனாய் நின்ற சந்திரன், ௬-ம், இடபினும், அன்றிச் சுபாங்சகனாய் நின்ற சந்திரன், ௬-ம், இடமாதல், ௧௦-ம், இடமாதல், நிற்பினுஞ் சொல்லப்பட்ட வந்தகராசித் தோஷமில்லை—எ-று. (௬௪)

## குருடு செவிடு முடம்.

அரிகொறிசேச்செ விடல்விற்றுலைதேள் செவிடுமுன்போ
தெரிசிலைமான்பின் பொழுதாஞ்செவிடிரு சந்தியிடை
வருகுடமீன்முட மங்கைதடிகுளிர் மத்தியானங்
கருமுடமென்றுரை தப்பாதவண்ணக் தளிரடியே.

(எ-து,) சிங்கம், மேடம், இடபம், இவை இராச்செவிடு. துலாம், விரிச்சிகம், பூருவாணத்திற் செவிடு. தனு, மகரம், அபராணத்திற் செவிடு. உதயகாலத்திற் கும்பம், மூடம், அத்தமன காலத்தின் மீனம் முடம், கன்னி, மிதுனம், கர்க்கடகம், மத்தியானத்தின் முடம்—எ-று. (௬௫)

குருடாதியபவாதம்.

நற்கோளெழினுநற் காலுறுதிங்கட்கு நான்கேழ்பத்திற்
பொற்கோளெழினுங் குருடல்லப்பொன்னவன் கோணத்தினும்
வற்கோத்தமத்தும் வளர்மதியாயினு மானேமுடஞ்
சொற்கொத்தகாலஞ் செவிடுங்குருடுஞ் சுபமென்பரே.

(எ-து.) சுபக்கிரக முதயமாயினும், அன்றிச் சுபாங்சக மாகிய சந்திரனுக்குக் கேந்திரங்களிற் சுபக்கிரகங்கள் நிற்பினும், அந்தகராசித் தோஷமில்லை. பிரகஸ்பதி திரிகோணத்திலே நிற்பினும், சந்திரன் பூரணனாய் நிற்பினும், வர்க்கோத்தமத்திலே நிற்பினும், குருடு செவிடு முடமென்றதோஷமுண்டாகாது—எ-று. (சூ ௬)

இலக்கினவிஷாதி நிஷித்தாபவாதம்.

விடைகொறிவின்மெல் லியன்முதற்கூற்றி னரவமுண்ணு
மிடையுறுகும்பந் துலாத்தடிசிங்கத் தெழுங்கழுகு
கடையினிற்றேள்குளிர் மீன்கலையிற்பன்றி யாழுமோரை
நடைபெறுபாகங்க டூநற்கோளெட்சி நன்றென்பரே.

(எ-து.) இடபம், மேடம், தனு, கன்னி, இவற்றின் முதற்கூற்றிற் பாம்பு உண்ணும். கும்பம், துலாம், மிதுனம், சிங்கம், இதினடுக்கூற்றில் கழுகுண்ணும். விரிச்சிகம், கர்க்கடகம், மீனம், மகரம், இதிற் கடைக்கூற்றில் பன்றியுண்ணும். இக்கூறுகளிற் சுபகன்மங்கள் பண்ணப்படாது. சுபக்கிரக முதயமாகிலிந்தத் தோஷமில்லை—எ-று. (சூ ௭)

தலைகடையாலுதிக்குமிராசியும்பெலமும்.

தடிகுடஞ்சிங்கந்தேள் கன்னிதுலைதலை யான்முளைக்கும்
படமீனிரண்டின் மிதுனமொழிந்த பகல்வலிதாங்
கடகந்தனுவிடை மேடங்கலைகடை யான்முளைக்கு
மிடையுறுயாழுட னாறுமிரவில் வலிபெறுமே.

(எ-து.) மிதுனம், கும்பம், சிங்கம், விரிச்சிகம், கன்னி, துலாம், இவை யாறுந் தலையாலுதிக்கும்; மீனம் இரண்டு பாரிசத்தானு முதிக்கும்; ஆகவிவ்வேழிராசியினும் மிதுன மொழிந்த விராசிபகல் வலிதாம்; கர்க்கடகம், தனு, இடபம்,



மேடம், மகரம், இவை கடையாலுதிக்கும். இவையும் மிதுனமும் இராவலிதாம்.—எ-று (சூ ௮)

ஊர்த்துவாதோதிரயமுகவிராசி.

மேனோக்கியமுகமென்பர் வெய்யோன் விட்டவோரைநின்று
தானோக்குமோரை யதோமுகமாகுங் கனதனத்துப்
பானோக்கு மென்மொழியாய் பற்றுமிற்றிரயம்முகமா
னோக்கினமே லுளவோரையுமிம் முறைநுவலே.

(எ-து.) ஆதித்தியன் விட்டவிராசி ஊர்த்துவமுகமென்றும், நிற்கப்பட்ட விராசி அதோமுகமென்றும், பற்றப்பட்ட விராசி திரயமுகமென்றும், மற்றுமுள்ள விராசிகளும் இந்தவடைவே யறியப்படும். முன்புநாளுக்குச் சொன்னகாரியங்க ளிவ்விராசியினுங் கொள்ளப்படும்—எ-று. (சூ ௯)

பூருவாணுதி.

பகலினளவினை மூன்றாகப்பண்ணி முதலிடையு
மிகநன்றுநல்வினை யாவினுக்கும் விரும்பாதவந்தம்
புகலுங்குரவர்தம் பூசனைக்குங் காதுகுத்துதற்குந்
தகுமென்றனர்விதி நூலுணர்ந்தோர்க டளிரடியே.

(எ-து.) பகலளவைமூன்று கூறாகப்பண்ணிப், பூருவாணம் மத்தியானம் அபராணமென்று பேராக்கிப், பூருவாணத்திற் றெய்வீகமான கன்மங்கள் பண்ணப்படும். மத்தியானத்திலே மானுஷகன்மமானவை பண்ணப்படும். பிதிர்கன்மமுங் காதுகுத்துதலும் அபராணத்திலே பண்ணப்படும்—எ-று. (சூ ௰)

திவாநிசிகன்மம்.

அன்னமருந்தலு மாதானமு மங்குரவிதியுந்
நன்மணமுநன்றிரவி னிலாதான நன்கொழித்துச்
சொன்னவைதானும் பகலினுமாகுஞ் சொலாவினைகள்
பன்னுறுநூலோர் பகலினிற்கொள்ளப் பணித்தனரே.

(எ-து.) நவபோசனம், அன்னப்பிராசனம், கெற்பாதானம், அங்குரார்ப்பணம், பாணிக்கிரகணமிவை இரவிற்செய்யுங் கன்மமாம். ஒழிந்தவையெல்லாம் பகற்கொள்ளப்படும். இரவிற்செய்யுங் கன்மங்களிற் கெற்பாதான மொழிந்தவை பகலினுங்கொள்ளப்படும்—எ-று. (சூ ௰௧)

### அபிசித்துமுகூர்த்தம்.

பச்சைப்புரவியோ ரேழுறுதேரோன் பகலளவி
னுச்சிப்படுங்கன்ன னன்றபிசித்தென்ப ரோங்கொளியோன்
மெச்சப்படுங்குற்ற நூறுயிரக்கீர்க்கும் வெய்யவாழி
யச்சுதன்றோளரக் கர்க்கொல்லுமாறென வாயிழையே.

(எ-து.) ஒரு முகூர்த்தமாவது உ. நாழிகையாகப் பகலளவில் ஆதித்தியன் மத்தியமானகாலத்தி லெட்டாமுகூர்த்தம். அதற்கு உத்தமமான வபிசித்து முகூர்த்தமென்றுபெயராம். இம்முகூர்த்தம் நூறுயிரங் குற்றத்தைக் கெடுக்கும். அஃதென்போலவென்னிற் கோடிசூரியப் பிரகாசமுள்ள சக்கராயுதகரனாகிய நாராயணமூர்த்தி புயபலபராக்கிரமத்தையுடைய விராக்கதரைக் கொல்லுமாறுபோல்—எ-று. (எ௨)

### திவாநிசிமுகூர்த்தம்.

அரன்பாம்பனுட மகம்புட்புனலாடி யந்தணன்றே
ருரக்கேட்டைவைகாசி மூலஞ்செக்குத்திரம் பூரம்பகற்
கரன்புரட்டாசி முதலெட்டிருபூச மாயனத்த
முரண்பெறுசித்திரை சோதியென்மூர்த்த மிரவினுக்கே.

(எ-து) ஒரு முகூர்த்தமாவது, உ. நாழிகை; உதயமுதலாக, இரௌத்திரம், சர்ப்பம், மைத்திரம், பைதிருகம், வாஸவம், அப்பு, விசுவதேவம், அபிசித்து, பிரசாபத்தியம், அயிந்திரம், அக்கினி, நிருதி, வாருணம், அக்கியம், பாக்கியம் என்ற பதினைந்தும் பகல்முகூர்த்தம்; இரௌத்திரம், அஜேகபாதம், அகிர்ப்புத்தினி, பூஷா, கந்தருவம், இராக்கதம், அக்கினி, பிரசாபத்தியம், சந்திரம், அதிதி, பார்க்கவஸ்பத்தியம், வைஷ்ணவம், ஸாவித்திரி, துவாட்டிரம், வாயவ்வியம் என்ற பதினைந்தும் இராமுகூர்த்தம். இம்முகூர்த்தங்களிந் நாளோடொக்கும். இந்தச்சுப முகூர்த்தங்களிற் சுபகன்மங்கள் செய்யப்படும். இவற்றில் அசுவதியைக் காந்தருவம் எ-ம், பரணியை இராக்கதம்-எ-ம், பெயரிட்டார்கள்—எ-று.

### உத்தராயனம்.

உத்தரமாகிய வாறுமாதத்து முபநயனம்
வித்தகமாகிய கல்விசமாவர்த் தனம்விரதஞ்



சுத்தம்தாய சுரர்தாபனஞ்சௌ ளகஞ்செய்கையா
மொத்தவசந்தத் தியாகங்கொண் மாசியொழித்தென்பரே.

(எ-து) உத்தராயனமான தைமுதல் சு, மாதத்தும் உபநயனம், வித்தியாரம்பம், சமாவர்த்தனம், விரதம், தேவப்பிரதிட்டை, சௌளம், முதலியவை பண்ணலாம். வசந்தகாலமான சித்திரை வைகாசியில் யாகம்பண்ணலாம், உத்தராயன மாதங்களில் மாசிமாதந் தவிரப்படும். எ-று. கொள்ளென்றதனால், மாசிமாதத்துச் சௌளம், உபநயனம், செய்யலாமென்பாரு முளர்—எ-று. (எச)

### ஜேட்டமாத வற்சியம்.

ஆதியிற்றோன்றிய கெர்ப்பந்தனக்கானி மாதந்தனி
லோதிலர்யாகங் குடிபுகனன்மண மொண்ணுதலாய்
தீதென்பரல்லாத கெர்ப்பங்களுக்குத் திகழ்சென்மநாண்
மாதமுதயந் தினநன்மைசெய்ய வகுத்திலரே.

(எ-து.) பிரதம பிள்ளைக்கு யாகம், குடிபுசல், பாணிக்கிரகணம், இவை * ஆனிமாத மொழியக்கொள்வது. சகலபுத்திரர்களுக்கும் பிறந்த மாதம், வாரம், நட்சத்திரம். இலக்கினம் ஐந்தும் சுபகன்மங்களுக்குத் தவிரப்படும்—எ-று. ()

### ஜென்மநட்சத்திர நிஷேத்தம்.

மயிர்வினைகல்வி மணவினைபோக்கு மருந்தருந்தே
யுயர்வுறு நூல்வினை யுண்டிசீமந்தஞ் சிராத்தமிவை
யியல்புறத்தீதென்பர் சென்மங்களிலியம் பாதவவை
நியதமுநன்றென வோதினர்சித்தில வொண்ணகையே.

(எ-து.) சௌளம், வித்தியாரம்பம், விவாகம், கெர்ப்பாதனம், யாத்திரை, ஔஷதசேர்வை, உபநயனம், விரதம், சமாவர்த்தனம், அன்னப்பிராஸனம், நவபோசனம், புங்சவனம், சீமந்தம், நவசிராத்தம், இவை † சென்மத் திரயங்களிற் பண்ணலாகாது. அல்லாத சுபகன்மங்கள் நித்தியமுஞ் சென்மத்திரயங்களிற் பண்ணலாம்—எ-று. (எரு)

* சகல மங்கலகாரியத்துக்கும் ஆனிமாத மாகாதென்பாரு முளர்.
† சென்மத் திரயங்களில் நவபோஜனம் பண்ணலா மென்பாரு முளர்.

### ஸ்ரீதிவசாதி.

கழிவுறுதிங்க ளிரட்டித்ததனிற் கழிந்ததிதி
வழியுறச்சேர்த்தி வருந்தொகையேழில் வகிர்ந்தசேடஞ்
செழுநன் றிருவின் றிவசாதியேழுஞ் சிறந்தவென்ப
பழுதில்குருபார்க் கவன்சொன்னபெற்றி பகர்குவனே.

(எ-து.) சென்றமாதத்தை யிரட்டித்து, இதிலேசென்ற திதியையுங் கூட்டி, ஏழிற்கழித்து நின்றது ஸ்ரீதிவசாதியென வறிக. இப்படியொழிய பிரகஸ்பதியும் பார்க்கவனுஞ் சொன்னபடியே மேலே சொல்லுவன்—எ-று. (௭௭)

### இதுவுமது.

திருவின் றிவசங் கலிதிவசநந் தனதிவச
மருவுங்காளகண் டியாவுஞ்சயதின மன்னுதம
வுருவின் றினமொண் டனதினமென்றுணா யேழிற்றமங்
கருதுங்கலிகா ளகண்டியுந்தீதெனக் காட்டினரே.

(எ-து.) ஸ்ரீதிவசம், கலிதிவசம், நந்தனதிவசம், காளகண்டி திவசம், செயதிவசம், தமதிவசம், தனதிவசம், என்ற வேழு திவசங்களில், தமதிவசம், கலிதிவசம், காளகண்டி திவசமுமாகிய,௩-ம், சுபகன்மங்களுக் காகாது—எ-று.(௭௮)

### இதுவுமது.

கலிபதினறுபின் பத்தித்தமமைம்பத் தொன்றுசய
நலிவுறுநாற்பது நந்தனமுப்பத்தொன் றுருந்திருக்
கலையுறுமுப்பது காளந்தனமஞ்சு நாட்கலியிற்
செலவுறுமூன்றுட னூற்றெண்பதின்ரொகை தேர்ந்துரையே.

(எ-து.) கலியுகாதியி லிட்ட சுத்ததினம் வைத்து, ௧௮௩-க்கு ஈந்துபோகவிட்டு நின்ற சேடம், ௧௬ நாள் கலிதிவசம்; பின்பு ௪௦ நாள் தமதிவசம்; பின்பு ௫௧ நாள் செயதிவசம்; பின்பு ௪௦ நாள் நந்தனதிவசம்; பின்பு ௩௧ நாள் ஸ்ரீதிவசம்; பின்பு ௩௦ நாள் காளகண்டி திவசம்; பின்பு ௫ நாள் தனதிவசம் என்றறியப்படும்—எ-று. இப்படியே பிரகஸ்பத்தியம், பாரத்துவாசம், பார்க்கவம்,பராசரம் என்ற நூல்களில் சொல்லியிருக்கின்றன. மூன்பு சொன்னவர்கள் பிரசித்தர். (௭௯)



### சாந்திரமாசாதி.

சாந்திரமாதங் குருவந்தமாகுஞ் சவுரமாத
மெய்ந்தசுடரந்த நட்சத்திரமிரு பத்தேழுநாட்
சேர்ந்துறுசாவண மாதமாறைந்து தினங்களீரா
றுய்ந்தனவாண்டங் தணர்க்குற்றவாண்டெ யாத்தமென்றே.

(எ-து.) பூருவபக்கத்துப் பிரதமைமுதல் அமாவாசையிறுதியாகவந்தது சாந்திரமாதம். ஆதித்தியன் மேடமுதலான விராசிகளிற் சங்கிராந்தி சௌரமாதம். அசுவதிமுதல் இரேவதி யந்தம்நட்சத்திர மாதம். ௩௦ நாள் ஒருமாதமாகவந்தது சாவணமாதம். அதுசென்ன மாறுதிகளி லறியப்படும். இந்தவகையில் ௧௨ மாதங்கொண்டது அவ்வருஷமாம். வியாழநின்ற விராசி யுதயமுதலாக வுதயாந்தமென்று பெயராம்—எ-று. சேர்ந்துறு என்றதனாற் சந்திரமானம் ஆண்டுக்கு ௬ மாதம் ௨௬ திவசமும், ௬ மாதம் ௩௦ திவசமாய் வந்தபடியால், ௩௫௪ நாளென்றும்; சவுரமான ஆண்டுக்கு இடபாதி ௫ மாதமும் நாள் அதிகப்பட்டபடியால் ௩௬௫ நாளென்றும்; நட்சத்திரமானம் ஆண்டுக்கு நட்சத்திரம் ௨௭ ஆகையால், ௩௨௪ நாளென்றும்; சாவணமான ம் ஆண்டுக்கு மாதம் ௩௦ நாளாகையால் ௩௬௦ நாளென்றும் மறியப்படும். (௮௦)

### அதிகமாதம்.

தலையாமுவாவிரண் டெட்பெறச்சங்கிர மித்தலன்றேற்
றலையாமுவாவினிற் சங்கிரமித்தல் பிறையிரண்டாங்
குலையாதுதயம் பெறுதிங்களையொள் ளியகுணித்தக்
கலைவாணராதிக மாதமென்றோதிக் கழித்தனரே.

(எ-து.) இரண்டமாவாசை யுட்பட விரவிசங்கிரமமுண்டான மாதஞ்சங்கற்ப மாதமாம். அன்றி ௨ சங்கிரமமாதி யந்தங்களி லமாவாசையாகில், அசங்கற்பமாதமாம். ௨ சங்கிரமத்துக்கு நடுவாக ௨ சந்திரோதயமுண்டாகி லதிகமாதமாம். இப்படிவந்த மூன்று வகையான மாதமுஞ் சுபகன்மங்களுக்குத்தவிரப்படும்—எ-று. (௮௧)

### இதுவுமது.

அருக்கற்கடைவாய திங்கண்முப்பத்திரண் டாங்குடனுட்
பெருக்கிற்பதினாறு நாழிகைமுப்பது பேசுந்துடி
திருக்கறவைம்ப தொடைந்துஞ்சென்று லதிகத்திங்கடான்
வரத்தகுமென்றன ரெண்டிறம்வல்லவர் வாணுதலே.

(எ-து.) ஆதித்திய கெதியான் சௌரமாதம் முப்பத்திரண்டும், பதினாறு நாளும், ௲௦-நாழிகையும், ௫௫-விநாழிகையுஞ் சென்றால், அதிக மாதமாக வருமென்று கணிதபண்டிதர்கள் சொல்லினர்—எ-று. (அ௨)

### இதுவுமது.

விதிமுற்றும்வல்லவர் யாத்திரைநூல்விதி வேள்விமணம்
பதிபுக்கில்வைத்தல் சிராத்தங்குடிபுகல் பாங்குடைய
துதிமிக்கதேவரைத் தாபித்தனூல்கற்றல் சௌளமுமே
யதிகவத்திங்களி லாகாவலாதன வாமென்பரே.

(எ-து.) முன்சொன்ன வதிக மாதங்களில், யாத்திரை, உபநயனம், யாகம், விவாகம், கிரகாரம்பம், கிரகப்பிரவேசம், தேவபிரதிட்டை, வித்தியாரம்பம், சௌளம், சிராத்தம் இவை செய்யலாகாது. மற்றுள்ள கன்மங்கள் செய்யலாம்—எ-று. (அ௩)

### அதிகமாதாபவாதம்.

விற்குளிர்மீனின் மிகவொளிகூர்ந்து வியாழனிற்ப
நற்கதிரோனுத் தரகெதிநட்பாட்சி யுச்சத்துறிற்
சற்பமஞ்சற்ப மதிகமெனுந்திங்கள் சாலநன்றும்
பெற்றநல்வினைக் குப்புண்டரீகப் புணர்முலையே.

(எ-து.) பிரகஸ்பதி, தனு, கர்க்கடகம், மீனத்து அத்தமயமின்றி நிற்ப, ஆதித்திய னுத்தராயன கெதியாய் நட்பாட்சி யுச்சத்துநிற்கிற் சங்கற்பமாதம், அசங்கற்பமாதம். அதிகமாதம், என்று தோஷமில்லை; சுபகன்மங்கள் செய்யலாம்—எ-று. (அ௪)



### சந்திராட்டமம்.

மூன்றைந்தேழ்நான் முதலொன்பதிற்றீதாதி யந்தமூன்று
மேன்றவிக்காலிடை யொன்பதிற்றீதின்ப மென்பவல்லா
தான்றமதியட் டமதினமெண்பத் தெட்டாயகாலிற்
றோன்றியவைநா சிகங்கழித்தாற்சுப நாளென்பரே.

(எ-து.) நாட்பொருத்தம், யாவனொருவன் பிறந்தநாள்
முதலாக, மூவொன்பதிரு பத்தேழாக்கி, இதின்முதல் ஒன்ப
தின், மூன்றாநாளும், ஐந்தாநாளும், ஏழாநாளும், பொருந்
தாது. இவையல்லாதநாட்கள் பொருந்தும். இரண்டாமொன்
பதினும், மூன்றாநாளும், ஐந்தாநாளும், ஏழாநாளும் பொரு
ந்தாது. இதின்மூன்றாநாளின் முதற்காலும், ௫ நாளின்க
டைக்காலும், எ நாளின் மூன்றாங்காலு மொழித்து, மற்று
ள்ளகால்கள் பொருந்தும். பின்பு, இரண்டாம் ஒன்பதின் அஅ
திராட்டமமான உவ நாளும், மூன்றாம் ஒன்பதின் அஅ
ம், கால்கிடந்த வைநாசிகநாளும் பொருந்தாது. தோன்றியஎ
ன்றதனால், பிறந்த நாளுக்கு முதனாளாகிய, இருபத்தேழாநா
ளும் பொருந்தாது மற்றுள்ளநாட்கள் பொருந்தும்—எ-று.

### வைநாசிகதோஷாபவாதம்.

மூன்றைந்துமேழு முதற்சென்மமுந்தீ திவைநல்லகோ
ளூன்றியெழுமதி நற்கதிமேவிடி லுத்தமமாந்
தோன்றியவோரையும் பத்தாயவோரையுந் தூயநட்பேற்
சான்றவர்வைநா சிகங்கழியாதெனச் சாற்றினரே.

(எ-து.) முன் பொருந்தாதென்ற மூன்றாநாளும்,ஐந்தா
நாளும், ஏழாநாளும், சென்மநாளும், சந்திரன் சுபாங்சகனாய்
ச் சுபக்கோளுடனே கூடிச் சுபக்கோள் பார்வை யுண்டான
போதே, இந்நாட்கள் பொருந்தும். சென்ம விராசிக்கு வை
நாசிகங் கிடந்த ௧0-ம் இராசி யதிபதியாதல்,௧௧-ம் இராசி யதி
பதியாதல், நட்புடையராகில் வைநாசிக தோஷமில்லை—எ-று.

### அட்டமராசியாதியபவாதம்.

ஒத்தவுதயத்துக் கட்டமத்தேகிற்கு மோரதிபன்
மித்திரனின் மிகவுநன்றும்வெண் மதிக்கு...
யித்திறமாகு மிசைந்தவாறந்தமு மிவ்வ...
வைத்துரைசெய்தனர் வண்டார்கருங்கு...வாணுதலே.

(எ-து.) யாவனொருவன், உதயலக்கின விராசிக் கெட்டா மிராசி யுடையவன் நட்பாசி லட்டமராசித் தோஷமில்லை. சந்திராட்டமமு மிப்படியே பார்க்கப்படும். ௯-ம் இராசியும், ௧௨-ம் இராசியு மிப்படியே நட்புப்பார்த்துக் கொள்வது-எ-று.

## சென்மவிலக்கினநிஷித்தம்.

பிறந்தவிராசியு மந்தமுமாறெட்டும் பேசலுறூர்
சிறந்தநன்மங்கல காரியம்யாவிற்குஞ் சென்மவோரை
நிறைந்தமணமுண்டி தாபனஞ்சௌளம்போக் காடையேருக்
கறைந்தனரல்லாத வோரைநற்கோளெட்சி யாட்சிகன்றே.

(எ-து.) உதயவிலக்கினமாகிய சென்மவிராசியும், ௧௨ம் இராசியும், ௯ம் இராசியும், ௮ம் இராசியுஞ் சுபகன்மங்களுக்குத் தவிரப்படும். இவற்றிற் சென்மவிராசி, விவாகம், போசனம், பிரதிட்டை, சவுளம், யாத்திரை, வஸ்திராபரணம், உழவு, இவற்றுக்காம். அல்லாதவிராசி சுபக்கோளுதய மாயினும், நட்பாட்சி யுச்சமாயினுமாம்—எ-று. (௮௮)

## இதுவுமது.

பரிதிமூன்மூன்று தினத்துறுபன்னிரண் டாயகாற்குப்
பொருகுசன்வெள்ளி புதன்மதிபானுப் புதன்புகர்சேய்
குருமுடவன்சனி மந்திரியாதி யடைவிற்கொண்டே
கருதுறுநாளினிற் கால்கணூற்றெட்டெங் கணித்துரையே.

(எ-து.) ஒருநாளுக்கு நாலுகாலாக, அசுபதிமுதன் ௩ நாளுக்கு ௧௨ காலாம். அடைவே, மேடச்செவ்வாய், இடபசுக்கிரன், மிதுன புதன், கர்க்கட சந்திரன் சிங்காதித்தியன், கன்னிபுதன், துலாச்சுக்கிரன், விரிச்சிகச்செவ்வாய், தனுவியாழன், மகரச்சனி, கும்பச்சனி, மீனவியாழன் என்றெண்ணி, ௨௭ நாளுக்கும் ௧௦௮ காலும் ௯ பரிவிருத்தியாகப் பார்ப்பது—எ-று. (௮௯)

## உட்ணசிகை.

பாரிற்பரிமுத லுட்களிற்பானு குசன்சனிக்குச்
சேர்வுற்றவோரையிற் கால்சிகையென்பர் செறியிவற்றி
னேருற்றவாதியில் வெய்யவனுங்கடை நீலனுஞ்சேய்
சார்வுற்றிடையுந் தகாகல்வினைக்குத் தனிரடியே.



(எ-து.) ஆதித்தியன், செவ்வாய், சனி இவர்கட்கடைத்த விராசிகளிற் கிடந்தநாட்கள், இவர்கள்காலாகிய அங்ஸங்கள், உட்ணசிகையென்று பெயராம். இக்கால்களிற் சுபகன்மங்கள்தவிரப்படும். ஓரங்ஸமாவது ௧௫ நாழிகை. இதில் ஆதித்தியன் அங்ஸத்தில் முதலைந்தும், செவ்வாயங்ஸத்தில் நடுவில் ஐந்தும், சனியங்ஸத்திற்கடையில் ஐந்துநாழிகையுங் கழித்துக்கொள்வது—எ-று. (௯௦)

## சாமுகூர்த்தம்.

மந்தனைந்திற்புக ரேழின்மால்பத்திற்சே யொன்பதினி
லந்தணனாறெட்டி லாதித்தன்ராகுவீ ராறதனிற்
சந்திரனெட்டிற் சாருமுகூர்த்தஞ்சா மூர்த்தமென்றே
மந்திரிநூன்முறை வல்லவரோதினர் வாணுதலே.

(எ-து.) யாதாமொரு முகூர்த்தத்துக்கு, ௫-ம் இடத்திற் சனியும், ௭-ம் இடத்திற் சுக்கிரனும், ௧௦-ம் இடத்திற் புதனும், ௯-ம் இடத்திற் செவ்வாயும், ௬-ம் இடம், ௮-ம், இடத்தில் வியாழமும், ௧௨-ம் இடத்தில் ஆதித்தியனும், இராகுவும், ௮-ம் இடம், எட்டாமிடத்திற் சந்திரனும், இவற்றிலொருவரிப்படி நிற்கின் மிருத்துமுகூர்த்தமாம்—எ-று.

## இலக்கினமிருத்து.

உதயத்திலிரண் டேழொன்பதைந்தெட்ட ராறுபத்திற்
சிதைவிப்பர் நன்மையைத்தீயவர் மூன்றாறுபன்னொன்றினில்
வதிவுற்றிடினல்ல மூர்த்தமதாகு மதியெட்டியும்
புதையப்படுங்கதி ரும்பொருந்தாவென்பர் பொற்றொடியே.

(எ-து.) உதயத்தும், ௪-ம்இடத்தும், ௨-ம் இடத்தும், ௭-ம் இடத்தும், ௯-ம் இடத்தும், ௫-ம் இடத்தும், ௮-ம்இடத்தும், ௧௨-ம் இடத்தும், ௧௦-ம் இடத்தும், பாபக்கிரகங்கள் நின்றால், முகூர்த்தத்துக்குத் தீமையுண்டாக்குவர்; ௩-ம் இடத்தும், ௬-ம் இடத்தும், ௧௧-ம் இடத்தும், இவர்கள் நிற்கிலம்முகூர்த்தத்துக்கு மிகவும் நன்மை உண்டாக்குவர். இராவுசந்திரோதய காலமும், ஆதித்தியன் அத்தமயகாலமுந் தோஷகாலமாம்—எ-று. (௯௨)

### இதுவுமது.

நற்கோட்களெட்டினி லாறிலீராறினி னண்ணிற்றிய
சொற்கோளெனவறி சொன்னவைதானு மொழிவிடத்துப்
பொற்கோளுநிற்புகழ் மாலுடன்பூமகள் சேர்பொழுதாம்
விற்போனுதலாய் வளர்மதியெட்சி மிகவுநன்றே.

(எ-து.) சுபக்கிரகங்கள், அம் இடத்தும், சும் இடத்தும, கஉம் இடத்தும் நிற்கில் முகூர்த்தம்தீதாம்., இந்தவிடங்களும், மிருத்துமுகூர்த்தமாகச் சொன்னவிடமுமொழியச் சுபக்கிரகங்கள் நிற்கில் நல்லமுகூர்த்தமாம். அஃதென்போலவெனில், ஸ்ரீ நாராயணமூர்த்தியும் இலட்சுமியுமொன்றாயிருக்கப்பட்டச் சுபகாலம்போலச் சகலமங்கலமுமுண்டாம். பூரணசந்திரோதயமுமாம்—எ-று. (சுச)

### தெத்தசுவாலாதூம தோஷாபவாதம்.

கொடுங்கோள்விடுநா ணிலைநாட்டொடரக் குறிக்குமந்நாட்
சுடுங்கரிநாட்கன லுட்புகைநாளெனச் சொல்பவற்றிற்
றிடம்பெறுநல்வினை செய்யிற்பிழையென்ப திங்கட்புக்குக்
கடிந்திடில்வெள்ளி மதியுடன்சேர்வுங் கடிதுநன்றே.

(எ-து.) பாபக்கிரகங்கணின்று கழிந்தநாளும், நின்றநாளும், நிற்கப்புகுகின்றநாளும், தெத்தசுவாலாதூம மென்று பெயராம், இந்நாட்களிற் சுபகன்மங்கள் செய்யலாகாது. இந்நாட்களுடன் கூடிச்சந்திரன் கடந்துபோதல், சுக்கிரன்கடத்தல், கூடநிற்றல் நோக்குதல்செய்யில், தெத்தசுவாலாதூமதோஷமுண்டாகாது—எ-று. (சுரு)

### போககாமியபிரியம்.

நற்கோன்விடுநா ணிலைகாணடைந்துபோய்ப் பற்றுமந்நாள்
விற்போனுதலாய் விளங்கியபோகநாண் மேதினிமேற்
பெற்போர்பொலிவுநாட் போகங்குறிக்குநா ளென்றுநல்லோர்
சொற்போலநன்குரைத்தார் வாசிட்டர்சோம சூரியரே.

(எ-து.) சுபக்கிரகம்விட்டநாள் போகநாளென்றும், நின்றநாள் பிரியநாளென்றும், பற்றப்படும் நாள், பாவநாள் காமியநாளென்றும், சந்திராதித்தர் வசிட்டர் முதலிய பெரியோர்கள்சொல்லினர்—எ-று. (சுகு)



### சுபகன்மங்கட்காகாதவை.

தீயவர்தாநின்ற விற்கொடிதென்பர் சிலைநுதலாய்
தீயவர்நாளுஞ் சிறப்பிலவென்ப ரிருமருங்குந்
தீயவர்தாநின்ற நாட்களுந்தீதென்பர் நல்வினைக்குத்
தீயவர்தாமிரு வர்க்கிடையோரையுந் தீதென்பரே.

(எ-து.) சுபகன்மங்களுக்குப் பாபக்கிரகங்கள் நின்றவிராசியும், அந்நாளும், உ பாபக்கிரகங்களுக்கு நடுவுப்பட்டநாளும், பாபக்கிரகங்கள் நடுவுப்பட்டவிராசியும், அந்நாளுந்தவிரப்படும். ஓரையென்றதனால்இலக்கினமுந்தவிரப்படும்எ-று

### குருசுக்கிரவத்தமனம்.

குருவும்புகருங் கதிருடனத்தமங் கூடியநாட்
கருதுங்கடிமண முந்நூல்வினைசௌளங் கல்வியுடன்
மருவும்விரதநல் வேள்வியியாத்திரை வாத்துவிடல்
சுரர்பிரதிட்டை குடிபுகல்பொல்லாதென் றாய்நகையே.

(எ-து.) ஆதித்தியனுடன் பிரகஸ்பதியுஞ் சுக்கிரனுங்கூடில், இவர்களத்தமனமாகின்றகாலத்து விவாகம், உபநயனம், சௌளம், வித்தியாரம்பம், விரதம், சமாவர்த்தனம், உபாகன்மம், யாகம், யாத்திரை, வாத்துநியாசம், தேவப்பிரதிட்டை, உற்சவம், குடிபுகல்முதலிய சுபகன்மங்கள்பண்ணலாகாது—எ-று. (சுஎ)

### இதுவுமது.

வெள்ளிதன்பாடுதயத்திற்குமுன்பின் கிழக்குமேற்குத்
தெள்ளியவேழுமூன் றைந்தொடுபத்தென்க சீவனுக்கு
மொள்ளியபாட்டிற் பதினைந்துதயத்தி னைந்துமென்று
கள்ளவிழ்பூங்குழலாய் கணித்தார்கள் கணிதர்களே.

(எ-து.) சுக்கிரன் கிழக்கேயத்தமித்தால் அக்காலத்து விருத்தசுக்கிரனென்று ஏழுநாளும், இவ்விடத்துதிக்குமிடத்து வாலசுக்கிரனென்று மூன்றுநாளும், மேற்கேயத்தமிக்குமிடத்து விருத்தசுக்கிரனென்று ஐந்துநாளும், இவ்விடத்துதிக்குமிடத்து வாலசுக்கிரனென்று பத்துநாளுங் கழிக்கப்படும். பிரகஸ்பதியத்தமயத்துக்கு, பதினைந்துநாளும், உதயத்துக்கு ஐந்துநாளுங் கழிக்கப்படும்—எ-று. (சுஅ)

### கிரகணசூலம்,

பற்றிப்படின்மூன்று பின்மூன்றுபற்றி யுதித்தெழுங்கா
லுற்றபின்மூன்றரை பற்றிடின்முன்மூன் றுறுதினமா
முற்றவிழுங்கிடின் முன்னேழுபின்னே ழெனமொழிந்தார்
பெற்றகிராண மிரண்டுக்குந்தீயநாட் பெய்வளையே.

(எ-து.) சந்திரகிரகணமுஞ் சூரியகிரகணமும் கிரத்தாத்தமயமாகில் முன்னே ௩ நாட்தோஷமாம். கிரத்தோதயமாகில் பின்னே ௩ நாட்தோஷமாம். அரைக்கிரகணமாகில் முன்னே ௩ நாளும், பின்னே ௩ நாளுந்தோஷமாம். முழுக்கிரகணமாகில் முன் ௭ நாளும், பின் ௭ நாளுந்தோஷமாம—எ-று. இரண்டுக்குமென்றதனாற் பட்சக்கிரகணமாகில், இடையிலுள்ளநாளெல்லாங் கழிக்கப்படும். (௬௬)

### அயனாதிசங்கிரமம்.

அயனமிரண்டிற் முன்மூன்றுபின்னிரண் டாகாதநாட்
டெயல்விடுவங்கட்குத் தொண்ணூறுதொண்ணூறு தொல்கடிகை
முயல்வுறுமல்லாத திங்கட்குநாழிகை முன்னும்பின்னு
நியதமுமுப்பது முப்பதுநீத்தனர் நேரிழையே.

(எ-து.) இரண்டயனங்களுக்கு முன் ௩ நாளும் பின் ௨ நாளுங் கழிக்கப்படும். ௨ விஷுவங்களுக்கு முன் ஒன்றரைநாளும் பின் ஒன்றரைநாளுங் கழிக்கப்படும். அல்லாத மாசசங்கிரமங்களுக்கு முன் ௩௦ நாழிகையும் பின் ௩௦ நாழிகையுங் கழிக்கப்படும—எ-று. நியதமுமென்றமையால், நித்தியமுங் கழிக்கவேண்டுமென்பது பெற்றும். (௧௦௦)

### இதுவுமது.

வருநாளிலந்தத்திற் கன்னலிரண்டு வருந்திதிக்குத்
தருநாழிகைமூன்று சாவணநட்சத் திரஞ்சவுரங்
குருசாந்திரமெனு மாண்டாதிகூறு மவற்றிரட்டி
யொருநாளிரண்டு மூன்றீரிரண்டாறு முருவென்பரே.

(எ-து.) நாட்களுக்காதியந்தங்களில் இவ்விரண்டுநாழிகைகழிக்கப்படும். திதிகளுக்கு ஆதியந்தங்களின் மும்மூன்றுநாழிகை கழிக்கப்படும். சாவணவாண்டுக்கு ௧ நாள்தவிர



ப்படும். நட்சத்திரவாண்டுக்கு ௨ நாள்தவிரப்படும். சௌரவாண்டுக்கு ௩ நாள் தவிரப்படும். குருவாண்டுக்கு ௪ நாள் தவிரப்படும். சாந்திரவாண்டுக்கு ௬ நாள்தவிரப்படும்—எ-று

### அத்தமனநட்சத்திர தோஷாபவாதம்.

கோளத்தமித்த தினமூன்றுதிங்கட்குக் குற்றமுண்டாம்
வாளொத்தகண்ணாய் வலிதுசெருச்செய் [illegible]
ளாளப்படுமறு திங்களவற்றிற் புகர்வரினு
மீளப்புகருடன் வெண்டிங்கள்சேரின் மிகவுநன்றே.

(எ-து.) கிரகங்கள் அத்தமித்தநட்சத்திரம் ௩ மாதஞ் சுபகன்மங்களுக்காகாது. கிரகங்கள் யுத்தஞ்செய்தநாளும், வக்கிரித்தநாளும், ௬ மாதத்துக்காகாது. இந்நாட்களிற் சுக்கிரன் புக்குப்போகினும், சுக்கிரனுடன் சந்திரன் கூடி நிற்கினுந் (௧௦௨)
தோஷமில்லை—எ-று.

### *கேந்திரபெலம்.

உச்சமூட்டு நிலைவலிமால்பொன் னுதயம்வலி
நிச்சமதிபுகர் நீர்க்கிழ்வலிபாட்டி னீலன்பணி
கச்சணிபூண்முலை யாய்கதிர்சேயுச் சியில்வலிதாம்
மெச்சிருட்பக்கத்துத் தீக்கோள்வலிதென் விளங்கிழையே.

(எ-து.) சுபக்கோளாயினும், பாபக்கோளாயினும், உச்சத்தானத்தும், மித்திரத்தானத்தும், ஆட்சித்தானத்தும், நிற்பாராகில் வலியர். புதனும், வியாழனும், உதயத்துவலியர். சந்திரனும், சுக்கிரனும், ௪ம் இடத்துவலியர். சனியும், இராகுவும், கேதுவும், ௭ம் இடத்துவலியர். ஆதித்தியனுஞ், செவ்வாயும், ௧௦ம் இடத்துவலியர். பாபக்கோட்கள் அபரபக்க (௧௦௩)
த்துப் பெலவான்கள்—எ-று.

### கிரகபலம்.

இருசுடருத்தர நோக்கில்வலியியம் பாதவர்க
ளொருவரொருவ ருடன்கூடில்வக்கிரத் துள்வலியாம்
வருமொளிகூர்தல் பொருதல்வடக்குறச் செய்யில்வலி
தருமொளிப்பக்கத்து நற்கோள்வலிபெறுந் தாழ்குழலே.

---

*கேந்திரம் எ-து. உதயம், ௭ம் இடம், ௪ம் இடம், ௧௦ம் இடம், எனவறிக.

(எ-து.) ஆதித்தியனுஞ் சந்திரனும் உத்தராயனகா
லத்துப் பெலவான்கள். அல்லாதவர்களொருவருடனொ
ருவர் கூடிநிற்பினும், வக்கிரித்திருப்பினும், பெலவான்
கள், உதித்து நிற்பினும், யுத்தஞ்செய்யினும், உத்தரகெ
தியர்யினும் பெலவான்களாவர். சுபக்கிரகங்கள் பூருவப
க்கத்துப் பெலவான்கள்—எ-று. (௧0௪)

திவாநிசி பெலக்கிரகம்.

மதிசனிசேயிர வில்வலிமாலைப் பொழுதும்வலி
கதிர்புகர்பொன்பகற் காட்டும்வலிதங் கிழமையாண்டு
பதிபெறுமாத முடையோர்வலிசனி பார்மகன்மால்
*விதிபுகரிந்து சுடர்வலிபாம்பு மிகவலிதே.

(எ-து.) சந்திரனும், சனியும், செவ்வாயும், இரவு
பெலமுடையர். புதன் இரவும்பகலும் பெலமுடையன்.
ஆதித்தியனும், வியாழனும், சுக்கிரனும் பகல்வலி யுடை
யர். கிரகங்களெல்லாம் தத்தங் கிழமையினும், தத்தமா
ண்டினும், தத்த மாதத்தினும் பெலமுடையர். சனியிற்
செவ்வாய் பெலவான். இவ்விருவரினும் புதன் பெலவா
ன். இம்மூவரினும் பிரகஸ்பதி பெலவான். இந்நால்வரி
னும் சுக்கிரன் பெலவான். இவ்வைவரினும்சந்திரன் பெ
லவான். இவ்வறுவரினும் ஆதித்தியன் பெலவான். இவ்
வெழுவரினும் இராகு கேது பெலவான்கள்—எ-று. ()

திதியாதிபெலம்.

தன்னுடைநட்பாட்சி யுச்சத்தில்வர்க்கத்தில் வக்கிரத்தி
லந்நிலைமும்மடி யத்தமனீசத் தரைவலியாம்
பன்னும்பகையினிற் கால்வலிபக்கத்து வாரந்தின
முன்னுதயம்வலி தாம்பொன்னும்வெள்ளியு மூண்டெழிலே.

(எ-து.) தத்தமுடைய நட்பாட்சி யுச்சத்தினும், வர்
க்கோத்தமத்தினும், வக்கிரித்த காலத்தினும், மும்மடி
பெலமுண்டாம். அத்தமித்துநின்றபொழுதும், நீசத்து
நின்றபொழுதும், பாதிப் பெலமுண்டாம். சத்துருபவ

* விதி-வியாழம்.



னத்தினின்றபொழுது காற்பெலமுண்டாம். திதியில்,வா
ரம்பெலம். இவ்விரண்டினும் நட்சத்திரம் பெலம். இம்
மூன்றினு முதயம்பெலம். இந்நான்கினும் உதயத்துநின்
ற பிரகஸ்பதியும் சுக்கிரனும் பெலவான்கள்—எ-று. ()

உற்பாதம்.

வெள்ளிடிவெண்மழை சூறுவழிபூமி விண்ணதிர்தல்
கொள்ளியெரிவிழல் கோட்பரிவேடித்த லோரியிடலீ
வள்ளிபதாரு விழலெரிமாதிரத் துற்றவுண்டே
லொள்ளியகாரிய மேழ்தினத்துக்கு ஞரைப்பிலரே.

(எ-து.) மழையின்றி யிடித்தாலும், கார்வானமின்
றி வெண்மழையாகப் பெய்யினும், சூறைக்காற் றடித்தா
லும், பூமியாகாய மதிரினும், எரிகொள்ளி விழினும், கிர
கங்களைப் பரிவேடிக்கினும், பலவிடத்தினு மோரியிரை
யினும், ஒருகாரணமின்றிப் பூமியிற் பிரசித்தமான மரங்
கள் சாயினும், முறிந்து விழினும், திக்குகளெரிந்து புகை
ந்து கிடப்பினும், உற்பாதங்களாம். இவையுண்டான நா
ள்தொடங்கி எ நாளளவுஞ்சுபகன்மங்கள் தவிரப்படும்.

இதுவுமது.

மன்னரமைச்சர் புரோகிதர்வண்மையர் வான்கணிதர்
பன்னெறிநூலர் பிடகர்பல்வேள்விப் பயன்முடிப்போர்
தன்னகராதிபர் தத்துவஞானிக டாமரித்தாற்
பொன்னவனேழ்தின நல்வினைசெய்யப் புகன்றிலனே.

(எ-து.) தானிருந்த தேசத்தரசன், மந்திரி, புரோகி
தன், தாதாக்கள், கணிதசாஸ்திரநிருபணர், பலநூலதிக
மணர், கிராமத்ததிபதி, ஞானி, இவர்களி லொருவரிறந்
தால் அற்றைநாள் முதல் எ நாளளவுஞ் சுபகன்மங்கள்
பண்ணலாகாதென்று பிரகஸ்பதிபகவான் சொல்லினன்.

திதித்திரய தினத்திரயம்.

தினமொன்றின்மூன்று திதிநாள்வருநகளுந் தேவர்கட்
யினமென்றிடுநற் றிருநாட்களுள்ளு மிசைந்தொரில்லில்

வினவுங்கரும மிரண்டொருநாளில் விதிக்கவிதி
புனமயிற்சாயனல்லாய் புகலாதெனப் போற்றுவரே.

(எ-து.) ஒருவாரத்திலே ௩ திதி, ௩ நட்சத்திரம் வருகிறநாளிலும், தேவோற்சவமான தினங்களிலும், ஒருகிரகத்திலே, ௨ சுபகன்மங்கள் செய்யலாகாது—எ-று.

மாததினம்.

கார்த்திகைக்கார்த்திகை யாதியிரண்டு கருத்தடைவே
பார்த்தனமாதத் தினம்புரட்டாசி பகர்துலைசார்
சேர்த்தனர்மூன்று தினமிவற்றிற்செழு மங்கலங்க
ணீத்தனர்பூரண மாமதிதானு நிகழ்த்திலரே.

எ-து. மாததினங்களாவன: கார்த்திகைக்குக் கார்த்திகை, உரோகிணி; மார்கழிக்கு மிருகசீரிடம், திருவாதிரை; தைக்குப் புனர்பூசம், பூசம்; மாசிக்கு ஆயிலியம், மகம், பூரம்; பங்குனிக்கு உத்திரம், அத்தம்; சித்திரைக்குச்சித்திரை, சோதி; வைகாசிக்கு விசாகம், அனுடம்; ஆனிக்குக் கேட்டை, மூலம்; ஆடிக்குப் பூராடம், உத்திராடம்; ஆவணிக்குத் திருவோணம், அவிட்டம்; புரட்டாசிக்குச் சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி; ஐப்பசிக்கு இரேவதி, அசுவதி, பரணி; இந்நாட்களினும், பூரணையினும் சுபகன்மங்கள் தவிரப்படும்—எ-று. (௧௧0)

சுபமுகூர்த்தம்.

நல்லகோள்பன்னொன் றிரண்டைந்தொடொன்பது நாற்கண்டத்து
செல்லுறுநன்மை சிறப்புடைத்தாமூர்த்தந் தீயகோட்கள் [ஞ்
புல்லுறுமூன்றாறிற் பன்னொன் றினின்றிடி னன்றுபுகர்
சொல்லிதருமொழியாய் குற்றமேழெனக் கூறினரே.

(எ-து.) சுபக்கிரகங்கள் ௧௧, ௨, ௫, ௯, இவ்விடங்களினும், கேந்திரத்தானத்தும் நிற்பின், நல்ல முகூர்த்தமாம். பாபக்கிரகங்கள் ௩, ௬, ௧௧, இவ்விடங்களில் நிற்கின், நல்ல முகூர்த்தமாம். சுக்கிரன், ௭-ம் இடத்தையொழியக் கொள்ளப்படும்—எ-று. (௧௧௧)



புட்கரபாதம்.

பதினொன்றுநான்களை யொன்பதெட்டேழடி நான்களையும்
வதிகொண்டோர்க ளையுஞாயிறுதிய வாரங்களி
லதிநன்மையாம் புட்கரபாதமாமதி னன்மைசெய்தா
ளிதிதங்குமென்று விதிக்குநல்லோர்க ணிகழ்த்தினரே.

(எ-து.) ஞாயிற்றுக்கிழமைக்கு ௧௧ அடி. திங்கட்கிழமைக்கு சஇ அடி. செவ்வாய்க்கிழமைக்கு ௯ அடி. புதன்கிழமைக்கு அ அடி. வியாழக்கிழமைக்கு ௭ அடி வெள்ளிக்கிழமைகு சஇ அடி சனிக்கிழமைக்கு சஇ அடி. இது புட்கரபாதமாம். இவ்வாரங்களில் இவ்வடிகளிலே சுபகன்மங்கள் செய்தால் மிக்க சோபனமாம். இவ்வடி பூருவாணத்திற் *கொள்ளப்படும்—எ-று. ()

புட்கரபாகம்.

†வள்ளன்மனுக்கள் சினவரர்மாமுனி யென்றபாகை
தெள்ளியமேட மரிசிலையாதிநான் கோளையினி
லொள்ளியபுட்கர பாகைகளென்றுரைத் தார்கள்பின்னும்
வெள்ளமணியைந்து தண்டைந்துதேட்கனல் வெண் டிங்களே.

(எ-து.) மேடத்துக்கு ௨௧-ம் பாகம். இடபத்துக்கு ௨௪-ம், பாகம். கர்க்கடகத்துக்கு ௭-ம் பாகம். பின்பு சிங்கமுதனாலும் தனுமுதனாலு மிவ்வடைவே புட்கரபாகமாம். இந்தப் பாகங்களிருக்குங் காலத்துச் சுபகன்மங்கள் செய்யலாம். இதுவன்றிச் சிலர் மேடத்துக்கு ௭-ம் பாகை ௯-ம் பாகை, இடபத்துக்கு ௫-ம் பாகை ௩-ம் பாகை, மிதுனத்துக்கு ௫-ம் பாகை ௮-ம் பாகை, கர்க்கடகத்துக்கு ௩-ம் பாகை முதற்பாகையைப்புட்கரபாகமாகச் சொல்லுவர். இப்படியே சிங்கந் தனு முதலாகக் கொள்க—எ-று. ()

* இதனை அபராணத்துங் கொள்ளலாமென்பாருமுளர்.

†வள்ளல், மனுக்கள் சினவரர், முனி முதலிய பெயர்கள் அவ்வப்பொருட்தொகையைக் குறிப்பாலுணர்த்திநின்றன.

## வாரயோகமான்மியம்.

ஓதியசித்தஞ் சுபமமிர்தம்வர முத்தமமாங்
கோதினல்யோகம் வரின்முன்புகூறிய குற்றமெல்லாந்
தீதில்பெரும்புகழ்த் தென்கடுவைப்பதி சென்றடைந்த
வேதியர்நல்குர வாமெனநீங்குமென் வேல்விழியே.

(எ-து.) முன்சொல்லிய சகலதோஷமும் சித்தயோகமாதல், சுபயோகமாதல் அமிர்தயோகமாதல் வரயோகமாதல் வரில் எல்லாத் தோஷங்களையுங் கெடுத்து எல்லா வற்புதங்களையுங் கொடுக்கும். அஃதென்போலவென்னில் களங்கமற்ற கீர்த்தியும் அழகும் உடைய கடுவைநகரிற் சென்றபிராமணருடைய தரித்திரம் நீங்குவதுபோல—எ-று. (௧௧௪)

## பஞ்சாங்க யோகமான்மியம்.

வளருமதியினிற் பக்கமும்வாரத்து நல்லவையுங்
களவில்கரணமு நல்லனநாட்களி னல்லகாலு
முளநல்லயோகமு மொன்றியபஞ்சாங்க மொள்ளிழையா
யளவின்றிநன்மை மிக்காயிரங்குற்ற மகற்றிடுமே.

(எ-து.) பூருவபக்கத்து முன்பு சொல்லிய நல்ல திதிகளும் நல்லவாரமும் நல்லநாட்களில் நல்லகாலும் நல்ல கரணமும் நித்தியயோகத்திற் சொல்லிய நல்லயோகமுங் கூடின பஞ்சாங்கத்துச் சுபகன்மங்கள் செய்தால், எல்லாத் தோஷத்தையுங் கெடுத்து மிகவு நன்மையைப் பண்ணும்—எ-று. (௧௧௫)

## வைதிருதி வியதிபாத பாபாங்சக தோஷாபவாதம்.

இரவிதன்னுச்சத்தி னாட்சியினிற்ப வெளின்மதிய
மாபுவலிபெறில் வைதிருதிபாத மாபினன்றாம்
பரமொன்றுதீயவர் கால்கண்மூன்றுறுபன் னொன்றதனிற்
றிரமொன்றிநிற்பினன் றாமென்றுசான்றவர் செப்பினரே.

(எ-து.) ஆதித்தியன் உச்சத்தும் ஆட்சியினுநிற்ப, பூருவபக்கத்துச் சந்திரன் பெலவானாய்ச் சுபாங்சத்து நின்றபொழுது, வைதிருதி வியதிபாத மென்றவற்றின்



தோஷமில்லை. பாபாங்சகேதனாய் நின்ற சந்திரனுக்கு அவ்வங்சாதிபதி ௩, ௬, ௧௧ இவ்விடங்களினிற்கில், அந்நாளிற் பாபாங்சதோஷமில்லையாம்—எ-று. (௧௧௬)

## உதயபெலம்.

மதிமகனெட்சியி லைஞ்ஞூறுகுற்றத்தை வாட்டும்புக
ரதிபெறுமெட்சியை யாயிரங்குற்ற மகற்றுவிக்கும்
பதிபெறுமந்திரி தன்னெட்சியிற்பத்து நூறாயிரம்
விதிபெறுகண்டங்கள் நட்பாட்சியுச்ச மிகநல்லரே.

(எ-து.) புதன் உதயத்து நின்றால் ௫00 குற்றத்தைப்போக்கும். சுக்கிரன் உதயத்துநின்றால் ௫000 குற்றத்தைப்போக்கும். வியாழன் உதயத்துநின்றால் ௧0இலட்சங்குற்றத்தைப் போக்கும். இவர் கேந்திரங்களிலே நின்றாலும் இப்படியே தோஷங்களைக் கெடுப்பர். இதுவெல்லாம் நட்பாட்சி யுச்சமாகிலென்ப. பகை நீசமாகிலாகாது—எ-று. (௧௧௭)

## பஞ்சாங்ககுணம்.

ஒன்றாந்திதிக ரணமிரண்டாம்வார மெட்டொருநான்
கென்றார்தினத்துக் கெழுபதுமுப்பது மூர்த்தத்திற்கு
நின்றாளுநித்திய யோகத்துமூன்று நிரைத்துதயங்
குன்றாதயோகம் பதினாயிரங்கள் குணாகுணமே.

(எ-து) பக்கமொருகுணம், கரணம் ௨. குணம், வாரம் ௮. குணம், நட்சத்திரம் ௪. குணம், யோகம் ௩. குணம், நட்சத்திரம் திதி கூடினம், மூகூர்த்தம் இலட்சங்குணம், நட்சத்திரம் திதி கூடினம், இப்படிக்குண வாரயோகங்கள் பதினாயிரங் குணாகுணமாம். இப்படிக்குணமுந் தோஷமுந் நிரூபித்துக் கொள்ளப்படும்—எ-று. ()

## திருப்பிரவேச யோகம்.

ஊறும்பிறையி லுறுதிதிநாளொரு வாரத்தினிற்
கூறுஞ்சுபமமிர் தஞ்சித்தயோகமக் கோட்கிழமைக்
காறன்றனதுச்ச வீட்டிலுச்சாங்சகங் கண்டலக்கினம்
வீறுந்திடுச்செய்த காரியங்கோடியின் மேற்படுமே.

(எ-து) பூருவபக்கத்து யாதொருகிழமை யுடனே கூடின அன்றையிற் பக்கமும் நட்சத்திரமும் சுபயோகம் அ

மிர்தயோகம் சித்தயோக மாதல்வர, அந்தவாராதிபன் உச்சத்தானமேறி யுச்சாங்சகம்பெற, அந்த உச்சவிராசி இலக்கினமாக, அல்லது: எ-ம் ராசி யிலக்கினமாக, பூலோகத்திலே புத்திமான்கள் கெற்பாதானம் டண்ணிறைல் சென்மித்த பிள்ளை சக்கிரவர்த்தியாவன். கிரகாரம்பஞ்செய்யில் ஒருகாலமும் அழியாமல் வெகுசெல்வமுண்டாம். விவாகஞ்செய்தாற் பூரணயுவாய் பாக்கியமும் புத்திரசம்பத்து முண்டாம். மற்றுஞ் சுபகன்மங்கள் செய்தால் ஸ்ரீ இலட்சுமிபூரண கடாட்சமாய் நின்று ஒன்று கோடியாய் வர்த்திக்கபண்ணும். வேறு கோள்நின்றாலும் பார்த்தாலும் மத்திமம்—எ-று. இதுதிருப்பிரவேசயோகமென்று பெயர்பெறும். (ககசு)

சகலதோஷாபவாதம்.

நல்லவுச்சத்துநற் கோளுடனெட்சியு நாளினற்கால்
புல்லுமதியினைப் பொன்புகர்நோக்கினுங் கேந்திரத்து
நல்லவர்நிற்பினு நட்புச்சியாயினு மாட்சிநூலிற்
சொல்லியகுற்றமெல்லாஞ் சுபமாமெனச் சொல்லினரே.

(எ-து.) சந்திரன் தன்னுடைய உச்சத்திலே நின்று நோக்கினும், சுபக்கிரகங்களுடனே கூடிநின்றுஉதிப்பினும், அன்றிச்சுபாங்சகேதனனை சந்திரனைச் சுக்கிரன் பிரகஸ்பதி நோக்கினும், இவனுக்குக் கேந்திரத்திலே சுபக்கிரகங்கள்நிற்பினும், ஆதித்தியன் மத்தியானத்து எட்டாம் முகூர்த்தமாகிய அபிசித்து முகூர்த்தமாயினும் சொல்லிய குற்றமெல்லாந்தீர்ந்து செய்யுஞ்சுபகாரியங்கள் மிகவுநன்றாம்—எ-று. (க௨0)

இதுவுமது.

கூறுங்குணகுண மோர்ந்துற்றநூலிற் குணநிகமா
யேறும்வலியு மறிந்திதயத்தி னினிதுவந்து
நாறுந்துழாய்முடி நாயகன்றாள்கள் வணங்குநாளும்
பேறென்றிடவிதிக் கும்விதியேபெரு நன்மையதே.

(எ-து.) பலசாஸ்திரங்களினும் சொல்லிய குணதோஷங்களை நிரூபித்து, குணாதிகமான நாளின்முகூர்த்தத்திலே பரமான்மாவான நாராயணனை மனவிருப்பத்தோடு வழிபட்டு



ப்பண்ணுகின்ற சுபகன்மங்களெல்லாம் பகவத்ஜெயம் என்று பண்ணச் சகல தோஷங்களும் போய்ச் சகல சம்பத்து முண்டாம்—எ-று. (க௨க)

குணாகுணப்படலமுற்றிற்று.

ஆகக்கலித்துறை கஎ௬.

---

## சந்திரகெதிப்படலம்.

---

துதிகொண்டொண்மல ரிட்டெம்மடிகள் கழற்றொழுது
விதியிங்குணாப்பணிம் மேதினிமேல்விண் மதிச்செலவின்
கதியின்றிறமுங் கலைவடநூலின் கருத்தனைத்தும்
பொதியன்றருந்தமி ழிற்பொருந்தும்படி பூங்குழலே.

(எ-து.) என்தாசிரியனுடைய ஸ்ரீ பாதகமலங்களிலே தோத்திரஞ்செய்து புஷபாஞ்சலிபண்ணி நமஸ்கரித்து அவனுடைய பிரசாதத்தினாலே ஆர்ஷயம் பௌர்ஷயம் ஆன சாஸ்திரங்களிலே சொல்லிய சந்திரகெதியினைத் தமிழிற்சொல்லுவன்—எ-று. (க)

மேடமுதலிய ராசிகளின்கூறு.

தானகாசந்தவ மன்னியபோகங்*கள் வாளரவா
லீனம்பெறலரி யாசனராச்சிய மாமரச
ரானந்தசேர்வை யடையார்த்தெறலணி முன்னியுயி
ரீனந்தலைகா லிறல்தளையின்னுயி ரின்மைகளே.

(எ-து.) தானச்சேதம், தவம்பண்ணுகை, பரதாரபரிக்கிரகம், களவுகாண்டல், பாம்புகடியுண்கை, இவை ருெம் மேடத்தின்கூறு. சிங்காசனத்திலிருக்கை, இராச்சியம் பண்ணுகை, இராசசேர்வை, சத்துருவைச்செயிக்கை, சேனைத்தலைவனாயிருக்கை, இவை ருெம் இடபத்தின்கூறு. பிராணன்விடல், தலையறுப்புண்ணல், கால்தறியுண்ணல், கட்டுண்டல், சரீரசேதம், இவை ருெம் மிதுனத்தின் கூறு—எ-று. (௨)

*கள் எ-து களவு.

## இதுவுமது.

கோவேதமோதல் கொடைதன்மமோதல் செயல்குலத்திற்
ருவேவரல்தனந் தேடனிறுத்தலால் கற்றன்மேவார்
சாவேறல்வெப்பு நிலைகெடல்சத்துரு நாடழித்த
லாவேபரசேர்வை யாங்கடையார்தன மார்ச்சித்தலே.

(எ-து.) இராச்சியம்பண்ணுகை, வேதாப்பியாசம், பலர்க்குந்தியாகமிடுகை, தன்மஞ்செய்கை, பலசாத்திராப்பியாசம், இவை ரும் கர்க்கடகத்தின்கூறு. நல்லகுலத்திலேபிறத்தல், தனந்தேடல், துலாக்கோல்கொண்டுநிறுத்தல், வித்தையதிகரித்தல், சத்துருவைச்செயிக்கை, இவைருமசிங்கத்தின்கூறு. வெப்புநோய் கொள்ளல், நிலைகுலைதல், சத்துருக்கடேசத்தையழித்தல், பரசேர்வைபண்ணுதல், சத்துருக்கடனத்தை யபகரித்தல், இவை ரு-ம் கன்னியின்கூறு—எ-று.

## இதுவுமது.

சவையுறன்மேவார்த் தெறன்மந்திரித்தெறன் பெண்டிர்கூட்ட
மவையானைமேற்கொளன் மந்திரியாத லமரிற்கெடல்
திவமாயிருத்தன் மறையோரையூட்டமீ வேட்டல்பசிக்
குவைசோறுணல்கொடை தானரவுணு திரமுண்டலே.

(எ-து.) ஆஸ்தான மண்டபத்திருத்தல் சத்துருவைச்செயித்தல், மந்திரித்துவம் பண்ணுதல், தன்றேவியுடன் கூடுதல், யானைபெறுதல், இவை, ரு-ம், துலாத்தின்கூறு. மந்திரியாயிருத்தல், யுத்தத்திற்கெடுதல், பிரசன்னாயிருத்தல், பிராமணபோசனம்பண்ணுகை, ஓமம்பண்ணுகை, இவை, ரு-ம், விரிச்சிகத்தின்கூறு. பசித்தல், உண்டல், தியாகமிடல், நரமாமிசம் புசித்தல், உதிரங்குடித்தல், இவை, ரு-ம், தனுவின்கூறு—எ-று. (ச)

## இதுவுமது.

பாரிகாம்பற்றல் பந்தாடறாதுவேந் தாகைதன்பஞ்
சார்தல்கிடத்த லரசர்பகைநட்பிற் சார்தல்யோகங்
கூர்தறுறத்தல் சோறுண்டல்பாற்கூ ழுணவூட்டுவித்த
லார்வுடனுட லழகுற்றிருத்த லறுபதுமே.

(எ-து.) தன்னுடைய திரியைக்கைப்பிடித்தல், பந்தாடுதல், தூதுபோதல், இராச்சியம்பண்ணுதல், விதன



ப்படுதல், இவை, ரு-ம், மகர... கிடத்தல், அரசருடன் பகைத்தல், இராசாவுட னுறவு... யோகாப்பியாசம் பண்ணுதல், சந்நியாசித்தல், இவை, ரு-ம், ... பத்தின்கூறு. சோறுண்டல், பாற்சோறுண்ணல், பல... ரு முண்பித்தல், ஆடுதல், சுகாசனத்திருக்கை, இவை, ரு-ம், மிதுனத்தின்கூறு—எ-று. இவ்விராசி பன்னிரண்டால்வந்த சாo. செய்கையும் அடைவே, சந்திரகெதியாம். ()

## இதுவுமது

இந்துக்கதியென்ற நாளுறுகன்னற் கியம்புமில்லிற்
கைந்துருணமா டென்முதற்குண்டையங் தத்தளவும்
வந்ததொகையிற் குதயாதியுற்றது வாமுயிர்க்குச்
சந்திரகெதியென்று சான்றோருரைப்பர் தளிரடியே.

(எ-து.) சொல்லிய சா0. சேட்டையும் சந்திரகெதியாம்; யாதாயினுமொருநாளின் முதல்நாழிகை தொடங்கி ரு. யடைவேகெதியாம். இராசியில்வந்தால் ஓரிராசிக்கு ரு. சந்திரனின்றவிராகெதியாக, மேடமுதலாகக்கொண்டு கண்டெண்ணிக், சிமுதல் இடபமிறுதியாகக் கொண்டெண்ணி உற்றவிராதொகையை உதயவிராசிமுதலாக வெண்ணி இதுசாதகத்துக்குசியின்கெதி சந்திரகெதியாம்—எ-று. (சா)
ம் பார்க்கப்படும்.

சந்திரகெதிப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை - களசு.

---

# கோசரப்படலம்.

பகருவன்சென்ம முதற்பன்னிரண்டந்த மாகவெண்ணிப்
புகறருமாதித்த னுதிபாம்பீறாய்ப் பொருந்துகோளின்
வகைபெறுநன்மையுந் தீமையுநாடி வருபலன்கள்
சகலமுஞ்சான்றவர் நூன்முறையாலித் தராதலத்தே.

(எ-து) சென்மவிராசிமுதல் கஉ-ம். இடபமிறுதியாகக்கொண்டு, ஆதித்தியன்முதல் கேது வீறாகநின்ற கோசரங்களுக்குப் பலாபலன் சொல்லுவன்—எ-று. (க)

## கோசரபலன்.

### ஆதித்தியன்.

வனைதரு[illegible]வப மிடிகேடுமேவல ராஙமெலிவு
னைவருநாச நிதிதருநின்ற நிலைகுலைக்குங்
சனையுறுநோய்பயங் காட்டுங்கனகந் தருமுவகை
மனையுறுநாசந் தருங்கதிரோனென்ப வாணுதலே.

(எ.து.) ஆதித்தியன் சென்மத்துவியாதி, ௨-ம் இடம் விதனம், ௩-ம் இடம்நன்மை, ௪-ம் இடஞ் சத்துருபயம் ௫-ம் இடம் வியாதி, ௬-ம் இடம் அத்தலாபம், ௭-ம் இடம் தானசலனம். ௮ம் இடம்சரீரபீடை, ௯-ம் இடம்-பயம், ௧௦-ம் இடம் அத்தலாபம், ௧௧-ம் இடநன்மை, ௧௨-ம்இடந் தனச் சேதம்—எ-று. (௨)

### சந்திரன்.

மரணந்தரும்பிணி செய்யுந்தனந்தரு மன்னர்பயம்
விரணந்தரும்வினை நீக்கும்விசயந் தருங்கொலையாங்
கரணந்தருந்துன்பங் காட்டுங்கரும நிலைகனகப்
பொருடந்திடுந்தனம் போக்குவிக்குந்திங்கள் பொற்கொடியே.

(எ-து.) *சந்திரன் சென்மத்துமரணம், ௨-ம் இடம் வியாதி, ௩-ம் இடம் அத்தலாபம், ௪-ம் இடம் இராசபயம், ௫-ம் இடந்தழுப்பு, ௬-ம் இடம்பிரியம், ௭-ம் இடம்திக்குவிசயம், ௮-ம் இடம்மரணம், ௯-ம் இடம்துக்கம், ௧௦-ம் இடம் நிலைபேறு, ௧௧-ம் இடம் அத்தலாபம், ௧௨-ம் இடம் அத்தசேதம்—எ-று. (௩)

### செவ்வாய், சனி, இராகு, கேது.

போதங்கெடுக்கும் வினைதரும்பொன்றரும் போர்கொடுக்குஞ்
சேதந்தருந்திரு வெய்துஞ்சிறைசெயுந் தீங்குதருங்
கேதந்தரும்பயங் கிட்டுந்தனந்தருங் கேடுபட
வாதந்தருமந்தன் செவ்வாயரவு மதிநுதலே.

(எ.து.) செவ்வாயும், சனியும், இராகுவும், கேதுவும், சென்மத்துப் புத்திசந்தாபம், ௨ம் இடம் வியாதி, ௩ம்

* பூருவபக்கத்திற் சென்மத்துச்சந்திரன், நன்மைதருமென்று கூறுவாருமுளர்.



இடம் அத்தலாபம், ௪ம் இடம் விரோதம், ௫ம் இடம்பலசேதம், ௬ம் இடம் இலட்சுமிகடாட்சம், ௭ம் இடம் சிறைப்பாடு, ௮ம் இடம் மரணம், ௯ம் இடம் சேதம், ௧௦ம் இடம் பயம், ௧௧ம் இடம் அத்தலாபம், ௧௨ம் இடம் சத்துருபீடை—எ-று. (௪)

### புதன்.

கொல்லுங்குணந்தரும் போதங்கெடுக்கும் பொருள்கொடுக்குஞ்
சொல்லுஞ்சிதைவிக்கு மாக்கந்தருஞ்சோகஞ் செய்யுநன்மை
புல்லுந்தொழிறரும் போதங்கெடுக்கும் பொலிந்திருக்கு
நல்லன்செய்யும் விஞைசந்தரும்புந்தி நண்ணுதலே.

(எ-து ) புதன்சென்மத்துப் பிராணசேதம், ௨ம் இடம் நல்லகுணம், ௩ம் இடம் புத்திசந்தாபம், ௪ம் இடம் அத்தலாபம், ௫ம் இடம் சேதம், ௬ம் இடம் அத்தலாபம், ௭ம் இடம் சோகம், ௮ம் இடம் நன்மை, ௯ம் இடம் புத்திசந்தாபம், ௧௦ம் இடம் நன்மை, ௧௧ம் இடம் உத்தமம், ௧௨ம் இடம் பலசேதம்—எ-று. (௫)

### வியாழன்.

நாசந்தருநன்மை செய்யும்வினைதரு நட்பகற்றுங்
காசணிவிக்குந் துயர்தருங்காரிகை யைப்புணர்க்கு
மேசுமிடர்தரு மோர்தருமென்றும் பதியகற்றுந்
தூசந்தனந்தருந் துன்பந்தருஞ்சீவன் றூநகையே.

(எ-து.) வியாழன்சென்மத்துப் பிராணநாசம், ௨ம் இடம் நன்மை, ௩ம் இடம் வியாதி, ௪ம் இடம் வெந்துநாசம், ௫ம் இடம் அத்தலாபம், ௬ம் இடம்வியாதி, ௭ம் இடம் திரிசங்கமம், ௮ம் இடம் மரணம், ௯ம் இடம் சம்பத்து, ௧௦ம் இடம்நிலைகுலைவு, ௧௧ம் இடம்பொன்னுடை, ௧௨ம் இடம் வியாதி—எ-று. (௬)

### சுக்கிரன்.

மிக்கபொருடரு மேவுந்திருவினை வீட்டுநன்மை
தக்கனசெய்யுந் தனந்தருந்தான நிலைகுலைக்கு
முக்கிடுஞ்செல்வ முவகைசெய்யும்பொரு ளூட்டுநாசஞ்
சுக்கிரன்செய்திடுஞ் சோகங்கெடுக்குஞ் சுகந்தருமே,

(எ-து.) சுக்கிரன்சென்மத்து அத்தலாபம்,உம்இடம் இலட்சுமிகடாட்சம், ஙம் இடம் வியாதி, சம் இடம் நன்மை, ரும் இடம் அத்தலாபம், சூம் இடம்நிலைகுலைவு, எம் இடம் வியாதி, அம் இடம் பிரியம், கூம் இடம் அத்தலாபம், க0ம் இடம்அத்தசேதம், ககம்இடம் மிக்கபோகம், கஉம் இடம் சுகம்—எ-று. (எ)

இதுவுமது

சனிசிகிவேந்தன் புதன்கதிர்வெள்ளிசேய் சந்திரன்பாம்
பெனுமிவர்சென்ம முதற்றீயரீராறெ டெட்டுச்சென்மம்
வினைதனநாச மரணமிடர்போக்கு வேந்தன்சுன்சேய்
பனிதன்பகைசெய் குவவொன்றுநூலவர் பன்னினரே.

(எ-து.) விசேடித்துச்சொன்னபடி சென்மத்துச்சனி உம் இடங்கேது, ஙம் இடம் வியாழன், சம் இடம் புதன், ரும் இடம் ஆதித்தியன், சூம் இடமசுக்கிரன், எம் இடம் செல்வாய், அம் இடம் சந்திரன், கூம்இடம்ராகு, இவர்கள்மிகவுஞ்சரீரபிடை அத்தசேதம்பண்ணுவர்கள். கஉம் இடத்தும் அம் இடத்தும் சென்மத்தும் வியாதி, அத்தநாசம், மரணம், சத்துருபயம், நிலைகுலைத லிவற்றைப்பண்ணுவர்கள் வியாழன், சனி, செவ்வாய், ஆதித்தியன்—எ-று. (அ)

வேதைப்புடம்.

குடங்கலையாழ்மகள் நன்றினன்சியங் குளிர்தனுமீன்
நடஞ்செறிகோளில தேன்மறிதண்டு மகள்துலைசா
ரிடங்கலைநன்று மதியரிவிற்கய லேலெறுடுதேள்
கொடுங்குளிர்தன்னிற் புதனொழிந்தோர்நிற்பிற் குற்றங்களே.

(எ-து.) கோசரவேதையறியும்படி ஆதித்தியன் கக ம் இடம் நல்லன் ரும் இடம் சுத்தமாகில். ச0ம் இடம் நல்லன் சம் இடம் சுத்தமாகில், ஙம் இடம் நல்லன் கூம் இடம் சுத்தமாகில். சூம் இடம் நல்லன் கஉம் இடம் சுத்தமாகில். சந்திரன் சென்மம்நல்லன் ரும் இடம் சுத்தமாகில், ஙம் இடம் நல்லன் கூம் இடம் சுத்தமாகில். சூம் இடம் நல்லன் கஉம் இடம் சுத்தமாகில், எம் இடம் நல்லன் உம் இடம் சுத்தமாகில். கசம் இடம் நல்லன் அம் இடம்சுத்தமாகில், க0ம் இடம் நல



லன் சம் இடஞ்சுத்தமாகில். இவ்விடங்களிற் புதனொழிந்த கிரகங்கள் நிற்பாராகிற்பொல்லான் சந்திரன் புதனிற்பி னல்லன்—எ-று. (கூ)

இதுவமது.

மங்கைகுடங்கலை தேள்விடைநண்டின்மா னல்லன்மற்றோர்
தங்குஞ்சிலைமீன் றுலையாடரிதண்டிற் கோளிலதேற்
செங்கண்விடைகுடஞ் சியஞ்சிலைதுலை சிவனல்லன்
பொங்குமீன்றேள்குளிர் மான்றடியிற்கோள் புகாவிடிலே.

(எ-து,) புதன் சூம் இடம் நல்லன் கூம் இடம் சுத்தமாகில். ச0 ம் இடம் நல்லன் எம் இடம் சுத்தமாகில். சகம் இடம் நல்லன் கஉம் இடம் சுத்தமாகில். அம் இடம் நல்லன் சென்மஞ்சுத்தமாகில். உம் இடம் நல்லன் ரும் இடம் சுத்தமாகில். சும் இடம் நல்லன் ஙம்இடம் சுத்தமாகில. வியாழன் உம் இடம்நல்லன் கஉம இடம் சுத்தமாகில். ககம் இடம் நல்லன் அம் இடம்சுத்தமாகில். ரும் இடம் நல்லன் சம இடம் சுத்தமாகில். கூம் இடம் நல்லன் க0ம் இடம்சுத்தமாகில். எம் இடம் நல்லன். ஙம் இடம் சுத்தமாகில்—எ-று. (க0)

இதுவமது.

மூன்றாறுபன்னொன்றிற் சேய்சனிநல்லர்மூந் நான்குமும்மூ
றேன்றுயவஞ்சிற்கோ ணிற்றலின்றெலெட்டுக் கோன்மறியா
வான்றுதவில்லரி கும்பமொடாய வருந்தடிபெண்
டோன்றுதவா றெழூபத்தொழித்தானல் லன்சுக்கிரனே.

(எ-து.) செவ்வாயும் சனியும் ங-ம் இடம் நல்லர் கஉம் இடம் சுத்தமாகில். சூ-ம் இடம் நல்லா கூ-ம் இடம் சுத்தமாகில். கக-ம் இடம் நல்லர் ரு-ம் இடம் சுத்தமாகில். சுக்கிரன் சென்மத்து நல்லன் அ-ம் இடம் சுத்தமாகில். உ-ம் இடம் நல்லன் எ-ம் இடம் சுத்தமாகில். ங-ம் இடம்நல்லன் சென்மஞ் சுத்தமாகில், ச-ம் இடம் நல்லன் உ-ம் இடம் சுத்தமாகில். ரு-ம் இடம் நல்லன் கூ-ம் இடம் சுத்தமாகில். அ-ம் இடம் நல்லன் ரு-ம் இடம் சுத்தமாகில். கூ-ம் இடம் நல்லன் கக-ம் இடம் சுத்தமாகில். கக-ம் இடம் நல்லன் ங-ம் இடம் சுத்தமாகில். கஉ-ம் இடம் நல்லன் சூ-ம் இடம் சுத்தமா

றில், வித்தக்கிரகங்கள் நல்ல விடங்களிற் பொல்லார்சுக்கிரன் ௯-௭-௰-இவ்விடங்களின் மிகவும் பொல்லான் மற்றவிடங்களி னல்லன்—எ-று. (௧௧)

இதுவுமது.

சனியுங்கதிருந் தனித்தனிவித்தியர் சந்திரற்கு
னவித்தியர்மா லொழிந்தவரல்லா தவர்க்கல்லவ
ரினிதுறும்வித்த மிடர்தருமாமெதிர் வித்தம்வந்தாற்
கனியிதழ்முத்தன வெண்ணகையாய்வித்தக் கோட்கதியே.

(எ-து) சனியும் ஆதித்தியனுந் தனித்தனியே வித்தக் கோட்களாவர். சந்திரனுக்குப் புதனையொழிந்த கோட்கள் வித்தியர். அல்லாதவர்க்கு இக்கோட்களெல்லாம் வித்தக்கோட்களாவர். கோளும வித்தக்கோளுமாயிருக்கிற் பொல்லாக் கோளும் நற்கோளாய்ப் பலந்தரும். அவைவருமாறு; சந்திரவிலக்கினமாகிய சென்மராசிக்கு ௯-ம் இடத்தில் ஆதித்தியனிற்க, ௩-ம் இடத்திற் கோளுண்டாகிலும், ௧௨-ம் இடத்தில் ஆதித்தியனிற்க, ௬-ம் இடத்திற் கோளுண்டாகிலும், ௪-ம் இடத்தில் ஆதித்தியனிற்க, ௧௦-ம் இடத்திற் கோளுண்டாகிலும், ௫-ம் இடத்தில் ஆதித்தியனிற்க, ௧௧-ம்இடத்திற் கோளுண்டாகிலும், ஆதித்தியன் பலந்தரும் — எ-று, மற்றுமுள்ள கிரகங்களுக்கும் இப்படியே விபரீதமகப்பார்த்துக் கொள்க. (௧௨)

இதுவுமது.

பாம்பால்வருவ புதன்கெடுக்குஞ்சனி சேய்புகர்பொன்
தேம்பாமதியுத் தரகதியாங்கதிர் தீமையெல்லாஞ்
சோம்பாதொழிவர் முறைமுறையே யெனச்சொல்லுவராங்
காம்பார்திருத் தோளிநூய்கணிதக் கலைகற்றவரே.

(எ-து) இராகுவால் வருங்குற்றம் புதன்கெடுக்கும்; இவ்விருவராலும் வருங்குற்றஞ் சனிகெடுக்கும்; இம்மூவராலும் வருங்குற்றஞ் செவ்வாய் கெடுக்கும்; இந்நால்வராலும் வருங் குற்றஞ் சுக்கிரன்கெடுக்கும்; இவ்வைவராலும் வருங் குற்றம் வியாழன்கெடுக்கும்; இவ்வறுவராலும் வருங் குற்றஞ் சந்திரன்கெடுக்கும்; இவ்வெழுவராலும் வருங்குற்றமுத்தரகெதியான வாதித்தியன் கெடுக்கும்—எ-று. (௧௩)



கிரகசங்கியை.

செப்புபரிதிக்கு முப்பான்செவ்வாய்க்கொரு நாற்பத்தைந்தாந்
தப்பின்மதிக்கிரண் டேகால்பதினெட்டுச் சாம்பனுக்காய்
வைப்பர்கவிக்கிரு பத்தைந்துநாட்பொன் வருடமொன்றாங்
கொப்பில்சனிக்கு மிரண்டரைபாம்புக்ட் கொன்றரையே

(எ-து.) ஆதித்தியனொருமாதம், செவ்வாய் ௧½ மாதம், சந்திரன் ௨¼ நாள், புதன் ௧௮ நாள், சுக்கிரன் ௨௫ நாள், வியாழன் ௧-வருடம், சனி ௨½ வருடம், இராகு கேது ௧½ வருடம் ஓரிராசியிலேநிற்பர்—எ-று. (௧௪)

வக்கிராதிகாரம்.

பத்துத்தினம்புகர் மாலவர்க்குப்பதி னைந்துபூமற்
கொத்துறுமொன்றரை மாதங்குருவிற் குயர்சனிக்கு
வைத்துறுமாதங்கண் மூன்றதிசாரத்தில் வக்கிரத்தின்
முத்தனவெண்ணகையாய் முன்னிலோரா பலத்தனவே.

(எ-து.) கோட்களதிசாரவக்கிரமானால், புதனுக்குஞ் சுக்கிரனுக்கும் ௧௦-நாள், செவ்வாய்க்கு ௧௫ நாள், வியாழனுக்கு ௧½ மாசம், சனிக்கு ௩-மாசம்; இப்படியதிசாரவக்கிரத்தில்வந்தால், வக்கிரித்துப்போறகிமுன்னிராசியிற்பலமாம்—எ-று. கிரகபதங்களுக்கெல்லாம் மேலாயிருக்கையா லுயர்சனியென்றார். (௧௫)

கோசரப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை ௧௬௪.

---

# உதயாரூடக்கவிப்புப்படலம்.

---

இராசிநாழிகை.

சிங்கந்தடிகலை தேளஞ்சுபாதந் தெரிவைதுலை
யங்கசன்பூங்கணை சாபங்கடகமொ ரைந்தரையாம்;
புங்கவஞ்சாடிமுக் காலுடனலு புருவைகய
றங்கியநாலுடன் காணுழிகையென்பர் தாழ்குழலே.

(எ-து.) இராசிநாழிகையறியும்படி சிங்கம், மிதுனம்,
மகரம், விரிச்சிகம், இவை ருவ நாழிகை. கன்னி, துலாம், ரு
நாழிகை. தனு, கர்க்கடகம், ரு௨ நாழிகை. இடபங் கும்பம்,
௪ஆ நாழிகை. மேடம் மீனம், சவ நாழிகை—எ-று. (௧)

கிரகவீதி.

நாடொறுஞாயிறு நண்ணியவோராதி யாறும்பக
லீடியவாறு மிரவென்றுதய நெறியறிவாய்
மேடகல்வீதி விடைமுதனான்கு மிதுனவீதி
யோடியதேளாதி யொண்விடைவீதி யொழிந்தநான்கே.

(எ-து.) யாதாயினுமோரிராசியில் ஆதித்தியனின்றால்,
அவனின்றவிராசிமுதல் ௬-இராசிபகலென்றும், எ-ம் இரா
சியாயிவனத்தமிக்கிற விராசிமுதல் ௬-இராசி யிரவென்று
மறியப்படும். முகூர்த்தமறியுமிடத்து இவனின்றவிராசியின்
நாழிகையை அம்மாதத்துக்குள்ள நாளுக்கீந்து பெற்றநாழி
கையை நீக்கிழ்ச்சென்ற நாழிகையெனக்கழித்து நின்றநா
ழிகையுடனே யயலானவிராசிநாழிகையையேற்றி முகூர்த்த
மறியப்படும். இராமுகூர்த்தமறியுமிடத்து ஆதித்தியனின்
ற விராசியையும் அத்தமனவிராசியையுங் கூட்டி அம்மாதத்
தினுக்கீந்து பெற்றபலத்தைப்பாதிசெய்து எ-ம் இராசியிலே
கழிந்து நீக்கிநின்ற விராசியில் நாழிகை முதலயலான விரா
சியையேற்றி நட்சத்திர வுச்சவிதியான் முகூர்த்தமறியப்
படும். ஆதித்தியனிடபமுதல் ௪-இராசியினு நிற்குங்காலம்
மேடவீதியிலேசரிக்குமென்றும்; விரிச்சிகமுதல் ௪ இராசியி
னுநிற்குங்காலம்மிதுனவீதியிலேசரிக்குமென்றும்; ஒழிந்த
மீனம், மேடம், கன்னி, துலா, இவை ௪-இராசியினுநிற்குங்
காலமிடபவீதியிலேசரிக்குமென்றும்; அல்லாதகோட்களு
மிவ்விராசியிலேநின்று மிவ்விராசியிலேசரிக்குமென்று மறிய
ப்படும்—எ-று.
(௨)

ஆரூடசக்கரம்.

வடக்குக்கிழக்குற நான்கோர்வட்டத்துளெட் டாணதிக்கிற்
கிடத்தருமாடாதி யேந்தவடுப்பொக்கு மெண்டிக்கினிற்
சுடர்க்கதிர்சேய்பொன் புதன்சுக்கிரன்சனி சோமனரா
வடற்பரிவேடம் புகைவினுட்பம்வீதி யாரூடமே.



(எ-து.) ஒத்தநிலத்திலே கிழக்குநோக்கியிருந்து சது
ரமாக வொருவட்டத்தையிட்டு, அதிலே கிழக்கும் வடக்கு
மாக நான்கிரேகை கீறிப்பார்க்க, உரு-அறையாம். இதில் வ
டகீழ்மூலை யறையைவிட்டு இதின் தென்றிக்கிலறைமேடம்.
இதன் தென்மேலையறையிடபம். இதன் தென்கீழ்மூலையறை
மிதுனம். இதன்மேல்மூலையறை கர்க்கடகம். இதன் வடமே
ல்மூலையறை சிங்கம். இதன் தென்மேல்மூலையறை கன்னி.
இதன்வடமேல்மூலையறை துலாம். இதன் வடகீழ்மூலையறை
விரிச்சிகம். இதன் வடமேல்மூலையறை தனு இதன் வடகீழ்
மூலையறை மகரம். இதன் தென்கீழ்மூலையறை கும்பம. இ
தன்வடகீழ்மூலையறை மீனம். இப்படிச்சேர, மும்மூன்றிரா
சியு மடுப்புக்கூட்டம்போலப்படும். இச்சக்கரத்தினடுவில் வீ
தியிற் கீழ்தலையறையிலே யாதித்தியன். இப்படிச்சுற்றும்புற
மபும் வீதியில் அக்கினிமூலையிற்செவ்வாய். தெற்குவீதியில்
வியாழன். நிருதிமூலையிற்பூதன். மேற்குவீதியிற் சுக்கிரன்.
வாயுமூலையிற்சனி. வடக்குவீதியிற்சந்திரன். ஈசானமூலையி
ல் இராகு. இப்படிப்பன்னிரண்டிராசியும் எட்டுக்கோளுநிறு
த்தி நடுவிலறை பிரமத்தானத்துக்கிருப்பாகவும், இதற்கீசா
னத்துப்பரிவேடம், இதற்கக்கினிதூமம், இதற்கு நிருதியி
ந்திரதனு, இதற்குவாயுநுட்பம்,இப்படி-உரு-அறையும் உரு
கோளுக்கிடமாகவியமிக்கப்பட்டது ஆரூடச்சக்கரமாம்—எ-று

கவிப்பு.

எய்தியவாரூட மாதியிரவிதன் வீதியந்தஞ்
செய்ததொகையை யுதயாதிநீக்கச் செழுங்கவிப்பாம்
வெய்துறுகோளிங் குறில்விதியல்லக்கா லங்கண்மூன்றிற்
பெய்துரைநற்கோ ளிலவற்றுநினன்றென்பர் பெய்வளையே.

(எ-து.) யாவனொருவனொரு காரியங்கேட்க வந்தவனு
ற்ற திசையையறிந்து, அந்தந்தத்திக்கிற்கு அடைத்த வாரூ
டவிராசிமுதலாக ஆதித்தியன் சரிக்கிற வீதியளவு மெண்
ணினதொகையை யுதயவிராசி முதலாகக்கழித்துக்கொண்டு
உற்றவிராசிக்கவிப்பாம். இப்படி உதயத்தாற்சென்றகாலமும்,
ஆரூடத்தானிகழ்காலமும், கவிப்பால்வருங்காலமுஞ் சொல்ல
ப்படும். சொல்லுமிடத்திம்மூன்றிராசியினுங் கேந்திரத்திரி
கோணங்களினுஞ் சுபக்கிரகங்க ணிற்றல்நோக்குதல்செய்யில்

அந்தவிராசிவகையாற் காலங்கணன்றென்றும், தீக்கோளாகி ல்க்காரியந்தீதென்றுஞ்சொல்லப்படும்—எ-று. (௬)

உதயாரூடக்கவிப்புப்படலமுற்றிற்று.

ஆகக்கவித்துறை ௨௯௮.

---

## நட்பாட்சியுச்சம்பகைநீசப்படலம்.

பார்மகன்வெள்ளி புதன்மதிபானுக் கணக்கன்சுங்கன்
சீர்தருஞ்செவ்வாய் வியாழஞ்சனிகாரி சிவனென்று
பேர்பெறுங்கோளாட்சி மேடங்கலைதுலை பேசுங்குளி
ரார்வுறுமேடாதி நான்கினவாங்சகத் தாதிபரே.

(எ-து.) மேடச்செவ்வாய், இடபசுக்கிரன், மிதுனபுதன், கர்க்கடகசந்திரன், சிங்காதித்தியன், கன்னிப்புதன், துலாச்சுக்கிரன், விரிச்சிகச்செவ்வாய், தனுவியாழன், மகரச்சனி, கும்பச்சனி, மீனவியாழன் எனக்கோட்களுக்காட்சியானவாறுகண்டுகொள்க. இவற்றின் நவாங்சகமறியுமிடத்து மேடத்துக்குஞ் சிங்கத்துக்குந் தனுவுக்கும் மேடமுதலொன்பது. இடபத்துக்குங் கன்னிக்கும் மகரத்துக்கும் மகரமுதலொன்பது. மிதுனத்துக்குந் துலாத்துக்குங் கும்பத்துக்கும் துலாமுதலொன்பது. கர்க்கடகத்துக்கும் விரிச்சிகத்துக்கும் மீனத்துக்கும் கர்க்கடகமுதலொன்பது. இப்படியொன்பது கோளும் நவாங்சகாதிபரென் றறியப்படும். —எ-று. (௧)

உச்சம் அத்யுச்சம் நீசம் அதிநீசம்.

மறிவிடைமான்மக ணள்ளிமீன்வாணிகன் ஞாயிறுதி
செறிவுறுமுச்சந் தசங்கனல்செய்ய மறுவிரட்டி
நெறியுறுபக்க நிறைநாளவு நிறைந்திருபா
னறிவுறுமத்யுச்ச மாமதற்கேழ்நீச மன்னவையே.

(எ-து.) ஆதித்தியனுக்குமேடமுச்சம். இதிற் ௧௦-ம் பாகமத்யுச்சம், சந்திரனுக்கிடபமுச்சம். இதின் ௩-ம் பாகமத்யுச்சம். செவ்வாய்க்கு மகரமுச்சம். இதில் ௨௮-ம் பாகமத்யுச்சம். புதனுக்குக் கன்னியுச்சம். இதில் ௧௫-ம் பாகமத்யுச்சம். வியாழனுக்குக் கர்க்கடகமுச்சம். இதில் ௧௫-ம் பாகமத்யுச்சம். சுக்கிரனுக்கு மீனமுச்சம். இதில் ௨௭-ம் பாகமத்யுச்சம். சனிக்குத் துலாமுச்சம். இதில் ௨௦-ம் பாகமத்யுச்சம். இப்படி யுச்சராசியு மத்யுச்சபாகையு மறியப்படும். சொன்னவடைவே யுச்சத்துக்கு ௭-ம் இராசி நீசமென்று மதிற்சொன்னபாகை யதிநீசமென்று மறியப்படும்—எ-று. (௨)



* மூலத்திரிகோணம்.

சிங்கம்விடைகொறி கன்னிசிலைதுலை கும்பமென்றே
செங்கதிராதிமூ லத்திரிகோண மிதற்குமூன்றேழ்
தங்கியபன்னொன்று பத்தாறுசார்ந்தவர் சத்துருக்க
ளங்கல்லவருற வென்றனரோர்சாரா சாரியரே.

(எ-து.) மூலத்திரிகோண ராசியாவன: ஆதித்தியனுக்குச் சிங்கம். சந்திரனுக்கிடபம். செவ்வாய்க்கு மேடம். புதனுக்குக் கன்னி. வியாழனுக்குத் தனு. சுக்கிரனுக்குத் துலாம். சனிக்குக் கும்பம். இவ்விராசிகளுக்கு ௩, ௭, ௧௪, ௧௦, ௬ இவ்விராசி யுடையவர்கள் சத்துருக்கள். அல்லாதவர்களுறவென்றோர்சாராசிரியர் சொல்லினர்—எ-று. (௩)

இதுவுமது.

ஆர்க்குந்திரிகோணத் தீராறிரண்டொன்ப தைந்தெட்டுநான்
கேர்க்குந்திறத்துச்ச மேய்ந்தவர்நட்பென் றிருதிறத்துஞ்
சேர்க்குங்குணத்தவர் மத்திமராவர் திரண்டிணையொத்
தீர்க்கிடைபோகா திடைக்கிடரான வெழின்முலையே.

(எ-து.) முன்சொல்லிய ஆதித்தியன் முதலாய கோட்களுடைய மூலத்திரிகோண ராசிக்கு ௧௨, ௨, ௩, ௫, ௮, ௪ இவ்விடங்களில் நிற்குமிராசி யுச்சராசியாம். இவற்றை யாட்சியாகவுடைய கோள்நட்பு அல்லாது சொல்லுநட்பு நட்பல்லவென்பது. ஆட்சியிலோரிடத்து நட்புமோரிடத்துப் பகையுமாய் நிற்குங்கோள் மத்திமராவர்—எ-று. (௪)

இதுவுமது.

ஒருவரொருவர்க் கிரண்டினின்மூன்றி லொருபதினிற்
றருபதினொன்றினன் கீராறினிற்சாரிற் சாலநட்பா

---

* மூலத்திரிகோணம்-ஆட்சிவீடு.

மிருவகையர்னு மிசைதருநட்பதி நட்பதென்று
திருமகணாயகன் ருடொழுநாரணன் செப்பினனே.

(எ-து.) ஒருவனொருவனுக்கு ௨, ௩, ௧௦, ௧௧, ௪, ௧௨, இவ்விடங்களி னிற்பாராகில் தற்கால மித்திரராவர், இபபடி யிருக்காலு முக்காலுஞ் சொல்லிய ராசிகளி லதிபதி அதிமித்திரமென்றும் அதிசத்துருவென்று மறியப்படும்—எ-று.

நட்பாட்சியுச்சம் பகைநீசப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை ௨௦௩.

---

## சட்டுவருக்கப்படலம்.

உதிக்கின்றவோரையுங் கூறுமிரண்டுமூன் றொன்பதுமே
மதிக்குமீராறுடன் முப்பதுமாமாறின் வர்க்கமென்று
விதிப்படிநாளும் விளங்கும்வகைவித் தரித்துரைப்ப
துதிப்படுவேல்விழி யம்போருகமுகத் தாயணங்கே.

(எ-து.) சட்டுவர்க்கமாவன உதிக்கின்ற ராசியையுடையவனும் இதனை ௨ கூறாக வுண்பானும் இதனை ௩ கூறாகவுண்பானும் இதனை ௯ கூறாக வுண்பானும்; இதனை ௧௨ கூறாக வுண்பானும்; இதனை ௩௦ கூறாக வுண்பானுஞ் சட்டுவர்க்காதிபராவர்—எ-று. (௧)

ஒற்றித்தவோரை யொழியவன் றிங்க ளிரட்டிதன்னி
லுற்றமதிக்கதி ரோராதிபருத யத்தொடைந்து
முற்றியவொன்பது மாந்திரேக்காண முறையுதயம்
பற்றியதாதியென் பன்னிரண்டாமங் சகப்பயனே.

(எ-து.) ஒற்றித்தராசியி னோரையை ௨ கூறிட்டால் முதற்கூறு ஆதித்தியன். இரண்டாங்கூறு சந்திரன். இரட்டித்தராசியை ௨ கூறிட்டால் முதற்கூறு சந்திரன். இரண்டாங்கூறு ஆதித்தியன். இதுவோரை. உதயராசியை ௩ கூறிட்டால் முதற்கூறுதயராசியை யுடையவனது. இரண்டாங்கூறு ௫-ம் இராசியையுடையவனது. மூன்றாங்கூறு ௯-ம் இராசியை யுடையவனது இது திரேக்காணம். நவாங்சகம் முன்பு ஆட்சிசொன்ன சூத்திரத்திலே சொல்லப்பட்டது. உதயராசியை ௧௨ கூறிட்டா லந்தராசியை யுடையவன் முதலாக வடைவே துவாதசாங்க மறியப்படும்—எ-று. (௨)



பூதம்விணுத்திசை யாழ்கடல்பூங்கணை யென்றுவிய
ஞதிகுசன்சனி யந்தணன்மால்புக ரங்சகலு
ணுதுசமனிடை யொண்புகராதி யெதிர்நடக்குங்
கோதில்கோட்கூற்றிற் கயல்குளிர்தேளந்தங் குற்றமென்னே.

(எ-து.) திரிங்சாங்கம் ஒற்றித்தராசியை ௩௦ கூறிட்டால் முதல் ௫ கூறு செவ்வாயுண்ணும், பின்பு ௮ கூறு வியாழனுண்ணும், பின்பு ௭ கூறு புதனுண்ணும், பின்பு ௫ கூறு சுக்கிரனுண்ணும், இதனைக் கோட்கூறென்றுகொள்ளப்படும். இரட்டித்த ராசியை ௩௦ கூறிட்டால் எதிரோறுகமுதற் சுக்கிரனுக்கு ௫ கூறும், புதனுக்கு ௭ கூறும், வியாழனுக்கு ௮ கூறும், சனிக்கு ௫ கூறும், செவ்வாய்க்கு ௫ கூறு மறியப்படும். இக்கோட்கூற்றிற் கர்க்கடகத்தும் விரிச்சிகத்துக்கும் மீனத்துக்குங் கடையிலுற்ற கூறு மிக்க தோஷங்களைப் பண்ணுமெனவறிக. இது லக்கினச் சட்டுவர்க்கம். என்றதனை விராசியில் வந்தாலும் நவக்கிரகத்துக்கு மிப்படியே சட்டுவர்க்க மறியப்படும்.

சட்டுவருக்கப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை-௨௦௪.

---

## மகாதிசைப்படலம்.

கார்த்திகையுத்திர முத்திராடம்முத லாய்க்கதிரோ
னேர்த்தசுடரா திபர்திசைக்கென்பரெண் பெற்றவாண்டைச்
சேர்த்துறுமூன்றிற் பெருக்கிச்செழுஞ்சுடர் தாக்காளாம்
பேர்த்துறுமாதிசை முன்னூற்றறுபது நாட்பெறவே.

(எ-து.) மகாதிசை யெண்ணுமிடத்து கார்த்திகை முதலாகவும் உத்திரமுதலாகவும் உத்திராடமுதலாகவும் ஆதித்தியன்முதலாகச் சுக்கிரனீறுவடைவே திசாதிபராம். இப்படி நாளுக்குற்ற திசையுடையவன் முதலாவே யறியப்படும். மேற்சொல்லப் புகுகின்ற சூத்தி

ரத்திலே நாளுக்குண்ணுங் கோளடைவும் கோளின்சுட்டுமறியப்படும். சுடராவது ஆண்டாம். அந்நாளறியுமிடத்து ஒருவன் திசையான வாண்டை மூன்றாற் பெருக்கினது வர்த்தனையென்று பெயராம். இந்தவர்த்தனையை முதலுற்றகோளின் சுடராதி கூ கோளுக்குந் தத்தங்கதிர்களாற் பெருக்க நாளாம். இதனை யந்தரதிசையென்றறியப்படும். பேர்த்துமு மென்றதனால் அந்தரதிசையின் நாளை வைத்து அவரவர் திசைக்கு அவரவர் கதிராற் பெருக்கி நூற்றிருபதுக்கீந்து நின்றசேடத்தை அறுபதிலேபெருக்கித் திரும்பவுமீந்து நின்றசேடத்தை அறுபதிற் பெருக்கித் திரும்பவுமீய வந்தரதிசைக்கு நாளும் நாழிகையும் விநாழிகையுமாம். இப்படியே சூட்சுமதிசையு மறியப்படும். இந்தப் பெருக்கமெல்லா மூந்நூற்றறுபதுநாளென்றறிக—எ-று. (க)

இதுவுமது.

அருக்கனுக்காறு மதிக்குப்பத்தேழ்சேய்க் கரவினுக்கு
நிரைத்தபதினெட்டு மந்திரிக்கீரெட்டு நீலனுக்காங்
குரைத்தபத்தொன்பது புந்திக்குப்பன்னேழொண் கேதுவுக்கேழ்
கருத்துறுவெள்ளிக் கிருபதுமாதிசை யின்கதிரே.

(எ-து.) மகாதிசைக்குக் கதிர்கொள்ளுமிடத்து ஆதித்தியனுக்கு சு, சந்திரனுக்கு க0, செவ்வாய்க்கு எ, இராகுவுக்கு கஅ, வியாழனுக்கு கசு, சனிக்கு கசு, புதனுக்கு கஎ, கேதுவுக்கு எ, சுக்கிரனுக்கு உ0, இவை மகாதிசைக்கதிராம்—எ-று. (உ)

அந்தரதிசை.

சென்றவக்காற்காண்டுந் திங்களுந்நாளுஞ் செலவிட்டபி
னென்றாமுனுமாண் டிராசபயந்துன்ப மெய்துமென்க
நன்றுமதிர பாலர்பாற்பூசனை நட்புடைமை
குன்றுங்குசன்கொடு நோய்விரணங்கள் கொடுத்திடுமே.

(எ-து.) யாவனொருவனுக்குச் சென்மநட்சத்திரத்திற் சென்றகாலமறிந்து அதில் அதற்குள்ள நாழிகையுஞ் சென்ற நாழிகையும் அறிந்து நின்றநிலை கேதகடிகையென்று திட்டிவைக்கக் கதிரின்றொகையான நூற்றிரு



பதினை அந்நாளின் நாழிகைக்கீந்து பெற்ற பலங்கெதியாம். இதனாலே கேதகடிகையைப் பெருக்கிக்கண்ட வற்சராதிகளையொன்றான வற்சரத்திலே கழிந்துநின்ற சேடமாயுஷியமாம். திசைபிறிக்கும்படிகண்ட ஆயுஷியத்தை பன்னிரண்டாற் பெருக்கி நூற்றிருபதுக்கு ஈந்து பெற்றபலத்தைத் தத்தங்கதிர்களாற் பெருக்கி ஆண்டு மாதமு நாளு மறியப்படும். ஆதித்தியன் திசையில் இராசபயம், வியாதி, தனச்சேதமுண்டாம். சந்திரன் திசையில் இராசபூச்சியம், நன்மை, வெகுலாப முண்டாம். செவ்வாய்திசையில் காரியச்சேதம் வியாதி, சொறி, சிரங்கு தழும்புமுண்டாம்—எ-று. (ங)

இதுவுமது.

பன்னகநோய்வெப்பு மாதனநாசம் பயம்பகையாம்
பொன்னவனேலெப் பொழுதுநன்றும்பல போகமுண்டாஞ்
சுன்னவன்சோம்ப லிடரிரந்துண்டலை சுற்றம்வீவா
மன்னுறுமால்கல்வி வாழ்வுடன்போக மகப்பெறலே.

(எ-து.) இராகுவின் திசையில் வியாதி, சுரம், அத்தநாசம், பயம், சத்துருபீடை உண்டாம். வியாழன் திசையில் மிகவும் நன்றாம். சனிதிசையிற் சோம்பல், வியாதி, பிச்சையிரப்பு, சிறைப்பாடு, விலங்கு, வெகுநாசமுண்டாம். புதன்திசையில் கல்வி, வாழ்வு, பலபோகம் புத்திரலாப முண்டாம்—எ-று. (ச)

இதுவுமது.

தக்கசிகிதிசை தல்னிலைகுன்ற நனைபழிநோய்
சுக்கிரனன்மை மிகவிளைக்குந்துய ரங்கெடுக்கு
மக்கட்பெறுதி யுண்டாக்குமகாதிசை மானனையாய்
திக்குநிகழவுரைத் தனன்றென்கடு வைக்கிறையே.

(எ-து.) கேதுவின்திசையில், தானசலனம், சிறைப்பாடு, விலங்கு, அவகீர்த்தி, பயம், வியாதி, காரியச்சேதமுண்டாம். சுக்கிரன்திசையில், மிக்கலாபம், வியாதிநாசம், பலபோகம், புத்திரலாபமுண்டாம்—எ-று. அந்தரதிசையென்று முன்பு சொல்லப்பட்டது உள்த்திசையெனவறிக. (ரு)

மகாதிசைப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை. உகக.

# காலசக்கரப்படலம்.

அறைந்தனர்சக்கரத் தாழியும்பன்னிரண் டாருமாக்கிச்
சிறந்தகீழ்பாற்கொறி குண்டைதென்பாற் குளிர்சிங்கமேல்பாற்
குறைந்ததுலைதேள் வடபாற்கலைகுடங் கோணநான்கும்
பிறந்தனமீன்றடி பெண்வில்லெனக் காலசக்கரமே.

(எ-து) சக்கரத்தோராகிய வொருவட்டத்தை யிட்டு இதனடுவே கீழ்மேலிரண்டிரேகையுந் தென்வடபாலிரண்டிரேகையும மூலைகளி லொவ்வொரி ரேகையுமாகக் கீறிற்பன்னிரண்டு கீதிராய் ௨௧ சக்கரமாம். இதிலேநேர்கிழக்கு நேர்தெற்கு நேர்மேற்கு நேர்வடக்கு இவற்றிலே நிற்குமிராசியாவன, இடபம் சிங்கம் விரிச்சிகம கும்பம்; இதற்கு வலத்திராசியாவன, மேடம் கர்க்கடகம் துலாம் மகரம் என்ற நான்கிராசியாம். இதற்கு நாற்கோணத்திராசியாவன், மிதுனம் கன்னி தனு மீனம்; இப்படிக்கீறி நிறுத்தினது காலசக்கரமாம்—எ-று. (௧)

## வலநாளிடநாள்.

தலைநாட்கழையத்த மூலம்புரட்டைமுன் மூன்றுமேடம்
வலநாளுருடேர் மகமுற்றின்மாய ஞளாதிமூன்று
நிலையாமிடர்தேண் முதலெதிர்நேர்ந்த காரேகமந்த
முலையாவுயிர்வலம் வாமத்தினுக்குயிர் மெய்யென்பவே.

(எ-து.) அசுபதி, புனர்பூசம், அத்தம், மூலம், பூரட்டாதி முதலாக மும்மூன்று நாள்வலநாள். இவைமேடாதி மீனந்தமாக வெண்ணபபடும். உரோகிணி, மகம், விசாகம், திருவோணம் முதலாக மும்மூன்று நாளிடநாள். இவைவிரிச்சிக முதற்றனுவந்தமாக வெண்ணப்படும். வலநாளுக்குமுந்தினபாதமுடல், முடிந்தபாதமுயிர்; இடநாளுக்கு முந்தினபாதமுயிர், முடிந்தபாதமுடல் என்றறியப்படும—எ-று. (௨)

## கோட்கதிர்.

சுன்னுக்குநாலு சுடர்க்கைந்துசுங்கற்கீ ரெட்டுச்சேய்க்கேழ்
பொன்னுக்குபத்து மதிக்குமூவேழு புதற்கொன்பதா
மென்னப்படுஞ்சுட ரின்பரிசாண்டுதிங் கட்டினமாய்ச்
சின்னப்படுத்தி யுயிர்மெய்யறிந்துரை தேமொழியே.

(எ-து.) காலசக்கரத்துக் கோட்களுக்குக் கதிர்கொள்ளுமிடத்துச் சனிக்கு ௪ ஆதித்தியனுக்கு ௫ சுக்கிரனுக்கு [illegible]



செவ்வாய்க்கு ௭ விகாழனுக்கு ௧0 சந்திரனுக்கு ௨௧ புதனுக்கு ௯ இவற்றை யாண்டாக்கிக் கொள்ளப்படும். ஓராண்டாவது ௩௬0 நாள்; இதனைச்சுடராற் பெருக்கியுற்றராசிக் கடைத்தகாலொன்பதின் சுடர்த்தொகைக் கீந்து பெற்றபலத்தைத் தத்தஞ்சுடராற் பெருக்கிக்கொள்ள மாதமுநாளு நாழிகையு மறியபபடும்—எ-று. (௩)

## இலக்கினதிசை.

பிறந்தவிராசியி னுற்றநவாங்சகம் பெற்றுடையோர்
சிறந்தனராவ ருயிரின் றிசைக்குத் திருவனையா
யிறந்திடுகால மிதனாலறிந்த திசைவிடத்தே
யுறைந்திடுபாம்பிடையே யுறிலாவி யுகுமென்பரே.

(எ-து.) யாவனொருவன் பிறந்தபொழுது நின்ற உதயராசியினவாங்சகத்தையுடைய ராசியில் ௯ காலின்சுடர்தொகையா லாயுசறியப்படும். வலநாளிலிடநாளுண்ணுமிடத்தும் இடநாளில் வலநளுண்ணுமிடத்தும் தத்தென்றறியப்படும். தத்துமிடத்து இடைப்பட்டராசிகளிலே யிராகு நின்றுளகிலக்காலத்தின் மரணமாம்—எ-று. (௪)

## பஞ்சதிசை.

உடலின் றிசைநாளின் காலாலுயைத யாங்சகத்தாற்
படருந்திசையே பிராணன்பரிதி செலவிற்சிவ
னடருந்திதியின் செலவாலறிப மனோதிசையை
விடவாளரவின் செலவாலறிமிருத் துத்திசையே.

(எ-து.) மேற்சொல்லிய முறையால் நாளின்காலாலே சரிரதிசை யறியப்படும். செனனகாலத்துதிக்கின்ற ராசியின் நவாங்சகத்தாற் பிராணதிசையறியப்படும். செனனகாலத்துத் தற்காலமாதித்தியனின்ற ராசிவசத்தாற் சிவதிசையறியப்படும். சாந்திரமாதத்துத் திதி முப்பதின் நடக்கின்ற திதிவகையால் வந்த ராசிநவாங்சகத்தால் மனோதிசையறியப்படும். தற்காலத்து ராகுநின்ற ராசிநவாங்சகத்தால் மிருத்துதிசையறியப்படும். இப்படியே பஞ்சதிசைகளு மறிவது—எ-று.

## இதுவுமது.

செய்யோன்புகர்புந்தி திங்கட்கதிர்புதன் வெள்ளிசேபொன்
மெய்யேவிளங்கும் பரிவெங்கனற்கு மிகுமுதற்கால்

கையோமகயிர மாதிரையிற்கடைக் காலிற்குமாம்
பைசேரரவல்குலாய் பரமாயுவை நூறென்பரே.

(எ-து.) மேடச்செவ்வாயாண்டு எ. இடபச்சுக்கிர ளுண்டு கசு. மிதுனபுதனுண்டு கூ. கர்க்கடக சந்திரனுண்டு உக. சிங்காதித்தியனுண்டு ரு. கன்னிபுதனுண்டு கூ. துலாச்சுக்கிரனுண்டு கசு. விரிச்சிகச்செவ்வாயாண்டு எ. தனுவியாழனுண்டு கo. இப்படி யசுபதி கார்த்திகை முதற்காலுக்கும், மிருகசிரிடம் திருவாதிரை நாலாங்காலுக்குமாகப் பரமாயு நூறும்— எ-று. (சு)

இதுவுமது.

மிக்கக்கலைமந்தன் மீனந்தேள்வெள்ளி புதன்கடக
மர்க்கன்றடியிவை யாதிதழற்கிரண் டாயகாற்குந்
தக்ககன்மான்றலை யாதிரைக்குச்சாரு மூன்றுயகாற்
கொக்கவுறுமாயு வெண்பத்தைந்தென்ப ரொளிவளையே.

(எ-து.) மகரச்சனியாண்டு ச. கும்பச்சனியாண்டு ச. மீனவியாழனுண்டு கo. விரிச்சிகச்செவ்வாயாண்டு எ. துலாச்சுக்கிரனுண்டு கசு. கன்னிபுதனுண்டு கூ. கர்க்கடகசந்திரனுண்டு உக. சிங்காதித்தியனுண்டு ரு. மிதுனபுதனுண்டு கூ. இப்படியசுபதிகார்த்திகை யிரண்டாங்காலுக்கும், மிருகசிரிடம் திருவாதிரை மூன்றுங்காலுக்கும் ஆகப்பரமாயு வெண்பத்தைந்தாம்—எ-று. (எ)

இதுவுமது.

விடைமறிமீன்குடம் புல்வாய்வின்மேடம் புகர்புதனென்
றடைவினைதைப்பசி கார்த்திகைமூன்றுங்காற் காதிரைக்கு
நடைபெறுமான்றலை நாட்களிரண்டாய காலினுக்கும்
படவரவல்குனல்லாய் பரமாயுவெண் பத்துமூன்றே.

(எ-து.) இடபச்சுக்கிரன் மேடச்செவ்வாய் மீனவியாழன் கும்பச்சனி மகரச்சனி தனுவியாழன் மேடச்செவ்வாய் இடபச்சுக்கிரன் மிதுனபுதன் என்ற கூ காலும் அசுபதி கார்த்திகை ௩-ம் காலுக்கும், மிருகசிரிடம் திருவாதிரை உ-ம் காலுக்கும், தெசாதிபராம். பரமாயு அ௩—எ-று.



இதுவுமது.

திங்கட்கதிர்மால் புகர்சேய்குருச்சனி காரிசேவ
ளங்கட்பரியிற்கு மாரற்குமந்தப் பாதத்தினுக்குஞ்
செங்கைமுதற்காற்குந் தேரிஞலரங்காற்குஞ் சேர்ந்தவாண்டு
சங்கச்சரிவளையா யெண்பத்தாறென்பர் சான்றவரே.

(எ-து.) கர்க்கடகசந்திரன் சிங்காதித்தியன் கன்னிப்புத ன் துலாச்சுக்கிரன் விரிச்சிகச்செவ்வாய் தனுவியாழன் மக ரச்சனி கும்பச்சனி மீனவியாழன் என்ற-கூ-காலும் அசு பதி கார்த்திகை ச-ம் காலுக்கும் திருவாதிரை முதற்காலு க்கும் ரோகிணி ச ம் காலுக்குந் திசாதிபராம்; பரமாயு அசு.

இதுவுமது.

தேட்டுலைமால்குளிர் சிங்கந்தடிவிடைசேய் செழுமீ
ருட்டும்பரணி முதற்காலினுக்கு நரிப்புறத்தி
னூட்டுமுதற்காற்கு முற்றவராவ ருவந்தவாழ்நாள்
நீட்டிடினூறென்று செப்பிடுசெப் பேந்திளமுலையே.

(எ-து.) விரிச்சிகச்செவ்வாய் துலாச்சுக்கிரன் கன்னிப் புதன் சர்க்கடகசந்திரன் சிங்காதித்தியன் மிதுனபுதன் இ டபச்சுக்கிரன் மேடச்செவ்வாய் மீனவியாழன் என்ற கூ காலும் பரணிமுதற்காலுக்கும் மிருகசிரிட முதற்காலுக்கு ம் திசாதிபராம்; பரமாயு சOO —எ-று. (சo)

இதுவுமது.

குடங்கலைவிற்கொறி குண்டைதடிகுளிர் வெய்யவன்மா
றிடங்கொள்பரணிக் கிரண்டாயகாற்குஞ் செழுமருமேட்
ரிடம்படுமூன்றுய காலிற்குமெண்பத்தைந் தாண்டென்பரால்
வடம்படவிம்மி மதர்த்தெழுகொங்கை மதிநுதலே.

(எ-து.) கும்பச்சனி மகரச்சனி தனுவியாழன் மே டச்செவ்வாய் இடபச்சுக்கிரன் மிதுனபுதன் கர்க்கடகசந்தி ரன் சிங்காதித்தியன் கன்னிப்புதன் என்ற கூ காலும் பர ணி உ ம் காலுக்கும் உரோகிணி ௩ ம் காலுக்குந் திசாதிப ராம்; பரமாயு அரு—எ-று. (கக)

இதுவுமது.

துலைசேய்தனுச்சனி சுன்மீன்விரிச்சிகஞ் சுங்கன்புந்தி
[illegible]சேர்பரணியின் மூன்றுயகாலிற் கதிபதிக

வளிலைசேர்சகடத் திரண்டாயகாலிற்கு நேர்வாரண்டு
சிலைசேர்திருநுதலாய் செப்புமெண்பத்து மூன்றென்பரே.

(எ-து.) துலாச்சுக்கிரன் விரிச்சிகச்செவ்வாய் தனுவியாழன் மகரச்சனி கும்பச்சனி மீனவியாழன் விரிச்சிகச்செவ்வாய் துலாச்சுக்கிரன் கன்னிப்புதன் என்ற கூ காலும் பரணியின் ௩ ம் காலிற்கும் உரோகிணி உ ம் காலிற்கும் திசாபராம்; பரமாயு அங—எ-று. (கஉ)

## இதுவுமது.

குளிர்மதிசிங்கந் தடிவிடைகொச்சைமீன் கும்பஞ்சுருக்
கனிபெறுவில்லி தனைத்தும்பரணி கடைக்காலினுக்கு
மொளியுருடேரின் முதற்காலினுக் முறைப்பராண்டு
தெளிவுறுமெண்ப தொடாறென்றுரைசெய் திலைநுதலே.

(எ-து.) கர்க்கடகசந்திரன் சிங்காதித்தியன் மிதுனபுதன் இடபசுக்கிரன் மேடச்செவ்வாய் மீனவியாழன் கும்பச்சனி மகரச்சனி தனுவியாழன் என்ற கூ காலும் பரணி சம் காலுக்கும் உரோகிணிமுதற்காலுக்கும் திசாதிபராம்; பரமாயுஅசா—எ-று. (கங)

## வலநாளிடநாள் தத்து.

இவ்வண்ணமெண்ணும் வலநாட்கிதனை யெதிருறவே
யவ்வண்ணமெண்ணு மிடநாளுக்காயு வென்றாள்குசனு
மைவண்ணமேனியர் மன்னுந்திசைதீது மற்றையவர்
பைவண்ணவாளர வல்குனல்லாய்நன்மை பண்ணுவரே.

(ஏ-து.) வலநாளுக்கு முன்பு திசாதிபராகச்சொல்லிய ஒன்பதின்மரும் முறையே கொள்ளப்படும். இடநாளுக் கெதிரேறுகக் கொள்ளப்படும். இராசிகளடைவாலுங் கிழ்மேலாகவும் வருமிடத்தும் அடைவுகுறைந்துவருமிடத்துந் தத்தென்றறிக. ஆதித்தியனுஞ் செவ்வாயுஞ் சனியும் ராகுவுங் கேதுவு முண்ணுங்காலந் தீதென்றும் சந்திரன் புதன் வியாழன் சுக்கிர னுண்ணுங்காலஞ் சுபமென்று மறிக—எ-று. (கச)

## இதுவுமது.

உற்றதிசையினி லாண்டினைநாளாக்கி யொன்பதுகோள்
பெற்றதவ்வாண்டினுக் கீவைப்பெறுசுட ராற்பெருக்கி



மற்றவைமாதமு நாளுங்கடிகையு மாகவைத்துக்
கொற்றவனுதி யறிந்துதிசாபலங் கூறுவரே.

(எ-து.) ஆண்டொன்றுக்கு முன்னூற்றறுபது நாளாக வுற்ற திசாதிபனுண்டைப் பெருக்கி அந்தராசியினுடைய திசாதிபர் பரமாயுவுக் கீந்து பெற்றபலத்தையடைவே யுண்கின்ற தெசாதிபருடைய கதிர்களாற் பெருக்கி வரிசை யேறிட்டு நின்றது ஆண்டுந் திங்களும் நாளும் நாழிகையுமாம். திங்களாக்கு மிடத்திற் சென்மமாதத்திற் றினமாதி கழித்துக் கொள்ளப்படும். கொற்றவனுதி யென்பதனால் உற்றராசியிற் சென்மலக்கின நவாங்சகாதி திசாதிபராம். இப்படி வலநாளுக்குக் கொள்க. இடநாளுக்கு மாறி யெதிரேறுகக் கொள்ளப்படும்-எ-று.

## ஐவகைப்பலன்.

ஓதுந்திசையை யுடையவன் முன்னென்பதுமடைவூண்
பேதம்பெறுநட்பி னுச்சத்தினாட்சியிற் பேறுமிகுந்
தீதொன்றிடும் பகைநீசத்துநல்லகோ ளுக்கிரக
மேதம்பகைபெறி னிவ்வகையேயறி யேந்திழையே.

(எ-து:) உண்கின்ற கோளினுடைய ராசிக்கால் ஒன்பதாய்வந்த கோட்க ளூட்டுமிடத்து ஐந்துவிதமாக வூட்டப்படும். நட்பினு முச்சத்தினு மாட்சியினும் பாபக்கோளே யாயினும் சுபக்கோளேயாயினும் நன்மையைப்பண்ணுவர். பகைநீசத்தினும் இவர்கள் தீங்கு சத்துருபயம் தனச்சேதம் பண்ணுவர்—எ-று. (கரு)

## இதுவுமது

உச்சத்தினிற்பல நான்மடங்காமோது நட்பின்வந்தால்
மெச்சப்படுத்து மிரட்டியென்றேவேறு மாட்சியினி
னச்சப்படுமொன்று நற்கோள்பகைநீச நண்ணிற்றீங்கோ
டெச்சத்திளவரி பீடைதனச்சேதஞ் சாவிடரே.

(எ-து.) சுபக்கோளுச்சத்து நின்றபொழுது பலநான்மடங்காம். நட்பினின்றபொழு திரட்டியாம். ஆட்சினின்றபொழுது சொல்லு நன்மையேயாம். பகைநீசத்து நின்றபொழுது மனப்பீடை புத்திரநாசம் சத்துருபயம் தனச்சேதம் மரணம் வியாதி யிவற்றைப் பண்ணுவர்—()

இதுவுமது.

பகையிலிரட்டி தமக்குரைக்கும்பல னீசத்தினில்
வகைபெறுநான்மடங் காநட்பின்மாதனம் வாகனங்கண்
மிகவுடைத்துச் சத்துவேந்தருண் மிக்கபோகமுண்டாந்
தகைபெறுமாட்சியிற் றீக்கோடமக்கெனச் சாற்றினரே.

(எ-து.) பாபக்கிரகங்கள் பகையினின்றபோது தமக்குச்சொன்ன பலங்களை யிரட்டிக்கக் கொடுப்பர். நீசத்துநின்றபோது நான்மடங்காகக் கொடுப்பர். நட்பினின்றுலத்தலாபம் வாகன மிகவுமுண்டாம். உச்சத்துநின்றுவிராசப்பிரசாத முண்டாம். ஆட்சியினின்றால் தத்தமக்குச்சொன்ன வுத்தம பலங்களைக் கொடுப்பர்—எ-று. ()

திசாபலன்.

அருக்கன்றிசையி லருவினைதாப மரசர்பயம்
வருத்துதரநோ யிரத்தபித்தஞ்சந் திரதிசையிற்
கருப்பநற்பெண்பேறு கன்னியர்கூட்டங் கலன்கலிங்கந்
திருப்பொலிவின்பஞ் செயந்தனப்பேறு திருந்திழையே.

(எ-து.) ஆதித்தியன் திசையில் வியாதி தாபம் ராசபயம் உதரநோய் ரத்தபித்தரோகம் பயித்தியம் இவையுண்டாம். சந்திரன்திசையில் கெற்போற்பத்தி புத்திரியிலாபம விவாகம் வஸ்திராபரணம் அழகு தேகசவுக்கியம் விசயம் தனதானியசம்பத்து இவையுண்டாம்—எ-று. ()

இதுவுமது.

கொடுங்குசனூணிற் குருவெழல்வெப்புக் கொடுமைபித்த
மிடும்பைநிலைகே டறுத்தல்குடும்பிணி யென்பமேதைக்
கிடம்பெறுமில்லெழி லின்பம்புதல்வர்ப்பே றெண்ணறித
றிடம்பெறுகல்வி திருவோடுறைத றிடப்குயிலே.

(எ-து.) செவ்வாய்திசையில் வசூரி சுரம் பாபம் பித்தரோகம சத்துருபயம் விரோதம் தானசலனம் அறுத்தல் சூடு வியாதி இவையுண்டாம். புதன்றிசையில் நிலைபேறு கிரகப்பிரவேசம் அழகு தேகசவுக்கியம் புத்திரலாபம் கணிதமுதலிய வித்தியாப்பியாசம் இவையுண்டாம்—எ-று. (௨௰)



இதுவுமது.

பீதகனூணிற் பெரும்புகழ்பிள்ளை யணிவியன்போர்
மாதரைச்சேர்தல் வலிசயம்வண்மை வனப்புவெள்ளி
காதலர்ப்பேறு தனலாபநூல் கலைகற்றலணி
நீதியிற்பூண னிலம்பெறனிச்சய நேரிழையே.

(எ-து.) வியாழன்திசையில் சற்கீர்த்தி புத்திரலாபம் ஆபரணம்பூணல் தனலாபம் வித்தியாலாபம் யுத்தம் திரிசேர்வை விசயம் பிரபலம் தருமம் அழகு ஒழுக்கம், இவையுண்டாம்- சுக்கிரன்திசையில் விவாகம் புத்திரலாபம் அத்தலாபம் வித்தியாலாபம் ஆபரணம் வாகனம் பூமிப்பேறு இவையுண்டாம்—எ-று (௨௧)

கோம்பிவருந்திசை யிற்குற்றமீட்டல் குடிபறித்தல்
சோம்பியிருத்த றுயரிற்கிடத்தறன் சுற்றம்வீத
லாம்பரிசாமிவை நட்பாட்சியையவகை யாலறிக
தேம்பியிடைநுடங் கத்திரண்டோங்குஞ் செழுமுலையே.

(எ-து.) சனிதிசையில் பாபார்ச்சிதம் தேசம்விட்டுப்போதல் மடியாயிருத்தல் வியாதி தரித்திரம் வெந்துநாசம் இவையுண்டாம். இப்படிச் சொல்லிய பலாபலங்கள்நட்பாட்சியுச்சம்பகைநீசம் பார்த்துச்சொல்லப்படும்—எ-று. (௨௨)

கிரகபலிதம்.

ஆதியிற்சேய்கதி ரம்புலிசுன்னந்தத் தாசான்வெள்ளி
யோதுநடுவினி லொண்புந்திபாம்பெப் பொழுதுநன்மை
சேதந்தரும்பரி சிப்படிமாதிசை காலதிசை
கோதில்சீர்க்கோசரக் கோட்டிறமுங்குறிக் கொண்மயிலே.

(எ-து) மகாதிசை காலசக்கரதிசை கோசரம் இவையாதித்தியனுஞ் செவ்வாயு மாதியினும் சந்திரனுஞ் சனியுமந்தத்தினும் விருகற்பதியுஞ் சுக்கிரனு மத்தியத்தினும் புதன் ராகு கேது வெப்பொழுதும் பலாபலத்தைக் கொடுப்பர்.

காலசக்கரப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை ௨௯௪.

சோதிடனிலக்கணம்.

சத்தியஞ்சாந்தம் பொறைகொடைபூசை சகலவுயிர்
வைத்திடுமெய்யன்பு சேர்ந்தவனுகி மறைவிழியா
முத்தமவோரை கணிதமுகூர்த்த மொடுபிறநூல்
சுத்தமதாக வுணர்ந்தோனிலந்தனிற் சோதிடனே.

(எ-து.) உண்மையும் அமைதியும் பொறுமையும் ஈகையும தேவார்ச்சனையும் சகல ஆன்மாக்களிடத்தும் மெய்யன்பும் உடையவனாய் வேதநேத்திரமாகிய சாதகம் கணிதம் சங்கியையாகிய முகூர்த்தமும் மற்றும் ஆகமபுராணகாவியஞ் சுத்தமாக வறிந்தவனுமாகிய சற்சனன்; இந்தப்பூலோகத்துச் சோதிடன்—எ-று. (க)

இதுவுமது.

குலத்திலொழுக்கத்தின் மீதரும்வேதாங்கக் கோளினெண்ணு
மிலக்கணநூலும் விதிபெறுநூலு மியல்பிஞுதிக்
கலைத்துறைநீத்த குணன்விதியாமவர்க் குத்தனங்கள்
பலத்துடனல்கிப் பின்காரியங்கேட்கை பலனென்பரே.

(எ-து) நல்லகுலமும் ஆசாரமுடையவனும் மேன்மைபொருந்திய வேதங்களினுடைய அங்கமாகிய கணிதசாத்திரங் கற்று இலக்கணம் ஆகமம் கலைஞானமுதலிய நூல்களைக் கரைகண்டவனைப் பிரம்மதேவனென்று சொல்லுவார்கள். அவனுக்குத் திரவியத்தைப் பிரயோசனத்துடனே கொடுத்தபின்பு தனது இட்டகாரியத்தைக் கேட்பது லாபமென்பார்கள்—எ-று. (உ)

மணப்பொருத்தம்.

நாட்கணமாகேந்திர நற்றிரிதீர்க்கம் யோனியோரை
கோட்குறவேவசி யங்கூறலான கயிறிரண்டும்
வாட்படுசெங்கண் வகிர்படுபூநுதல் மாமதன
னட்படுகொங்கை மயிலேயறைந்தனர் நல்லவரே.

(எ-து.) மனுடருக்குச் சகலசாத்திரங்களினு மெடுத்துப் பிரதானமாகச் சொல்லப்பட்டது விவாகம். ஆதலால் இதற் கங்கமான தினமுதலியதசப் பொருத்தத்தினை முற்படச் சொல்லுவன்—எ-று. (ங)





இதுவுமது.

மன்னுந்தினங்கண மாகேந்திரமங்கை தீர்க்கம்யோனி
யுன்னுமிராசி யிராசிக்கதிபதி யோர்வசியங்
துன்னுங்கயிறுடன் வேதமெனும்பத்துஞ் சொல்லுமென்பர்
பன்னுங்கலைபல வல்லோர்பொருத்தங்கள் பார்ப்பவர்க்கே.

(எ-து) தினம் கணம் மாகேந்திரம் திரிதீர்க்கம் யோனி இராசி இராசிக்கதிபதி வசியம் இரச்சு வேதம் என்ற ௰ பொருத்தமும் அடைவே விளங்கச்சொல்லுவன்—எ-று. (ச)

தினம்.

ஆன்றதினமூன்று கண்டத்திரண்டுநான் காறெட்டொன்பா [றிற்
னேன்றநாட்கொண்டாங் கிரண்டொன்பதிலெட் டொழித்துமூன்
றோன்றிடுநாளுட னென்பதொழித்துடன் சொல்லுறுநா
ளான்றபெண்ணாண் முதலாடவனுள்வரை யாவமைத்தே.

(எ-து) நட்சத்திரம் இருபத்தேழையும் ௩ கண்டமாகக் கொண்டு, இதின்முதற் கண்டம் இரண்டாங்கண்டம் மூன்று நாளிங்கண்ட மென்றறிந்து, பெண்ணாள் முதலாகப்பிள்ளை நாளுறுகவெண்ணுவது. எண்ணும்படிமுதல் கூல் உம் சம் சும் அம் அம் கூம் என்னப்பட்டநாளுத்தமம். இரண்டாம் கூல் அம் அம் கூம் நாளொழித்து மற்றையநாட் கொள்ளலாம். மூன்றும் கூல் சம் கூம் நாளொழித்து மற்றைநாட்கொள்ளலாம்—எறு. ()

இதுவுமது.

ஏழைந்துடன்மூன்றுடன் சென்மங்களெட்டாய வோரையிற்குத்
தாழுந்தினங்கள் சனனமுன்னட்டக்க வைநாசிகஞ்
சூழ்கின்றபன்னிரண் டிரேழ்கூபமல முன்னஞ்சொல்லி
யாழ்கின்றகானீத்தன் மத்திமமுத்தம மல்லவையே.

(எ-து.) விசேடித்துப் பெண்ணினுள்முதற் பிள்ளைநாளவரையெண்ணினால் முதல் கூல் எம் ரும் ௩ம் நாட்களும், சென்மத்திரயங்களும், சந்திராட்டமமான விராசிக்கடைத்த கஉம்நாளும் உவ நாளும் உஎ-ம்நாளும், உம் கூல் ௩ம்நாளான கஉம்நாளும் உவ நாளும் உஎம் நாளும், அஅம் கால் கிடந்த வைநாசிகரும் நாளான கசம் நாளும், அஅம் கால் கிடந்த வைநாசிக ரும் நாளான கசம் நாளும், இரண்டாம் கூல், ௩ம் ரும் எம் நாட்கள் நாளுந்தவிரப்படும். இரண்டாம் கூல், ௩ம் ரும் எம் நாட்கள் முன்பு குணகுணத்திற்சொன்னபடியே தோஷாங்சகங் கழி

த்துக்கொள்ளுதன் மத்திமம். இவையொழிந்த நாட்களெல்லாமுத்தமம்—எ-று. (௬)

கணம்.

அத்தமகயிரஞ் சோதியரிபரி தாலங்கல
மொத்திருபூசமுந் தெய்வகண்மா முருளடுப்பு
முத்திரமூன்றுட னாதிரைபூரமூன் றுண்ணுதலா
யித்திறமானிடர்க் கல்லாதிராக்கதர்க் கேந்திழையே.

(எ-து.) அத்தம் மிருகசீரிடம் சோதி திருவோணம் அசுவனி அனுடம் இரேவதி புனர்பூசம் பூசம் இவை கூம் தெய்வகணம். ரோகிணி பரணி உத்திரத்திரயம் திருவாதிரை பூரத்திரயம் இவை கூம் மனுடகணம். ஒழிந்த கார்த்திகை ஆயிலியம் மகம் சித்திரை விசாகம் கேட்டை மூலம் அவிட்டம் சதயம் இவை கூம் இராட்சதகணம்—எ-று (௭)

இதுவுமது.

ஒன்றனதேற்கண முத்தமமத்திமந் தேவர்மக்கள்
பின்றுதம மிராக்கதர்தேவர் பிறைநுதலாய்
வன்றளரக்கரு மானிடருய்வரு மேன்மரண
மென்றார்கணிதங்க ளெல்லாமுணர்ந்த வியல்பினரே.

(எ-து.) கணப்பொருத்தஞ் சொல்லுமிடத்து பெண்ணினாளும் பிள்ளைநாளுமொருகணமாகி லுத்தமம். பெண்ணினாட் தெய்வகணமும் பிள்ளைநாள் மனுஷ கணமுமாகின்மத்திமம். இது மாறியிற்கி லுத்தமம். பெண்ணாளிராட்சதகணமும் பிள்ளைநாட் தெய்வகணமுமாகில் தீது. இது மாறியிற்கில் அதமம். பெண்ணாளிராட்சதகணமும் பிள்ளைநாள் மனுஷகணமுமாகினும் இது மாறியிற்கினும் பொல்லாதுமரணம்—எ-று. (௮)

மாகேந்திரமுந் திரிதீர்க்கமும்.

நான்கேழுபத்துப் பதின்மூன்றுநாளன்கு பத்தொன்பது
தான்கேளிருபத் திரண்டிருபத்தஞ்சு தானுறுமேல்
வான்றிகழ்மாகேந் திரம்பெண்ணினாண்முதன் மைந்தனன்னா
ளேன்றபன்மூன்றுக்கு மேற்றிரிதீர்க்க மிசையுறுதும.

(எ-து.) பெண்ணினாள்முதற் பிள்ளைநாள் வரையாக வெண்ணினால் ௪, ௭, ௧௦, ௧௩, ௧௬, ௧௯, ௨௨, ௨௫ இவற்றளவாயிருந்தால் மாகேந்திரப்பொருத்தமுண்டாம். இது பெண்ணினாள்முதலாக உத்தமம் மத்திமம் அதமம் என்றெண்ணவும்பெறும். பெண்ணினாண்முதற் பிள்ளைநாள் ௧௩-க்கு மேற்படில் திரிதீர்க்கப்பொருத்தமுண்டாம். இது ௯-க்கு மேற்படின் மத்திமம்—எ-று. (௯)



யோனி.

பரிகரியாடர வம்பெண்பணிநாய்பூ னைதகராண்
வெருகெலியாகு விடைமேதிவன்புலி போத்துப்புலி
கருவளர்மான்கலை நாய்கவியாமந்தி காரிகைமா
பெருமகனுகயம் பேசினர்யோனி பரிமுதலே.

(எ-து.) யோனிப்பொருத்தங் கூறுமிடத்து அசுவனிகுதிரை, பரணியானை, கார்த்திகைஆடு, உரோகிணி பாம்பு, மிருகசீரிடம் பெண்பாம்பு, திருவாதிரை நாய், புனர்பூசம்பூனை, பூசங்கடா, ஆயிலியம் ஆண்பூனை, மகம் எலி, பூரம் பெருச்சாளி, உத்திரம் எருது, அத்தம் எருமை, சித்திரைஆண்புலி, சோதி கடா, விசாகம் புலி, அனுஷம் மான், கேட்டை கலைமான், மூலம் ஆணாய், பூராடங்குரங்கு, உத்திராடம் மலட்டுப்பசு, திருவோணம் மந்தி, † அவிட்டம் பெண், சதயம் பெண்குதிரை, * பூரட்டாதிபுருஷன், உத்திரட்டாதி பசு, இரேவதி பிடியன்—எ-று. (௧௦)

இதுவுமது.

மானும்மறிபரி நாய்மக்கள்பூனை மதகரியே
தானுகினன்றெலி நாயராப்பூனை புலிசத்துருக்
கானாரவ மெலிபூனைநாய்கரு தும்பகையாங்
தேனார்மொழியாய் குரங்கெவற்றிற்குஞ் சிறந்தநட்பே.

(எ-து.) மான் பசு ஆடு குதிரை நாய் மனுஷர் பூனை யானை இவை அன்னியயோனிநன்றாம். எலி நாய் பாம்பு பூனை புலி இவை அன்னியயோனி சத்துருவாம். பாம்பு எலி பூனை நாய் இவைதன்னிலநாதிவிரோதிகளாம். சகலயோனிகட்கும் குரங்குநட்பாம்—எ-று. (௧௧)

---

†அவிட்டத்தைப் பெண்சிங்கமென்று சொல்வாருமுளர்.
*பூரட்டாதியை யாண்சிங்கமென்று சொல்வாருமுளர்.

### இதுவுமது

தன்னினமாயிடில் யோனிநன்றுமோரை தானுமொன்றே
நன்னெறியாம்பெண் முதலாடவனோரை நண்ணவெண்ணி
லொன்னலராயிடு மாறுக்குமேற்படி யுத்தமமா
மின்னிடையாய்கே ளிரண்டஞ்சுமாறு மிகப்பிழையே.

(எ-து.) யோனி யோரினமாகில் திரிபுமான்கள் தயவா யிருப்பர். ஆகையால் யோனிப்பொருத்தம் மேலிராசிப்பொருத்தங் கூறுமிடத்துப பெண்ணிராசி முதலாகப் புருடனிராசி யீறுகவெண்ணினால் ௬ ராசிக்கு மேற்படிற்பொருந்தும். கீழ்ப்படிற்பொருந்தாது. இவற்றின் உம் இயிராசி ௫ம் இராசி ௬ம்இராசியாகின் மிகவும் பொருந்தாது. திரிபுமான்களிராசி யொன்றாகிற்பொருந்தும்—எ-று. (௧௨)

### இராசியதிபதி.

அந்தணன்வெய்யவற் காசான்புதன்மதிக் காங்குசற்குப்
புந்தியும்வெள்ளியு நட்புப்புதர்க்குக் கதிர்பகைசேய்
மந்திரிக்குப்பகை வெள்ளிக்கிரவி மதிபகையரஞ்
சந்திரசூரியர் சேய்சனிக்குப்பகை தாழ்குழலே.

(எ-து.) ஆதித்தியனுக்கு வியாழன் சந்திரனுக்கு வியாழனும் புதனும் செவ்வாய்க்குப் புதனுஞ் சுக்கிரனும் இவை நட்பு. அன்னியர் சத்துரு. புதனுக்கு ஆதித்தியன் வியாழனுக்குச் செவ்வாய் சுக்கிரனுக்குச் சந்திராதித்தர் சனிக்குச்சந்திராதித்தர் செவ்வாய் இவை சத்துரு. அன்னியர்மித்துரு. திரிபுமான்களுடைய ராசிக்கதிபதி மித்துருவாகிற் பொருந்தும் சத்துருவாகிற் பொருந்தாது—எ-று.

### வசியம்.

மறிக்கரிதேண்மால் விடைக்குத்துலாநண்டு வான்றடிக்கு
வெறிக்குங்குழன்மக ணண்டிற்குவிற்றேள் விறலரிக்குச்
செறிக்குந்துலைதெரி வைக்குமிதுனங் கயறுலைக்குக்
குறிக்குங்கலைதே டனக்குக்ளிர்கன்னி வைசியமே.

(எ-து.) மேடத்துக்குச் சிங்கம் விரிச்சிகம இடபத்துக்குத் துலாக்கர்கடகம் மிதுனத்துக்குக்கன்னி கர்க்கடகத்துக்குத் தனுவிரிச்சிகம் சிங்கத்துக்குத் துலாம் கன்னிக்கு மிது



னமீனம் துலாத்துக்கு மகரம் விரிச்சிகத்துக்குக் கர்க்கடகங்கன்னி இவை வசியமாம்—எ-று. (௧௪)

### இதுவுமது.

விற்கெழின்மீனங் கலைக்காடுகும்பங் குடந்தனக்குப்
பொற்புறுமேழக மீனத்தினுக்குப் பொருமகரஞ்
சொற்படுவைசிய மாமாறிதிற்பிற் றுடியிடையாய்
*நற்பருநூல்க ணயந்துரைசெய்தன நானிலத்தே.

(எ-து.) தனுவுக்குமீனம் மகரத்துக்குமேடங் கும்பம் வசியமாம் கும்பத்துக்குமேடம் மீனத்துக்கு மகரம். இவை வசியமாம் இப்படிப்பார்த்துத்திரியுடையராசிக்கு வசியமான ராசி புருடராசியாகி லுத்தமம். புருடனுடையராசிக்கு வசியமானராசி திரியிராசியாகின் மத்திமம் இருவருடையராசிக்கும் வாராதிருந்தால் வசியமில்லை—எ-று. (௧௫)

### இரச்சு.

வட்டங்களுன்கிடை விட்டங்கண்மூன்று றுறலகுத்தாங்
கிட்டெண்ணிரலை புறமானவாழி யிதனில்வைத்து
மட்டுண்குழலிக்கு மைந்தற்குமாயநா ளோர்வட்டத்துக்
கிட்டினமங்கலி கிட்டர்விடினல்ல மங்கலியே.

(எ-து.) ஒருவட்டத்தையிட்டு இதன் புறம்பாக மூன்று வட்டத்தையிட்டு இதிலேதன்னிலொக்கக்கதிர்போல மூன்று விட்டத்தையிடின் அது இரச்சுச்சக்கரமாம். இதின்புறம்பில் வட்டத்திலொரு விட்டத்தின் றலைதொடங்கி அஸ்வனி முதலாகவுள்ளேபுக ௫ நாளெண்ணிய, பின்பு பிரதக்கினமாகத் திருவாதிரைமுதல் ௪ நாட்புறப்படவெண்ணிப், பின்பு மகமுதல் ௫ நாளுள்ளே புகவெண்ணிப், பின்பு, சோதிமுதல் ௪ நாட்புறப்படவெண்ணிய, பின்பு மூலமுதல் ௫ நாளுள்ளேபுகவெண்ணிப், பின்பு சதயமுதல் ௪ நாட்புறப்படவெண்ணி, இப்படி உள நாளுமெண்ணி நின்றவுச்சமத்தியத்திலே மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் கூடக்கிடக்கவெண்ணுவது. அஃது சிரோரச்சு. உரோதாவது, மிருகசீரிடம் சித்திரை அவிட்டம்சிரோரச்சு. உரோகிணி திருவாதிரை அத்தம் சோதி திருவோணம் சதயம்

* நற்பு எ-து மத்திமம்.

இவ்வாறு நாளுங்கண்டாரச்சு. கார்த்திகை புநர்பூசம் உத்திரம் விசாகம் உத்திரட்டாதி பூரட்டாதி இவ்வாறு நாளுமுதராச்சு. *பரணி பூசம் பூரம் அனுடம் பூராடம் உத்திரட்டாதி இவ்வாறு நாளும் யோனிரச்சு. அசுவநி ஆயிலியம் மகம் கேட்டை மூலம் இரேவதி இவ்வாறு நாளும் பாதரச்சு. இப்படி நாலுவட்டமும் நடுவுந் தலை கழுத்து வயிறு யோனி காலெனப்படும்; இவையிலே வட்டத்தி லொருவிட்டத்திலே திரிபுமான்கள்நாட்கிடக்கில் ரச்சுப்பொருந்தாது. பின்னமாகிற் பொருந்தும்.

## வேதக்கயிறு.

வேதக்கயிற்றின் விதியுமிவ்வாழியின் மேல்விளங்கப்
பேதித்தவிட்டத் தலைக்கேயிருவர்தந் நாளும்பெறில்
வாதைப்படுத்து மிரண்டுகயிறும் வலம்பற்றியே
சோதித்துள்ளேந்தும் புறத்தொருநான்குமாய்ச் சூழென்னுமே

(எ-து.) இப்போது சொல்லப்பட்ட சக்கரவட்டத் துற்றவிட்டத்தலையிலே அசுவனியைவைத்து ரச்சுவுக்கெண்ணினதுபோல் பிரதக்கிணமாக வுள்ளேபுக று நாளும் புறப்பட சு நாளுமாக எண்ணுவது. இப்படி யெண்ணிவந்தால் ஒருவிட்டத்தலையிலே யிருவர்நாளு மெதிர்த்துவரின் வேதக்கயிறு பொருந்தாது. அவைவருமாறு அசுவனியும் கேட்டையும், பரணியும் அனுஷமும், கார்த்திகையும்விசாகமும, உரோகிணியும் சோதியும், மகமும் இரேவதியும், பூரமும் உத்திரட்டாதியும் உத்திரமும் பூரட்டாதியும், அத்தமும் சதயமும், மூலமும் ஆயலியமும், பூராடமும் பூசமும், உத்திராடமும் புநர்பூசமும், திருவோணமும் திருவாதிரையும், மிருகசிரிஷமும் சித்திரையும் அவிட்டமும், இவை ஒன்றினுக்கொன்று வேதநாட்பொருந்தாது—எ-று. (கஎ)

## இதுவுமது.

ஏகநாளுத்தம மென்பவிராசிப் பொருத்தமுண்டே
ளுகம்புட்சோதி பதங்கேட்டைவிற்சுண்ண நற்பரணி
யேகநாளெப்பரி சாயினுமாகா விரண்டோரைக்குப்
பாகம்படுநாட்க ளாகாதெனநூல்கள் பன்னினவே.

* பரணி பூசம் பூரம் அனுடம் பூராடம் உத்திரட்டாதி இவ்வாறையும் ஊருரச்சு என்பாருமுளர்.



(எ-து) திரிபுமான்கள் நாளொன்றாய் ராசி கூறுபட்ட நாளானால் முதற்கூறு புமானும் பிற்கூறு பெண்ணுமாகின் மிகவுத்தமம். இது மாறிநிற்கிற் பொருந்தாது. ஆயிலியம் அவிட்டம சோதி பூரட்டாதி கேட்டை மூலம் சதயம் பரணி இந்நாட்க ளெப்பரி சாயினு மாகாது. அன்றியே உ. ராசிகூறுபட்டநாட்க ளாகாதென்றும் முழுநாளெல்லா மிகவுநல்லதென்றுஞ் சிலநூல்கள் கூறும—எ-று. (கஅ)

பொருந்ாதயோனி யரக்கர்கணம்பெண்பொல் லாதவராய்
வருந்தாவிலோரை யுறின்மரபேநட்பு மாட்சியுமா
யிருந்தாலதிபதி யேநன்றிரச் சுக்குணமியோனி
செருந்தார்குழலாய் தினமோரைவசியஞ் சேரினன்றே.

(எ-து) பகையான யோனி திரி யிராட்சதகணம். இராசி ௬, ௮, ௭, ௮, ௨, ௧௨, ௬, ௧௧, ௪, ௧௦ இவை மிகவும்பொருந்தாது. இவைவந்தபொழுது சந்திரன் நவாஞ்சகாதிபதி யுறவாதல் இராசியதிபதி யேகாதிபத்தியமாதல் உறவாதலுண்டாயிருக்கில் இந்தத்தோஷங்கட் கபவாதமுண்டாம். சொன்ன தசப்பொருத்தத்து இரச்சுவும் கணமும் யோனியும் தினமும் இராசியும் வசியமும் பிரதானம்*—எ-று. (ககூ)

## இதுவுமது.

பத்துப்பொருத்தத்து ளாறுத்தமமாகப் பண்புடைய
சுத்தசகுனநன் றுயிருவோருந் துணிவுரைப்ப
முத்தொத்தவாணகை யாய்கோட்கணன்ம முறையினிற்ப
வொத்தபருவத் துவந்துமணஞ்செய்கை யுத்தமமே.

(எ-து) சொன்ன தசப்பொருத்தத்துப் பிரதானமாக வெடுத்தபொருத்த மாறுக்குமேற்பட நல்லநிமித்தங்களுமுண்டாயிருக்கத் திரிபுமான்களிருவரும் (வெந்துக்களும்) மனம்பொருந்த ஆதித்தியன்முதலிய கிரகங்க ளுபயகோடிக்கு முபயோகமாகப் பெண்ணுக்கிரட்டித்த வயதும பிள்ளைக்கொற்றித் தவயதுமாகப் பாணிக்கிரகணம் பண்ணுவது. ()

* சிலர் தினமுங் கணமும் யோனியும் அதிபதியும் இரச்சவும் பிரதான மென்பாருமுளர்.

## அங்குரவிதி.

கெற்பமுதலா வினையாறினுக்குங் களைந்தொழித்துப்
பொற்பங்குரவினை யாவினுக்கும்புகன் றார்கள்நூலோர்
சொற்பங்கிரவு சுபமெனச்சௌளகத் திற்குப்பக
லிற்பந்தமென்பர் முளைவார்த்தலம்பெர னிறைவளையே.

(எ-து) கெற்பாதானம் புங்ஸவனம் சிமந்தம் விட்டுணு பெலி சூதிகாக்கிரகம் சாதகன்மம் இவ்வாறுக்கும் அங்குரார்ப்பணந்தவிரப்படும். ஏனைய மங்கல காரியங்களுக்கெல்லாம் அங்குரார்ப்பணங் கொள்ளுமிடத்து இராக்கொள்ளப்படும். சவுளகன்மத்துக்குப் பகலில் நிச்சயமாகக் கொள்ளப்படும்.()

### இதுவுமது.

என்றனதேவருக் கொண்பதுமேழு மியல்வருணைத்
தான்றவர்தங்களுக் கைந்தினுமூன் றினு மொன்றினுமென்
றோன்றுமிருபிறை நீத்துச்சுடரெட்டு நோக்கம்பெறிற்
சான்றவரங்குர மல்லும்பகலுஞ் சயமென்பரே.

(எ-து) தேவோற்சவத்துக்கு முன்னே ௯, ௭ நாளென்னு வங்குரார்ப்பணம்பண்ணப்படும். விவாகத்துக்குமுன்னே ௫, ௩ நாளென்னக்கொள்ளப்படும். அன்றித் தற்காலத்துங் கொள்ளப்படும். இந்த இரண்டு உற்சவத்துக்கும் இந்நாட்களுக்குள்ளே அமாவாஸ்யைவரில் நாட்குறைத்துக்கொள்ளுதல் சத்தியாங்குரமாகக்கொள்வது. சுபக்கிரகோதயமாதல் பார்வையாதலுண்டாகிற் பகலிலே கொள்ளப்படும். இராக்கொள்ளுதலே பிரதானம். ஏழுமியல்வருணைத் தான்றவரென்கையால் பிராமணருக்கு ௭ நாளும் க்ஷத்திரியருக்கு ௫ நாளும் வைசியருக்கு ௩ நாளும் சூத்திரருக்குத் தற்காலத்திலுமங்குரார்ப்பணஞ்செய்யப்படும்—எ-று. (௨௨)

### வாயசபெலிபஞ்சமிருத்திகைகெவுளி.

நாட்டினர்நன்று மணவணிக்குச்சொன்ன நாளோரையி
னீட்டியமுன்பொழு தாவெழில்வாயசம் பஞ்சகமண்
கோட்டியிற்பார்த்த விரவினுமாகுங் குறிபல்லிநெய்
தீட்டியவேல்விழியா ரந்திமாலை சிறப்புறவே.



(எ-து) விவாகத்துக்குச் சொன்னதிதிவார நாளிராசிகளிலே விடியற்காலம் பூருவாணத்திலேவாயசபெலியும் பஞ்சமிருத்திகையும் பரிசிக்கப்படும். பஞ்சமிருத்திகை பரிசிக்கை சிரகத்திலே யிரவினுமாகும். கெவுளி பார்க்குமிடத்துச் சந்தியாகாலத்திலே பார்க்கப்படும்—எ-று. (௨௩)

### விவாகமாதம்.

மாசிபுரட்டாசி மார்கழியாடி மணவணிக்குப்
பேசினர்தீதெனப் பீதனெறெட்டு மூன்றுபத்து
மேசுறுசென்மத்து நாலினுமீரா றினுநிசையி
னுசமுடைத்தென்பர் நல்லுயிர்மெய்யிற்கு நன்னுதலே.

(எ-து.) மாசி புட்டாசி மார்கழி ஆடி இம்மாதங்களில் விவாகம்பண்ணலாகாது. அல்லாதமாதம் எட்டினுங் கொள்ளலாம். பெண்ணினுடைய சந்திரலக்கினத்துக்குஞ் சென்மலக்கினத்துக்கும் வியாழன் ௪ம் இடம் ௮ம் இடம் ௩ம்இடம் ௧௦ம் இடம் சென்மம் ௪ம் இடம் ௧௨ம் இடம் இவற்றிலே நின்றால் விவாகம்பண்ணலாகாது. பண்ணினால் விதவையாம்*—எ-று. (௨௪)

### இதுவுமது.

ஆவணியைப்பசி மத்திமமல்லா தவையனைத்து
நாவணிவல்லவர் நன்றெனவோதினர் முன்புசொன்ன
பாவணிபஞ்சாங் கமுநல்லவாகப் பரிந்தெடுத்துப்
பூவணிபூங்குழலார் பாணிபற்றப் புகன்றனரே.

(எ-து.) விவாகத்துக்கு ஆவணியும் ஐப்பசியும் மத்திமம். ஏனையமாதங்களுத்தமம். வியாழனனுகூலமான வாண்டில் உத்தமமாதங்களிற் பஞ்சாங்கயோகநன்றாகப் பாணிக்கிரகணத்துக்குச்சொன்ன தோஷங்களெல்லாம பார்த்து நன்மையுண்டாக விவாகம்பண்ணுவது—எ-று. (௨௫)

### இதுவுமது.

மூலமகமத்த முத்திரமூன்று முடிவுருடேர்
சாலம்விளக்கு மதிகன்றுதண்மேலிற் பின்னையுங்

---

* பிள்ளையுடைய உபயலக்கினத்துக்கும் வியாழனனுகூலமான வருஷத்திலே விவாகம்பண்ணலாமென்பாருமுளர்சிலர்.

கோல்கன்னிநன்றாங் குடங்குளிர்மீன்கலை சேவரியுஞ்
சீலமுடைத்தே ழிடஞ்சுத்திகொள்சீர் மணவணிக்கே.

(எ-து.) மூலம் மகம் அத்தம் உத்திரத்திரையம் இரேவதி உரோகிணி அனுஷம் சோதி மிருகசிரிடம் இந்நாட்களில் மிதுனம் தனுவிற்பிற்கூறு துலா கன்னி இந்தவிலக்கினங்களுதயமாக விவாகம்பண்ண வுத்தமம், கும்பம் கர்க்கடகம் மீனம் மகரம் இடபம் சிங்கம் இவை சுபக்கிரகத்துடனே யுதிக்கின் மிகவுநன்றாம். எ-ம் இடனு சுத்தமாக விவாகம்பண்ணப்படும்—எ-று. (உகூ)

இதுவுமது.

ஐயவுயிர்க்கைந்து நான்கிரண்டொன்பதெட் டேழ்பத்தந்தஞ்
செய்யவரவஞ் சனிகதிர்சேய்தீயர் சேரிவற்றில்
வையஞ்செறிகதிர் பத்துமதிநான் கிரண்டொன்பதைந்
துய்யவொருபது நன்றென்மணவணிக் கொண்ணுதலே,

(எ-து) விவாகத்துக்குச்சொல்லிய இலக்கினத்துக்கு ச, ரு, உ, கூ, அ, எ, கO, கஉ, இந்த இடங்களில் இராகு கேது சனி ஆதித்தியன் செவ்வாய் முதலியோர்நிற்கிற் பொல்லார். இவ்விடங்களில் ஆதித்தியன் கOம் இடநிற்கிலாம். சந்திரன் ச, உ, கூ, ரு, கO, இவ்விடஙகளில் நிற்கினல்லன். அல்லாவிடங்களிற் பொல்லான்—எ-று, (உஎ)

இதுவுமது.

எட்டொடாறேழினிற் றீயன்புகர்புந்தி யேழொடெட்டு
மொட்டியபன்னிரண் டுந்தீயனும்பர்கோ னாறுமேழுஞ்
சுட்டியபன்னிரண் டும்மெட்டுமாகான் சுபருதய
நட்டுறுமேன்முக மானவிவ்வோரையு நன்றென்பரே,

(எ-து.) சுக்கிரன் அ, சு, எ, இந்த விடங்களி லாகான், புதன் எ, அ, கஉ, இந்தவிடங்களிலாகான். வியாழன் சு, எ, கஉ, அ, இந்தவிடங்களினிற்கிலாகான். சுபக்கோளுதயமாகின் மிகவுநன்றாம். முன்பு ஆகாதென்ற யேடம் விரிச்சிகம் ஒருசுபக்கோளுடனுதிட்பினு மேமேக்கினராசியாயுதிப்பினு நன்றாம்—எ-று, (உஅ)



113
165404
600 008

இதுவுமது.

மதியுதயத்தினிற் சேயஞ்சிறப்பத்தின்மால் பன்னிரண்டிற்
கதிரவனுலைந்திற் காரியுநான்கிற் கழற்புகர்பா[illegible]
பெதிருறுமெட்டினி லெக்கோளுமேழிலீ ரா றின்[illegible]பான்
டதியுறினன்றல்ல மங்கையர்செங்கையைப் பற்றிடவே.

(எ-து.) முன்பு ஆதித்தியன்முதலான கோட்களுக்குச் சொன்னதோஷமான விடங்களிலே விசேஷித்துத் தவிரப்படுமிடங்கள், அபரபக்கத்துச் சந்திரனுதயம் செவ்வாய் ரு, கO, புதன் கஉ, ஆதித்தியன் ச, ரு, சனி ச, சுக்கிரன் இராகு அ, வியாழன் கஉ; இந்தவிடஙகளி லிவர்களநிற்கில் மிகவுமாகார். சுபக்கோளும் பாபக்கோளும் எம் இடத்தினிற்கிலாகார்—எ-று. (உகூ)

போல்லாவிடங்களினிற்குங் கிரகதோஷாபவாதம்.

விலைமகள்சுங்கன் வியாழந்துறமகள் வெய்யவனேன்
மலமுறுகைம்பெண் குசன்றுட்டைநீலன் மலடிமிடி
தலைமகடிங்க டிருவிலிமால்சாவு நோயரவ
நிலையுறுவான்சிகி நின்றநிலைக்கு வியாதிகளே.

(எ-து.) விசேஷித்துப் பொல்லாதென்ற விடங்களினின்ற கிரகங்களால்வருந் தீமையாவது, சுக்கிரனிற்கிற் பரத்தையாம், வியாழனிற்கிற் றுறவியாம், ஆதித்தியனிற்கில் விதவையாம், செவ்வாய்நிற்கில் விஷமிலியாம், சனிநிற்கின் மலடியாம், சந்திரனிற்கிற் றரித்திரியாம், புதனிற்கிற் றிருவிலியாம், இராகுநிற்கில் மரித்தல்வியாதியாம், கேதுநிற்கிற்றீராவியாதியாம். நிலையுறுமென்றதனால் இந்தத் தோஷங்களுக்குச் சுபக்கோள்பெலவானாய் நன்றானவிடங்களிலே நிற்றல் நோக்குத லுதித்தல்செய்யில் தோஷாபவாதமுண்டாமெனக் கொள்ளுக—எ-று. (கூO)

இதுவுமது.

சந்திரனெட்டியெட் டாறுமீராறுந் தவிரப்படு
மந்திரியாறெட்டி னன்றாம்வளர்மதி யெட்சிவந்தாற்
சுந்தரமாமவன் பத்தாயநாளுஞ் சுபங்கொடியோர்
முந்தெழுகால மணவணிக்குத்தீது மொய்குழலே.

O-, 19 4 M N S Z V

(எ-து.) அபரபக்கத்துச் சந்திரனுதயம் அ-௬-௧௨ இவ்விடங்கள் சுத்தமாகத் தவிரப்படும். வியாழன் ௬,அ இவ்விடங்களி னின்றாலுத்தமமாம். பூரணசந்திரோதய மிகநன்றாம். பிள்ளையுடைய பத்தாநாள் விவாகம்பண்ண லாம் ஒழிந்தசென்மமும் இருபதாநாளுமாகாது. பாபக்கிரகோதயந் தவிரப்படும்—எ-று. (௩௧)

இதுவுமது.

கன்னிதன்சென்மங்கண் மூன்றுங்கடிமணத் திற்குநன்றாம்
பொன்னவன்புந்தி புகரொழிற்போகம் பொலிவுடைத்தா
மன்னியகேதுவும் வாளரவும் மெழின்மாதுமன்னு
மின்னுயிர்சேர விடுவரொன்றேதின ரிங்கிலத்தே.

(எ-து.) பெண்ணினுடைய சென்மத்திரயங்கள் பாணிக்கிரகணத்துக்கு மிகவுநன்று. சுபக்கோளுதயமாகின் மிக்கபோகங்களையுடையளாம். இராகு கேதுக்களுதயமாகின் இருவருக்குமரணமாம்—எ-று. (௩௨)

விவாகத்துக்காகாதநாள்.

கண்டகந்தூணஞ் சகடஞ்சமவிழி கம்பம்வேதந்
தண்டபஞ்சார்க்கஞ் சடசிதிதிங்களிற் சூனியங்கள்
விண்டருமாசிவிட மதிகத்திங்கள் வெள்ளிகுரு
வொண்டிறற்பாடு கடிமணஞ்செய்ய வொழிந்தனவே.

(எ-து.) கண்டகம் தூணம் கண்டகத்தூணம் சகடம் சமதிருட்டி விட்கம்பம் கிரகவேதை பஞ்சார்க்கம் சட்சிதி மாதசூனியம் நாளிலக்கினம் ஆசிவிடம் அதிகமாதம் குருசுக்கிராத்தமயம் இவைவிவாகத்துச்குத் தவிரப்படும்—எ-று. (௩௩)

நாலாநீர்.

நன்மணஞ்செய்துற்ற நாளுக்குநாலினி லஞ்சிலேழிற்
பொன்புகர்மால் குணமுண்டாயபோதிற் பொன்னுடையொன்றை
யன்புடையாளொ டுடுத்தணிநீர்டி யாரணநூல்
சொன்முறையன்பிற் றுணைமுலைபுல்கிடச் சொல்லினரே.

(எ-து.) விவாகதினத்துக்கு ௪, ௫, ௭, இந்நாட்களிலே அனுகூலம்பெற்ற சுபதினத்திலே தன்மனையாளுட



னே ஏகவஸ்திரமுடுத்து முழுகியலங்காரஞ் செய்து சுபக்கோளுடைய பெலநோக்குண்டாய லக்கினத்திலே இருதுவானதிரீயாகின் விதிப்படிதிரீசங்கமஞ்செய்வது-எ-று.

கடிமணப்படலமுற்றிற்று.

ஆகக்கலித்துறை-௨௬௮.

---

## தெருட்சிப்படலம்.

### நேரபலனுந்திதிப்பலனும்.

சுத்தவுதயமு முச்சியும்பாடுஞ் சொலுமுறையே
யுத்தமமத்தி மமதமமிம்முறை யல்லினுங்கொண்
மைத்துறுகண்ணார் முதற்பூப்பினுமுவா முற்றிதியுஞ்
சித்திரையாறுந் திருவிழப்பிக்குந் திருந்திழையே.

(எ-)து.) இருதுவிலக்கணங் கூறுமிடத்து உதயமுதற் ௧௦ நாழிகைக்குள்ளாறு லுத்தமம். நடுப்பத்து நாழிகையுமாகின் மத்திமம். பின் ௧௦ நாழிகையுமாகின் அதமம். இரவுமிப்படிக் கொள்ளப்பெறும். திதிகளில் அமாவாஸ்யை பூரணை பிரதமை சதுர்த்தி நவமி சதுர்த்தசி சஷ்டி அஷ்டமி துவாதசி இவையாகாது. ஏனையவை நன்றாம்—எ-று. (௧)

### நட்சத்திரபலன்.

ஓதினரீராறு முத்தமமுத்திரா டம்முதலா
யாதிரைநாண்முத லேழ்பிணிநான்கத்த மாதியாக
நீதியிலாத விலைமகளாகெடு மங்கலநான்
சேதமுமாம்பனை நாண்முதற்பூப்பிற் றிருந்திழையே.

(எ-து.) உத்திராடமுதற் ௧௨ நாளிற் றெருட்சியானுத்தமதிரியாம். திருவாதிரை முதல் ௭ நாளும் வியாதியாம். அத்தமுதல் ௪ நாளும் வேசியாம். அனுஷமுதல் ௪ நாளும் விருத்தகாலம் விதவையாம்—எ-று. (௨)

இதுவுமது.

எரிமகந்தாலம் புள்ளாதிநாளுன்கி லெழிற்றிருவீ
றுரியமகப்பேறு நல்லவள்பூப்பி லுயர்புணர்த

வருசித்திரையாடி ரேவாய்மூதனுவின் மான்மலடாக்
திரிபிச்சையுண்ணும் திருவிலிவேசி சிலைநுதலே.

(எ-து.) கார்த்திகை மகம் அனுஷம் அவிட்டம் முதலிய ௪ நாட்களில் இருதுவானால் ஸ்ரீவதி சௌபாக்கியவதி புத்திரவதி சினேகவதி என்று பெயருடையள். புநர்பூசம் சித்திரை உத்திராடம் இரேவதி முதலிய ௪ நாட்களில் இருதுவானால் மலடி பிச்சைபுண்ணி விதவை வேசி என்று பெயருடையள்—எ-று. (௯)

## இலக்கினபலன்.

திருந்தியபூப்பிற் றுலைதடிகும்பஞ் செழுமகரம்
பொருந்தியசிங்கத்திற் போகத்தளாம்பொறி தேண்மறிமீன்
வருந்திருவில்லவ ளேறலவன்பர தாரமண்மே
லருந்ததியாகு மகளுதியா கிற்பிறையிழையே.

(எ-து.) பிரதமார்த்தபங் தோன்றின விலக்கினம் துலா மிதுனம் கும்பம் மகரம் சிங்கமானாற் போகவதியாம். தனு விரிச்சிகம் மேடம் மீனம் திருவிலியாம். இடபம் கர்க்கடகம் பரதாரமாம். கன்னியாகின் அருந்ததிபோன்ற கற்பாம்—எ-று. (௪)

## வாரபலன்.

ஆயும்பருதி பிணிமதிகற்பார லேல்விதவை
தாயங்கப்புந்தி மந்திரிபோக வதிதுகடீ
ரேயும்புகர் பெருநன்மைகளுட்டு மிரவிமகன்
மாயும்வினைபீடை வாரோதயம்பணி வாண்பிணியே.

(எ-து.) இரஜசு ஆதித்திய வாரோதயமாகின் வியாதி புத்திரநாசம். சந்திரனாகிற் பதிவிரதை. செவ்வாயாகில் விதவை. புதனாகிற் புத்திரவதி. வியாழனாகிற் போகவதி. வெள்ளியாகின் மிக்கபோகவதி. சனியாகிற்றுட்டை வியாதி பீடையாம். இராகு கேது வுதயமாகின் மிக்கவியாதி பீடையாம் எ-று. இருது தெருட்சி இரஜசு பிரதமார்த்தபம் பூப்பு என்பன வொருபொருட்சொற்கள். ()

தெருட்சிப்படலம் முற்றிற்று.

ஆகக்கலித்துறை ௨௭௯.



# கர்ப்பாதானப்படலம்.

பூத்தவன்காண்முத னான்கும்பொருந்தா புணரினிரை
பார்த்தபுமான் பெண்மகவுகுந்விசாம் பண்புடைத்தா
மார்த்தபகாண்முத லீராறுகண்றென்ப ராங்கவற்றிற்
சேர்த்தகுகாட்செப் புவன்செய்யதாமரைக் கட்டிருவே.

(எ-து.) இருதுவான நாள்முதல் ௪, நாளுங் கெர்ப்பாதானம் பண்ணலாகாது. பண்ணினால் முதனாட் புருஷனுக்கும் ௨ம் நாட்டிரிக்கும் ௩ம் நாட்கர்ப்பத்துக்கும் ௪ம் நாட்பிறந்த புத்திரனுக்கும் அரிட்டமுண்டாம். ஆகையாற் கர்ப்பாதானம் பண்ணலாகாது. நீராடிச்சுத்தமான ௫ம் நாள்முதல் ௧௨ம் நாளளவுங் கர்ப்பாதானம் பண்ணப்படும். அதற்காகியநாள் மேற்சொல்லுவன். ()

## கர்ப்பாதானத்துக்குநாள்.

திருவோணமத்தம் பனைதொழுச்சோதி செக்குத்திரங்க
ளுருண்மூலமுத்தமஞ் சித்திரைமான்றலை யாழவிட்டங்
குருநாட்களைமத் திமங்குற்றமற்ற திதிகுளிர்யாழ்
கருமீன்றுலைவிடை வில்லரிபெண்ணிற் கருப்பெய்கவே.

(எ-து.) திருவோணம் அத்தம் அனுஷம் இரேவதி சோதி சதயம் உத்திரத்திரயம் உரோகிணி மூலம் இவை யுத்தமம். சித்திரை மிருகசீரிஷம் அசுவனி அவிட்டம் புநர்பூசம் பூசம் இவைமத்திமம். பக்கச்சித்திரை யொழிந்த திதிகளிலே கர்க்கடகம் மிதுனம் மீனம் துலா இடபம் தனு சிங்கம் கன்னி இவையுதயமாகக் கர்ப்பாதனம் பண்ணலாம்—எ-று. (௨)

அல்லாதவோரை யனைத்தும்பகலுந் தவிரப்படுஞ்
சொல்லாருதயத்து மெட்டினுங்கோணிற்பிற் றூகைகல்லாய்
பொல்லாதவார மூவாவும்புகன்றில ராதானத்திற்
கெல்லாவிதான முமித்தாரணியி லிசைத்தவரே.

(எ-து) ஏனைய விராசிகளுதயமும் பகலுந் தவிரப்படும். உதயமும் அம் இடமுஞ்சுத்தமாகனாயிற்றுக்கிழமை செவ்வாய்க்கிழமை சனிக்கிழமை இவற்றினிரவு அமாவாசி பூரணை இவையொழிந்த நாட்களிற் கர்ப்பாதானம் பண்ணப்படும்—எ-று. (௩)

### கெற்பக்குறி.

வெய்யோன்மதிசேய் புகர்தத்தங்காலிஞ் விளங்கிநிற்க
வைடவுயிர்க்கைந்தி னென்பதிற்சீவ னமர்ந்துநிற்பப்
பெய்தகருப்பம் வளருநன் ருண்பிள்ளை யாமலடிற்
பையரவல்கு னல்லாய்பலியாதெனப் பன்னினரே.

(எ-து) ஆதித்தியனும் சந்திரனும் செவ்வாயும் சுக்கிரனும் தத்தமங்சங்களிலே நிற்க, வியாழன் இலக்கினத்துக்கு ௫, ௯, இவ்விடங்களில்நிற்கக் கர்ப்பாதானம்பண்ணினால் அக்கர்ப்பம் பூரணமாகவளர்ந்து ஆண்பிள்ளையாகப்பிறக்கும். இந்த யோகமலடியான திரியிடத்திற்பயன்படாது—எ-று. (௪)

### இதுவுமது.

ஒற்றையிராசியி லாணங்சகமுதயங் கதிர்பொன்
பெற்றமதியுறி லாண்சமவோரையிற் பெண்ணங்சகத்
துற்றிவர்நின் றிடிற் பெண்சனியெட்சியிற் கொற்றையில்லி
னிற்புறிலாண் பெண்சமத்திற்புகர்மதி சேய்நிற்கிலே,

(எ-து.) புமானிராசியான வொற்றித் தவிராசியில் புருஷநவாங்சகத்து ஆதித்தியன் வியாழன் சந்திரன் முதலியோர் நிற்கப் பண்ணின கர்ப்பம் ஆண்பிள்ளையாம். இப்படிச் சொல்லிய கிரகங்கள் பெண்ணிராசியான விரட்டித்த விராசியில் பெண்ணவாங்சகத்து நிற்கிற்பெண்ணாம். உதயத்துக்கொற்றித்த ராசியிற் சனிநிற்கிலுமாணாம். இரட்டித்த ராசியிற் சனிநிற்கிற் பெண்ணாம். உதயத்துக்கிரட்டித்த ராசியில் வெள்ளி சந்திரன் செவ்வாய் நிற்கிற் பெண்ணாம். ஒற்றித்தராசியி லிவர்கள் நிற்கி லாண்பிள்ளையாம்—எ-று. (௫)

### இதுவுமது.

சமத்திற்குருநின் று சான்றெழப்பத்தாம் வீடதனையி
லிமத்தின்பகைநிற் பினனென் றறியிந்து சூரியனை
யமைச்சனெழியப் புதன்சனிநோக்கி லலியதென்று
நமக்குமுனிவர்க்கும் வாசிட்டர்நூலன் கறிவித்ததே.

(எ-து.) சமராசியில் வியாழன் பெலமாய்நிற்க அவனுக்குப் பத்தாமிராசியான வொற்றித்தராசியில் ஆதித்தியனிற்கி லாண்பிள்ளையாம். இவர்களிருவருமாறி நிற்கிற் பெண்ணாம். சந்திராதித்தரை வியாழனோக்காது புதன்சனிநோக்கினும் இவர்களுடன் கூடிநிற்பினும் அலியாம்.



### இதுவுமது.

சொல்லுயிர்க்கைந்தின் மதிசுடரோழினிற் சுங்கன்மூன்றி
னல்கிற்கருப்பமில்லை மதிநட்புச்ச மெய்தினன்றுஞ்
சில்லினஞ்சென்று கெடும்*பகைநீசஞ் சிதைந்துகெடும்
வல்லுடனாட்சி வயிற்றினெடுங்†காலம் வாழ்வுறுமே.

(எ-து.) கர்ப்பாதான லக்கினத்துக்கு ௫ம் இடஞ்சந்திரனும், எம் இடத்தில் ஆதித்தியனும், ௩ம் இடத்துச்சுக்கிரனுநிற்பிற் கர்ப்பந்தங்காது. சந்திரன்பெலவானாய் நட்புச்சம்பெற்றுநிற்கிற் கர்ப்பமொருகுறைவின்றியே வளரும். சந்திரன்பெலவீனனாய்ச் சமகேந்திரத்துநின்றாற் கர்ப்பமுருவிகரித்துச் சிலநாளிலேகெடும். நீசத்துநின்றாற் கர்ப்பம் நாசமாம். சந்திரன்பெலவானா யாட்சியில்நின்றா லுதரத்தி னெடுங்காலமிருக்கும்—எ-று. (௭)

### இதுவுமது.

வியனிலத்துப்புதன் சேய்பொன்னுறிற்கர்ப்பம் வேறிரண்டா
மயனிலத்துப்புக ரம்புலிநிற்கி லரிவையினை
வியனிலத்துஞ்சமத் தும்மேவுமெய்யுயிர் மிக்கபெண்ணு
ணியல்புறுகோட்டிறத் தாண்பெண்ணிணை பெறு மேந்திழையே.

(எ-து.) ஒற்றித்தவிராசியிற் புதனுஞ்செவ்வாயும் வியாழனுநிற்கப் பண்ணின கர்ப்பமிரண்டாம். இரட்டித்தவிராசியிற் சுக்கிரனுஞ் சந்திரனுநிற்கிற் பெண்ணிரட்டையாம், இரட்டித்தவிராசியினின்ற சந்திரனையும் இலக்கினத்தையும் ஆண்கோள்நோக்கி லாண்பிள்ளையிரண்டாம். ஒற்றித்தவிராசியினின்ற சந்திரனையும் ஒற்றித்தவிலக்கினத்தையும் பெண்கோள்நோக்கிற் பெண்பிள்ளையிரட்டையாம். இப்படியிலக்கினமுஞ்சந்திரனுமாறிநிற்கிற்பெண்ணொன்று ஆணொன்றாம்.

* சந்திரனுக்குச் செவ்வாய் வியாழன் சுக்கிரன் சனி சமனாகையாற் பகையென்றார். சந்திரனுக்கு இராகு கேது பகை ஆதித்தியன் புதன் நட்பென்று காண்க.

† காலம் எ-து வருஷம்.

இதுவுமது.

சனிகதிர்ச்சான்றவ ராங்கெழவில்லிடைச் சந்திரனை
நினைவுறப்பார்த்திடி னீங்குங்கருப்ப நிலையுயிர்க்கேழ்
மனைவயிற்செய்கதி ரேற்கருச்சத்திரத் தான்மரிக்கு
நனியுயிர்நல்லுட லிற்றீக்கோணின்றிடி னுசமென்னே.

(எ-து.) இலக்கினத்துச் சனியுமாதித்தியனுநிற்க இவர்களுடைய வாட்சியிராசியினின்ற அபரபக்கத்துச் சந்திரனைச் சனியுமாதித்தியனுநோக்கிற்கர்ப்பம் பிரயோசனமாய்ப்பிறவாது. இலக்கினத்துக்கு எம் இடத்துச்செவ்வாயும் ஆதித்தியனுநிற்கிற் கர்ப்பஞ் சத்திரத்தினாலே பீடைப்படும். இலக்கினத்துச் சந்திரனுடன் பாபக்கோணிற்கிற் கர்ப்பம் வயிற்றிலேநசியும்—எ-று. (௯)

கர்ப்பாரிட்டம்.

கதிர்மதிசிங்கத் தெழக்காரிசேய்நோக்கிற் கண்ணானு
மதிகதிரீராறில் வாழிற்குருட னலவனெழ
மதிசனிசேய்நோக்கி னூமனென்மீனத்து மந்தன்செய்யோன்
மதியெழத்தோன்று மகார்முடமென்று வகுத்தனரே.

(எ-து.) சந்திரனாதல் ஆதித்தியனாதல் சிங்காஞசத்துநின்றதுவே யிலக்கினமாகச் சனியுஞ்செவ்வாயுநோக்கி னூனமுண்டான கண்ணுடையனும். செவ்வாயாதல் சனியாதலநோக்கிய *சந்திராதித்தர் இலக்கினத்துக்குப் பன்னிரண்டாமிடத்திலேநிற்கில் இருகண்ணுங்குருடனும். கர்க்கடகவிலக்கினமாகக் கர்க்கடகாஞசத்து நின்றசந்திரனைச் சனியுஞ்செவ்வாயுநோக்கினூமனும். சந்திச்செவிடனுமாவன். மீனவிலக்கினமாக மீனாஞசத்துச்செவ்வாயுஞ் சனியுஞ் சந்திரனுநிற்கின்முடவனும்—எ-று. (௧0)

இதுவுமது.

கலையிற்கடையிற் றிரேக்காணநின்றெழக் காரிகதிர்
குலையப்படுந் திங்கணோக்கிற் குறளெனக்கூறியவை
நிலைபெற்றயாரும் வினவியகாலத்து நேருதயஞ்
சிலையொத்தவாணுதலாய் கொண்டுசிந்தனை செப்புகவே.

* ஆதித்தியன் வலக்கண் சந்திர னிடக்கண்ணென்றறிக.



(எ-து.) மகர புதன் றிரேக்காணம் உதயமாக இதனைச் சனியும் ஆதித்தியனும் அபரபக்கச்சந்திரனு நோக்கிற் கர்ப்பம் குறளாய்ச்செனிக்கும். இப்படிச்சொல்லிய கர்ப்பசிந்தனையை யாவன் ஒருத்திகர்ப்பத்துக்கு வந்துகேட்டால் அப்போதி லாரூடத்தையும் உதயத்தையும் பார்த்துப் பலமறிந்து அவர்கட்குக் கர்ப்பக்குறி சொல்லுவது—எ-று. (௧௧)

இதுவுமது.

குறைமதிதன்காலிற் சேய்சனிகூடி யுதயமுறிற்
பொறைதருபிள்ளை பிறக்குமுன்னனைசாம் பொற்கதிரோ
னுறைதருகாலி லவனேறையுற்றிட வுள்ளதீக்கோள்
கறைகொண்டுநோக்கிடிற் றந்தைமுன்சாமென் கனங்குழையே.

(எ-து.) அபரபக்கத்துச் சந்திரனுடைய அஞசத்துச் செவ்வாய்சனியுடன் கூடியதுவே யிலக்கினமாகிற் பிள்ளைபிறப்பதன்முன்னே மாதாமரிக்கும். ஆதித்தியாஞசத்துச் சிங்கவிலக்கினமாகப் பாபக்கிரகநோக்கிற் பிள்ளைபிறப்பதன் முன்னேபிதாமரிக்கும்—எ-று. (௧௨)

இதுவுமது.

ஆழ்கின்றமெய்யுயிர்க் காறுடன்மூன்றுபன் னொன்றிற்றீயோ
ரேழைந்தினான்கிரண் டொன்பதுபத்தி னிசையினல்லோர்
வாழ்வொன்றிலங்கர்ப்பம் வாணுதலாய்சொல்லின் வல்லவெல்லாஞ்
சூழ்கின்றகோள்வலி மெய்யுயிரின்வலி கொண்டுசொல்லே.

(எ-து.) கர்ப்பாதான விலக்கினத்துக்குஞ் சந்திரவிலக்கினத்துக்கும் ௬, ௯, ௧௧, இவ்விடங்களிற் பாபக்கிரகங்கணிற்பினும், எ, ௫, ௪, ௨, ௯, ௧0, ௧௧, இவ்விடங்களிற் சுபக்கிரகங்கணிற்பினும், கர்ப்பம் நன்றாக வளர்ந்து யாதொருதோஷங்களு மின்றியே பிறக்கும்; இப்படியுபயவிலக்கினத்துக்குங் கிரகங்களின் பெலமறிந்து சொல்லுவது—எ-று. (௧௩)

கர்ப்பம்மூன்றுவருஷம் பன்னிரண்டுவருஷஞ் சென்று பிறத்தல்.

சுன்னினதோரையிற் சுன்னங்ககமெழத் தொக்கசனி
முன்னியவேழின் முடிவுறின்மூவாண்டி னிற்பிறக்கு ௧0

நன்னிலவில்லி னவன்காலைழவெழி ஞண்மதியேற்
பன்னிரண்டாமாண்டில் வந்துதிக்கும்பிள்ளை பான்மொழியே.

(எ-து.) சனியுடைய விராசியான மகரகும்பங்களிற்
சந்திரனின்று சனியங்ச முதயமாக இலக்கினத்துச்சனி
எம் இடத்து நிற்கப்பண்ணின கர்ப்ப மூன்றுமாண்டிலே
பிறக்கும். சந்திரனிராசியான கர்க்கடகத்திற் சந்திராங்ச
முதயமாக விலக்கினத்துக்கு எம் இடத்துச் சந்திரனிற்
கப்பண்ணின கர்ப்பம் பன்னிரண்டா மாண்டிற் பிறக்
கும்—எ-று. (கச)

கர்ப்போற்பத்திமுதற்செனனமளவுமுண்டாகுமங்கம்.

செறிவுறுநீராந் திரளுமுளைபெறு மென்புசேருங்
குறியுறுதோலா மயிருதிக்குங் கூறு மார்வமுட
னறிவுறுந்தாக மசையுமவனி யிடைப்பிறக்கு
நெறியுறுமாத நிரையறிகல்ல நிலாவளையே.

(எ-து.) கர்ப்பமானது முதல்மாதம் தாமரையிற்ப
ட்டநீர்போலிருக்கும், உ-ம் மாதம் ஒருகட்டியாம், ௩-ம்
மாதம் அங்கங்கள் முளைக்கும், ௪-ம் மாதம் அத்திபற்றும்,
௫-ம் மாதம் தோல்பற்றும், ௬-ம் மாதம் உரோமமுளைக்
கும், ௭-ம் மாதம் அறிவுண்டாம், ௮-ம் மாதம் பசிதாகமுண்
டாம், ௯-ம் மாதம் அசைந்துபெயர்ந்து கிலேசமுண்டாம்,
க0-ம் மாதம் பூமியிற்பிறக்கும்—எ-று. (கரு)

திங்கட்கொருவர் புகர்குசன்சீவன் செழுங்கதிரோ
னங்கண்மதிசனி மாலுதயாதிப ரம்புலியும்
வெங்கட்சுடரு முறையினிற்காப்பரொன் மிக்கதிக்கோள்
பங்கப்படுமுயி ராலவருங்காலம் பயமென்பரே.

(எ-து.) முன்புசொன்ன மாதங்களுக்குச் சுக்கிரன்
செவ்வாய் வியாழன் ஆதித்தியன் சந்திரன் சனி புதன்
இலக்கினுதிபதி சந்திரன் ஆதித்தியன் இவர்கள் பதின்
மரும் அடைவே மாதாதிபர்களாய் அந்தக்கர்ப்பத்தை
யிரட்சிப்பர்கள். இவர்கள் யாதாயினும் ஒரு பாபக்கிரகத்
தாற் பீடைப்படும்போது கர்ப்பமும் பீடைப்படும்—எ-று.

கர்ப்பாதானப்படல முற்றிற்று.

ஆகக்கவித்துறை-உ௮௬.



புங்ஸவனம்

தருங்கதிர்மாதமூன் றிற்சாருமோணத்துப் பூசத்துநாட்
திருந்துநல்யோகத்துத் திங்களுதிப்பநல் வெள்ளிநோக்க
வருந்திக்குளிர்கன்னி யாழினைவாட்டி வருமோரையிற்
பொருந்தியவட்டம சுத்தியிற்புங்ச வனஞ்செயுமே.

(எ-து.) ஆதித்திய கெதியான ௩-ம் மாசத்தில் திரு
வோணத்திலாதல் பூசத்திலாதல் சுபயோகமானதினத்
திலே சந்திரோதயத்துச் சுக்கிரனுக்குண்டாகக் கர்க்க
டகங் கன்னிமிதுனம் ஒழிந்தவிராசி யுதயங்களில் அட்
டம சுத்தியுண்டாகப் புங்சவனஞ்செய்யலாம்—எ-று. ()

சீமந்தம்.

இரவிதன்மாத நான்காறெட்டிடை யிருபூசங்கல
மரியுருளுத்திர மூன்றத்தமான்றலை யாய்த்திணிதேட்
டெரியுறுசிங்க மொழிக்தெட்டுச் சுத்தியிற்சீமந்தமுன்
பரவியபஞ்சாங்க யோகநன்றனதிற் பண்ணுகவே.

(எ-து.) ஆதித்தகெதியால் வந்த ௪-ம் மாதம் ௬-ம்
மாதம் ௮-ம் மாதத்திலே புநர்பூசம் பூசம் இரேவதி திரு
வோணம் உரோகிணி உத்திரத்திரையம் அத்தம் மிருகசீ
ரிடம் இந்நாட்களிலே விரிச்சிகம் சிங்கமொழிந்த விரா
சிகளில் அட்டம சுத்தியுண்டாக முன்சொன்ன பஞ்சா
ங்கயோக நன்றாயிருக்கச் சீமந்தம்பண்ணுவது—எ-று. ()

விஷ்டுணுபெலி.

எட்டாயதிங்களி லெய்துருவோணந் துவாதசியி
னட்டார்தரு சத்தமியிவைமேனல்ல கோளுதிப்பச்
சிட்டார்தருவிதிச் சீமந்தநூலிற் சிறந்தவற்றின்
மட்டார்துளவணி மாயவன்றாள்கள் வணங்கென்பரே.

(எ-து.) ௮-ம் மாதத்திலே உரோகிணி திருவோண
ம் துவாதசி சத்தமி இந்நாட்பக்கங்களிலே சீமந்தத்திற்
குச் சொன்னவிராசிகளிலே அட்டமசுத்தி யுண்டாகவிட்
டுணுபெலி செய்வது—எ-று. (௩)

பேற்றகம்.

கழைபனைமான்றலை சித்திரைசோதி கலங்காரியாழ்
தொழுமரிதேருத் திரங்கன்புதன்சனி சோமன்குரு

மழையிவைகன்று குடக்தேளிருத்தையை வாட்டியெட்டுத்
தழைவுறுசுத்தியிற் பிள்ளைப்பேற்றில்லஞ் சமைக்கென்பரே.

(எ-து.) புனர்பூசம் அனுஷம் மிருகசீரிடம் சித்திரை சோதி இரேவதி அத்தம் அசுவதி திருவோணம் உரோகிணி உத்திரத்திரயம் இந்நாட்களிலேபுதன் சனிசந்திரன் வியாழன் வெள்ளி இவர்கள்வாரோதயத்து கும்பம் விரிச்சிகம் ஒழிந்தவிராசிகளில் இருத்தையொழிந்த பக்கத்து அட்டமசுத்தியுண்டாகப் பிள்ளைப்பெறுதற்கு இல்லமுண்டாக்குவது—எ-று. (ச)

### கோமூத்திரிசக்கரம்.

வடக்குறவைந்துங் கிழக்குறவெட்டு மிரேகைவைத்து
விடைக்கிறைதிக்கினுக் காறின்விளக்குவைத் தீரொன்பானு
ளடைத்தவெண்மான்றலை நான்கிடக்கீழரா வாதியாறுங்
கொடுத்துவலத்துறக் கொள்வகோமூத்திரி சக்கரமே.

(எ-து.) தென்வடக்காக வைந்திரேகையும் கிழ்மேலாக வெட்டுரேகையுங்கீற உஅ அறையாம். இதில் வடகீழ்மூலையறைமுதலாக வலமே யாறுமறையிற் சோதியைவைத்து அடைவே சுற்றிலே பதினெட்டுநாளளவாக வெண்ணுவது. எண்ணுமிடத்து உத்திராடம் அபிசித்து திருவோணம் என்று எண்ணுவது. பின்பு உரோகிணியைவைத்தவறைக்குக் கீழாக மிருகசீரிடத்தைவைத்து வடக்கிலறை நாலிலுமெண்ணி இதன்கீழாக ஆயிலியத்தைவைத்துத் தெற்கடையவாறு அறையிலுமாறுநாள் வைப்பது. இது கோமூத்திரி சக்கரமாம்—எ-று. (ரு)

### இதுமவுது.

இவ்வகையில்லத் திசையுறுகோட்டகத் தெய்துநாளிற்
செவ்வியகாணிலே பிள்ளைப்பெறுதற் கிடந்திருவே
யெவ்வகையானு மிருக்கைசயன மினிதருந்து
மவ்விடந்தன்னுட் கனுகூலமாக வமைக்கென்றே.

(எ-து.) முன்புசமைத்த வில்லத்திலே கோமூத்திரிசக்கரத்தை அகத்திலேகிடத்தி இவ்விடத்தனுகூலமான நாளுறையிடத்திலே பிள்ளைபெறுதற்கிடம் இருக்குமிடம் கிடக்கு



மிடம் உண்ணுமிடம் முதலியவைகளைத் தன்னுடையநாளுக்கனுகூலமாக வமைக்கப்படும்—எ-று. (சு)

மகளிர்வினைப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை உகரு

# சாதகப்படலம்.

### சாதகன்மம்.

நிலத்தினிற்பிள்ளை பிறத்தலுமுத்தர நீரிலாடித்
திலத்துடனேசாலி பொன்பொற்பசுவுஞ் செழுநிலனு
நலத்துறுநான்மறை யோர்க்கீந்துநற்கோ ளுநிப்பத்தத்தங்
குலத்துறவோருடன் பிள்ளையைக்காணக் குறித்தனரே.

(எ-து.) புத்திரன் பூமிசேதனனானபோதே பிதாவானவன் வடதிசையிலேசென்று ஸ்நானஞ்செய்துவந்து, தற்காலத்துச் சுபலக்கினத்திலே சாதகன்மஞ்செய்து, தங்கள் வம்மிசத்தவர்கள் கூடவிருந்து, எள்ளும் நெல்லும் பொன்னும் பசுவும் கன்றும் நல்லபூமியும் வஸ்திரமும் சற்பிராமணருக்குத் தானம்பண்ணிப் புத்திரதரிசனபரிசனஞ் செய்வது—எ-று. (க)

### அரிட்டம்.

கிடவுயிர்க்கைந்தினும் பத்தினுஞ்செஞ்சுடர் திங்கள்சேயோன்
முடவனுநிற்றந்தை தாய்மாதுலன்பிள்ளை தான்முடியும்
படவாவுற்றிடிற் பிள்ளைசாமாறிற் பணிமதிக்காங்
கடுதிறற்கோளேழி னின்றிடிலன்னை யுயிர்விடுமே.

(எ-து.) சென்மவிலக்கினத்துக்கு ரும் இடத்தும் ௧0ம் இடத்தும், ஆதித்தியன் சந்திரன் செவ்வாய் சனி; இவர்கணிற்கிலவைவேபிதாவரிட்டம், மாதாவரிட்டம்மாதுலாரிட்டம்சுதாரிட்டமுண்டாம். இராகுவாகிற் சுதாரிட்டமாம். இலக்கினத்துக்கு ௭ம் இடத்துச்சந்திரனிற்க இவனுக்கு எம் இடத்துப் பாபக்கிரகங்களின்றால் மாதாவரிட்டமுண்டாம்—எ-று. (உ)

இதுவுமது.

கொடியோருதயத்தும் பாட்டினுநிற்கிற்சேய் கூற்றுவன்பாற்
கடிதேயணைவுறுங் காரியுயிர்க்கு வியனிலத்து
நெடிதேநிலாச்சம வோரையினிற்ப விராப்பிறப்பின்
வடிவாமகவுடன் றந்தையுந்தாயு மரிக்குவரே.

(எ-து.) பாபக்கிரகங்களுதயத்தும் எம் இடத்தும் நிற்பி ற் சுதாரிட்டமுண்டாம். உதயவிராசிக் கொற்றித்தவிராசியி லே சனிநிற்கச் சந்திரனிரட்டை யிராசியினிற்ப இராப்பிறப் பின் பிள்ளைக்கும் பிதாவுக்கும் மாதாவுக்கு மரிட்டமுண் டாம்—எ-று. (௩)

இதுவுமது.

வெய்யோன்வியனிற் சமத்தினில்வெள்ளி பகலுதிப்ப
வெய்துங்குழவிதன் மாதாப்பிதாவும் யமனிடைவாய்
கையொன்றிநிற்பர் கதிரொட்டிற்காரிசே யேழினிற்ப
வுயவில்லையாமக வுக்கென்று கூறுக வொள்ளிழையே.

(எ-து.) உதயவிராசிக் கொற்றித்தவிராசியிலே யாதித் தியனிற்ப சமத்தானத்திலே சுக்கிரனிற்ப பகற்பிறந்த பிள் ளை மாதாவுக்கும் பிதாவுக்கு மரிட்டமுண்டாம். ஆதித்திய ன் அம் இடத்தும் சனியாதல்செவ்வாயாதல் எம் இடத்தும் நிற்கிற் சுதாரிட்டமுண்டாம்—எ-று. (௪)

இதுவுமது.

இந்துவுதித்திட்ச் சேய்படிற்சேயெழ விந்துபடி
யுந்துமகவுடன் மாதாமரிக்கு முதயத்தினு
மைந்தினுமேழினு மந்தத்துமொன்பதொ டட்டமத்துஞ்
சந்திரன்றீயவர் தமமொடெழிற்பிள்ளை சாமென்பரே.

(எ-து.) சந்திரனுதிப்பச் செவ்வாய் எம் இடத்தாதல் செவ்வாயுதிப்பச்சந்திரன் எம் இடத்தாதல்நிற்கப் பிள்ளைபிற க்கின் மாதாவுக்கும் பிள்ளைக்கு மரிட்டமுண்டாம். சென்ம விலக்கினத்துக்கு ௫, எ, கஉ, ௯, அ, இவ்விடங்களிற் சந்தி ரன் பாபக்கிரகத்துடன் கூடி நின்றாற் சுதாரிட்ட முண் டாம்—எ-று. (௫)



இதுவுமது.

த்திரமூலமகமைப் பசியினுறு முதற்கால்
ரைமுன்னரை கேட்டையாத்தொழுச் சேர்கடைக்கா
ம்பரணி மூன்றாகியகாலி வற்றுயிழையாய்
தத்தமிராசியெழிற் றந்தைசாமெனச் சாற்றினரே.

(எ-து.) உத்திரம் மூலம் மகம் அசுவதி இவை முதற் கால் சித்திரைமுன்னரை கேட்டை ஆயிலியம் இரேவதி இ வை நாலாங்கால் அத்தம் பரணி மூன்றாங்கால் இந்நாட்களி லிக்காலிற் சந்திரோதயமாகப் பிள்ளைபிறக்கிற் பிதாவரிட்ட முண்டாம்—எ-று. (௬)

இதுவுமது

கேட்டையைவிட்டு மதிகுருசேறவிற் கிட்டியெழ
நாட்டியகாலைவரும் பிள்ளையைநற்கோன் காணிலவேற்
காட்டியநான்முறை யாற்றந்தையெட்டாண்டு காணப்பெறான்
றீட்டியவேல்விழியாய் சேவேறொடெழிற் றீதில்லையே.

(எ-து.) கேட்டையற்று மூலம்புகுந்துதென்றவளவி லே சந்திரனுதயமாகப் பிள்ளைபிறக்கிற் பிதாவரிட்ட முண் டாம். இந்தச்சந்திரனைச் சுபக்கிரக நோக்காதாகில் பிள்ளை யைப் பிதாவெட்டாண்டளவிலே காணப்பெறான். வியாழனு தயமாகிற் றோஷமில்லை—எ-று. (எ)

இதுவுமது

பொறியெழப் பூராடத்துமல்வனெழ பூசத்தினு
நெறியுறத்தோன்றி நிகழ்வுறுகாலினிரைநிரையே
யறிவுறுதந்தைக்கு மன்னைக்குஞ்சேய்க்கு மம்மாமனுக்குஞ்
செறிவுறுநாசம் வருமெனவோதினர் தேமொழியே.

(எ-து.) பூராடத்துத்தனு வுதயமாகவும் பூசத்துக்கர்க்க டக ருதயமாகவும் நாலுகாலினும் பிள்ளைபிறக்கி லடைவே,பி தாவரிட்டம் மாதவரிட்டம் சுதாரிட்டம் மாதுலாரிட்ட முண் டாம்—எ-று. (அ)

இதுவுமது.

தந்தைமகவுதமையன் பிதாப்பிதாத் தம்பிதக்க
மைந்தனனைமா துலனவ்வையையன் வருமாதுல

னிந்தனிரையே மறியாதிவெட்சிக் கிசைந்தரிட்ட
மூந்தைமுனிவரர் நான்முறையேமொழி மொய்குழலே.

(எ-து.) மேடாதி மீனாந்தமான விராசிகள் சென்மவில க்கினமானால் மேடம் சிங்கம் கும்பம் பிதாவரிட்டம், இடபம் துலாம் சுதாரிட்டம், மிதுனம் தமையனரிட்டம், கர்க்கடகம் விரிச்சிகம் மகரம் மாதாவரிட்டம், கன்னி மேற்பிறக்கும் பி ள்ளையரிட்டம், தனு மீனம் மாதுலாரிட்டமென்று சொல்லப் படும்—எ-று. (கூ)

இதுவுமது.

கொடியோரிருவர்க் கிடையுயிர்மெய்யினுங் கோட்டிதினட்
கடிதாயவங்சகத் தந்தங்களினு மதிகண்டகப்
படியேயுறகினு மந்தமெட்டாறினைப் பற்றிடினு
முடலோடுயிரினைச் சுன்னோக்கினுஞ்சே யுயிர்விடுமே.

(எ-து) சென்மவிலக்கினமும் சந்திரவிலக்கினமும் இர ண்டுபாபக்கிரகங்களுக்கு நடுவாகினும் பொல்லாதபக்கம் பாப நாள் பாபாங்சகமிவற்றின் அந்தங்களிலேபிறக்கினும் அபரப க்கச்சந்திரன் கேந்திரங்களிலேநிற்பினுமிவன் இரண்டுபக்கத் திலும் கஉ, அ, சு, இவ்விடங்களி னிற்பினும் சனி உ, இலக்கி னத்தையு நோக்கினுஞ் சுதாரிட்டமுண்டாம்—எ-று. (க0)

இதுவுமது.

சித்திரைப்பக்கம்வியா காதம்விதிபாதஞ் சூலம்விட்டி
வைத்தபரிகம்வை திருதிகண்டாதிகண் டம்வச்சிர
நித்தயோகம்விட்டி நீடுதிவாரோக மிருத்துவினி
லொத்தவுதயத் துதித்தமகவீயு மொள்ளிழையே.

(எ-து.) பக்கச்சித்திரைகள் வியாகாதம் விதிபாதம் சூல ம் பரிகம் வைதிருதி கண்டம் அதிகண்டம் வச்சிரம் என்ற நித்திய யோகங்கள் விட்டிக்கரணம் திவாரோகம் தினமிரு த்து இவையிலே குரூரராசியுதயமாகப் பிறந்தபிள்ளை வாலிப ஞ் சென்று மரிக்கும்—எ-று. (கக)

இதுவுமது.

ஆலக்கடிகையி லர்க்கன்மதியால் காரியல்லார்
காலிற்பிறக்கிற் கருதடைவேதந்தை தாய்மாதுல



னேவுற்றமுன்னவர் தாம்வீவரீரைந்து மூலைந்தோரைந்
தாவுற்றபக்க முடிவில்வரிற்றந்தை சாமென்பரே.

(எ-து.) நாட்களில் விஷகடிகைகளிலே ஆதித்தியன் அபரபக்கச் சந்திரன் செவ்வாய் சனி இவர்கள் அங்கசங்களி ற் பிள்ளைபிறக்கில் அடைவே பிதாவுக்கும் மாதாவுக்கும் மா துலனுக்கும் தமையனுக்கும் அரிட்டமுண்டாம். திதிகளிற் டஞ்சமியினும் தெசமியினும் உவாக்களினும் முடிவினுற்ற இ ரண்டுநாழிகை திதிகெண்டாந் தத்திலே பிறக்கிற்பிதாவரிட் டமுண்டாம்—எ-று. விஷமிருத்தலால் அல்லார்காலெனச் சிறப்பித்தார். (கஉ)

இதுவுமது.

அரவிந்திரன்சேர்ஞ்ணி யந்தத்திற்பின்னவற் றுதியினில்
விரவுங்கடிகை யிரண்டிற்பிறந்திடில் வீயுங்குடி
யுருவென்றுமிந்நாளி லுற்றவவ்வோரைவி றுதியினின்
மருவுநவாங்சகத் தேவரினக்குல மாய்வுறுமே.

(எ-து.) ஆயிலியம் கேட்டை இரேவதி, இந்நாளினலா ங்காலிற் கடையிரண்டுநாழிகையும் அசுபதி மகம் மூலம் இ வற்றின்முதற்காலின் முதலிரண்டுநாழிகையும் நாட்கெண் டாந்தமென்று பெயராம், இதிற்பிள்ளைபிறந்தாலக்குடிகெடு ம். இந்நாளினுற்றவிராசி நவாங்சகமுறையிலே அந்தியாங்ச த்திலேயும் பிரதமாங்கசத்திலேயும் பிறந்தால் அவ் வங் கிஷநகெடும்*—எ-று. (கா)

இதுவுமது.

ஆட்சியின்மேலாம் வரியரவங்கேதைந் தொன்பதினு
†மெட்சியினுநிற்க வெய்துமகவெழிற் றந்தையினைச்
நுட்சியிற்றுன்கொல்லுஞ் சுன்னுயிர்க்கேழினிற் சூரியனுந்
தெட்கிறைநாலினு நின்றிடிற்செய்பொன்று கைதிடமே.

(எ-து) பெலவான்களாயிருந்த இராகுகேதுக்கள், நிம இடத்தினும் கூம் இடத்தினும், உதயத்தினுநிற்கிற் பிதாவ

* திதிகெண்டாந்தத்திற் பிதாவுக்கும் நாட்கெண்டாந்தத்திற் கு டிக்கும், இராசிகெண்டாந்தத்தில் வங்கிஷத்துக்கு மாகாதென் பாருமுளர்.
† எட்சி, எ-து. எட்சியென வெதுகைநோக்கி நீண்டது.

ரிட்டமுண்டாம். சனி யுதயத்துநிற்க ஆதித்தியன் எம் இடத்துநிற்பச, செவ்வாய் சம் இடத்துநிற்கப் பிறந்தபிள்ளை சடுதியில்மரணமாம்—எ-று. (கச)

இதுவுமது.

சுக்கிரற்கெட்டி னிற்றீயவராண்டொன் றிற் சோமன்கதி
ருக்கிரச்சுன்னுட னுற்றெழிலாண்டொன் பதின்மரிக்கு
வக்கிரச்சேய்க்கெட்டிற் பொன்றீயர்நோக்கு மதிமூவாண்டி
* லக்கினான்கா றெட் டுறவுயிர்சேய்நோக்கி லாண்டிரண்டே.

(எ-து) சுக்கிரனுக்கு அம் இடத்துப் பாபக்கிரகங்கணிற்கில் அரிட்டம ஓராண்டளவாம். சந்திரனுதல் ஆதித்தியனுதல் சனியுடனே இலக்கினத்துநிற்கில் ஒன்பதாமாண்டளவு மரிட்டமுண்டாம். செவ்வாய்க்கு அம் இடத்து வியாழனிற்க சந்திரனைப் பாபக்கிரகங்களேனக்கில், அரிட்டமூன்றுண்டளவாம். செவ்வாய்க்கு சம் இடத்தாதல் சா ம் இடத்தாதல் அம் இடத்தாதல் சனிநிற்க இலக்கினத்தைச் செவ்வாய்நோக்கில், இரண்டாண்டளவு மரிட்டமுண்டாம்—எ-று. (கரு)

இதுவுமது.

இருசுடர்க்காறந்த மெட்டிற்குசனிற்பி னுண்டிருமூன்
றாவஞ்சதுட்டயத் தெண்ணிரண்டாறெட் டிடமுநல்லோர்
வருகுளிரொட்சி மதிநோக்கிலாண்டுநா லுண்மரிக்கும்
பொருசிகிவெட்சியிற் றிங்களிரண்டினுட் பொன்றிடுமே.

(எ-து.) ஆதித்தியனுக்கும் சந்திரனுக்கும் சா ம் இடம் கஉ ம் இடம் அ ம் இடமாதல் செவ்வாய்நிற்கி லாறுண்டளவு மரிட்டம். இராகுகேந்திரங்களிலே நிற்கிற் பதினாறுண்டளவு மரிட்டம். சுபக்கிரகம் சா ம் இடம் அ ம் இடநிற்ப கர்கடக சந்திரனிலக்கினமாகில் நாலாண்டளவு மரிட்டம். கேதுவுதயமாகில் இரண்டு மாதமளவு மரிட்டம்—எ-று. (கசா)

இதுவுமது.

கேந்திரத்துந்திரி கோணத்துந்தீயவர் கிட்டவாறெட்
டாய்ந்தவந்தத்துநற் கோணிற்பவர்க்கோ தயத்துவந்தோன்

* அக்கினி என்று சனிக்குப்பெயர் அது அக்கி எனக்கடைக்குறையாயிற்று.



வீய்ந்திடுமெந்தத் துயிரொன்பதெட்டில் வெய்யோன்மதிய
மேய்ந்தபுகர்சே யெழவருசேயு மிறந்திடுமே.

(எ-து.) கேந்திரத்தானங்களினும் திரிகோணத்தினும் பாபக்கிரகங்கள் நிற்கச் சுபக்கிரகங்கள் சா ம் இடம் அ ம் இடம் கஉ ம் இட நிற்க ஆதித்தியனுதயமாகப் பிறந்தபிள்ளை விரைவில் மரிக்கும். கஉ ம் இடம் இலக்கினம் கூ ம் இடம் அ ம் இடம் என்றடைவே ஆதித்தியன் சந்திரன் சுக்கிரன் செவ்வாய் நிற்கப்பிறந்தபிள்ளைக்கு மரிட்டமுண்டாம்—எ-று.

இதுவுமது.

காலாயதீயவர் நற்கண்டமாயினு நல்லுயிரின்
மேலாயவேழினில் வக்கிரித்தேறினு மெய்யுயிரின்
பாலாயெழினு மெட்டாறின்மதியினைப் பார்த்திடினுஞ்
சேலாயகண்மடவாய் பிள்ளைசாத றிடமென்பரே.

(எ-து.) ஆதித்தியனும் செவ்வாயும் சனியும் அபரபக்கச்சந்திரனும் கேந்திரங்களி னிற்பினும் இவர்களிற் செவ்வாய் சனி வக்கிரங்களாய் இரண்டாமிடத்து நின்று வக்கிரித்து உதயவிலக்கினத்தை நோக்கினும் அன்றி இவர்கள் அ ம் இடத்துநின்று வக்கிரித்து எம் இடத்தை நோக்கினும் இவ ரகளுதயவிலக்கினஞ் சந்திரவிலக்கினத்து நிற்பினும் அ ம் இடம் சா ம் இடம் நின்றசந்திரனைநோக்கினுஞ் சுதாரிட்டமுண்டாய்—எ-று. (கஎ)

இதுவுமது.

மதியிருபாலினுந் தீக்கோளுடனெழி னுலிற்பத்திற்
பதியுறு நல்ல வுயிர்க்கிருபாலினு மேழ்பத்தினும்
விதியுறுந்தீயவர் நிற்பினுந்தாயுடன் வீயுமகார்
மதியெழவேழினிற் றீயவர்நிற்பினு மாண்டிடுமே.

(எ-து.) சந்திரனுதய விலக்கினத்தும் எ ம் இடம் சும் இடம் க0 ம் இட நிற்ப இவனுக்கிருபக்கங்களினும் பாபக்கிரகங்கணிற்பினும் சென்மவிலக்கினத்துக்கு இருபக்கத்தும் எ ம் இடத்தும் க0 ம் இடத்தும் பாபக்கிரகங்கள் நிற்பினும் பிள்ளையுமாதாவு மரிப்பர். அபரபக்கச் சந்திரனுதயமாக, ஒருபாபக்கிரகம் எ-ம் இடத்து நிற்பினுஞ் சுதாரிட்டமுண்டாம்—எ-று. (கஅ)

## அரிட்டாபவாதம்.

சொன்னவரிட்டங்கள் யாவையுஞ்சந்திர சூரியர்கள்
மன்னியவுச்சத்து நட்பாட்சியினும் வர்க்கோத்தமத்தும்
தன்னிகரில்லாத நல்லவர்தம்முடன் சார்விடத்து
நன்னெறிநூலவர் நன்றெனவோதினர் நன்னுதலே.

(எ-து.) முன்சொன்னவரிட்டங்களெல்லாம் சந்திராதி
த்தர் நட்பாட்சியுச்சத்து நல்லதானத்திலே நிற்பினும், அன்
றி வர்க்கோத்தமத்து நிற்பினும், சுபக்கோளுடன் கூடிநிற்பி
னும் பரிகாரப்படும்—எ-று. (உ0)

## இதுவுமது.

நல்லகதியின் வளர்மதியாயினு நற்கோளுடன்
புல்லியெழினுங் குளிர்விடையேறினும் போராவஞ்
சொல்லியமூன்றா பன்னொன்றினிற்பினுந் தூயமறை
வல்லவர்வாழ்த்தினு மாதேயரிட்டங்கண் மாய்ந்திடுமே.

(எ-து.) சுபகேதனனைபசந்திரன் பூரணனாய் நல்லவீட்டு
களிலே நிற்பினும், சுபக்கிரகங்களுடனே கூடிநிற்பினும், அன்
றி உச்சத்துமாட்சியினு நிற்பினும், இராகு ௩-௬-௧௧ இவ்வி
டங்களினிற்பினும், அரிட்டம்பரிகாரப்படும். அன்றியும் பிரா
மணருடையஆசியினாலும் பரிகாரப்படும்—எ-று. (உக)

## இதுவுமது.

குருவலிபெற்றுத்தம் முச்சத்தும்வற்கத்துங் கோணத்தினுந்
தருமுதயத்துஞ் சதுட்டயத்துங்நிற்கிற் சாலநன்றாம்
பொருமழைக்கோளே ழவற்றிற்புதனுன் கொழிந்துநிற்ப
வருமகவுக்கரிட் டம்மில்லையென் றனர் வாணுதலே.

(எ-து.) வியாழன்பெலவானா யுச்சத்தும் ஆட்சியினும்
வர்க்கோத்தமத்தும் திரிகோணத்தும் உதயத்தும் கேந்திர
த்துநின்றாற் சகலஅரிட்டமும் பரிகாரப்படும். சுக்கிரன் எம்
இடமும், புதன் ௬ம் இடமுமொழிந்து கேந்திரங்களிற் பெ
லவானாய்நிற்பினு மரிட்டங்கள் பரிகாரப்படும்—எ-று. (உஉ)

## அனபாயாதியோகம.

மதிக்கிருபாலுநற் கோளெழில்வாழ்வுட னாயுமிகும்
விதிக்குமனபை சுனபைதுருதுரை வேறுயிர்க்கேழ்



மதிக்கிருபக்கத்து நற்கோளெழவரும் பின்னைமண்மே
லதிப்படவாழுமென்றே யமரேச னறைந்தனனே.

(எ-து.) யோகமறியுமிடத்து யாவனொருவன் சென்மி
த்தகாலத்துச் சந்திரனுக்கு ௧உம் இடத்துச் சுபக்கிரகங்கள்
நின்றால் அனபாயோகமென்றும், உம் இடத்துச்சுபக்கிரகங்க
ணின்றால் சுனபாயோகமென்றும், இவை யிரண்டுயோகமு
ணின்றால் துருதுராயோகமென்றும் பெயராம். இதில
மூண்டானால் துருதுராயோகமென்றும் பெயராம். இதில
னபாயோகத்துப்பிறந்தால் ஆயுராரோக்கிய மிகவுமுண்டாம்.
சுனபாயோகத்துமிப்படியே. துருதுராயோகத்துப்பிறந்தால்
ஆயுராரோக்கியமும் ஐசுவரியமும் சந்தானவிர்த்தியு மிகவு
முண்டாம். சௌமவிலக்கினத்துக்கு எம் இடத்துநின்ற பூர
ணசந்திரனுக்கு இரண்டுபாரிசங்களினுஞ் சுபக்கோணின்றா
ல அதியோகமென்றுபெயராம். இதிற்பிறந்தால் மிகவும்பிரபு
வாம்—எ-று. (உ௩)

## இராசயோகம்.

அதமன்சமனுத் தமனெனவம்புவி யர்க்கனுக்கு
விதமொன்றுகேந்திர மாதிமூன்றோனையின் மேலிட்டறி
தைவின்றிவைத்துகோ ளுச்சமெழச்சிங்க நின்றெழுமேன்
மதிதங்கியகுடை மன்னர்க்குமன்னுமிம் மாநிலத்தே.

(எ-து.) ஆதித்தியனுக்குக் கேந்திரத்திலே சந்திரனிற்
கில் பிதாவொல்பாதி சிவனமில்லை. இதனருகிலிராசியிற் சந்
திரனிற்கிற் பிதா வொல்பாதி சிவனமுண்டு. இதனருகில
ராசியிற் சந்திரனின்றால் பிதாவின் மிகுந்தசிவனமுண்டு. இ
ப்படி நாலுகேந்திரமுந் தொட்டறிக. சிங்கவிலக்கினமுதயமா
க ஐந்துகிரகமுச்சத்துநிற்கிற் சார்வபௌம சக்கிரவர்த்தியா
ம்—எ-று. (உச)

## இதுவுமது.

பூமன்கதிர்சனி பொன்புகர்மாலுச்சம் பற்றநத்துங்கக்
தாமங்கொருவ ருதித்தெழவல்லோர்கட் பாட்சியுறக்
கோமன்னர்தம்வகை கோட்டிறந்தாலறி சீசம்பகை
தாமங்குறிற்றரை மன்னவராத றகாதென்பரே.

(எ-து.) செவ்வாயும் ஆதித்தியனும் சனியும் வியாழனு
ம் சுக்கிரனும் புதனும் உச்சத்திலேநிற்கப்பிறந்தவன் சக்கி

ரவர்த்தியாம். உச்சத்திலே யொருகிரகநின்று அதுவே யில
க்கினமாகமற்றையல்லாதவா நட்பாட்சியிலேநிற்கப் பிறந்தவ
னு மிராசாவாம். இவற்றின்முன்சொன்ன வைந்துகோளில்
ஒருகோளுச்சத்தும்இரண்டுகோளிலக்கினத்தும்இரண்டுகோ
ளாட்பாட்சியினுநிற்கப்பிறந்தவனுமிராசாவாம் இந்நாலுவகை
யின் வர்க்கமானபதினாறுபடியினும் பிறந்தவனுமிராசாவாம்.
இவ்வண்ணமே பகைநீசங்களினிற்கப் பிறந்தவன் இராசபு
த்திரனாயினு மிடியனாம்—எ-று. மாலுச்சம் என்றதற்கும்
பெருமையையுடைய வுச்சமெனினுமமையும். (உரு)

இதுவுமது.

வெள்ளியும்மாலு மதியும்பதினொன் றினிற்கவெய்யோ
னொள்ளியமேடத் தெழக்குருவுச்சத்து வந்துநிற்பின்
வள்ளியமன்னவ னாமெனவோரை வகுத்துரைத்த
தெள்ளியநூன்முறை தென்கடுவைக்கிறை செப்பினனே.

(எ-து.) சுக்கிரனும் புதனும் சந்திரனும் ககம் இடத்து
நிற்க,ஆதித்தியனுச்சமேடதனாக, வியாழனுச்சமாயதுவேயி
லக்கினமாகவாகினும் சிங்கவிலக்கினமாகவாயினும் பிறந்தபி
ள்ளை உதாரனுமாய்ச் சூரனுமாயேகவிராசாவாம. இப்படி
வெகுஇராச யோகங்களெல்லாம் ஓர்சாத்திரப்படி பார்த்து
ச்சொல்லுவது—எ-று. (உசு)

சாதகப்படல முற்றிற்று.
ஆகக்கவித்துறை கூஉக.

# மைந்தர்வினைப்படலம்.

பஞ்சாயுதம்.

சாதகநாட்கைந்திற் சாந்திநீராட்டிநற் கோளுதிப்ப
மேதகுபஞ்சா யுதவடம்பூட்டிநல் வேதியர்கள்
பூதபசாசனு காவலைகாத்திடப் பொன்னனையாய்.
காதல்சேர்காப்பிட்டுப் பின்னரைஞாண்கட்ட லாமென்பரே.

(எ-து.) பிள்ளைபிறந்த ஐந்தாநாள் பிள்ளையைச் சு
த்த சலத்திலே முழுக்காட்டிச் சுபக்கோளுதயமாகப்



பஞ்சாயுத சூத்திரத்தை நாபியளவாகத் தரித்துத்தெய்வ
ப்பிராமண ராசீர்வாத மந்திரத்தினாலே பூதபிசாசு வரா
தபடி காவல்பண்ணிக் காப்புத்தரித்துப் பின் அரைஞா
ணுங்கட்டுவது—எ-று. (க)

நாமகரணம்.

தோன்றியநாளினுக் கீரைந்திராறினிற் றூயவில்லின்
மான்றலைசோதிபுன் னத்தமகமோணஞ் சுண்ணம்பனை
மூன்றுசேருத்திரம் பூசமிரண்டுருண் மூலஞ்சேங்கை.
யென்றவிதிற் றிர்ராசியிற்பிள்ளைக் கிடல்பெயரே.

(எ-து.) பிள்ளைபிறந்த பத்தாநாளாதல் பன்னிரண்
டாநாளாதல் கிரகசுத்தி பண்ணிச் சுபக்கிரகோதயமாக
நாமகரணஞ்செய்வது. இந்நாட்கழிந்தால் மிருகசீரிடம்
சோதி அவிட்டம் அத்தம் மகம் திருவோணம் சதயம்
அனுஷம் உத்திரத்திரயம் புநர்பூசம் பூசம் உரோகிணி
மூலம் திருவாதிரை இந்நாட்களிலே முன் சொன்னபடி
யே பஞ்சாங்கயோகம் நன்றாக திராசியுதயமாக நாமக
ரணஞ் செய்வது. தூயவில்லி னென்றமையால் க்ஷத்திரி
யருக்குப் பதினாறுநாளினும் வைசியருக்கு இருபத்திரண்
டாநாளினும் சூத்திரருக்கு முப்பத்தொராநாளினும் பெ
யரிடுவது—எ-று. (உ)

இதுவுமது.

எட்டைந்துசுத்தி பெறவேழினிற்கோ ளிசைவுபெற
வொட்டியகாலினட் பாட்சியுச்சக்கோ ளுதிப்பவவை
வெட்டனவோடு மிகுபுகழாமல் லனமிடியாம்
பட்டமுநாம கரணமும்பண் ணிற் பனிமொழியே

(எ-து.) நாமகரணம் பண்ணுமிடத்து முன்சொன்
ன நாளின் றிரவிலக்கினத்திலே அ-ம்இடமும் ரு-ம் இட
மும் சுத்தமாக, சுபக்கோள் எ-ம்இடத்தாதல் நட்பாட்சி
யுச்சத்துச்சுபாங்சகங்களிலே யாதல்நின்று திப்பப்பேரிட்
டால்நன்மையுண்டாம். பகைநீசத்துநின்றுதிப்பப் பேரி
டால் தரித்திரமாதல் வியாதியாதலுண்டாம். பட்ட
ப் பெயரிடுமிடத்தும் இந்நாளிலே யிந்தயோகத்திலே
கொள்வதும்நீசத்துக் கொள்ளாதொழிவதும் பெறப்ப
டும்—எ-று. (கூ)

## தொட்டிலேற்ற.

பூசேதமாயகாட் கரைந்திரா றிற்பொருந் திரெட்டி
ஞயிறும்பத் திரண்டாயநாளினற் கோளணைந்த
வோரைமுகூர்த்தத்து மேன்முகவோரைகா ணற்பக்கத்துத்
தோகைநல்லாய் பிள்ளையைத்தொட்டிலேற்றெனச் சொல்லினரே.

(எ-து.) பிள்ளை பூமிசேதனனுன ௧0, ௧உ, ௧௬, ௩உ, இந்நாட்களிலே சுபக்கிரக முதயமாக வூர்த்துவமுக விராசிநட்சத்திரங்களிற் பஞ்சாங்கயோக நன்ருகப்பிள்ளையைத் தொட்டிலேற்றுவது—எ-று. (௪)

## பால்பருக்க.

கங்குலாறைந்து கழிந்தவந்நாளிற் கலைமதிக்குப்
பொங்கியபூசனை முற்றுவித்துப்புவி மாமகளைச்
செங்கையிற்கூப்பி நற்கோளெழச்சேய்க்குச் சிறந்தவன்பாற்
சங்குவாய்வைக்கத் தருமென்றுசாற்றினர் சான்றவரே.

(எ-து.) பிள்ளைபிறந்த முப்பத்தொராநாட் சந்திரபகவானையும் பூமதேவியையு மரிச்சனைபண்ணிச் சுபக்கிரகோதயமாகச் சங்கிற்பால்வார்த்துப் பருக் குவது-எ-று. ()

## இதுவுமது.

அத்தமகமுரு ணுத்திரமூன்றிரு பூசமரி
சித்திரைசோதி பரிமதிசெக்குபுன் ளைந்தம்பனை
யுத்தமந்தியவர் வரோதயம்யோ கினியெதிருந்
தந்துமீன்றேளெட் சியுஞ்சங்குபாற்குத் தருமென்பரே.

(எ-து.) முப்பத்தொராநாட் கழிந்தால் அத்தம் மகம் உரோகிணி உத்திரத்திரயம் புநர்பூசம் பூசம் திருவோணம் சித்திரை சோதி அசுவதி மிருகசீரிடம் சதயம் அவிட்டங் இரேவதி அனுடம் இந்நாட்களிலே ஞாயிறு செவ்வாய் சனி யொழிந்தவாரங்களில் நல்ல திதிகளிலே யோகினியெதிரு மிடமின்றி நிற்பமீனம் விரிச்சிகமொழிந்த ராசிகளில்சங்கிற்பால்வார்த்துப் பருக்குவது—எ-று.

## கன்னவேதை.

பிறந்தாட்கோறி னீரெட்டிற்பின் றிங்க ளாறெட்டினிற்
சிறந்தகழைகுரு மான்றலைசித்திரை செங்கையோணந்



திறம்பெருமுத்திர மத்தந்தொழுப்புட்சேய் காதுகுத்த
வறைந்தனர்சிங்கந்தேள் கும்பமுமாகாதென் றுயிழையே.

(எ-து.) பிள்ளைபிறந்த பன்னிரண்டாநாளாதல் பதினாறுநாளாதல் சாவண மாதவகையால் ஆறுமாதம் எட்டாமாதங்களிலேயாதல் புநர்பூசம் பூசம் மிருகசீரிஷம் சித்திரை திருவாதிரை திருவோணம் உத்திரத்திரயம் அத்தம் இரேவதி அவிட்டம் இந்நாட்களில் சிங்கம் விரிச்சிகம் கும்பம் ஒழிந்தவிராசிகளிலே பஞ்சாங்கயோகநன்றாகக் காதுகுத்துவது.

## இதுவுமது.

இருவகைநாட்டிதி யெட்டிடத்தெக்கோளுந் தீதபின்றாய்
வருபொழுதாய்ப்பக்க யோகநன்றாய்வகுப் புற்றவோரை
தருதினமூர்த்த முகமுத்தமமெனத் தாழ்குழலாய்
கருதுறுகாதுகுத் தக்கலைவல்லவர் காட்டினரே.

(எ-து.) ஒருவாரத்திற்பகலிலே யிரண்டுநாளும் இரண்டுதிதியும்வந்தா லன்றைட்தவிரப்படும். அட்டமசுத்தியுண்டாகவபராணத்திலே பஞ்சாங்கயோகநன்றாக வூர்த்துவமுகமான விராசியுந்நாளும் உத்தமமாகக்கொண்டு கன்னவேதனம்பண்ணுவது—எ-று. (அ)

## சந்திரகோதெரிசனம்.

நாலாயதிங்களி னுண்டிக்குரைக்குநா ளோரையினின்
மேலாமுருகற்கும் வேதியர்க்கும்மிக்க பூசைபண்ணிப்
பாலாவிபான்மதிக் குக்கொடுத்துப்பின்பு பாலனுக்கு
மாலாமதியை வுடுவுடன்காட்ட வழகிதென்னே.

(எ-து.) பிள்ளைபிறந்த நாலாமாதத்தின்மேலே அன்னப்பிராசனத்துக்குச்சொன்ன திதிவாரநாளிராசிகளிலே தேவாதிதேவனாகிய சுப்பிரமணியபெருமானையும் பிராமணரையும் பூசித்து சந்திரபகவானுக்குப் பாற்போனகமமுதுசெய்வித்துப் பிள்ளைக்குச் சந்திரதெரிசனமும் நட்சத்திரதெரிசனமும் கோதெரினமும் பண்ணுவது—எ-று. (௯)

## அன்னப்பிராசனம்.

ஆறினுமெட்டினும் பத்தினுந்திங்களி ராறிடத்துந்
தேறியநாட்செல்லச் சித்திரைமான்றலை குன்றுபுட்டே

ருறியலைகயிரு பூசங்கலம்விளக் குத்திரங்கள்
கூறியபெண்ணையா ழோணமுண்டிக்கெனக் கூறினரே.

(எ-து.) சாவணமாதவகையால் ஆறுமாதம் எட்டாமாதம் பத்தாமாதம் பன்னிரண்டாமாதங்களில் அன்னப்பிராசனஞ்செய்யப்படும். தேறியநாளென்றமையால், கரு0, உக0, உஎ0, ௩௩0, இந்நாட்செல்லுமவற்றில் சித்திரை மிருகசீரிடம சதயம் அவிட்டம் உரோகிணி அத்தம் புநர்பூசம் பூசம் இரேவதி சோதி உத்திரத்திரயம் அநுஷம் அசுவதி திருவோணம இந்நாட்களிலே யன்னப்பிராசனஞ் செயயப்படும்.

இதுவுமது.

கயறேட்கொறிதிங்க ளெட்சியொன்பானிற் கணக்கனெழிற்
புயலெட்டிடஞ்சே யிவைபொருந்தாவென்ப ருண்டிதனக்
கியல்புறுபத்தா மிடஞ்சுத்தியாகமுன் னேயிசைத்த
நயமுறுநாளோரை நன்றானவல்லிற்கொ ணன்னுதலே.

(எ-து-)மீனம் விரிச்சிகம் மேடம் இவையொழிந்த விராசிகளில் அபரபக்கச்சந்திரோதயமும் ௩ம் இடத்துப் புதனும் எம் இடத்துச் சுக்கிரனும் அம் இடத்துச் செவ்வாயும் ஒழிந்த முகூர்த்தத்திலே க0ம் இடஞ் சுத்தமாக முன்சொன்னபடியே பஞ்சாங்க யோகநன்றாக இராக்காலத்து அன்னப்பிராசனஞ்செய்வது. பகலுமாம்—எ-று. (கக)

ஆண்டுநிறைவு.

காண்டகுமாண்டு கழிந்தநற்றிங்கள் கதிர்ச்செலவாற்
பூண்டநன்னாளிற் புனிதம்புனலாட்டிப் பூசுரற்கு
வேண்டுவநல்கி விதிவழியேநல்ல கோளுதிப்ப
வாண்டுநிறைவு சிற்றாடையுடுத்திட லாமென்பரே.

(எ-து) ஆதித்தியகெதியாலே ஓராண்டு சென்ற சென்மமாதஞ் சென்ம நட்சத்திரத்திலேயாதல் பஞ்சாங்கயோக நன்றாகப் பொருந்தினநாளிலே யாதல் சுத்தசலத்தினாலே பிள்ளையை முழுக்காட்டிப் பிராமணருக்குப் போசனங்கொடுத்து இவ்விதானநூல் சொல்லுகிறபடியே சுபக்கோளுதயமாக ஆண்டு நிறைவிற் சிற்றாடை உடுத்திப் பொன்னணைநூணுந்தரிப்பது—எ-று. (கஉ)



சௌளம்.

ஆண்டொன்றினுமூன்றே டைந்தினுமுக்கா லகன்றகாலை
வேண்டுவர்சௌளகம் வெள்ளிவியாழ மொளிபெறவுங்
காண்டகுசேய்சனி வெள்ளிகதிரொழிந் தேழிடத்துப்
பூண்டனரட்டம சுத்திபுகல்வர் புகரொழித்தே.

(எ-து.) சௌளம்பண்ணுமிடத்து க, ௩, ரு, வயதாகிய நாலாங்கூற்றிலே சுக்கிரன் விருகற்பதி அத்தமயமின்றி நிற்க மேற்சொல்லுகிற விலக்கினத்துக்கு எம் இடத்துச் செவ்வாய் சனி சுக்கிரன் ஆதித்திய னில்லாதொழிய அட்டமசுத்தி யுண்டாகக்கொள்ளுவது * —எ-று. சுபவிலக்கினமிருந்தாற் பகலிலே இருபத்தஞ்சு நாழிகையளவுஞ் சவுளகன்மஞ் செய்யலாம் ஆகையால் வெள்ளிகதி ரொழிந்தேழிடத்து மென்றார். (க௩)

இதுவுமது.

பூசமிரண்டத்த மோணம்புட்சித்திரை தோணிபரி
வீசுமகயிர முத்தமஞ்சுண்ணம் விளக்குருடோர்
மாசின்மூன்றுத்திர மத்திமமாகு மயிர்வினைக்குப்
பேசுங்கதித்ரு தரகதிநன்றிராப் பேசிலரே.

(எ-து.) புநர்பூசம் பூசம் அத்தம் திருவோணம் அவிட்டம் சித்திரை இரேவதி அசுவநி மிருகசீரிடம் இவையுத்தமம். சதயம் சோதி உரோகிணி உத்திரத்திரயம் இவைமத்திமம். உத்தராயனமாதங்களிலே பஞ்சாங்கயோகநன்றாகச் சவுளகன்மஞ் செய்வது. இராவிற்கொள்ளப்படாது—எ-று. ()

இதுவுமது.

கன்னிதுலைதடி நள்ளிமீன்சேகலை நன்றுவிற்றேண்
மன்னரிமேடநற் கோளுறிலாமென் மயிர்வினைக்கு
நன்னெறிகும்ப நவின்றிலர்நான்கு வருணத்தினுக்
குன்னுங்கதிர்சேய் சனிநன்றுநன்னுத லொண்மதியே.

(எ-து.) கன்னி துலா மிதுனம் நர்க்கடகம் மீனம் இடபம் மகரம் இவைநன்று. தனு விரிச்சிகம் சிங்கம் மேடம் இ

* எட்டாமிடத்துச் சுக்கிரனிற்கலாமென்றும்; ஒன்பதாமிடஞ் சுத்தமாகவேண்டுமென்றுஞ் சொல்வாருமுளர்.

வை சுபக்கோணிற்கிலாம். சுபக்கோளுதயமாகினுங் கும்பமாகாது. பிராமணருக் காதித்திய வாரோதயமும் க்ஷத்திரியருக்குச் செவ்வாய் வாரோதயமும் வைசியருக்குஞ் சூத்திரருக்கும் சனிவாரோதயமு நன்று —எ-று. (கரு)

அக்ஷராரம்பம்.

இரவிவடக்குறு மாதங்களின்மாசி நீத்தெழிலார்
பரிவுறுபக்கத் தரணிதோணி பனைபுனர்தங்
கரிமுதன்மூன்று பரியுத்தமமெழுத் தோதுதற்காண்
டாவல்குலாயஞ் சிலேமெட்டுச்சுத்தியி லாந்திரத்தே.

(எ-து.) அக்ஷராரம்பம் பண்ணுமிடத்து உத்தராயனத்து மாசிமாதமொழிய ரு வயசுசென்று ளு வயசிலே பூருவபக்கத்துப் பகற்காலத்திலே பஞ்சாங்கசுத்தியுண்டாக திருவாதிரை திருவோணம் இரேவதி அனுஷம் புனர்பூசம் அத்தம் சித்திரை சோதி அசுவதி இந்நாட்களிலே திராசியுதயமாக எ, அ, இவ்விடங்கள் சுத்திபெற அக்ஷராரம்பம் பண்ணுவது * —எ-று. (கசு)

வித்தியாரம்பம்.

ஆதிரையோணம் பனையிருபூச மவிட்டமத்தஞ்
சோதிமதிபரி சித்திரைசுண்ண நன்றாகுந்தோணி
யோதுமுருளுத்திரமூன்றுமத்திம மோரைதிரந்
தீதுதிரயோதசி சத்தமிகல்விக்குச் சிற்றிடையே.

(எ-து.) வித்தியாரம்பத்துக்குத் திருவாதிரை திருவோணம் அனுஷம் புனர்பூசம் பூசம் அவிட்டம் அத்தம் சோதி மிருகசிரிஷம் அசுவதி சித்திரை சதயம் இவையுத்தமம். இரேவதி உரோகிணி உத்திரத்திரயம் இவைமத்திமம். திராசியுதயமும் பக்கங்களில் திரயோதசி சத்தமி இவையொழிந்த சுபதிதிகள் நன்றாம்—எ-று. (கஎ)

இதுவுமது.

மூன்னுரைகல்விக்குப் பஞ்சாங்கயோக முகூர்த்தநோக்கு
நன்னெறியாகப் புதனங்சவாரமு மெட்டிகண்ணை

* சு-ம் இடஞ் சுத்தியாகவேண்டு மென்பாருமுளர்.



வன்னியர்காண்கட் டமசுத்தியாக வணியிலழைபாய்
பொன்னவன்பூம்புகர் வாரோதயங்களும் போற்றுவரே.

(எ-து முன்பு குணகுணப்படலத்துச் சொன்னபடியே பஞ்சாங்கயோக முகூர்த்தநோக்கு நன்றாகப்பார்த்துப் புதனுடைய வாரோதயாங்சம்பெற சு, அ இவ்விடஞ்சுத்தியாக வித்தியாரம்பம் பண்ணுகை யுத்தமம். வியாழன் வெள்ளிவாரோதயாங்சமு நன்றாம்—எ-று. (கஅ)

பலநூல்கற்க.

சோதிடஞ்சோதியில் யோகங்குன்றிற்றொடை தானமத்தத்
தாதிரைதன்னின்மல் லேப்பசியிற்பரி நூல்சித்திர
மோதுவர்சித்திரை யிற்றன்மமோணத் திணுபுனனூல்
காதலவிட்டத்துக் கற்கவென்றோதினன் கார்க்கியனே.

(எ-து.) சோதிடசாத்திரஞ் சோதியினும் யோகசாத்திரஞ் சதயத்தினும் அந்திரசாத்திரமும் பாதசாத்திரமும் அத்தத்தினும் மல்லுவித்தை திருவாதிரையினும் அசுவசாத்திரமசுவதியினும் சிற்பசாத்திரமுதலானவை சித்திரையினும் தன்மசாத்திரந் திருவோணத்தினும் வாகடசாத்திர மவிட்டத்தினும் கற்படுமென்று [illegible]சேஷித்துக் கார்க்கியத்திலே சொல்லப்பட்டது—எ-று. (கசு)

சரசுவதி [illegible]

மதிமகன்காலின் மதிகதிர்மன்னமா லெட்டில்வாரம்
பதியுறிற்பாரதி யோகமென்பார்க்கவன் மால்கதிரோன்
விதிகேந்திரமுறத் தண்டெழுமேற்றிர யோதசியிற்
புதனுத்திரத்திடைப் பொன்னவன்காலுமென் பூங்கொடியே.

(எ-து.) புதனுடைய விராசியிற் புதனங்சத்துச் சந்திரனும் ஆதித்தியனும் விருகற்பதியும் புதனுமின்றுதயமாகப் புதனுடைய வாரத்தருணோதயகாலஞ் சரசுவதி யோகமாம். புதன்கிழமை யுத்திரநாலாங்காலின் மிதுனோதயமாக வெள்ளி புதன் வியாழன் ஆதித்தியன் இவர்கள் கேந்திரத்திலே சரசுவதியோகமாம். திற்கப் பூருவபக்கத்திரயோதசிவரிற்

### இதுவுமது.

வெள்ளிவியாழம் புதனத்தியுச்சம்வெண் டிங்கள்விடை
யுள்ளுநவாங்சகம் வாரமுதயமா மோரையினிற்
றெள்ளுறுகாமகன் யோகமதாஞ்சிவன் செய்யகாவி
னள்ளியினெட்சி பெறுமவன்வாரமு நன்றென்பரே.

(எ-து.) வெள்ளி வியாழன் புதன் இவர்க ளத்தியுச் சபாகையிலே நிற்க, இவர்களங்சத்து இவர்கள் வாரோதய விராசிவரிற் சரசுவதியோகமாம். வியாழனுச்சத்து நின்றுதயமாக வியாழன் வாராங்சகம் வரினுஞ் சுரசுவதி யோகமாம்—எ-று. (உக)

### கோசக்கிரகம்.

ஈசன்சதயம்பு ளிந்துபனையத்த முத்திரங்கள்
பூசமரிநிலை யோரையுநன்றுபொல் லாதவார
மேசுங்கிதிவிட்டி நீதுநல்யோகம் பெறவிசையுங்
கோசங்கொளநன்று நற்கோள்குறித்தெழக் கோமளமே.

(எ-து.) திருவாதிரை சதயம் அவிட்டம் மிருகசீரிடம் அனுடம் அத்தம் உத்திரத்திரயம் பூசம் திருவோணம் இந்நாட்களிற் றிராசியுதயமாக பாபவாரம் பொல்லாதபக்கம் விட்டி[illegible] பஞ்சாங்கயோக நன்றாகச் சுபக்கிரகோதய[illegible] கோசக்கிரகம் பண்ணுவது. ()

### [illegible]யனம்.

தாழ்விலுபநய னம்விதிகெற்பவாண் டாதிக்குமே
லேழெட்டுமொன்பதும் பத்திலுமேய்ந்த வுடற்குயிருக்
கூழ்கொண்டமந்திரி யேழைந்திரண்டுபன் னொன்றுபத்துஞ்
சூழுண்டவொன்பது முற்றுறு காலஞ் சுபமென்பரே.

(எ-து.) உபநயனம் பண்ணுமிடத்து கெற்பாதானமுதலாக எ, அ, கூ, க0 இவ்வயதில் சந்திரலக்கினத்துக்குஞ் செனம லக்கினத்துக்கும் பிரகஸ்பதி எ, ரு, உ, கக, க0, கூ இவ்விடங்களில் நிற்குமாண்டில் உபநயனம் பண்ணுவது—எ-று. (உங)



### இதுவுமது.

அல்லாவிடத்திற் குருவுறிற்சேய்க்கந் தாம்வினையாம்
பொல்லாவிட-மொன் றுறிற்பொன்னுமாடையும் பொன்னவற்கு
நல்காவிதியவற்குந் நவக்கோளுக்கும் பூசைபண்ணி
வில்லார்நுதலாய் விதிவகைநூலிட வேண்டுமே.

(எ-து.) வியாழ னுபயலிலக்கினத்தும் ஆகாதென்ற விடங்களினுநின்று லாகாது. உபநயனம் பண்ணினால் வியாதியாதல் அவமிருத்து வாதலுண்டாம். புத்திரனுக்கு ஒரு இலக்கினத்துக்கு நல்லனாய் ஒரு இலக்கினத்துக்குத் தீயனாயிருக்கில் பிரகஸ்பதிக்குப் பிரீதியாகப் பொன்னும் பீதாம்பரமுந் தானம்பண்ணி யுபநயனம் பண்ணலாம். எக்காலத்தும் பிராமண பூசையும் நவக்கிரகசாந்தியும் பண்ணிக் கொள்ளப்படும்—எ-று. (உச)

### இதுவுமது.

பன்னிரண்டாறுகான் கெட்டொடுமூன்றுயிர் மெய்யிற்பைம்பொன்
மன்னிலுபநயித் தோன்பிணியாதல் மரித்தறிடஞ்
சுன்னுங்குருதியுஞ் சென்மத்துமந்தத்துஞ் சூழிலங்கஞ்
சின்னம்படுகை திடமென்றனர்[illegible]ருந்திழையே.

(எ-து.) பிரகஸ்பதி [illegible]விய வுபயலிலக்கின [illegible]டங்களினும் சென்[illegible]த்துக்கும் கஉ, கூ, ச, அ, [illegible]ற்க உபநயனம் பண்ணில் வியாதியாதல் ம[illegible] சென்மத்தும் கஉ-ம் டிலக்கினத்துக்குஞ் சனி செ[illegible]மலிலக்கினத்துஞ் சந்திர ல[illegible]ண்டாம். இரண் இடத்துநிற்கில் அங்கவீனமுண்டாம்—எ-று (உரு)

### இதுவுமது.

மன்னவர்பன்னொன்றில் வைகாசியானியி னூலிடலாம்
பன்னிரண்டாமாண்டி லாவணியாடி பகர்வணிகர்க்
குன்னுமறையவர்க் காண்டேழினூலிட வுத்தமமாம்
பொன்னனையாய்கன் றெனப்போற்றுவார்களிப் பூதலத்தே.

(எ-து.) க்ஷத்திரியருக்குப் பதினொராம் வயதில் வைகாசியானியிலும், வைசியருக்குப் பன்னிரண்டாம் வயதில் ஆடியாவணியிலும், பிராமணருக் கேழாம்வயதில்

வசந்தருதுவாகிய சித்திரை வைகாசியிலும் உபநயனம் பண்ணலாம்—எ-று. (உசு)

இதுவுமது.

பொன்னவன்மீனம் பொருசிலைகண்டு பொருந்துமாண்டு
தன்னிகரில்லை யவனட்புறினுந் தகுந்தகாத
வின்னலுறும்பகை நீசத்துறிலின்ப மாம்வசந்த
மன்னதனுக்கிரு பக்கப்பருவமு மாமென்பரே.

(எ-து.) வியாழன் மீனந் தனு கர்க்கடகத்து நிற்கினும் மித்திரபவனங்களிலே நிற்பினும் உபயவிலக்கினத்துக்கு மனுகூலமல்லாத மாதத்தினுஞ் செய்யலாம். பகைநீசத்து நிற்கும் ஆண்டுதவிரப்படும். உபயவிலக்கினத்துக்கு அனுகூலனாயிருக்கிற சத்துரு நீசங்களி னின்றகாலமுஞ் சாந்திபண்ணி யுபநயனம் பண்ணலாம். பிராமணருக்கு வசந்தகாலமுத்தமம். மாசி பங்குனி ஆனி ஆடியுமாம்.—எ-று. (உஎ)

இதுவுமது.

சித்திரையத்தம் பனைசோதிதிங்கட்புட் டேர்புநர்த
முத்திரமூன்றுத்த மம்பூசமோணம் பரிசதய
மத்திமமீங்கிவற் றின்னின்ற [illegible] சகங்கள்சுபம்
வைத்தனனன்றென் று [illegible] ம் வாசிட்டனே.

(எ-து) சித் [illegible] சகம் அனுஷம் சோதி மிருகசீரிடம் அவிட்டம் [illegible] பூநர்பூசம் உத்திரத்திரயம் இவை உத்தமம். [illegible] ருவோணம் அசுவதி சதயம் இவை மத்திமம். இந்நாட்களிற் சுபாங்சகங்களிலே உபநயனம் பண்ணலாம்—எ-று. (உஅ)

இதுவுமது.

இருவகைப்பக்கத்து சன்றிரண்டேழைந்து மாறுமூன்றும்
பெருமதியிற்பதின் மூன்றும்பத்தேகா தசியும்பெறு
மிருள்செறிபக்கத்தி லாதியுநன்றென் றினவனையாய்
கருதுமறுநூல்வினைக் குக்கலைவல்லவர் கட்டினரே.

(எ-து.) பூருவபக்கத்தும் அபரபக்கத்தும், துதியை பஞ்சமி சத்தமி சட்டி திருதியையாம். பூருவபக்கத்துத் திரயோதசி தசமி ஏகாதசி அபரபக்கத்துப்பிரதமை இவைநன்று. அல்லாதவையாகாது—எ-று. (உசு)



இதுவுமது.

குற்றங்குணங்களை யெண்ணிக்குறுதிக மானநாளிற்
பெற்றதடிமீன் சிலைகுளிர்பெண்ணெழச் சுத்திபெட்டின்]
மற்றும்புகர்புந்தி மந்திரியங்சக மெட்சின்றாய்ச்
சொற்றனர்நூல்வினைக் கம்புலியங்சகஞ் சொல்லிலரே.

(எ-து.) முன்பு குறைகுணப்படலத்துச் சொன்னபடியே குணதோஷநிருபித்துக் குறுதிகமானநாளில் இடபம் மிதுனம் மீனம் தனு கர்க்கடகம் கன்னி இந்த விராசிகளுதயமாக அட்டமசுத்தியுண்டாக வெள்ளி புதன் வியாழன் இவர்களுடைய வாரோதயங்களிலே யுபநயனம்பண்ணலாம். சந்திரவாரோதயம் விசேஷித்துத்தவிரப்படும்—எ-று. ()

இதுவுமது.

உதயத்துமந்தத்து மாறெட்டினுமதி யும்பர்குருப்
புதனெட்டுமாறும் புகரேழுமாறெட்டும் பொன்னனையாய்
சிதைவிக்குமாண்பினைத் தீயவர்மூன்றாறு பன்னொன்றினி
விதமுற்றகாலநன் றல்லாவிடங்க ளிடர்தருமே.

(எ-து) சந்திரனுதயத்தும் கஉ, சு, அ, இவ்விடத்துநிற்கிலாகாது. புதனும் வியாழனும், சு, அ, இவ்விடத்துநிற்கிலாகாது. சுக்கிரன் சு, எ, அ, இவ்விடத்துநிற்கிலாகாது. பாபக்கிரகங்கள் ௩, சு, கக, இவ்விடங்களினிற்கி லுத்தமம். அல்லாவிடங்களினிற்கி லாகாது—எ-று. (௩க)

இதுவுமது.

சந்திரவட்டமம் வைகாசிகஞ்சென்ம மேழைந்தந்த
மந்தனர்நூலிடற் காகாதனவென்ப ரல்லவற்றின்
மூந்தியமூன்று மொழிந்தநாட்களு முத்தமமா
மந்திரிவாசிட்டன் கார்க்கிடனான்முறை வைத்தனனே.

(எ-து.) சந்திராட்டமமு [illegible] சிகமும் சென்மத்திரயமும் வதநட்சத்திரமும் பி [illegible] ட்சத்திரமும் இருபத்தேழாநட்சத்திரமும் பிராம [illegible] கிய மூன்று வருணத்தார்க்கும் உபநயனத்துக்காகா [illegible] ல்லாத சம்பத்துநட்சத்

திரமும் விபத்துநட்சத்திரமும் க்ஷேமநட்சத்திரமும் சாதகநட்சத்திரமும் மித்திரநட்சத்திரமும் பரமித்திரநட்சத்திரமும் உபநயனத்துக்குக்குமிகவுநன்றும்—எ-று. (௬௨)

### வேதாரம்பம்.

வாரணமாதிமூன் றைப்பசிபூசங்கள் வாரணம்புள்
நாரணன்னீசன் பனையுருளுத்திர காவாய்நன்று
மோரணிமுற்றிதி நன்றெட்டிருத்தையுவா வொழிந்தாங்
காரணமோதமுன் கல்விக்குரைத்தவு மாமென்பரே.

(எ-து.) அத்தம் சித்திரை சோதி அசுவதி புநர்பூசம் பூசம் சதயம் அவிட்டம் திருவோணம் திருவாதிரை அநுடம் உரோகிணி உத்திரத்திரயம் இரேவதி இந்நாட்களிற் பூருவபக்கத்திலே அட்டமி இருத்தை உவாவுமொழிந்ததிதிகளிலே சரராசி யுபயராசி யுதயமாக வேதாரம்பம்பண்ணலாம். இவ்விடத்துச் சொல்லிச்சொல்லாதன வித்தியாரம்பத்துக்குச் சொன்னபடியே கொள்க—எ-று. (௬௩)

### உபாகன்மம்.

வடிக்கதிர்கண்டரி தோகைசேர்சாந்திர மாதங்களி
னடக்குறுப்வேத வுரைநூலவின்றநா ணற்கோளெழத்
துடக்குறுமாரண மென்றுசொன்னார்துடி நேரிடையாய்
முடிப்பதுபின்பொழு தாந்திங்கள்வாரோ தயமுறவே

(எ-து.) ஆதித்தியன் கர்க்கடகம் சிங்கம் சன்னி இவற்றிலேநிற்க சாந்திரமாதங்களிற்பூரணையிலே தத்தஞ் சூத்திரங்களிற் சொன்னாளிலே சுபக்கிரகோதய நோக்குண்டாக உபாகன்மம்பண்ணுவது. நடக்குமென்றதனால் சுக்கிரன் அத்தமயமின்றியிருக்கி லுபாகன்மத்துச் சிங்கமாதமுத்தமம். யாதாயி னுமொருவித்தையை முடிக்குமிடத்து அபாரணத்திற் சந்திரவாரோ[redacted]லே முடிப்பது—எ-று. (௬௪)

[redacted]த்தனம்.

மறைநூன்முறையே வி[redacted] மயிர்வினையின்
முறையேயகாலத் துரு[redacted]கன்மூன் முத்திரங்க



றைசேர்பனையிரு பூசமத்தந்தோணி மான்றலையிற்
கொறிமீனரிதே லொழிந்தெட்டுச்சுத்திகொள் கோமளமே.

(எ-து.) வேதமுறையே நாலு விரதங்களையும் அவரவர்சூத்திரஞ்சொன்னபடியே உத்தராயனத்திலே விவாகத்துக்குமுன்னே சௌளத்திற்குச் சொன்னநாளினு முகூர்த்தத்தினுமுடிப்பது. பின்பு சமாவர்த்தனம் பண்ணுமிடத்து உத்திரத்திரயம் அநுஷம் புநர்பூசம் அத்தம் இரேவதி மிருகசிரிஷம் இந்நாட்களிலே உரோகிணி திருவோணம் மேடம் மீனம் சிங்கம் விரிச்சிகம் ஒழிந்தவிராசிகளிலே அட்டமசுத்தியாகப் பகற்காலத்திலே ஆகாசநின்மலமா யிருக்கச்செய்வது—எ-று. (௬௫)

### இதுவுமது.

போற்றியபஞ்சாங்க யோகம்பொருந்த வருணைங்களிற்
சாற்றியமூவருக் குஞ்சமாவர்த்தன மற்றொழிந்தோர்க்
கேற்றினர்நல்லவிழை யுடுத்தற்குமென் றெண்ணின்மிகோர்
கூற்றெனச்சொல்லினன் றென்கடுவைக்கிறை கோமளமே.

(எ-து) சமாவர்த்தனம் பண்ணுமிடத்துப் பஞ்சாங்கயோகநன்றாகக்குணாதிகமான சுபமுகூர்த்தத்திலே மூன்றுவருணத்தார்க்குஞ் சமாவர்த்தனக்கிரியை முடிப்பது. ஒழிந்தோர்க்குப் புண்ணியதீர்த்தங்களின் மூழ்கியிரண்டு நவவஸ்திரமுடுத்துப் பத்திரகாளிபூசை செய்து மீளுவதென்று பலசாத்திரங்களெடுத்துச் சொல்லுவது—எ-று. (௬௬)

மைந்தர்வினைப்படல முற்றிற்று.
ஆகக்கலித்துறை ௬௭.

---

## ஏர்மங்கலப்படலம்.

### பூமிப்பிரவேசம்.

சித்திரைபூச மகம்பனைசோதி சிவம்பரணி
யுத்திரமூன்று விடைகன்னிதேளன் றுறுநவமி
பத்திரைநீத்து வியாழமதிபுந்தி பார்மகனுட்
நல்லெட்டியிற் பூப்பிரவேசந் துடியிடையே

(எ-து) சித்திரை பூசம் மகம் அனுஷம் சோதி திருவாதிரை பரணி உத்திரத்திரயம் இந்நாட்களிலே இடபம் கன்னி விரிச்சிகம் இவ்விராசிகளுதயமாக நவமி பத்திரையொழிந்த திதிகளிலே வியாழன் திங்கள் புதன் செவ்வாய் இவ்வாரோதயங்களிற் பூமிப்பிரவேசனம பண்ணுவது—எ-று. (க)

ஏர்ப்பூட்ட.

தேரிருபூசங் கேட்டகையத்த முத்திரங்கள்
மூரிதடிகுளிர் மீன்கலைசென்மங்கள் மூன்றுநன்று
மேர்வினைசெய்யி லிசையுஞ்சிறப்பெழி லார்கடுவைப்
பேரறிவாளர் பெருவளம்போலப் பிறைநுதலே.

(எ-து.) உரோகிணி புநர்பூசம் பூசம் இரேவதி மூலம் அத்தம் உத்திரத்திரயம் இந்நாட்களிலே இடபம் மிதுனம் கர்க்கடகம் மீனம் மகரம் சென்மலக்கினம் சென்மத்திரயம் சுபவாரோதயங்கள் சம்பவிக்கஉழுதல் நன்றாம்—எ-று. (உ)

இதுவுமது.

கன்னியர்மூன்றாக கன்னுளிலேகிக்கார் வண்ணனுடன்
மன்னிலமாதை வணங்கிப்படைச்சான்மூன் றைந்துவரத்
தென்னெனவண்டடை பூங்குழன்மாதே செழுநிலந்துப்
பொன்னுறமேர்ப் பூட்டப்போகம் விளைக்குஞ்செழும்புவியே.

(எ-து.) கன்னிகைகள் மூன்றாக முன்னேர்ப்பூட்டச்சொன்னநாளிலே தனது காணியிற்போய் அவவிடத்திலே தரணியதிபதியா யிருந்துள்ள புருடோத்தமனையும் பூமதேவியையும் வணங்கி ஏர்ப்பூட்டிக் கிழக்குறவாதல் வடக்குறவாதல் மூன்று படைச்சால் ஐந்துபடைச்சால் உழுதுவிடப் பூமதேவி மிக்கபோகங்களைக் கொடுப்பள்—எ-று. (ஙு)

கலப்பைச்சக்கரம்.

இரவிநிலைத்திடு நாண்முன்பின்மூன்று மிருநுகத்தில்
விரவிமொழுமுழுநீது மேழியிலோ ரிரண்டும்
பரவுபின்னுணி படைவாயிலாறும் பலன்மத்திமந்
திரமுறமேர்க் காணவிளைந்தாருக் கினியனிதே.

(எ-து.) கலப்பைபோல வரைந்து ஏர்முடியினடுவின் ஆதித்தியனின்ற நாளை வைத்து வலமாகவெண்ணி யிதனுடன் மூன்றுநாளும் நுகத்திலாறுநாளுமாகாது. மேழியில்



டுநாளும் பின்னுணியின் மூன்றுநாளும் மகாமுயமல. மூன்றுநாளு மத்திமம். ஏர்க்கானடுவிற் பத்துநாளு முத்தமம். (ச)

விதைக்க.

காலம்பெறவானி யாடியிற்காதல்செஞ் சாலிவித்தன்
மூலங்கலமக முற்றில்விளக்குருள் பூசமத்தந்
தாலமரிசுண்ண முத்திரமூன்றுத்த மம்புநர்தஞ்
சிலந்தரும்பரி மான்றலைசெங்கைபுண் மத்திமமே.

(எ-து.) ஆனி ஆடிமாதத்திலே யாவர்க்கும் விருப்பமுடைய நெல்லுவிதைப்பது. விதைக்குமிடத்து மூலம் இரேவதி மகம் விசாகம் சோதி உரோகிணி பூசம் அத்தம் அனுஷம் திருவோணம் சதயம் உத்திரத்திரயம் இவையுத்தமம். இபுநர்பூசம் அசுவதி மிருகசீரிடம் திருவாதிரை அவிட்டம் இவை மத்திமம்—எ-று. (ரு)

இதுவுமது.

விடைகலைசியங் குளிர்மீனநன்று வியன்றுலைசா
றடியிவைமத்திம மட்டமசுத்திகொள் சாலிவித்தற்
சுடரவன்கால்வார மெட்சியுமுத்தமஞ் சுங்கனெழிற்
கடியனென்றூர்குரு வெட்சிநன்றாங்குழற் காரிகையே.

(எ-து.) இடபம் மகரம் சிங்கம் கர்க்கடகம் மீனம் இவையுத்தமம்; துலாம் கும்பம் மிதுனம் இவைமத்திமம்; அட்டமசுத்தியுண்டாக நெல்லுமுதலியதானியங்கள் விதைக்கநன்று; ஆதித்தியன் வாரோதயாங்சம் நன்று; நெல்லுவிதைக்க எம் இடத்துச் சுக்கிரன்காது; விருகற்பதி யுதயலக்கினமுத்தமம்-எ-று.

ஆசையிற்கேக வடைத்ததினத்தி லணிதிதியிற்
பேசுறும்வாரத்தில் யோகினிபின்வலம் பெற்றகாலை
யேசுறுதிக்கை யடைத்தவிராசி கிரமொழியப்
பேசுவர்நல்லோர் பெருவிதைக்கேகப் பிறைநுதலே.

(எ-து.) மேல்யாத்திரை சொல்லுமிடத்துத் திக்குக்களுக்கடைத்த திதிவாரநாட்களிலே யோகினி பின்னும்வலமுமாகத் திக்குக்களையடைத்த இடபம் சிங்கம்விரிச்சிகம்கும்பம் ஒழிந்தராசிகளிலே நெல்லுமுதலானவற்றை விதைக்கப்போவது—எ-று. (எ)

### இதுவுமது.

காரிதன்வாரத் திடையாம்பொழுதிற் கருந்தானியம்
பாரித்துவித்தலும் பார்மகன்வாரத் தவனெட்சியி
னேரொத்தகொள்வித்த னெல்வித்தல்ஞாயி றெழுவவன்றன்
வாரத்துநன்றாங் கொடிவைத்திடமூல நன்றென்பரே.

(எ-து.) சனிக்கிழமையிலே மத்தியானகாலத்திற் சனியுதயமாகக் கறுப்புத்தானியம் விதைக்கலாம். செவ்வாய்க்கிழமைச் செவ்வாயுதயமாகக் கொள்ளுவிதைக்கலாம். ஞாயிற்றுக்கிழமை சூரியோதயமாக நெல்லுவிதைக்கலாம். மூலத்திற் கிழங்கு கொடி வைக்கலாம்—எ-று. கொடியென்கையால் வெற்றிலைக்கொடி வைக்கவும்பெறுமென்க. (௮)

### பலபயிரிட.

கரும்பாங்கரும்பிற் கமுகாம்பரியிற் பயறுநன்றாம்
வருந்துமறுவையிற் சோதியிற்பூமர மாஞ்சகடத்
தரும்பார்பலவாம் பரணிவழுதுணை யாம்பனையிற்
செருந்தாருழுந்தாங் கரியனவித்திடச் செக்குநன்றே.

(எ-து) புநர்பூசத்துக் கரும்புநடுவது, அசுவதியிற் கமுகுநடுவது, சித்திரையிற் பயறுவிதைப்பது, சோதியிற் பூமரம்வைப்பது, உரோகிணியிற் பலாவைப்பது, பரணியில் வழுதுணைநடுவது. அனுஷத்தி லுழுந்துவிதைப்பது. சதயத்திற் கருந்தானியங்கள் விதைப்பது—எ-று. (௯)

### இதுவுமது.

பனையாம்பனையிற் படர்கிழங்காங்குரு கிற்கடுகுந்
தினையாஞ்சதயத்திற் செப்பியநாளெட்சி யிற்கிழங்கு
வினையாமதோமுக நாளின்மேனேக்கின மேன்முகத்தாம்
பனையாம்படரு வனபக்கவானனத் தாமென்பரே.

(எ-து.) அனுடத்திற் பனைவிதையிடுவது. மூலத்திற் படர்கொடி கிழங்கிடுவது. சதயத்திற் கடுகுந்தினையும் விதைப்பது. இவ்விடத்துச் சொன்னநாட்களுதயமாகவும், இந்த மரங்கள் பயிர்கள்வைக்கவும் பெறும். முன்சொல்லிப்போந்த அதோமுகநாளிலே யதோமுகமானராசி யுதயமாகக் கிழங்குநடுவது. மேன்முகமானநாளிலே மேன்முகமான ராசியுதயமாகப் பனைமுதலிய மரங்கள்வைப்பது. திரயமுகமான நாளிலே திரயமுகமான ராசியுதயமாகப் படர்கொடிமுதலியன வைப்பது—எ-று. (௧௦)



### நாற்றுநட.

வித்திற்கடைத்தவன் றனின்மேன்முக வோரையெழ
வொத்தபிறையொ டிருத்தையுவாவட் டமியொழித்துச்
சுத்ததிதியிற் சுபரெட்சியிற்சொன்ன வோரையினின்
முத்தனவெண்ணகையாய்நடச்சொன்னர் முனிவர்களே.

(எ-து.) விதைக்கச்சொன்ன நாளிலே ஊர்த்துவமுகமானராசிகளுதயமாக பூருவபக்கத்திருதியையளவான திதியுமானராசிகளுதயமாக பூருவபக்கத்திருதியையளவான திதியு மிருத்தையுமுவாவு மட்டமியுமொழிந்த நல்லபக்கத்திலே சுபக்கோளுதயமாக விதைக்கச்சொன்ன லக்கினத்திலே நெல்லு நாற்றுநடலாம். வித்துநீக்கிடுமிடத்துச்சுபநாளாம்—எ-று.

### கதிரறுக்க.

பன்னுங்கதிர்க ளறுத்தற்குச்சோதி பனைமகம்யாழ்
மன்னிருபூச முலக்கைபுண்மான்றலை தோணிமூல
முன்னுமுறமத்த முத்திரமூன்றுரு டேர்சதயம்
பின்னுமறுவை புதன்சனிபொன்பெறும் பெண்ணணங்கே.

(எ-து) சோதி அனுடம் மகம் அசுவதி புநர்பூசம் பூசம் திருவோணம் அவிட்டம் மிருகசிரிடம் இரேவதி மூலம் விசாகம் அத்தம் உத்திரத்திரயம் உரோகிணி சதயம் சித்திரை இந்நாட்களிலே புதன் சனி வியாழம் இவ்வாரோதயங்களிலே பொங்கல்பண்ணிக் கதிரெடுப்பது—எ-று. (௧௨)

### இதுவுமது.

மேடமுந்தேளும் விரும்பிலர்மிக்க புதன்வியாழ
னுடியவாரோ தயகாலிலம்பொ னவின்றபொன்கா
ணீடியநாளிலக் காலமறுக்க நன்றுநிரையே
தேடியகாயிலை பூப்பறித்தற்குமீன் றேண்மதியே.

(எ-து) மேடம் விரிச்சிகமொழிந்த ராசிகளிலே புதன் வியாழன் வாரோதயங்களிலேயாதல் சும் இடத்து வியாழனிற்க வியாழனங்சத்தாதல் நெற்கதிரெடுப்பது. மீனம் விரிச்சிகம் மேடம் அடைவே காயிலைபூப்பறிப்பது—எ-று. (௧௩)

### தானியப்பிரவேசம்.

ஓணம்பரணி மகஞ்சிவனத்தமு ருண்முறத்திற்
கோணரவம்புதன் நீள்குருவாரோ தயங்குளிகன்
றூணுப்பெறுமோரை கண்டேழினிற்பொன் றருமிரண்டே
பேணப்படுஞ்சுத்தி நெல்லறுததிற்புகப் பேரிதமே.

(எ-து.) திருவோணம் பரணி மகம் திருவாதிரை அத்தம் உரோகிணி விசாகம் இந்நாளிலே, சனி இராகு புதன் வியாழன் இவர்கள் வாரோதயங்களிலே திரராசிகளுங் கர்க்கடகமுங் குளிகோதயமாக வியாழன் எம் இடத்துநிற்க உம் இடஞ்சுத்தியாகத் தானியப்பிரவேசம்பண்ணுவது—எ-று.()

### தானியம்வைக்க.

உலையாதமுற்றில் பரணியிலோணத்தி னிற்கடையி
னிலையானகாலி னெறிகுளிர்தேளெழ கொற்கொடுபோய்க்
குலையாதகூட்டிற் குருபடுங்காலையிற் கூடவிட
மலையாமெனப்பல சோதிடநூன்முறை வைத்தனவே.

(எ-து.) விசாகத்திலும் பரணியிலும் திருவோணத்திலும் நாலாங்காலிலே கர்க்கடகம் விரிச்சிகம் உதயமாக வியாழன் எம் இடத்திலேநிற்க நெல்லுமுதலியதானியங்கள் கூட்டிலேயிட மலைபோலப்பெருக்கமுண்டாம்—எ-று. (கரு)

### புதிதுண்ண.

பறவைகலம்பரி யோணம்பனையுத்தி ரங்கண்மூல
மறுவைவிளக்கிரு பூசமகமத்த முற்றில்சுண்ணஞ்
செறிசகடமான் றலைநன்றுமேடமீன் றேளொழியப்
பெறுமுதயத்துப் புதிதுண்ணலாமென் பிறைநுதலே.

(எ-து.) அவிட்டம் இரேவதி அசுவதி திருவோணம் அனுடம் உத்திரத்திரயம் மூலம் சித்திரை சோதி புனர்பூசம் பூசம் மகம் அத்தம் விசாகம் சதயம் உரோகிணி மிருகசீரிடம் இந்நாட்களிலே மேடம் மீனம் விரிச்சிகமொழிந்த ராசிகளிலே சுபக்கிரக வாரோதயமாகப் புதிதுண்ணலாம்—எ-று. (கசு)



### இதுவுமது.

அன்னவிதியிற் கடைத்தலையாவு மணியில்லையாய்
தன்னுடைநாளொழிந் தல்லாதசன்மமும் பத்திடத்துப்
பொன்னொழித்துச்சுத்தி யும்புதிதுண்ணப் பொலிவுடைய
நன்னிலவெட்சியு நற்கோளுறுமீனு நன்றென்பரே.

(எ-து) சொல்லிச் சொல்லாதன அன்னப்பிராசனத்துக்குச் சொன்னபடியே கொள்க. சென்மநட்சத்திரமொழிந்த பத்தாநாளும் இருபதாநாளும் க0-ம் இடத்துவியாழனொழிந்தாற், சுத்தியும் பூருவபக்கச் சந்திரோதயமும் சுபக்கிரக நிற்கப்பட்ட மீனமும் புதிதுண்ணலாம்.

ஏர்மங்கலப்படல முற்றிற்று.

ஆகக்கவித்துறை௱எச.

---

## தெய்வப்பிரதிட்டைப்படலம்.

### நாராயணப்பிரதிட்டை.

திருத்தகுமன்னர்க்கு மூர்க்குந்தலைவற்குஞ் செய்யகண்ணாய்
பொருத்தம்பெறமாசி யாடிபுரட்டாதி மார்கழியும்
வருத்தம்பெறநீத்து வான்புகர்பொன்னொளி வாய்த்தநாளிற்
கருத்துறுகண்ணனைத் தாபிக்கலாமென் கனங்குழையே.

(எ-து.) இராசாவுக்கு மூருக்கும் யசமானுக்கும்பொருந்த மாசி ஆடி புரட்டாதி மார்கழி ஒழிந்தமாதங்களிலே வியாழன் சுக்கிர னத்தமயமில்லாத காலத்திலே விஷ்ணுவைப்பிரதிட்டை பண்ணலாம்—எ-று. (க)

### இதுவுமது.

தோணிபனைகுன்று புட்காரஞ்சோதி மதிசகடஞ்
சோணமிருபூசஞ் சித்திரையுத்திரந் தூயபக்கம்
பேணுநல்வார மிருமாண்பிராசிதே னீத்தநிரங்,
காணுநான்கட்டம சுத்தியிற்றாபனங் கண்ணனையே.

(எ-து.) இரேவதி அனுஷம் சதயம் அவிட்டம் அத்தம்சோதி மிருகசீரிடம் உரோகிணி திருவோணம் புனர்

பூசம் பூசம் சித்திரை உத்திரத்திரயம் இந்நாட்களிலே; சுபதிதி சுபவாரத்திலே உபயராசியாதல் விரிச்சிகம் ஒழிந்த திரராசியாதல் உதயமாக ஈ, அ, இவ்விடஞ்சுத்தியாக விஷ்ணுவைப் பிரதிட்டை செய்வது—எ-று. (உ)

## சிவப்பிரதிட்டை.

மாசியொழிய வுறுமுத்தராயண காலநன்று
மாசில்சீர்த்தெக்கணத் தைப்பசியாவணி யாங்கரனைப்
பேசுவர்தாபன மட்டமராசி யொழிந்துபெற்ற
தேசுறுசென்மங்க டாபனத்திற்குச் சிறப்புடைத்தே.

எ.து.) சிவப்பிரதிட்டை பண்ணுமிடத்து தைமுதலான உத்தராயனத்து மாசியொழிந்தவைந்துமாதத்திலுஞ் செய்யப்படும். ஆடிமுதலான தெக்கணயனத்து ஆவணியும் ஐப்பசியிலுஞ் செய்யலாம். முன்புசொல்லிய மூவருக்குஞ் சந்திராட்டமந் தவிர்ந்து அநுகூலமான நாளிலுஞ் சென்மத்திரயங்களிலுஞ் செய்யப்படும்—எ-று. (ங)

## இதுவுமது.

பரிமதிசோதி யுருள்பனையுத்திர மூன்றுமத்த
முரிதொழுப்பூசங் கரும்புத்தமம்புள்ளு மூலமக
மரியான்குன் றிவை மத்திமமானபஞ் சாங்கநன்றாந்
திரமெழவீசனைத் தாபிக்கலாமென் சிலைநுதலே.

(எ-து.) அசுவதி மிருகசீரிடம் சோதி உரோகிணி அனுடம் உத்திரத்திரயம் அத்தம் இரேவதி பூசம் புநர்பூசம் இவையுத்தமம். அவிட்டம் மூலம் மகம் திருவோணம் திருவாதிரை சதயம் இவை மத்திமம். இந்நாட்களிலே பஞ்சாங்கயோகநன்றாகக் குணாதிகமான திரராசியிலே சிவப்பிரதிட்டை பண்ணுவது—எ-று. (ச)

## இதுவுமது.

மேவியவட்டம சுத்தியின்மிக்கநற் கோளெட்சியிற்
றேவரைத்தாபிக்க நன்றுமுபயமுஞ் சீருடைத்தாந்
தேவியர்தங்கட் குபயநல்லோரையைச் செப்புவராந்
தாவில்சீர்ச்சத்தியைத் தாபிக்கலாந்திரந் தாழ்குழலே.



(எ-து.) சிவப்பிரதிட்டை பண்ணுமிடத்தும் மற்றுமுண்டானபிரதிட்டைக்கும் அட்டமசுத்தியுண்டாகசசுபக்கிரகோதயம் பார்வையுண்டாகக் கொள்வது உபயராசியுமாம். தேவிமாரைப் பிரதிட்டைபண்ணுமிடத்து உபயராசி பிரதானம். மூலசத்தியைப் பிரதிட்டைபண்ணுமிடத்துத் திராசியிலே கொள்ளப்படும்—எ-று. (ரு)

## சகலப்பிரதிட்டை.

மூன்றுத்திரங்கள் குருத்தோரியின் முனரியனை
யென்றகுருகினின் மாதிருவைக்கரி யிற்கதிரை
யான்றவரவை யியக்கரைத்தாலத் தறுமுகனை
யேன்றவிசாகத்தி லிந்துவையிந்துவிற் றுவிப்பரே.

(எ-து.) உத்திரத்திரயம் பூசம் உரோகிணி திருவோணம் இவற்றிலே பிரமாவையும் மூலத்திலே சத்தமாதர்களையும் அத்தத்திலே ஆதித்தியனையும் அனுஷத்திலேநாகதேவரையும் இயக்கரையும் விசாகத்திலே சுப்பிரமணியக்கடவுளையும் மிருகசிரிடத்திலே சந்திரபகவானையும் பிரதிட்டைசெய்வது—எ-று. (சு)

## இதுவுமது.

திருவினுக்குத்திரம் பூமிக்குதோரிவை சுழலாங்
கரிமுகற்குச்செங்கை சேட்டைக்குக்கேட்டையிர் காரியருக்
கருளுறுமாதிரை பாரதிக்குத்தோணி யம்பிகைக்குத்
தெரிவுறுபூரஞ் செழுமண்டதேவர்க்குச் சித்திரையே.

(எ-து.) இலக்குமியை யுத்திரத்தும் பூமாதேவியை யுரோகிணியினும் துர்க்காதேவியைக் கார்த்திகையினும் விநாயகனைத் திருவாதிரையினும் சேட்டாதேவியைக் கேட்டையினும் சாத்தாவையுங் கேத்திரபாலனையுந் திருவாதிரையினும் சரசுவதியை யிரேவதியினும் உமாதேவியைப் பூரத்தினும் அண்டதேவரைச் சித்திரையினும் பிரதிட்டைசெய்வது—எ-று. (எ)

## இதுவுமது.

கூறியகுற்றத் மனைத்தையுமோர்ந்து குணாதிகத்து
வாறியவேழிற் கதிர்புகர்மால்சனி யுந்தத்தினி

ஓரறவர்திங்க ளதோமுகவெட்சி யொழியவானந்
தேறியவானனத் தோரையிற்றுபன நன்றென்பரே.

(எ-று.) முன்சொல்லியபடியே குணதோஷமாராய்த்து குறைதிகமான நாளிராசியிலே எ ம இடத்து ஆதித்தியன் சுக்கிரன் புதன் சனி இவர்கணிற்க கஉ, மிடத்துப் பாபக்கிரகங்களுஞ் சந்திரோதயமு மதோமுகராசி யொழிந்தலக்கினத்திலே ஊர்த்துவமுகராசி யுதயமாகச் சகல பிரதிட்டைகளும் பண்ணுவது—எ-று. (அ)

இதுவுமது.

திரத்தினிற்றிங்கணற் காலிற்றிரமெனிற் சேர்பெருகுந்
தாத்துச்சநட்பின் மதிநன்றுதாபனத் திற்குநற்கோள்
வரத்துச்சநட்பாட்சி யுற்றிரண் டெட்டியின் மன்னிலாமு
முரித்தகண்டத்தொன்ப தைந்தினிலாயத்தி லுற்றநன்றே.

(எ-து.) சந்திரன் திரராசியிலே சுபாங்சகத்தே நிற்பத்திரராசியிற் சுபோதயமாகிற் பிரதிட்டை மிகவுநன்று. சந்திரனட்பாட்சியுச்சத்திலே நிற்கவும் பிரதிட்டைபண்ணலாம். சுபக்கிரகங்கள் நட்பாட்சியுச்சத்திலே நிற்க உதயம் உ, கேந்திரம் சு, ரு, கக, இவ்விடங்களினிற்கப் பிரதிட்டைபண்ணுவது—எ-று. (கூ)

இதுவுமது.

நற்கோன்மதியகை நீசத்துறினுநாற் கண்டத்திடை
புற்கோளெளினுஞ் சனிபூமன்வெய்யவன் போரரவஞ்
சொற்கூடுதயத் திரண்டினின்றுற்றுயிர் மூவருக்கு
மூற்கூறுதீயவர் மூன்றுறுபண்ணென்று நன்றென்பரே.

(எ-து.) சுபக்கோளுஞ் சந்திரனும் பகைநீசத்து நிற்பினும் நாற்கண்டங்களிலே பாபக்கிரகங்கணிற்பினும் சனியுஞ் செவ்வாயும் *ஆதித்தியனும் ராகுவும் உதயத்தும் உ,மிடத்து நிற்பினுநன்றல்ல. அக்காலத்துப்பண்ணின பிரதிட்டை இராசாவுக்கும் ஊருக்கும் மெசமானுக்கும் பொல்லாது. பாபக்கிரகங்கள் ங, சு, கக, இவ்விடங்களினிற்கின் மிகவும்நன்றாகும். சந்திரனுக்குப் பகையில்லையாம்—எ-று. (கO)

* ஆதித்தியனுதயம் நன்றென்பாருமுளர்.



இதுவுமது.

அரியரன்வெய்யோன் கணபதிகந்த னயன்வடுகன்
றரைமகள்சூலி பகவதிமோடிபொன் சாவித்ரிக்குப்
பெரியவர்தங்கட்குப் பேசியதாபன மல்லவர்கட்குத்
தருமுறையாகமத் தின்படிகொள்க தளிரடியே.

(எ-து.) விட்டுணு சிவன் சூரியன் விநாயகன் சுப்பிரமணியக்கடவுள் பிரமன் கேத்திரபாலன் பூமதேவி துர்க்கை ஈசுவரி சேட்டாதேவி இலக்குமி சரசுவதி இவர்கட்குப் பிரதிட்டைசெய்யுமிடத்து முன்சொன்னபடியே செய்யவும். ஏனையதேவதைகட்கு அவரவராகமங்களிற் சொன்னபடியே பிரதிட்டைசெய்வது—எ-று. (கக)

இதுவுமது.

சிங்கங்கதிர்க்குந் தடிசிவனுக்குங் குடம்விதிக்கு
மங்கையரிக்கு மலைமகளுக்குங் கலைமகட்குந்
தங்குஞ்சிலைமீன் சாஞ்சாத்தனுக்கும் வடுகனுக்குஞ்
செங்கயற்கண்ணு யுபயங்கடாயனங் தேவியர்க்கே.

(எ-து.) சிங்கமுதயமாகச் சூரியனையும் மிதுனமுதயமாகச் சிவனையும் கும்பமுதயமாகப் பிரமனையும் கன்னியுதயமாகவிட்டுணுவையும் தனுமீன முதயமாக வீசுவரியையும் இலக்குமியையும் சரசுவதியையும் சரராசியுதயமாகச் சாத்தனையும் கேத்திரபாலனையும் திரராசியுதயமாக மற்றுமுள்ள தேவிமாரையும் உபயராசியுதயமாக மற்றுமுள்ளதேவர்களையும் பிரதிட்டைசெய்வது—எ-று. ()

தெய்வப்பிரதிட்டைப் படலமுற்றிற்று.

ஆகக்கவித்துறை ருஅச.

---

## தெய்வவழிப்படலம்.

---

### கொடியேற்ற.

மாதத்தினத்திறு மன்னவனுளிறு மூர்தினத்துஞ்
சீர்தருசங்கிர மத்திலுந்தீர்த்தம தாவனமுன்

மேதகுமூவொன்ப தீரொன்பதோரொன் பதில்விளங்கக்
கோதினன்னூன் முறையேகொடியேற்றுக கோமளமே.

(எ-து.) மாதநட்சத்திரத்திலும் இராசாவினட்சத்திரத்திலும் கிராமநட்சத்திரத்திலும் சங்கிரமதிவசங்களினும் தீர்த்தமாகநிச்சயித்து இதற்குமுன்னே இருபத்தேழாநாளாதல் பதினெட்டாநாளாதல் ஒன்பதாநாளாதல் தேவர்கட்குத் தந்தஞ்சாத்திரங்களிற் சொன்னபடியே கொடியேற்றுவது—எ-று. (௧)

இதுவுமது.

திங்கட்செயனல்ல வாகத்திமொழித் துத்திருநா
ளங்கத்தெழுசசி யந்தணனேக்கச் சமுதிப்பத்
துங்கக்கொடியேற வுந்தூயரீரா டிடைப்பொழுதிற்
தங்குந்திரமெழவுஞ் சாலநன்றென்பர் சான்றவரே.

(எ-து.) திருநாளெழுந்தருளப்பண்ணுமிடத்துச் சந்திரன் சுபகன்ம கேதனனைகச் சரராசி யுபயராசி யுதயமாகவும், கொடியேற்றுமிடத்துச் சந்திரன் சுபகன்மகேதனனைக வியாழனேக்கச் சரராசியுதயமாகவும் தீர்த்தம்பிரசாதிக்குமிடத்து மத்தியானகாலத்திலே திரராசியுதயமாகவுநன்று—எ-று.

இதுவுமது.

சோதிபனையத்தம் பண்டிமூன்றுத்திரஞ் சோணைபரி
யாதியிலட்டமி யந்தச்சதுர்த்தசி யாரல்வார
மாதிருவிற்கிவை தீர்த்தமதாக வகுத்துமுன்னே
யோதுவரோழ்தினஞ் சாந்திசெவ்வாயினி லூண்பலியே.

(எ-து.) சோதி அனுஷம் அத்தம் உரோகிணி உத்திரத்திரயம் திருவோணம் அசுவதி பூருவபக்கத்தட்டமி அபரபக்கச்சதுர்த்தசி செவ்வாய்க்கிழமை இவை தீர்த்தநாளாகக்கற்பித்து முன்னேயேழுநாட் பிராட்டியுற்சவநடக்கவும், செவ்வாய்க்கிழமைநாட் பெலியிடவுமாம்—எ-று. (௩)

பவித்திரதமனகம்.

ஆடியிலாவணி யிற்புரட்டாதியி லட்டமியில்
நாடுஞ்சதுர்த்த சியினயுர்தாரராற் குப்பவித்திரம்



பாடியசித்திரை யிற்காமபக்கத்துப் பௌரணையி
னீடுதயத்துத் தமனகஞ்சாத்து நிரைவளையே.

(எ-து.) சவுரமாதங்களால்வந்த ஆடி ஆவணி புரட்டாசியிலே பூருவபக்கத்தட்டமியிலாதல் சதுர்த்தசியிலாதல் சுபோதயமாக ஈசுவரனுக்குப் பவித்திரஞ்சாத்துவது. சித்திரைமாதத்துத் திரயோதசியிலாதல் பௌரணையிலாதல் சுபோதயமாகத் தமனகஞ்சாத்துவது—எ-று. காமபக்கமென்று திரயோதசிக்குப்பெயராயிற்று. பூருவபக்கத்துக்கு நாடுஞ்சதுர்த்தசியென்றார். (௪)

இதுவுமது.

குளிரரிகன்னியிற் கூடியசாந்திர மாதங்களி
லொளிகொடுவாதசி யோணத்திடையுவா வுற்றநற்கோ
டெளிவுறுமேன்முக வோரையிற்சேர்கொள் பவித்திரநூல்
துளவணிமாயற்குச் சாத்தநல்லோர்சொற் றுணிந்தனவே.

(எ-து.) சாந்திரமாதங்களால்வந்த ஆடி ஆவணி புரட்டாசியிலே பூருவபக்கத் துவாதசியிலாதல் பௌரணை திருவோணத்திலாதல் சுபக்கிரகோதயமாக ஊர்த்துவமுகராசியிலே விஷ்ணுவுக்குப் பவித்திரஞ்சாத்துவது—எ-று. (௫)

ஸ்ரீஜயந்தி.

திங்களுரோகிணி சேர்ந்தெழச்செங்கதிர் சிங்கமேறப்
பங்கப்படுமட் டமியிலிப்பார்பொறை தீர்வதற்கு
மெங்கட்பிறவி கெடுத்தற்கும்யாதவர் தங்குலத்துச்
செங்கட்டிருநெடு மாலவதாரமுன் செய்தனனே.

(எ-து.) சவுரமாதவகையா லாதித்தியன் சிங்கத்தினிற்பச் சாந்திரமாதவகையால்வந்த ஆவணிமாதத்து அபரபக்கத்தட்டமியும் புதன்கிழமையும் உரோகிணியுங்கூடியநாள் சந்திரோதயமாகக் கிருஷ்ணவதாரமான ஸ்ரீஜயந்தியுற்சவம் செய்வது—எ-று. (௬)

கிருத்திகாதீபம்வசந்தோற்சவம்.

கார்த்திகைக்கார்த்திகை யிற்கடைக்காலி னிடையுவாவிற்
சேர்த்தேறெழுத்தீப மேற்றுகசித்திரைச் சித்திரையிற்

பார்த்திரயோதசி யிற்*பவுரத்திற் பகனல்லகோண்
மூர்த்தம்பெறவசந் தங்கொள்கவென் றனர் பொய்குழலே.

(எ-து.) கார்த்திகைமாதத்துக் கார்த்திகை நாலாங்காலிலேயாதல் உரோகிணியிலாதல் பௌரணையிற்பிரதானமாக இடபவிலக்கினத்துத் திருக்கார்த்திகை விளக்கேற்றுவது. சித்திரைமாதத்துச் சித்திரையிலேயாதல் திரயோதசி பௌரணையிலேயாதல் பகலிலே சுபோதயமாக வசந்தோற்சவங்கொள்வது—எ-று. (எ)

ஏகாதசி.

இரவிதனுவுற் றிடுநாள்வளர்பிறை யேகாதசி
பரணியிற்செய்யவன் வாரத்திலேவரிற் பண்புடையோர்
விரவுறுமேகா தசிவிரதம்விதி யார்விரதந்
தகுதிதிவெய்யோ னுதயாதியிலே சரித்துமென்றே

(எ-து.) ஏகாதசிவிரதங்கொள்ளுமிடத்து ஆதித்தியன் றனுவிலேநிற்பப் பூருவபக்கத்தேகாதசி கொள்ளப்படும். செவ்வாய்க்கிழமையாதல் பரணியாதல் கூடுமாகி லவ்வாண்டு தவிரப்படும். திதிப்பிரதானமான விரதங்கள் சூரியோதயத்துண்டான திதியையே கொள்ளப்படும்—எ-று. (அ)

இராப்பகற்கொள்ளும் விரதம்.

அட்டமிசேரன்பு மமாவாசையும்பதி னன்குநான்குஞ்
சுட்டும்விரதஞ் சுடரவனுதிகொள் பூரணமு
மூட்டெனிவோணம் பிறந்தநாளாதிரை யுற்றநோன்புஞ்
சிட்டரிராவுள நாளினிற்கொள்ளென்று செப்புவரே.

(எ-து.) அட்டமி அமாவாசை சதுர்த்தசி சதுர்த்தி இவைகளில் அனுட்டிக்கும் விரதங்கள் சூரியோதயத்துண்டான திவசங்களிலே கொள்ளப்படும். பௌரணை திருவோணம் சென்மநட்சத்திரம் திருவாதிரை இவைகளில் அனுட்டிக்கும் விரதங்கள் இராத்திரியுண்டான திவசங்களிலே கொள்ளப்படும்—எ-று. (கூ)

* பவுரணையென்பது பவுரமென விகாரமாயிற்று



இதுவுமது.

உதையாதியிலுடைத் தாந்திதியேதிதி நாளிரவி
புதையாவிரவிலுண் டாயதுவாம்புகல் கின்றவிவை
சிதைவாங்கடிகையொ ராறுக்குளேற்றிரு வேகாதசி
யுதையாதியிலோர் கலையுளதாந்தின மோதுவரே.

(எ-து.) திதிசரிக்கும் விரதங்களுதயாதியிலே கொள்ளப்படும். நாள்சரிக்கும் விரதங்களிராத்திரியிலுண்டான திவசத்தைக் கொள்ளப்பெறும். இதில் இரட்டிக்கச் சொன்னதில் பகலாறு நாழிகைக்குள் திதியற்றாலும், இரவாறு நாழிகைக்குள் நட்சத்திரமற்றாலு மற்றைத்திவசந் தவிர்ந்து முன்னைநாளிலே கொள்ளப்படும். திருவேகாதசி விரதம் சூரியோதயத்திலொருகலைநின்று மேற்றுவாதசி கூடுகினுமன்று விரதங் கொள்ளப்படும். தசமி கூடினது வற்சிக்கப்படும்——எ-று. ஓதுவரேயென்று பன்மையிற் கூறியதாற் சகலாகம புராணங்களினுஞ் சொல்லப்பட்டதென்க. கலையாவது நாலரைவிநாழிகை.

அத்தோதய மகோதயம்.

நாட்டுங்கதிர்மதி யோணத்தெழவார ஞாயிறுக
மீட்டும்வியதிபாத மேவியநாளைநல் வேதியர்கள்
காட்டுமத்தோதய மென்றுரைத்தார்களங் கன்றினத்திற்
நீட்டுமகோதயஞ் செவ்வாய்க்கருங்கட் சிலைநுதலே.

(எ-து.) ஆதித்தியனுஞ் சந்திரனு மகரத்துத் திருவோணத்திலே நிற்க; ஞாயிற்றுக்கிழமையில் வியதிபாதயோகமுங் கூடிலத்தோதயம். இவை சோமவாரங்கூடின் மகோதயமெனப்படும். (கக)

தெய்வவழிப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை ருகூ.

## யாத்திரைப்படலம்.

யாத்திரைக் காகாதநாள்.

பாம்பாதிரைமுற்றில் கேட்டைபரணிமுப் பூரமாற
றீம்பான்முதற்சஷ்டி யஷ்டமிசேய்சனி சேரிருத்தை

சாம்பரலவிட்டி பகையானநாள்களிற் றக்கவெளி
போம்பாவிமீளா யமலோகஞ்சென்று புகுமென்பரே.

(எ-து.) ஆயிலியம் திருவாதிரை விசாசம் கேட்டை
பரணி பூரத்திரயம் கார்த்திகை பிரதமை சஷ்டி அஷ்ட
மி இருத்தை செவ்வாய்க்கிழமை சனிக்கிழமை விட்டி
க்கரணம் பகையான நாட்களிவைகளில் யாத்திரைபோ
மவன் யமலோகத்தை யடைவான்—எ-று. (க)

## திசையாத்திரை.

புரவிபணியத்தம் புட்டோணிமான்றலை பூசமோணை
மோனுறுமோரைகட் கெல்லாமுரைத்தனர் யாத்திரைக்குச்
சாமுறுமூங்கில் குருகுருடேர்சுண்ண மத்திமமாந்
தாமுறுமல்லவை சாற்றிடிக்கிற்குத் தக்கனவே.

(எ-து.) அசுவதி அனுடம் அத்தம் அவிட்டம் இரே
வதி மிருகசீரிடம் பூசம் திருவோணம் இவ்வெட்டுநாளி
லு மெல்லாத்திக்கிற்கும் யாத்திரை போகலாம். புனர்பூ
சம் மூலம் உரோகிணி சதயம் இவை மத்திமம். அல்லா
தநாட்கள் யாத்திரைக்குச் சொன்ன திக்குக்களிற் போக
லாம்—எ-று. (உ)

## இதுவுமது.

அங்கிமகம்பனை புண்முதலுளடை வேழுஞ்செவ்வாய்
திங்களுடன்சுன் புதனுடன்சீவன் கதிர்வெள்ளியுந்
தங்குங்கிழக்கு முதற்றயிரெட்டேன்பா லுண்டுபோகை
மங்கலநேர்கிழக்கும் வடக்குஞ்செலு மற்றுயின்னே.

(எ-து.) கார்த்திகை முதலேழுநாட் கிழக்கும், மக
முதலேழுநாள் தெற்கும், அனுடமுத லேழுநாள் மேற்
கும், அவிட்டமுத லேழுநாள் வடக்கும் போகலாம். வா
ரங்களில் செவ்வாய் கிழக்கும், திங்களுஞ்சனியுந் தெற்
கும், புதனும் வியாழனு மேற்கும், ஞாயிறும் வெள்ளியு
ம் வடக்கும் போகலாம். போகுமிடத்து கிழக்குத் தயிர்
புசித்தும் தெற்கு எள்ளுத்தின்றும் மேற்குத் தேனுண்டு
ம் வடக்குப் பால்புசித்தும் போக நன்று. இங்குச்சொன்



ன நாளுங் கிழமையு மடைத்ததிக்குக்கள் கிழக்குமேற்கு
ம் வடக்குந் தெற்கு மொக்கும்—எ-று. (ங)

## திசையிற் கழிக்குநாள்.

கிழக்கட்டமிசோனை கேட்டைதிங்கட்கே டியாத்திரைக்குச்
சழக்குறுதெற்குப் பரிபதஞ்சட்டி வியாழமேற்குப்
புழக்குமுருள்பூச முற்றிதிவெள்ளி வடக்குத்திரம்
வழக்கத்தம்புந்தி துவாதசிவாட்டினன் வாசிட்டனே.

(எ-து.) அட்டமி திருவோணம் கேட்டை திங்கட்கிழமை
இவற்றிற் கிழக்குப் போகலாகாது. அசுவதி பூரட்டாதி சஷ்
டி வியாழக்கிழமை யிவற்றில் தெற்குப்போகலாகாது. உரோ
கிணி பூசம் பிரதமை வெள்ளிக்கிழமை யிவற்றில் மேற்குப்
போகலாகாது. உத்திரம் அத்தம் துவாதசி புதன்கிழமையிவ
ற்றில் வடக்குப்போகலாகாது—எ-று. இவற்றைத் திக்குச்
சூலமென் றியாவருங் கழித்தார்களென்க. (ச)

## இதுவுமது.

அருக்கன்புகர் கிழக்கங்காரகன் றெற்கணிமதிசுன்
வருத்துறுமேற்குப் புதன்மந்திரிவடக்குப் பொருந்தா
வுரைத்தசரங்க ளுபயங்களூர்த்த முகவோரைநாட்
சிரத்துதயங்களும் யாத்திரைக்காமென்பர் தேமொழியே.

(எ-து) ஞாயிறும் வெள்ளியுங் கிழக்கு செவ்வாய் தெ
ற்கு திங்களுஞ் சனியுமேற்கு புதனும்வியாழமும் வடக்கு
பபோகலாகாது. சரராசியும் உபயராசியும் ஊர்த்துவமுகராசி
யும் நாளும் சிரோதய ராசியும் யாத்திரைக்குச் சிரேட்ட
மாம்—எ-று. (ரு)

## இதுவுமது.

ஒன்பதுமாதியு மந்தமுமில்லாத வொற்றைப்பக்க
மின்பந்தருஞ்சமத் திரைந்திரண்டு மினிமைதரு
மன்புறுபங்குனி கார்த்திகையாடியி லாயபோக்குத்
துன்பந்தருமென்று தொன்னூலுணர்ந்தவர் சொல்லினரே.

(எ-து.) பக்கங்களில் நவமியும் பிரதமையும் பூரணையு
மொழிந்த வொற்றித்தபக்கங்கள் யாத்திரைக்கு நன்று. இர

ட்டித்தபக்கங்களில் தெசமியும் துதியையு நன்று. இவைய
ல்லாத பக்கமாகாது. பங்குனி கார்த்திகை ஆடி இம்மாதங்க
ள் விசேஷித்துத் தவிரப்படும்—எ-று. (சு)

இதுவுமது.

பிறந்தவிராசியு மூன்றுறுபன்னொன் றிரண்டிற்போக
வறைந்துயிரைந் தொன்பதேழ்நான்கிரண்டு பன்னொன்றொடந்த்
துறைந்தநற்கோ ளேழிலுன்கிற்புகர்மா லொழிந்தசுத்தி
சிறந்தனபோலகக்குத் தீக்கோள்மூன்றுறயஞ் சேர்கைநன்றே.

(எ-து.) சென்மராசியும் ங, சு, கக, உ, இவ்விராசிகளி
லும் யாத்திரைபோகலாம். போமிடத்து உதயம் ரு, கூ, எ, ச,
உ, கக, கஉ, இவ்விடங்களிற் சுபக்கிரகங்கணிற்கலாம். இவற்
றிற்சுக்கிரன் எம் இடத்தும் புதன் சம் இடத்து மொழி
யக்கொள்வது. பஞ்சமசுத்தியுண்டாக பாபக்கிரகங்கள் ங,
சு, கக, இவற்றில்நிற்க யாத்திரைபோவது—எ-று. (எ)

யாத்திரைக்கு நட்சத்திரங்களிற் புசிப்பவை.

உழுந்தெட்டயிர்யவை யூனுதிரம்புடோ னெய்பாம்பூனெட்
கொழுஞ்சோறுசாமை தினைவண்ணவோதன நெல்விகொட்டேன்
செழும்பால்கிழங்கு நீரத்தநெற்றேன் குளம்பாலிரத்த
மெழும்பயறைப்பசி யாதிநாளுக்குண்டு போகென்பரே.

(எ-து.) அவசியம் யாத்திரைபோமிடத்து அசுவதிமுத
லிரேவதியீறாக உஎ நாளுக்கும உஎ பதார்த்தத்தைப் புசித்
துப்போகலாம். அவையாவன உழுந்து எள்ளு தயிர் யவை
மாமிசம் இரத்தம் புடோல் நெய் சாப்பமாமிசம் எள்ளு சுத்
தான்னம் சாமைச்சோறு தினைச்சோறு சித்திரான்னம் நெ
ல்வி கொள்ளு தேன் பால் கிழங்கு தண்ணீர் தருப்பணம் நெ
ல்லு தேன் சர்க்கரை பால் இரத்தம் பயறு இவற்றைப்புசித்
தல் பரிசித்தல் நினைத்தல் செய்துபோகலாம்—எ-று. (அ)

யாத்திரைக்குத் திதிவாரங்களிற் புசிப்பவை.

எருக்கரிசிநெய்நெற் சோறுபொன்னீர்மதுத் தானியநீர்
கருத்துறுகோமயம் பாலவிகன்னல் கற்பால்பருப்பு
நிரைத்ததிதிக்குக் கிழமைக்குப்பாறயிர் நீர்பருப்புப்
பொரிப்பலினக்கறி பாற்சோறுபிண்ணாக் கருந்திப்புகே.



(எ-து.) பிரதமை முதலிய பதினைந்துதி திக்கும் எருக்
கிலை அரிசி நெய் நெல்லு சோறு பொன்னீர் தேன் தானியம்
சலம் கோமயம் பால் பாற்சோறு கருப்புக்கட்டி பால் பருப்
பு இவற்றைத்தின்று யாத்திரைபோவது. ஞாயிறுமுதலிய
கிழமைக்கு பால் தயிர் சலம் பருப்பு பொரித்தபலவினக்கறி
பாற்சோறு பிண்ணாக்கு இவற்றைதின்று போவது—எ-று.

யாத்திரைக்குச் சுபாசுபசுவாசம்.

நாசியின்மீதெழு காலினை—நன்று தீதாகும்வலம்
வாசிட்டார்பார்க்க வரங்கிராப்பாரத்து வாசிகட்கும்
காசிபர்தங்கட்கெதிர் வெள்ளியிலென்ப கண்ணன்கழல்
பேசிவணங்கிப்பின் யாத்திரைபோகப் பெருநலமே.

(எ-து) யாத்திரைபோமிடத்து சொன்னநாளின் முகூ
ர்த்தத்து மூன்பாகக் கிழக்குநோக்கி யிருந்து சுவாசத்தை
விட்டால் அமுதபாகமாகிய விடையிலே யியங்குமாகில் யாத்
திரைபோகமிகவு நன்று. விஷபாகமாகிய பிங்கலையிலே யியங்
குமாகில் யாத்திரைபோதல்தீது. எதிர்வெள்ளியு மிடக்கண்
வெள்ளியுமாகாது. பிராமணரில் வாசிட்டர் பார்க்கவர் அங்
கிராதர் பாரத்துவாசர் காசிபர் இந்தவர்க்கத்தார்போமிடத்
துச்சுக்கிரதோஷமில்லை, பிரீதியாம். அல்லாத-இருஷிகோத்திர
த்தார்க்கும் மற்றுமுள்ள மூன்று வருணத்தாருக்குமுண்டு.
பரமகுருவான நாராயணனை வணங்கி நமஸ்கரித்துப் போகி
ன் மிகவுநன்றும்—எ-று. (கo)

இதுவுமது.

பதிபுக்கவொன்பான் றினத்தினிற்போதல் பதியைவிட்ட
விதிபுக்கவொன்பான் றினத்தினின்மேவுதன் மிக்கபொல்லாங்
கதின்மிக்கமாதமு மாண்டுமெவ்வண்ணமா காபுகரோ
னெதிர்புக்கவோரூர்க் கிசைத்தாரினிதென் றினவலையே.

(எ-து.) ஒரூர்க்குப்புகுந்த வொன்பதாநாட் புறப்படலா
காது. புறப்பட்ட வொன்பதாநாட் டனதூரிலும்வரலாகாது
ஒன்பதாமாதமுமாண்டு மப்படியேதவிரப்படும். எதிர்வெள்
ளியுமிடக்கண்வெள்ளியு மேரூர்க்கில்லையாம்—எ-று. (கக)

திரியாத்திரை.

கதிரோன்குடங் குளிர்கன்னிசேர்நா ளுங்கடவுள்குரு
விதியொளிகுன்றிய வெள்ளியும்வெள்ளிமால் வாரங்களு

மெதிர்வெள்ளியுமுத் திரமுமுற்பக்கமு மெய்துகாலம்
பதியின்றிமாதர்க டாம்வழிபோகப் பகர்ந்திலரே.

(எ-து.) ஆதித்தியன் கும்பம் கர்க்கடகம் கன்னியில் நிற்குமாதமும் குரு சுக்கிர னத்தமனகாலமும் வெள்ளி புதன் கிழமையும் எதிர்வெள்ளியும் உத்திரமும் பிரதமையும் தனதுநாயகனின்றித் ஸ்ரீ யாத்திரைபோகலாகாது—எ-று. எதிர்வெள்ளியறியுமிடத்து மேடஞ் சிங்கந்தனுகிழக்கு, இடபங் கன்னிமகரந்தெற்கு, கர்க்கடகம் விரிச்சிகமீனம் வடக்கு இந்தராசிகளிலே நவக்கிரகங்களு நிற்குங்கால மிந்தத்திக்கிலே நோக்கமென்றறிக. (கஉ)

## கோயாத்திரை.

தலைநான்முதலைந்து கேட்டைசதயம் விசாகமக
மூலையாதவோண முரேவதிபூரமூன் றுத்திரங்கள்
சிலைமீன்கலையாழ் மறிகேளெழுத்திங்கள் சீவன்வார
நிலையார்புகரெட்டி னிற்கக்கோயாத்திரை சேர்ந்தனரே.

(எ-து.) அசுவதி முதலைந்துநாள் கேட்டை சதயம் விசாகம் மகம் திருவோணம் இரேவதி பூரத்திரயம் உத்திரத்திரயம் இந்நாட்களிலே தனு மீனம் மிதுனம் மேடம் விரிச்சிகம் இவ்விராசிகளுதயமாகத் திங்கள் வியாழ வாரோதயங்களிலே சுக்கிரன் அம் இடத்துநிற்பப் பசுமுதலிய சதுர்ப்பாதயாத்திரைபோகலாம்—எ-று. (கங)

## சலயாத்திரை.

நாரணனத்தம் பனைமான்றலைபுள்ளு நாவாய்சோதி
தாரணிபாய்மா விவற்றிற்சரமெழத் தக்ககோட்க
ளோரணியாகவி யாத்திரைபோக வெடுத்தவற்றி
னீரணியாத்திரையா மென்றனர்பொன் னிரைவலையே.

(எ-து.) திருவோணம் அத்தம் அஷனும் மிருகசீரிடம் அவிட்டம் இரேவதி சோதி அசுவதி இந்நாட்களிலே சரராசியுதயமாகச் சுபக்கிரகங்க ளன்றாயிருக்கச் சுபயாத்திரைக்குச் சொன்ன வகையும்பார்த்துச் சலயாத்திரைபோவது. ()



## கிணறுகுளங்கல்ல.

நல்லவர்வார நற்பக்கமுடைகுள மத்தநாவாய்
சொல்லுமகம்பனை மான்றலைசோனைசுண் ணங்குருத்தேர்
வல்லுறுமுத்திர மூன்றேழுமீன்சாடி மானண்டினிற்
கல்லுங்கிணறுகு ளஞ்சுத்தியெட்டிற் கனங்குழையே.

(எ-து.) சுபவாரமுஞ் சுபதிதியுங் கூடினபூராடம் அத்தம் இரேவதி மகம் அனுஷம் மிருகசீரிடம் திருவோணம சதயம் பூரம் உரோகிணி உத்திரத்திரயம் இந்நாட்களிலே இடபம் மீனம் கும்பம் மகரம் கர்க்கடகம இவ்விராசிகளுதயமாக அட்டம சுத்தியுண்டாகக் கிணறுகுளங்கல்லலாம். (கரு)

ஈசன்பிரமன் வருணன்புரந்தரன் சோமனென்ற
வாசைகடன்னிற் கிணறுகுளங்கல்ல நன்றல்லவை
வாசங்கமழ்பூங் குழன்மடவாய்வன் றுயருடைத்தாய்
நாசம்வருமென்று நன்னூலுணர்ந்தவர் நாட்டினரே.

(எ-து.) ஊர்க்கும் *அகத்தினுக்கும வடகிழக்கும் நடுவும் மேற்கும் கிழக்கும் வடக்கும் என்றுசொல்லிய திக்குக்களிற் கல்லிற் கிணறுகுளங்கல்லநன்று. அல்லாதகிக்குக்களிற் கல்லில் வியாதி பீடை தனச்சேதம் மரணபயமுண்டாம். (கசு)

## இதுவுமது.

அதிபெறமுச் சத்துநீசத்துமர்க்க னிருந்ததிப்பப்
பதிபெறுயோகம் பருப்பதம்பாதாள மென்பரேரி
நதிகரைகட்டல் குழித்தனன்றுய்வ னையாயடைவே
யதியலையாழ்கட லாமென்றறிஞ ரறைந்தனரே.

(எ-து.) ஆதித்தியனத்தியுச் சடாகையிலே நிற்ப மேடத்துப் பத்தாம்பாகமுதயமாகிற் பருப்பதயோகமாம். இதில்வெரி குளங்கிணறு ஆறு சரைகட்டமலைபோல வளர்ந்துநிலைக்கும். ஆதித்தியனீசத்து நிற்ப துலாத்துப் பத்தாம்பாக முதயமாகிற் பாதாளயோகமாம். இதிலே கிணறு குளமேரியாறு கல்லச்சமுத்திரம்போலப் பெருகும்—எ-று. (கஎ)

* அகத்தினுக்குப் பிரமத்தானமாகா தென்பாருமுளர்.

### கொள்ளக்கொடுக்க.

கலஞ்சகடோண முறமிருபூசங் களிறசுண்ண
நலம்பரிபூர நரிப்புறம்விற்கேட்டை யுத்திரங்கள்
குலஞ்செங்கைகொண்டு கொடுத்தற்கிருத்தை யொழித்துமீன்றே
ளுலந்தயாழேறரி கோனல்லவாரோ தயமுறுமே.

(எ-று.) இரோவதி உரோகினி திருவோணம் விசாகம் புனர்பூசம் பூசம் அத்தம் சதயம் அசுவதி பூரம் மிருகசீரிடம் மூலம் கேட்டை உத்திரத்திரயம் திருவாதிரை இந்நாட்களிலே இருத்தை யொழிந்த திதிகளிலே மீனம் விரிச்சிகம் மிதுனம் இடபம் சிங்கம் துலாம் இவையுதயமாகச் சுபவாரோதயங்களிலே கொள்ளக் கொடுக்கநன்றாம்—எ-று. (கஅ)

### இதுவுமது.

முறமகம்பூரங்கள் சித்திரைமூலம் பரணியாரல்
செறியரவம்வெள்ளி செய்முற்றிதியி லுவாலிற்றணம்
பிறர்கைக்கொடேற்கொடுக் கிற்பெருஞ்செல்வமுங் கைப்பொருளும்
பறிபடுமென்பிறர் கைப்பொருள்கொள்ளிற் பலன்பெரிதே.

(எ-து.) விசாகம் மகம் பூரத்திரயம் சித்திரை மூலம் பரணி கார்த்திகை ஆயிலியம் இந்நாட்களில் வெள்ளி செவ்வாய் வாரம் பிரதமை உவாக்களில் அருத்தங் கைவிடலாகாது. கைவிடிலுள்ளபொருளும் போம். பிறரிடத்திற் றனங்கொள்ளுகில் மிகவும் வந்து கூடும்—எ-று. ()

### இராசபிரபு தெரிசனம்.

கேட்டையராவரன் பூரங்களோடு களவனல்ல
வீட்டுநன் ஞளினற் கோளஞ்சகவார மெட்சிநண்ண
நாட்டுந்திரமுப யம்மெழகாவி கறுங்குழலாய்
சூட்டும்பெரியோர் களைக்காணலாமென்று சொல்லினரே.

(எ-து) கேட்டை ஆயிலியம் திருவாதிரை பூரத்திரயம் பரணி கார்த்திகை இவையொழிந்த சுபநாட்களிலே சுபவாரோதயாங்சங்களிலே திரராசி யுபயராசி யுதயமாக இராசபிரபு தெரிசனம்பண்ணுவது—எ-று. (உ0)

யாத்திரைப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை சுகஎ.

---



## அரசர்வினைப்படலம்.

### முடிசூட்ட.

உத்திரமூன்றருள் பூசாரவாய்கழை கேட்டையோண
மத்தம்பரிபனை மான்றலைநன்றரி யாடிடபஞ்
சத்தந்தருந்தேட் டடியுத்தமங்குளிர் மீன்சிலைசான்
மத்திமமன்னவர் மாமுடிசூட்ட வகுத்தனரே.

(எ-து.) உத்திரத்திரயம் உரோகிணி பூசம் இரேவதி புனர்பூசம் கேட்டை திருவோணம் அத்தம் அசுவதி அனுஷம் மிருகசீரிடம் இந்நாட்களிலே சிங்கம் மேடம் இடபம் விரிச்சிகம் மிதுனம் இவ்விராசிக ளுத்தமம். கர்க்கடகம் மீனம் தனு கும்பம் மத்திமம். இவற்றில் இராசாக்கள் பட்டாபிஷேகம் பண்ணுவது—எ-று. (க)

### இதுவுமது.

வெள்ளிகதிர்மதி மால்குருவேந்தர் முடிபுனைதற்
கொள்ளியவார முதயமென்றூர்சுத்தி யேழுமெட்டுந்
தெள்ளிவிதித்தனர் செப்பியபஞ்சாங்கஞ் சீர்மைபெறக்
கள்ளவிள்பூங்குழலாய் கலைவல்லவர் காதலித்தே.

(எ-து.) வெள்ளி ஞாயிறு திங்கள் புதன் வியாழம் இவர்கள் வாரோதயங்களிலே எ, அ, இவ்விடங்கள் சுத்தியாய்ப் பஞ்சாங்கயோக நன்றாகஇராசாக்கள் பட்டாபிஷேகம்பண்ணுவது—எ-று. (உ)

### திருவாண்டெழுத்திட.

முறைபடுமோனியி லாடியின்முக்கண னூரினற்கோள்
செறிவுடனேத்தச் சிறப்புடையெட்சியிற் செயிழையாய்
நிறைபுனறாவி மறையோர்வழுத்த நெறிமுறையே
யறைகழன்மன்னர் திருவாண்டெழுத்திட லாமென்பரே.

(எ-து.) ஆனி ஆடிமாதத்திலே திருவாதிரைநாளிற் சுபக்கிரகநோக்குண்டாக ஊர்த்துவமுகராசி யுதயமாகப் பிராமணரா லபிஷேகம் பண்ணி யாசீர்வசனம்பெற்று இராசாக்கள் திருவாண்டெழுத்திடுவது—எ-று. (ந)

### வாகனமேற ஆயுதம்பயில.

ஆதிமகம்பனை யுத்திரமூன்றிரு பூசமத்தஞ்
சோதியறுவை மகயிரமாரேணி பண்டிசுபந்

தீதசனிகுசன் வாரமுமில்லுஞ் சிவிகைமுத
லோதியவாகன மேறவுமாயுத மோதவுமே.

(எ-து.) அசுவதி மகம் அனுஷம் உத்திரத்திரயம் புனர்பூசம் பூசம் அத்தம் சோதி சித்திரை மிருகசீரிடம் திருவோணம் உரோகிணி இரேவதி இந்நாட்களிற் செவ்வாய் சனியொழிந்த வாரத்திலே மேடம் விரிச்சிகம் மகரம் கும்பம் இவையொழிந்த ராசிகளிலே சிவிகைமுதலியவாகனமேறவும் ஆயுதம்பயிலவும்பெறும்—எ-று. (௪)

யுத்தயாத்திரை.

உரைபுனையுத்திர மூன்றைப்பசியத்த மோணம்புள்ளு
நிரைபனைதோணி மகயிரஞ்சித்திரை நீடுபூசந்
திரவுதயம்பெற நற்றிதிவாரஞ் சிறப்புமிக
வரசர்தண்டேவுதற் காமென்றுவைத்தன ரந்தணனே.

(எ-து.) உத்திரத்திரயம் அசுவதி அத்தம் திருவோணம் அவிட்டம் அனுடம் இரேவதி மிருகசீரிடம் சித்திரை புனர்பூசம் பூசம் இந்நாட்களிலே திரராசியில் நல்ல திதிவாரோதயங்களிலே அரசர் ஆயுதமெடுத்து விடுவது—எ-று. ()

யுத்தஞ்செய்ய.

செருச்செயநாட்பரிசித்திரைகேட்டை சதயஞ்செங்கை
மருத்துமுப்பூரங் கலமாமூல மகம்பரணி
யிருட்பெறுபக்கத் திருத்தைசயைவிட்டி சேயிரவி
குருச்சனிவார மிராசியுங்கால்க ளுங்கூறுவரோ.

(எ-து.) யுத்தஞ்செய்யுமிடத்து அசுவதி சித்திரை கேட்டை சதயம் திருவாதிரை சோதி பூரத்திரயம் இரேவதி ஆயிலியம் மூலம் மகம் பரணி அபரபக்கத் திருத்தை திருதியை அட்டமி திரயோதசி விட்டிக்கரணம்செவ்வாய் ஞாயிறு வியாழம் சனி இவர்கள் வாரோதயங்கங்களிலே யுத்தம்பண்ணுவது—எ-று. (௬)

மானுவி.

ஆனுதவைப்பசி கார்த்திகையில்வள ரட்டமியிற்
றானுந்துவாதசி யிற்றக்கமூர்த்தத்துச் சந்திரனுர்



மீனுமேழத்திரா டத்தெழமிக்கோ ணேக்குப்பெற
மானுவிகொள்ப களிற்றுக்கும்வாசிக்கும் வானுதலே.

(எ-து.) ஐப்பசி கார்த்திகைமாசத்துப் பூருவபக்கத் தட்டமியிலாதல் துவாதசியிலாதல் சுபமுகூர்த்தத்து உத்திராடத்திலே சந்திரோதயமாகச்சுபக்கோள்நோக்க யானைகுதிரை மானுவிகொள்வது—எ-று. (௭)

கெஜசாந்தி.

மகமிருபூசமூன் றுத்திரமாயரூட் சித்திரைபுட்
பகடுவிளக்குப் பனைபரிநாவாயிற் பைம்பொன்வெள்ளி
சுகமதியாலெட்சி வாரத்திராசியிற் சுத்தமெட்டின்
மிகநல்லபக்கத்து வேழகன்மங்கள் விளம்பினரோ.

(எ-து.) மகம் புனர்பூசம் பூசம் உத்திரத்திரயம் திருவோணம் சித்திரை. அவிட்டம் அத்தம் சோதி அனுஷம் இரேவதி அசுவதி இந்நாட்களிலே வியாழம் வெள்ளி திங்கள் புதன் இவர்களுடைய வாரமிராசியங்சமுதயமாக இவர்கள் நோக்குப்பெற அட்டமசுத்தியுண்டாக நல்ல திதியிலே யானைக்குச்சாந்திபண்ணுவது—எ-று. (௮)

அசுவசாந்தி.

ஐப்பசிபுட்பனை நாவாய்முறமத்த மாரல்கழை
செப்பருமான்றலை சோதியிந்நாளிற் றிரமுதிப்பத்
துப்புறுபக்கத்து நற்கோளெழத்துர கங்களினுக்
கொப்புறுகன்மங்கள் யாவுஞ்செய்கென்றன ரொண்ணுதலே.

(எ-து.) அசுவதி அவிட்டம் அனுஷம் இரேவதி விசாகம் அத்தம் கார்த்திகை புனர்பூசம் மிருகசீரிஷம் சோதி இந்நாட்களிற் றிரராசியுதயமாகப்பூருவபக்கத்துநல்லதிதிகளிலே சுபக்கோணேக்கக் குதிரைக்குச்சாந்திபண்ணுவது—எ-று. ()

இதுவுமது.

ஞாயிறுசோதியி னண்ணியநாட்களி னன்குணர்ந்து
தூயவர்சோதிசம் பாதமென்றூர்தொக்க வான்பிணியா
லோய்வுறுமெல்லா வுயிர்களுமாங்கவற் றுற்றுயர்போய்
பாய்பரிமாக்கொள்ளு மங்கதற்குச்சாந்தி பண்ணுகவே.

(எ-து.) ஆதித்தியன் சோதியிலேநிற்குநாள் சோதிசம் பாதயோகமாம். அக்காலத்திலே சகலபிராணிகளுக்கும் வியாதியுண்டாம். இவற்றின்மிகவுங் குதிரை நோய்கொள்ளும். இதற்கு அவரவர்சாத்திரஞ் சொன்னபடியே சாந்தி பண்ணுவது—எ-று. (கO)

அரசர்வினைப்படல முற்றிற்று.

ஆகக்கவித்துறை சுஉஎ

---

## நல்வினைப்படலம்.

### வாத்துமன்கிடை.

பங்குனியாதி வலமாகமுத்திங்கள் பச்சிமத்தே,
தங்குந்தலையா யிடங்கீழ்ப்படவாத்து மன்சரிக்கு
மங்கவனுனைத் தேவாயில்கொள்ளு மவன்கிடக்கை
துங்கமுகடடு மாங்கவனுந்தியிற் றூணடுமே.

(எ-து.) வாத்துபுருஷன் கிடக்கையைச்சொல்லுமிடத்து பங்குனிமுதன்மூன் றுமாதமும் மேற்கேதலையும் கிழக்கேகாலும் வடக்கேமுகமுமாய்க்கிடக்கும். ஆனிமுதன் மூன்றுமாதமும் வடக்கேதலையுந் தெற்கே காலுங் கிழக்கேமுகமுமாய்க்கிடக்கும். புரட்டாசிமுதன் மூன் றுமாதமுங் கிழக்கேதலையு மேற்கேகாலுந் தெற்கேமுகமுமாய்க்கிடக்கும். மார்கழிமுதன்மூன் றுமாதமுந் தெற்கேதலையும் வடக்கேகாலு மேற்கேமுகமுமாய்க்கிடக்கும். இவன் கிடந்த கிடைக்குமுகமிட்டு இவன் முகத்துக்குநேரே வாயிலும்விட்டு வயிற்றிலேசெற்பம்வைத்தல் தூணாட்டுதல் செய்வது எ-து. இந்தமாதங்கள் சவுரமானவகையாற் கொள்ளப்படும்—எ-று. (க)

### வாத்துவிடக்குடிபுக.

வில்லுறுகன்னி தடிமீனில்வெய்யவன் மேவுநாளு
மில்லுடையாள்பிள்ளை யுண்டாயிருப்பினும் வாத்துவிடச்
சொல்லிலர்மந்திரி சுங்கனுழிகுன் றிற் றீதிற்புகப்
புல்லுறுமாதங் குளிர்சால்பொறிபெண் புகலிலரே,



(எ-து.) வாத்துவிடுமிடத்து ஆதித்தியன் தனு கன்னி மிதுனம் மீனம் இவையினிற்குங்காலமும தன்னுடைய திரீகர்ப்பமுண்டாயிருக்குங்காலமும குருசுக்கிர னத்தமன காலமும்வாத்துவிடப்போகாது. குடிபுகுமிடத்து கர்க்கடகம் கும்பம் தனு கன்னி இந்நாலுமாதமுந் தவிரப்படும். அல்லாத வெட்டுமாதமுங் குடிபுகலாம். இதிலுத்தராயணமாத நன்று. தெட்சணாயனமாதமத்திமம்—எ-று. (உ)

### மனைப்பொருத்தம்.

வாத்துவுக்கிடாம் வியனுமுழத்தின் மனை யெடுக்கப்
பார்த்திடலாயம் பெருக்கவியங்குறை பக்கம்வாரந்
தீத்திறமன் றி வியன்யோனிநற்றின மும்பொருந்தக்
கோர்த்தனரங்சக மாறேழெட்டொன் றுங் கொடிதெனவே.

(எ-து.) வாத்துபுருடனுக் கிடாக வொற்றித்த முழத்திலே மனைகோலப்படும். மனை யெடுக்குமிடத்து ஆயமிகுந்து வியங்குறைந்து ஒற்றித்தயோனியும் நாட்பொருத்த முண்டாகத் திதியும் வாரமுஞ் சுபமாக சு, எ, அ, க, இவையொழிந்த அங்சத்திலே கொள்வது.—எ-று.

### கிரகசத்தமவர்க்கம்.

அகலத்தைமூன் றினு மாயத்தையெட்டினு மாக்கிவைத்தாங்
கெமொத்தவெட்டாலு மூவொன்பதினுலு மீந்தகிலை
நிகரொத்தயோனியு நாளுமாநீளத்தை நாலின்மாறிப்
பகரொத்தவொன்பதிற் கீயநவாங்சகம் பான்மொழியே.

(எ-து.) அகலத்தை மூன்றிற்பெருக்கி யெட்டிற்கீய யிருபத்தேழு யோனியாம். நீளத்தை யெட்டிற்பெருக்கி யொன்பதுக்க்கீய நாளாம். சுற்றளவை நாலிற்பெருக்கி யொன்பதுக்கீய நவாங்சகமாம்—எ-று. (ச)

### இதுவுமது.

ஆயத்தையெட்டினு மொன்பதினுந்தாக்கி யாறிரண்டிற்
கேயுற்றபத்திற்கு மீந்திடவாயம் வியங்களென்பர்
தேயுற்றசுற்றென்ப தெட்டாற்பெருக்கிச் செழுமுப்பதி
னேயுற்றவேழிற் கழிப்பத்திதிவார மென்றனரே.

(எ-து.) சுற்றளவை யெட்டிற்பெருக்கிப் பன்னிரண்டுக்கிய ஆயமாம். இதை யொன்பதிற் பெருக்கிப் பத்திற்கிய வியமாம். சுற்றளவை யொன்பதிற்பெருக்கி முப்பதுக்கீயப் பக்கமாம். இப்படி மனைக்கு *ஏழுபொருத்தமுமறிவது—எ-று. (ரு)

கிரகாரம்பம்.

பொருந்துமகமத்தம் யாழுத்திரங்கள் புநர்தம்பூசந்
திருந்துசகடம் பனைமான் றலைதிரு வோணங்கல
யிருஞ்சித்திரைசோதி நன்றரிதேட்குட மேறுத்தமம்
வருந்துமுபயங்கண் மத்திமமாமனை கோலுதற்கே.

(எ-து.) வாத்துவிடுமிடத்து மகம் அத்தம் அசுவதி உத்திரத்திரயம் புநர்பூசம் பூசம் உரோகிணி அனுஷம் மிருகசீரிடம் திருவோணம் இரேவதி சித்திரை சோதி இந்நாளில் சிங்கம் விரிச்சிகம் கும்பம் இடபம் இவ்விராசிக ளுத்தமம். உபயராசி மத்திமமாம்—எ-று. (சு)

பிரதமெட்டிகை.

நாளுங்கரணமும் யோகமும்வாரமு நற்றிதியுங்
கோளுங்குணம்பெற மேன்முகநாளோரை கூட்டமுற
வாளுமுயிரினுக் கோரெட்டுராறி லமர்ந்துநிற்குங்
கோளின்றிவாத்து வகுப்பநன்றுமென் குயின்மொழியே.

(எ-து.) பஞ்சாங்கயோகமுங் கிரகங்களு நன்றாக ஊர்த்துவமுக நாளிலே யூர்த்துவமுகராசி யுதயமாக அ, கஉ, இவ்விடஞ் சுத்தியாக வாத்துவுக்குப் பிரதமெட்டிகையிடுவது—எ-று. (எ)

தம்பத்தாபனங்கதவு.

சந்திரனெட்டியுங் காலகளுநீத்தனர் தம்பநாட்டச்
சிந்தனைசெய்து திரத்தையடைத்தார் செறிகதவிற்
குந்துமகமுரு ளுத்திரமூலஞ் சதயஞ்சயை
மந்தன்கிழமையு மந்திரியெட்சியும் வைத்தனரே.

(எ-து.) அபரபக்கத்துச் சந்திரனுதயமும் சந்திராங்ச மொழிந்த சுபக்கோ ளுதயம்பெறத் திரராசியுதயமா

* மனைக்குப் பத்துப்பொருத்தஞ் சொல்வாரு முளர்.



கத் தம்பநாட்டுவது. மகம் உரோகிணி உத்திரம் மூலம் சதயம் திருதியை அட்டமி திரயோதசி இந்நாளினும் பக்கத்தினும் சனிக்கிழமையினும் வியாழனுதயாங்சத் திரேக்காணங்களினுங் கதவு நிலைநாட்டுவது—எ-று. (அ)

வாயிற்பொருத்தம்.

ஏறுதடிகுளி ருத்தரங்கீழரி யேழைதுலை
வீறுறுகீழ்த்திசை தெற்காம்விரிச்சிகம் வின்மகரஞ்
சீறியதெற்குடன் பச்சிமஞ்சால்கயல் செச்சைகுடங்
காறியவுத்தரம் வாயில்விடுந்திசை யாரணங்கே.

(எ-து.) இடபம் மிதுனம் கர்க்கடகம் இவ்விராசிகளிற் செனித்தபேருக்குக் வடக்குவாயிலு கிழக்குவாயிலும் சிங்கம் கன்னி துலாம் இவ்விராசிகளிற் செனித்தபேருக்குக் கிழக்குவாயில் தெற்குவாயிலும் விரிச்சிகம் தனு மகரம் இவ்விராசிகளிற் செனித்தபேருக்குத் தெற்குவாயில் மேற்குவாயிலும் கும்பம் மீனம் மேடம் இவ்விராசிகளிற் செனித்தபேருக்கு மேற்குவாயில் வடக்குவாயிலும் விடுவது—எ-று. (கூ)

கிரகப்பிரவேசம்.

பூசமிரண்டுமூன் றுத்திரநாவாய் புரவியத்தம்
பேசுறுசோனை மகயிரம்பெண்ணை பெருஞ்சகட
மாசில்விளக்கு மகம்புள்ளிருத்தையா றெட்டொழித்துத்
தேசுறுயோகத்து நல்லோர்குடிபுகச் செப்பினரே.

(எ-து.) புநர்பூசம் பூசம் உத்திரத்திரயம் இரேவதி அசுவதி அத்தம் திருவோணம் மிருகசீரிஷம் அனுஷம் உரோகிணி சோதி மகம் அவிட்டம் இந்நாட்களில் இருத்தை சஷ்டி அஷ்டமி ஒழிந்தபக்கத்திலே பஞ்சாங்கயோக நன்றாகக் குடிபுகுதலாம்—எ-று. (க0)

இதுவுமது.

நிலையானவோரையி னீத்தனர்தேனை யுபயங்களைத்
தலையாகவைத்தனர் தக்கவிடையங்ச கத்தவோரை
நலமாகுநற்கோ ளுறுதேளுநன்றாங் குடிபுகுதற்
[redacted]லையாதவாத்துவுக் குச்சொன்னசுத்தமு மோதுவரே.

(எ-து) குடிபுகுமிடத்து விரிச்சிகமொழிந்த திராசியு
மூபயராசியுமாம். அல்லாதராசி யிடபாங்சகங்களும் சுபக்
கோள் நிற்கின்ற விரிச்சிகமுமாம். அ, கஉ, இவ்விடஞ் சுத்
தியாகக் குடிபுகுதலாம்—எ-று. (கக)

தேவகிரகாரம்பம்.

சியந்துலைதெறுக் காலிற்கதிருறத் தேவர்தங்கட்
கோய்வுறுகோவி லகத்துவங்கொள்க வஞ்சாதியாகத்
தேய்வின்முழத்தின் முன்செப்பியநாட்களிற் கோவில்செய்யப்
பாய்கலைமீன்மறி சேதடிமாதம் பகர்ந்தனரே.

(எ-து.) சிங்கம் துலாம் விரிச்சிகம் இவற்றிலாதித்தனி
ற்க முன்பு வாத்துவிடச் சொன்னநாளினும் இராசியினும்
இராசாவுக்கும் ஊருக்கும் யசமானுக்கும் அனுகூலமான தி
வசத்திலே கோயிலுக்குப் பூமிப்பரிக்ஷையும் பண்ணிக் கரு
ஷணையுமிட்டு அகத்துவம் பறிப்பது. சிற்பசாத்திரஞ் சொ
ல்லுகிறபடியே கோவில்செய்வது. அப்படிச் செய்யுமிடத்து
ஐந்து முழமுதலாக எ, கூ, கக, இப்படியாயிபவர்க்கிந்து கொ
ள்ளப்படும். ஐந்து முழத்துக்குக் குறையச்செய்யு மிடத்து
ஒன்றேகால்குறைத்து மூன்றேமுக்காலிலே கொள்ளலாம்.
இதிற்குறையுமிடத்து இராசாவுக்கும் இராச்சியத்துக்கு ந
ன்றல்ல. ஏழுமொன்பதுங் காலொழிய அரையு முக்காலுங்
கொள்ளப்படும். இப்படிமுழ நிச்சயித்து ஆயம்வியம் அனு
கூல முண்டான முழத்திலே விரியக்கொண்டு அகத்துவம்
பிரித்து மணலுநீரும்விட்டு அத்திபாரத்திலிருத்தித் தலம
டம் பிறப்பித்துக் சங்குத்தாபனம்பண்ணிக் கிழக்குமேற்கி
ரேகையும் தெற்கு வடக்கிரேகையு மறிந்து வாசலிலேபிரத
மெட்டிகையிடுவது. இடுமிடத்து மகரம் மீனம் மேடம் இட
பம் மிதுனம் இவற்றிலாதித்திய னிற்குங்காலம் பிரதிட்டை
க்குச் சொன்ன நாளினு முகூர்த்தத்தினும் பிரதமெட்டிகை
யிட்டு விமானஞ்செய்வது. இம்மாதங்களிலே மூர்த்தாஷிகை
யுமிட்டுத் தாபிப்பிரதிட்டையும் பண்ணுவது—எ-று. (கஉ)

நவபூஷணம்.

அந்தமகயிர மாதியத்தஞ்சித் திரையனுடம்
வந்தகழைகுருத் தேர்விற்றடிமீன் விடைமகளிர்



நந்தைவளர்ச்சியு நன்றுயவாரத்துப் பூணணிய
மைந்தர்க்குநன் று மண்வணிநாணன் று மங்கையர்க்கே.

(எ-து.) இரேவதி மிருகசிரிஷம் அசுவதி அத்தம் சித்தி
ரை அனுஷம் புநர்பூசம் பூசம் உரோகிணி இந்நாட்களிலே
தனு மிதுனம் மீனம இடபம் கன்னி இந்தராசிகளுதயமாக
ப்பிரதமை சஷ்டி ஏகாதசி பஞ்சமி தசமி பூரணையிலே சுபவா
ரத்துப் புருஷாபரணம் பூணலாம். விவாகத்துச் சொன்ன
நாளினு முகூர்த்தத்தினும் திரிகளாபரணம் பூணலாம்-எ-று.

நவவஸ்திரம்பூண.

உத்திரமூன்று கலமிருபூசம் பரியுருடே
ரத்தமுதலேந்து நன்றுடரிவிற்றேண் மீன்சனிசேய்
தத்தங்கிழமை யிருத்தைதவிர்ந்தா றிடஞ்சுத்தியிற்
புத்தப்புதுக்கலிங் கத்துடைநன்றென்பர் பூங்கொடியே.

(எ-து.) உத்திரத்திரயம் இரேவதி புநர்பூசம் பூசம் அ
சுவதி உரோகிணி அத்தம் சித்திரை சோதி விசாகம் அனு
ஷம் இந்நாட்களிலே மேடம் சிங்கம் தனு மீனம் இவையொ
ழிந்தராசிகளிலே சனி செவ்வாய் இருந்தையொழிந்த பக்க
ங்களிலே கூ ம் இடஞ் சுத்தியாகப் புதுப்புடவை யுடுப்பது.

உபதேசம்.

மாசிபெண்மார்கழி யாடியுநீத்தொளி மந்திரிகள்
வீசியகாலத் தனுஷம்விளக்குரு ளத்தமும்மீன்
பூசமிரண்டுமூன் றுத்திரஞ்சோணைபுட் கேட்டைமக
மீசனறுவை கலமுபதேசத்திற் கேய்ந்தனவே

(எ-து.) சாந்திரமாதங்களால் வந்தமாசி புரட்டாசி மா
ர்கழி ஆடி இவையொழிந்தமாதங்களிலே குருசுக்கிரனத்த
மனமில்லாதகாலத்தில் அனுஷம் சோதி உரோகிணி அத்த
ம் மிருகசிரிஷம் புநர்பூசம் பூசம் உத்திரத்திரயம் திருவோ
ணம் அவிட்டம் கேட்டை மகம் திருவாதிரை சித்திரை ரே
வதி இந்நாட்களிலே மந்திரோபதேசம் பண்ணுவது—எ-று.

இதுமவுதி.

உவாப்திருன்கொன்ப தட்டமிசேய் சனியும்மொழிந்தாங்
கவாவிற்றிரத்தை யகற்றுவித்தட்டம சுத்திபெறத்

திவாவினிற்சென்மத்துஞ் சங்கிரமத்துங் கதிர்மதியை
யவாவுற்றடத்து முபதேசநன்று மென்னுயிழையே.

(எ-து.) அமாவாசை பூரணை சதுர்த்தசி நவமி அட்டமி செவ்வாய் சனி திராசி இவைகள் தவிர்ந்து அட்டமசுத்தியுண்டாகப்பட்டகற்காலத்திலேமந்திரோபதேசம்பண்ணுவது. சென்மத்திரயத்தும் சங்கிரமகாலத்தும் கிரகணகாலத்தும் மந்திரங்களுபதேசம்பண்ணவுஞ் சாதிக்கவுமாம்—எ-று. (௧௬)

சதாபிஷேகம்.

அறுபத்திரண்டு பிறையெழுமையாண்டி லாயிரமாம்
பிறையெண்பதாண்டினு மெண்டிங்களினும் பிறக்குமென்பர்
நெறியுறநீங்கிய காலத்துஞ்சென்மத்து நேரிழையாய்
செறியுறுநாளிற் சதாவபிடேகஞ் செயுமென்பரே.

(எ-து.) ஆதித்தியகதியால்வந்த வாண்டைந்துக்குஞ் சந்திரோதயம் ௬௨, பிறையுதிக்கும். ௮௦, சவுரவாண்டு மெட்டுமாதமுஞ் சென்றவன் ௧000-ம், பிறைகாண்பன். ஆதலாலவன்புண்ணியபுருடன் சொற்கப் பிராத்தியாகும்பொருட்டு அவனுடைய சென்மமாதஞ் சென்மநட்சத்திரத்திலே சதாவபிஷேகம்பண்ணுவது—எ-று. (௧௭)

இதுவுமது.

திருவோணமத்தங் கலமகஞ்சோதிசெக் குத்திரங்க
ளுருடேர்வியன்றிதி யொண்மதிவெள்ளிமா லும்பர்குருத்
தருமோரைவார முதயஞ்சதாவபி டேகத்திற்கு
மருவேறுபூங்குழலாய் நல்லவாமென்று வைத்தனரே.

(எ-து.) முன் சொன்னநாட்கழிந்தால் திருவோணம் அத்தம் இரேவதி மகம் சோதி சதயம் உத்திரத்திரயம் உரோகிணி இந்நாட்களிலே நல்லபக்கங்களில் திங்கள் வெள்ளி புதன் வியாழன் இவர்களுடைய வாரோதயாங் சகங்களிலும் இவர்களுடைய ராசியான சுபலக்கினங்களிலும் அட்டமசுத்தியுண்டாகச் சதாவபிடேகம்பண்ணுவது—எ-று. (௧௮)

தயிலாப்பியங்கம்.

*திங்கட்புதன்சனி நன்றுத்திரங்கேட்டை செங்கையோண
மங்கட்சென்னங்க ளட்டமிநந்தையன் னுண்கொடுவாக்

*திங்களில் எண்ணெயிடலாகாதென்பாருமுளர்.



கங்குற்றுவாதசி சங்கிரமங்கழித் தெண்ணெய்வார்க்க
வெங்கட்பிணியர் சிறூர்விருத்தர்க்கு வரைவில்லையே.

(எ-து.) யாவனொருவன் எண்ணெயிடும்டத்துத்திங்களும் புதனும் சனியுநன்று. அல்லாதவாரங்களும் உத்திரம் கேட்டை திருவாதிரை திருவோணம் சென்மத்திரயம் அட்டமி பிரதமை ஷட்டி ஏகாதசி சதுர்த்தசி பூரணை அமாவாசை துவாதசி இராக்காலம் சங்கிரமகாலம் இவையொழிந்த திதிநட்சத்திரங்களிலே யிடுவது. நோயர்க்குமபாலர்க்கும் விருத்தர்க்கும் வரைவில்லையாம்.—எ-று. சுமங்கலத்திரிகளுக்குச் செவ்வாய் வெள்ளிவாரங்களா மென்பாருமுளர். (௧௯)

இரணமோசனம்.

அனுடம்விதிபாத முத்திரட்டாதி யிருத்தையாசான்
சனிநன் குதயங் குளிகனோடங்சகஞ் சாற்றுமோரை
நனிமதியெட்சியி னற்பகலாற்றீட் டுளவிரணந்
தனிசுடையோர்க்குக் கொடுத்திடலாமெனச் சாற்றினரே.

(எ-து.) அனுஷமாதல் வியதிபாதயோகமாதல் உத்திரட்டாதியாதல் இந்நாட்களுடனே யிருத்தைகளாதல் வியாழக்கிழமை சனிக்கிழமையாதல் குளிகனுதல் சனியங்சகம் மகரம் கும்பம் உதயமாதல்வரப் பூருவபக்கத்துச்சந்திரோதயமான காலத்துப் பகலிலே தனிசுவாங்கினபொருள் கொடுத்துச் சீட்டுக்கிழிப்பது—எ-று. (௨௦)

நல்வினைப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை ௬௭.

---

# தீவினைப்படலம்.

---

ஔஷதமுண்ண.

மருந்திற்பனையத்த மூன்மூன்றுமான்றலை புன்னுடனே
திருதிருபூசமூன் றுத்திரஞ்செக்குருன் சோணைநாவா
யிரும்பரிகன்னி சரங்களிருத்தைமூன் றுநேமெழட்டும்
பொருந்தியசுத்திநன் றுஞ்சேயுகர்பொருந் தாவென்பரே.

(எ-து.) அனுஷம் அத்தம் சித்திரை சோதி மிருகசீரிடம் அவிட்டம் புனர்பூசம் பூசம் உத்திரத்திரயம் சதயம் உரோகிணி திருவோணம் இரேவதி இந்நாட்களிலே சராசியாதல் கன்னியாதலுதயமாக இருத்தைகளிலே ௫, ௬, ௭, ௮, இவ்விடஞ்சுத்தியாக ஔஷதமுட்கொள்ள நன்றாம்.* செவ்வாய் வெள்ளி வாரோதாயஞ்சகங்களாகா-எ-று. (௧)

அரக்கர்வயித்தியம்.

அரவமொடாதிரை விற்கேட்டையுமருக் கன்சனிசேய்
விரவியவெட்சியுங் கன்னிதுலாமேட நண்டெட்சியுந்
தாமுறுமட்டம சுத்தியுந்தள்ளிய பக்கங்களு
மெரியெழச்சுட்ட லறுத்தல்காரம்பெய்தற் கேந்தனவே.

(எ-து.) ஆயிலியம் திருவாதிரை மூலம் கேட்டை இந்நாட்களிலே ஞாயிறு சனி செவ்வாய் வாரோதயங்களில் கன்னி துலாம் மேடம் கர்க்கடகம் இவ்விராசியுதயத்திலே அட்டமசுத்தியுண்டாகப் பக்ஷச்சித்திரையென்று சொல்லியதிதிகளிலே புண்ணறுத்தல் சுடுதல் காரமிடுதல் அட்டைவிடுதல் முதலிய வரக்கர் வயித்தியஞ்செய்யலாம்†—எ-று. (௨)

நோய்மிருத்துநாள்.

முப்பூரங்கேட்டை யடுப்பாரன்முக்கணன் குன்றுபுட்கால்
பைப்பணிநாளி னவமிநான்காறுயர் பன்னிரண்டுஞ்
செப்புறுசேய்சனி ஞாயிறுயோகத்திற் செந்திருவே
வெப்பினையுற்றவர் தாஞ்சாவரென்று விதித்தனரே.

(எ-து.) பூரத்திரயம் கேட்டை பரணி கார்த்திகை திருவாதிரை சதயம் அவிட்டம் சோதி ஆயிலியம் இந்நாட்களும் நவமி சதுர்த்தி ஷட்டி துவாதசி இத்திதிகளும் செவ்வாய் சனி ஞாயிறு இவ்வாரங்களுங் கூடினயோகத்து வியாதியுண்டாகி லிறப்பார்கள்—எ-று. (௩)

நோய்மாறிக்குளிக்க.

காவாய்கழைசோதி மூன்றுத்திரமக நாகம்பண்டி
மேவாமதிவெள்ளி யோரையும்வாரமும் விட்டுநின்ற

* பூருவபக்கமுஞ் சனிவாரமுமாகா வென்பாருமுளர்.
† இவையொழிந்த பாபநாட்களுமா மென்பாருமுளர்.



காவாவிருத்தை தசமியிற்கோணுட்க டையவற்றிற்
பாவாய்வினைவிட்டு நீராடற்காமென்று பன்னினரே.

(எ-து.) இரேவதி புனர்பூசம் சோதி உத்திரத்திரயம் மகம் ஆயிலியம் உரோகிணி இந்நாட்களும் சந்திரன் வெள்ளி இராசிவாரோதயாஞ்சகங்களுமொழிந்த சதுர்த்தி நவமி சதுர்த்தசி தசமியில் முன்சொன்ன குரூரநாள் வாரோதயாஞ்சகங்களிலே நோய்மாறிக்குளிப்பது—எ-று. (௪)

திரிபுட்கரயோகம்.

முக்காலுங்காலு முடைத்தாயநாட்களும் பத்திரையு
மிக்காயவெள்ளி வியாழஞ்செவ்வாயும் விளங்குகூட்டந்
தக்கார்திரிபுட் கரயோகமாமென்பர் சாதல்சுட
லக்காரியம்வரின் மூன்றாகுமென்மயி லாயிழையே.

(எ-து.) முக்கால்நாளான புனர்பூசம் விசாகம் பூரட்டாதியும் கால்நாளான கார்த்திகை உத்திரம் உத்திராடமும் பத்திரையான துதியை சத்தமி துவாதசியும் வெள்ளி வியாழம் செவ்வாய் வாரங்களுஞ் சேர்ந்தநாட் திரிபுட்கரயோகமாம். இவ்வியோகத்தில் மரித்தல சுடுதல்செய்தால் அக்குடியில் *மூவர் மரிப்பார்கள்—எ-று. (௫)

சிராத்தம்.

வேதியர்க்குப்பதி னொன்றுநாள்வேந்தருக் கீரெட்டினிற்
றீதில்வணிகர்க் கிருபதில்வேளாண்டி றத்துநல்லோர்க்
காதியாறைந்தினி லன்றிச்சிராத்த மபரபக்கத்
தோதினர்தீக்கோள் சாமுற்றெழக்கொள்க வொண்ணுதலே.

(எ-து.) பிராமணருக்குப் பதினோராநாள் க்ஷத்திரியருக்குப் பதினாறுநாள் வைசியருக்கிருபதாநாள் சூத்திரருக்கு முப்பதாநாள் யாவனொருவன் மரித்தநாட்டொடங்கித் தந்தம்வருணக்கிரமப்படியே ஆசௌசம்நீங்குநாளாம். இத்தினத்திலே சிராத்தஞ்செய்யப்படும். சிராத்தகாலங்களுக்குத் திதிமுதலியதோஷமில்லை. பிரதானமான காலமொழியக்கோள்களில் உத்தமகாலத்திலே யபரபக்கங்களிலே பாபக்கிரகோதயமாகச் சராராசியிலே சிராத்தம்பண்ணுவது—எ-று. (௬)

* இவ்வியோகத்துப் பலாபலம் வந்தாலு மூன்றுவரையாகவர்த்திக்குமென்பாருமுளர்.

### இதுவுமது.

வளரும்பிறைபதி னுன்குடனந்தை யமைந்ததிதி
யளவுறுவெள்ளிதன் வாரோதயம்பார்வை யோரையங்சம்
விளேவுறுசென்மம் விதாதாமுரசெலி மேவுநாவாய்
தளருமுக்காலுறு நாளுஞ்சிராத்தந் தவிர்ந்தனரே.

(எ-து.) பூருவபட்சம் சதுர்த்தசி பிரதமை சஷ்டி ஏகாதசி திரயோதசி வெள்ளிவாரோதயத்துக்கு இராசியங்சம் சென்மத்திரயம் உரோகிணி உத்திரட்டாதி பூரம் இரேவதி புநர்பூசம் விசாகம் பூரட்டாதி கார்த்திகை உத்திரம் உத்திராடம் இவை சிராத்தத்துக்கு ஆகா—எ-று. (எ)

### இதுவும்மது.

பொருந்தாதநாட்களும் வைநாசிகமும் புதல்வர்பெண்டிர்
தருந்தாவில்சென்ம மொழிந்தவுஞ்சந்திராட்ட மட்டமமும்
திருந்தாத்துவாதச வோரையும்வில்லுஞ் செழுஞ்சாமும்
வருந்தாதநன்மை வருஞ்சிராத்தஞ்செய்யில் வாணுதலே.

(எ-து.) அனுகூலமில்லாதநாளும் வைநாசிகமும் யசமான் புத்திரன் பாரி இவர்களுடைய சென்மத்திரயமும் ஒழிந்தநாளும் சந்திராட்டமமும் உதயலக்கினத்துக்கு அ,கஉ இவ்விராசிகளும் தனுவும் சராராசியும் சிராத்தத்துக்குச் சிரேட்டமாம்—எ-று. (அ)

### இதுவுமது.

கிலேயான்செனமமைந் தேழ்நீத்தவோரை குருமகம்புள்
வலமாவடுப்பு மகயிரஞ்சோதிசெக் கோணம்பனே
செலநாட்களிறெரி சித்திரைமூலந் திதிநவமி
தலேயாமுவாவீரா றட்டமிநன்று சிராத்தத்திற்கே.

(எ-து.) சென்மலக்கினமும் ரு,எ இவை ஒழிந்தராசியும் பூசம் மகம் அவிட்டம் அசுவதி பரணி மிருசீரிஷம் சோதி சதயம் திருவோணம் அனுஷம் பூராடம் அத்தம் கேட்டை சித்திரை மூலம் இந்நாளிலே நவமி அமாவாசை துவாதசி அட்டமி இத்திதிகளிலே சிராத்தம்பண்ணுவது—எ-று. (௯)

### இதுவுமது

புகர்புதன்பொன்னவன் வாரோதயங்கால்கள் போற்றுமேலா
முகமுறுமோரைநாட் டிதென்பர்மூன்முறு பன்னிரண்டின்



மிகல்லகோணிற்பத் தீக்கோண்மிருகண்ட கோணத்தினிற்
றகவுறநிற்பச் சிராத்தஞ்செயநன்று தார்குழலே.

(எ-து.) வெள்ளி புதன் வியாழன் இச்சுபக்கோளினுடைய வாரோதயாங்சகங்களும் ஊர்த்துவமுகராசி நாட்களுமாகாது. சுபக்கோட்கள் ௩, ௬, கஉ, இவ்விடங்களினும் பாபக்கோட்கள் கேந்திரத்தினுந் திரிகோணத்தினு நிற்பச் சிராத்தம் பண்ணுவது—எ-று. (க0)

### பாஷாணத்தாபனம்.

பேசும்பலிகரு மஞ்செயவெண்ணிற் பிறைநுதலாய்
மாசிபுரட்டாதி யாடிதைபங்குனி மாதநன்றாம்
தேசுறுமல்லாத திங்களிற்றேய்பிறை யாஞ்சிறந்த
பேசிலொற்றித்த தினம்வைத்தெடுப்பார்கற் பெய்வளேயே.

(எ-து.) தற்காலமொழிந்து உத்தரகிரியை பண்ணுகில் மாசி புரட்டாசி ஆடி தை பங்குனி இம்மாதங்களிலே யாதல் இவையல்லாதமாதங்களி லபரபக்கத்தாதல் ஒற்றித்ததினத்திலே முடிவாகக் கல்லுவைத் தெடுப்பது.

### இதுவுமது.

கல்லுவைத்தற்கிரு மாண்போரையக்கரைந் தாரெடுக்கச்
செல்லுறுகாலஞ் சரத்தினிற்செப்பினர் சேணிற்பிறை
புல்லுமிணைகாணிற் றீதென்புகலுஞ் சிராத்தத்திற்குச்
சொல்லும்பதினே ரிடஞ்சுத்திகொள்ப சுரிகுழலே.

(எ-து.) கல்லுவைக்குமிடத்து உபயராசியும் எடுக்குமிடத்துச் சராராசியுமாம். திராசி தவிரப்படும். அதிக மாதமென்று சொல்லப்படும் உ பிறைகாணுத காலத்திலே கல்லுவைத் தெடுப்பது. இலக்கினத்துக்கு கக ம் இடஞ் சுத்தியாகப் பிரேதகாரியமெல்லாம் பண்ணுவது. ()

### நாராயணபலி.

அட்டகைக்குச்சொல்லு மாதங்களினுமல் லாவிடத்தும்
பட்டதுவாதசி யோணமிரண்டுவாப் பல்வளேயாய்
தட்டறவைத்தனர் வெள்ளிபொன்வாரஞ் சதுர்த்தசியும்
விட்டுரைசெய்தனர் நாராயணபலி வேதியரே.

(எ-து.) மேலட்டகைக்குச் சொல்கின்ற மாசி புரட்டாசி மாதங்களினும்.அல்லாத மாதங்களினும் துவாதசிதிருவோணம் அமாவாசைபூரணை இவற்றில் நாராயணபலியிடுவது. வெள்ளி வியாழன்*சதுர்த்தசி ஒழிந்த திதிவாரங்களிலே துன்மரணமானபேருக்கு நாராயணபெலியிடுவது—எ-று. (கரு)

கிரகசாந்தி.

அட்டமராசிக் கடைத்தவன்றனில்லை நாசிகத்தி
லிட்டமதாகிய சென்மங்களிலினன் வாரத்தினிற்
கிட்டியமூன்றைந்தேழ் நாளிற்கிளர்முன் பொழுதிற்றனஞ்
சிட்டமறையவர்க் கீந்துகோட்பூசனை செய்கென்பரே.

(எ-து.)கிரகசாந்தி பண்ணுமிடத்து சந்திராட்டமம் வைநாசிகம் சென்மத்திரயம் ஞாயிற்றுக்கிழமை ௩, ௫, எ, இந்நாளிற் பூருவாணத்திலே சிரேட்டமான பிராமணருக்கு மகாதானம்பண்ணிக் கிரகசாந்தி செய்வது. ()

இதுவுமது.

சாந்திக்குநன்று மகமுத்திரங்கள் சதயஞ்சோதி
யார்ந்திருபூச மரியுருளத்தங் கலமனுடஞ்
சேர்ந்தவுவாவுடன் சித்திரையாம்பக்கந் தீதுசன்சேய்
மாந்தளிர்மேனிநல்லாய் வாரநீத்தன நன்றென்பரே.

(எ-து.) மகம் உத்திரத்திரயம் சதயம் சோதி புனர்பூசம் பூசம் திருவோணம் உரோகிணி அத்தம் இரேவதி அனுஷம் இந்நாளிலே உவாக்கள் பக்கச்சித்திரை சனி செவ்வா யொழிந்த திதிவாரங்களிலே கிரகசாந்தி பண்ணுவது—எ-று. (கஞ)

அட்டகை.

கன்னிகுடத்திற் கதிருறத்தேய்பிறை யட்டமியிற்
பன்னுநவமியேழ் பன்னைஞ்சினல்விதி பாதத்தினின்
மன்னுங்கிராணம் விடுவாயயனங்கள் சங்கிரம
முன்னுநாநாட்களு மட்டகைபண்ண மொழிந்தனரே.

* ஆயுதங்களினாலே மரணித்தபேருக்குச் சதுர்த்தசி சிரேட்டமென்பாருமுளர்.



(எ-து) மாசி புரட்டாசி மாதத்திலே அபரபக்கத்தட்டமி நவமி சத்தமி அமாவாசை வியதிபாதம் கிராணகாலம் விஷுவாயனம் சங்கிரமம் இவற்றினும் முன்பு சிராத்தத்திற்குச் சொன்ன நாளினும் அட்டகைபண்ணுவது—எ-று. (கசா)

தீவினைப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை சகூ.

---

# உற்பாதப்படலம்.

வில்லிரவாகுதன் மேதினிகம்பித்தல் விண்ணதிர்த
லல்லிடைமீன்விழ லம்மீன்பகலுற லாசையெங்குஞ்
சொல்லிற்புகைந்திடல் சூரியனேக்கிரண் டாயுதித்தல்
கொல்லிபலாய்நண் பகற்கூகைபாடல் கொடிதென்பரே.

(எ-து.) இரவில் வில்லுண்டாதல் பூமிநடுங்கல் வானமதிர்தல் இரவினட்சத்திரமுதிர்தல் நட்சத்திரம்பகலிற்றோன்றல் திக்கெங்கும் புகைதல் ஆதித்தியனிரண்டாய்த் தோன்றல் உச்சிக்காலத்திற் கூகையுறமுதல் இவை தீது—எ-று. (க)

சூரியனைப்பரி வேடமிடல்சூறை யாடல்சுவா
வோரியரற்றல் புட்டன்னிறம்வேறு படலுலகிற்
பாரியவான்மரம் வற்றலுண்டேலப் படிபுரக்கும்
பேரியன்மன்னவர்க் குப்பெருந்தீங்குண்டு பெய்வளையே.

(எ-து.) ஆதித்தியனைவளைத்துப் பரிவேடித்தல் சூறாவளியுண்டாதல் நாய்நரியழுதல் பட்சிகணிறம்பேதித்தல் பெரியவாலமரம் பால்வற்றல இவையுண்டாயி னரசருக்குத் தீது—எ-று. (உ)

தேவர்சிரித்தல் சலித்தல்திரும்புதல் வேர்ப்பிளைத்தல்
காவிலுரைத்த னடுங்குதல்செய்திடி னுனிலத்திற்
காவலர்தங்கட் கிடர்பெரிதாங்கரு வானுதிரந்
தூவிடினுடுந் தொடுகழன்மன்னுந் துளங்குறுமே.

(எ-து) தேவர்கள்சிரித்தல் சலித்தல் திரும்புதல் வேர்த்தல் இளைத்தல் இவைசெய்யி னரசருக்கு மிகவுந்தீது. மூலிரத்தமழைவருடிக்கின் அந்நாட்டுக்கு மாசனுக்குந்தீது.

சிகரத்தகோயில் புகைந்திடிற்றீயெழிற் பேர்படைத்துக்
ககனத்துறுமரங் காற்றின் றிவீழ்ந்திடிற் காவலர்க்குஞ்
சகமத்தனைக்குந் தடுப்பருங்கேடாந்தை யாலயத்துப்
புகன்முட்டை*யீடலுண் டேற்புவிபாழ்க்கும் புணர்முலையே.

(எ-து.) உயர்ந்தகோயில் புகைந்தாலும் அக்கினிப்பற்றினும் மேலாய்வளர்ந்தமரங் காற்றின் றிவிழுந்தாலும் அரசனுக்குமுலகுக்குங் கேடாம். ஆந்தைகோயிலிற்புகினும் முட்டையிடினு முலகங்கெடும்—எ-று. (ச)

காக்கையிரவி லழைத்தல்வெழுத்திடக் காண்டலிரா
னோக்குங்குயிலுரை வான்மீனெழுனூறி யேயமரிற்
றாக்கிடுஞ்சேய்பொன்னை வென்றிடிற்றண்மதி மாசிமகத்
தாக்குநடுவேகி லந்நாடுபொழ்த்துண வஃகிடுமே.

(எ-து.) இரவிற்காகமழைத்தல் காகம்வெழுத்தல் இரவிற்குயில்கூவல் வால்வெள்ளியுதித்தல் போரில் பிரகஸ்பதியைச் செவ்வாய்வெல்லல் சந்திரன் மாசிமகத்துக்கு நடுவேபுகல் இவை யுண்டாயின் அந்நாடு கெட்டு உண்டி சுருங்கும்—எ-று. (ரு)

தூமம்பெருகல் பகல்மீன்விழவெருக்க வானிடத்தே
பாமன்னுபாட்டெழல் பான்மதியோர்கதி யிற்சரித்த
லாமன்னிமாவேற லாசையெரித லராவழைத்த
லூமன்குரல்பல் விடத்துமுண்டேலஃ கிடுமுலகே.

(எ-து.) புகைமிகுத்தல் பகல்வெள்ளிவிழுதல் ஆகாயத்திற் பாட்டோசையெழுதல் சந்திரனோர்கதியிற்செல்லுதல் பசுக்குதிரையைப்புணர்தல் திக்குக்களெரிதல் சர்ப்பமழைத்தல் பலவிடத்துங் கூகைக்குரலுண்டாதல் இவையுண்டாயினவ்வூர்வளஞ் சுருங்கும்—எ-று. (சு)

ஊர்ந்துதிரிவ பறத்தல்பறப்பவை யூர்ந்திடினுஞ்
சேர்ந்தெழின்மாதர்பெண் ணிரண்டீனினுந் தேசமெல்லாங்

* இடல் என்றது ஈடலென விகாரமாயிற்று.



கூர்ந்திடுதுன்பங் குறையுடலங்க மிகுதலன்றி
யார்ந்துருவின்றிப் பிறப்பினுமக்குடி யாசறுமே.

(எ-து.) ஊர்வனபறக்கினும் பறப்பனவூர்கினும் திரிகளிரண்டுபெண் ணிரண்டாண்பெறினும் அத்தேசமெங்குந் துன்பமுண்டாம். அங்கங்குறைதல்மிகுதல் உருவின்றிப்பிறத்தல், இவையுண்டாயினக்குடிகெடும்—எ-று. (எ)

பல்குட்டியீன்பவை யாடொழிந்தொன்றினை யீன்றிடினு
மல்லற்படுத்துந்தன் சாதியிற்பேடை னன்றிவேறோர்
சொல்லுற்றபேட்டி னுடனேமுயங்கத் தொடர்ந்திடினும்
புல்லப்புதுப்புள் வரினும்பழம்புள்ளுப் போகினுமே.

(எ-து.) பல்குட்டியீனுமிருகங்களிலாடொழிந்து மற்றவையொருகுட்டியீன்றாலும் பட்சிகள் தன்பெடையோடன்றி வேறோர்பெடையோடு சேரப்புகினும் புணரவொருபட்சி புதுக்கவரினும் முன்புணர்ந்தபட்சிபோகினும் அந்நாட்டுக்குத் தீதுண்டாம்—எ-று. (அ)

மன்னவர்வாழ்பதி மாநகரங்களின் மாமறையோர்
பன்னும்பதியினி லூமனழைத்திடிற் பாழ்படுமா
மின்னுருமேறுடு வெற்றிடிவான்பல மீன்விழிறேய்
துன்னும்புவியிற்கும் வேந்தர்க்குமென்று துணிந்தனரே.

(எ-து) அரசர்பிராமணருடைய வில்லங்களிலே கூகை கூப்பிடினவ்வூர்கெடும். மின்னல்முழக்கத்துடன் வெள்ளிடியிடித்தல் ஆகாயத்தினின்று நட்சத்திரம்வீழ்தல் இவையுண்டாயின் பூமண்டலத்திற்கும் அரசருக்குங் கேடுண்டாம்.

ஆந்தையிறப்பி லிருப்பிலவ்வில்லத் தவர்க்குறுநோய்
கூர்ந்துநரிபுகிற் போவர்குடிதேனீக் கூடுவைக்கிற்
பாந்தளுறையிற் பருந்தாமையிற்புகிற்பான் மொழியாய்
வேந்தர்பயமிறப் பிற்கூவர்வேறிடில் வெந்துயரே.

(எ-து.) ஆந்தைப்பட்சி யிறந்தாலும் இருந்தாலுமவ்வீட்டையுடையவர்களுக்கு நோயுண்டாம். வீட்டில்நரிபுகுந்தாலுங் குடிபோவர்கள். வீட்டிற் றேனீகூடுகட்டுதல் பாம்புறைதல் பருந்து ஆமைபுகுதல் இவை யுண்டாயினரசராற்பய

மூண்டாம். இவை மரித்தாலுஞ் சுவர்வெடித்தாலுந் துன்
மூண்டாம்—எ-று. (க

இல்லத்துப்பூனை விழைவின்றிநாடொறு மெப்பொழுதுஞ்
சொல்லுற்றழிற்றுன்ப மில்லத்தினிற்கூரை சூழவரி
னல்லற்படுத்து மவ்வூர்க்குட்டியாமவை முட்டையிடில்
வல்லுற்றமுட்டைக டான்குட்டியாயினு மண்கெடுமே.

(எ-து) வீட்டிற் பூனையாதொரு காரியமின்றி நாடோ
று மெந்நேரமுமழின் அவ்வீட்டுடையவர்கட்குத் துன்ப
மூண்டாம். அப்பூனை வீட்டிற் கூரையைச்சுற்றி வரினுந்து
ன்ப மூண்டாம். அவ்வூரிற் குட்டியிடுமவை முட்டையிடினும்
முட்டையிடுமவை குட்டியிடினும் பூமண்டலங் கெடும்-எ-று.

ஒருதிக்கிலேபற்றி யெப்போதுந்தூமமிடி லந்நாடுங்
கருதப்படும்பதி யுங்கெடுங்கங்கு லெழுமதியைப்
பொருந்துற்றவட்டத்துட் கோளுறினும்பொலி யச்சிவந்து
பெருவட்டமாயிடினும் பெரும்பான்மை மழைபெய்யுமே.

(எ-து.) ஒரு திசையிற்பற்றி யெந்நேரமும் புகையுண்
டாகி லந்நாடும் நகருங்கெடும். இராவிலே சந்திரனை வளைக்கு
ம் பரிவேடத்துக்குட் கிரகங்களிருக்கினும் அப்பரிவேடமிக
ச்சிவந்து பெரியவட்டமாயிடினும் பெருமழையாம்—எ-று. ()

வட்டமிரண்டிடின் மன்னவனாட்டை முனியுமென்க
வட்டமொருமூன்று நான்கதின்மன்னவற் கேதுயராம்
வட்டமதுள்ளே குசனுறிற்போரென் மழையிலையாம்
வட்டமதுட்சனி யேற்கலகம்மென் மதி யிடத்தே.

(எ-து.) சந்திரனைவளைத்து இரண்டுபரிவேட மிடின்
அரசன் நாட்டைக் கோபிப்பன். ௩, ௪, பரிவேடமிடி லரசர்
க்குத் துன்பமாம். பரிவேடத்துட் செவ்வாயுறிற் போராம். ம
ழையில்லை. அப்பரிவேடத்துட் சனியுறிற் கலகமாம்—எ-று.

சனிதானுறவட்டஞ் சந்திரன்சாரிற் பிணிபுகரோற்
பனியேமழையில்லைப் பார்ப்பானுறுகிற் பெருமழையா
மினிதேபுதனுறி வின்னுண்முதலேழு நாளிடத்து
நனிசேர்மழையில்லையே நாசமாமென்பர் நல்லுயிரே.



(எ-து.) சனியைவளைத்துப் போடும்பரி வேடத்துக்கு
ட் சந்திரன் கூடுகிறோயாம். அப்பரிவேடத்துக்குட்சுக்கிரன்
கூடின் மழையில்லையாம். வியாழன் கூடுகிற்பெருமழையாம். பு
தன் கூடுகினன்றாம். பரிவேடிக்கு நாண்முதலேழு நாளை
க்குள் மழையில்லையாயின் பிரசைகள் நாசமாம்—எ-று. ()

உதயத்துமத்தமத்தும் பரிவேடமிடினும் போராஞ்
சிதைவிக்குமுன்பகல் வானினைச்செய்யநட் டுச்சியினி
லதிவிட்டிபின்பக லாக்கமுயிரினுக் காங்காவு
பதியுற்றவெங்கதி ரைப்பரிவேடிக்கி னன்றென்பரே.

(எ-து) சூரியனை யுதயகாலத்தும் அத்தமனகாலத்தும்
பரிவேடிக்கிற் போராம். முன்னேரமாகி லழிவாம். மத்தியான
மாகி லதிகமழையாம். பின்னேரமாகிற் பிரசைகளுக்கு லாப
மாம். கிரகணகாலத்தி லாதித்தியனைப் பரிவேடிக்கினன்மை
யாம்.—எ-று. (கரு)

வடக்குமழைதெற்கு வாயுமிகுமன்னர் கேடுமேல்கீ
ழிடிற்பிணிகாரிலை யாங்கிருபக்கத்து மந்திபடு
மிடத்தின்மலவெழும் போதின்மழையுச் சியினரசர்
படப்போர்மலைவர் பதிசூரியன்செயல் பார்குறித்தே.

(எ-து.) சூரியனுக்கு வடக்குப்பரிவேடிக்கின் மழை
யாம். தெற்காகின் காற்றுமிகுதியாம். மேற்காகிலரசர்க்குக்
கேடாம். கிழக்காகினோயாம், இருபக்கத்துமாயின் மழையில்
லை. அத்தமனகாலத்தும் விடியற்காலத்துமாயின் மழையாம்.
உச்சிக்காலமாயி னிராசகலகமாம்—எ-று. (கசு)

சிலைமறிமீனரி தேளெழுமீன்விழிற் செய்யமன்ன
ருலைவினைச்சொல்லுந் துலாங்குடநண்டு சுறுவினஃகம்
விலைகுன்றும்வீணையின் மந்திரிசாம்வெய்ய நோய்கன்னியி
னிலைபெறுமேற்றின் மழையின்றியேபயிர் நீங்கிடுமே.

(எ-து.) தனு மேடம் மீனம் சிங்கம் விரிச்சிகம் இவை
யுதிக்க நட்சத்திரமெரிந்து வீழிலரசருக்குக் கேடாம். துலா
ம் கும்பம கர்க்கடகம் இவை யாகிலக மொறுக்கும். மிதுன
மாகில் மந்திரிமரணமாம். கன்னியாகில் வியாதியாம். இடப
மாயின் மழையின்றிப் பயிரழிவாம்—எ-று. (கஎ)

குடக்குங்குணக்குங் குறித்துவிற்றோன் றிடிற் கொண்டலகுயால்
சடக்கெனாழ்ந்தலென் றேயறிசாற்றிய தெற்கிடினும்
வடக்கினுமன்னவர் தந்திரமந்திரத் துள்ளவர்க்குந்
திடுக்கம்வருமென் றுரைசெய்கிலைநுதற் றேமொழியே.

(எ-து.) மேற்குங் கிழக்கும் விற்றோன்றுகிற் சடுதியின் மழையென்றுந் தாமதமென்று மறிக. தெற்குவடக்கில் விற்றோன்றில் அரசன் சேனைக்கும் மந்திரிக்குந் தீதுண்டாம்—எ-று. மழை மேற்காகிற் றாமதமென்றும கிழக்காகிற் சடுதியிலென்று மாறிப்பொருள்கொள்க. (௪௮)

கூவல்குளங்களி னீர்பரந்தேறினுங் குன்றினு
மேவியநீர்களித் துள்வாங்கினுநிறம் வேறுறினும்
வீவுறுமப்புன லுண்பவர்தாழ்மதி மேற்கொளினுங்
காவலனுடுங் கடுந்துயர்பட்டுக் கழிந்திடுமே.

(எ-து.) கிணறுகுளங்களி னீர்பரம்பிமிகினுங் குறையினும் அந்நீர்களித்துள்வாங்கி நிறம்வேறாகினும் அந்நீருண்பவரது குறைந்தபுத்தி யதிகப்படினும் அரசனுமந்நாடு மிகுந் துயரப்பட்டுக் கலக்கமடையுமாம்—எ-று. (௪௯)

புத்தேளிர்மேனியிற் பீடத்தினிற்செஞ் சிதல்பொருந்தி
லத்தேசமும்பதி யுங்கெடுமாலயத் துள்வாயிலின்
வைத்தேறுமண்டபத் தங்கணத்தும்வரி னூர்கெடுமா
மொத்தேபலிபீடத் துற்றெழினூர்பாழ்க்கு மொண்ணுதலே.

(எ-து.) தேவவிக்கிரகங்களினும் பீடத்தினும் சிதல் பொருந்தின் அந்நாடு மரசனுங்கெடும். கோயிலுட்டுவாரத்தினும் துவசத்தம்பமண்டபத்தினும் முற்றத்தினும் பலிபீடத்தினு மஃதுண்டாயி னவ்வூர்கெடும்—எ-று. ()

விட்டில்சுவாக்கோழி மேலெலிநீழெலி மிக்கிடினுங்
கெட்டிடுமில்லங் கிளர்ந்துசிகரி பறந்திடினுங்
கொட்டிடுமூட்டை மிகினுங்குடிபோக்குந் திண்ணமென்று
தட்டறவோதினர் சான்றோர்வடசொற் றளிரடியே.

(எ-து.) விட்டிற்பூச்சி நாய் கோழி இறப்பெலி அகழெலி இவைகண்மிகுந்தாலும் விட்டிலுள்ள வெலியல்



வீட்டைவிட்டுப்போகினும் மூட்டைமிகுந்தாலும் அக்குடிபோமென்று வடமொழிப்புலவர்கள் கூறினர்—எ-று.()

உற்பாதப்படலமுற்றிற்று.

ஆகக்கலித்துறை ௪௮௪.

## எச்சவினைப்படலம்.

சங்கிரமபலன்.

தன்னாளிற்பத்தி லிருபதிற்சங்கி ரமிக்கிற்கொலை
யிந்நாளின்மற்றிரு பாலுந்தனச்சேத மின்பமெய்து
மந்நாடமக்காறின் மூன்றாறிற்பன்னொன் றிலையிரண்டிற்
சொன்னார்கதிரவ னேற்குலநன்றென்பர் தூய்மொழியே.

(எ-து.) யாவனொருவன் பிறந்தநாளிலும் ௧௦-ம், நாளினும் ௨௦-ம், நாளினும் ஆதித்தியன் சங்கிரமிக்கிற் பிராணபயமுண்டாம். இவற்றினருகினாட்களிற் சங்கிரமிக்கின் அர்த்த சேதமாம். அவற்றின் ஆறுநாள் நன்மையைப்பண்ணும். ஆதித்தியன் ௩, ௬, ௧௧, ௧௦, இவ்விடங்களிற்சங்கிரமிக்கிற் குலதோஷமில்லை—எ-று. (௧)

இதுவுமது.

சன்மங்களிற்சங் கிரமிக்கினுச மயலிரண்டு
மின்னலொழிந்த வந்நாளிருமூன்று மிசைந்தடைவே
பொன்னிழவுபேறு போக்குநிலைபேறு பொற்கொடியே
மன்முனிவாமன் னருளென்றுரைக்கும் வடமொழியே.

(எ-து.) சென்மத்திரயங்களிற் சங்கிரமிக்கி லதுதோஷமாம். இவற்றின் முன்னும்பின்னு மடைந்தநாள் நன்மையைப்பகைக்கும். ஒழிந்த ஆறுநாட்களுங்கூடியடைவே தனச்சேதம் தனலாபம் யாத்திரை கிரகவாசம் இராசபயம் இராசபலம் இவையுண்டாம்—எ-று. (௨)

இதுவுமது.

பத்தின்வருக்கமு மெட்டின்வருக்கமும் பத்தீரெட்டுச்
சுத்தமகரங் குளிர்நிலைமேடத்துச் சூலநாளாய்

வைத்தனரல்லாத மாதசூலங்கட்கு நாண்மூன்றென
வுத்தரகார்க்கிய ஞாதன்மந்திரி யோதினரே.

(எ-து.) சங்கிரமசூலநாள் உத்தராயன மகரத்துக்கு க00 நாள்; தெட்சணாயன கர்க்கடகத்துக்கு சூச நாள்; ஐப்பசி விஷுவத்துக்கு க0 நாள்; சித்திரை விஷுவத்துக்கு கசூ நாள்; அல்லாத இரவிசங்கிரமங்களுக்கு மும்மூன்று நாள்தோஷமாம்—எ-று. (ரு)

இதுவுமது.

உதிக்கும்பொழுதினிற் றேசங்கெடுமுச் சியிற்பயிர்கள்
கொதித்தல்லவா மிளவுச்சியினேய்கொற்ற மன்னர்கெடும்
பதிப்பறுபிற்பகற் பாழ்பகலோன்பட முன்புகேடா
மதிப்படுகன்மை யிராவிஷுவாயன மாயிடிலே.

(எ-று.) விஷுவாயன முதயகாலமாகிற் றேசத்திற்குக் கேடுண்டாம். உச்சிப்பொழுதாகிற் பயிர்க்கேடாம். இளவுச்சியாகில் வியாதியு மிராசபீடையுமாம். இசைமாம். சந்தியாகாலமாகிற் றேசத்திற்காகாது. இரவாகின் மிகவுநன்றாம்—எ-று. விஷுவமென்று மேடச்சங்கிரமத்துக்கும் துலாச்சங்கிரமத்துக்கும் பெயர். விஷுவாயனமென்று மேடச்சங்கிரமத்துக்குப் பெயர்—எ-று.

ஆடிப்பஞ்சமி சித்திரைச்சங்கிரம பலன்.

பாவலராடியிற் பஞ்சமிசித்திரைச் சங்கிரம
மேவியவாரம் பலமுறைசெய்யில்வெய் யோன்முதலாத்
தூவல்பெருமழை போர்பெருங்காற்றுநற் காலந்தொக்க
மேவியவெள்ளம் விஞசமதாமென்பர் வேல்விழியே.

(எ-து.) ஆடிமாதத்துப் பூருவபக்சபஞ்சமியும், சித்திரைவிஷுவமு மூற்றவாரத்தின்பலன் அற்பவிருட்டி அதிவிருட்டி யுத்தம் மகாவாதம் சுபிட்சம் பிரளயகாலம் நாசம் என்ற ஏழுபலனும் ஞாயிற்றுக்கிழமைமுதலாக வடைவேயறியப்படும்—எ-று. (ரு)

மகரசங்கிரமபலன்.

மூன்றுத்திரங்கழை மூலமுகுந்தனிற் றையயனங்
தோன்றிடிலஃகஞ் சுரிகுழலாயேறுந் தொல்பரணி



பான்றமுப்பூரம ராக்கேட்டையாகி லகந்தாழுமற்
றேன்றவையிற்சம மாகவெல்லோரு மியம்பினரே.

(எ-து.) உத்திரத்திரயம் புநர்பூசம்மூலம் திருவோணம் இந்நாளின் மகரசங்கிரமமாகி லஃகமேறும். பரணி பூரத்திரயம் ஆயிலியம் கேட்டை இந்நாளாயின் அஃகங்குறையும். ஒழிந்தநாட்கள் சமமாம்—எ-று. (சு)

மேடச்சங்கிரமபலன்.

பரணிமுதனான்கும் புன்பயிராஞ்செங்கை யாதிநான்கும்
வரைவின்மழையா மகமுதலாம்பத்தில் வானம்போக்கு
முரணியநீர்முத லொன்பதுநற்கால மென்பரொன்று
மிரவியம்மேடத் திசைவுறுநாட்க ளினவளையே.

(எ-து.) பரணிமுதலாக நாலுநாளிற் புன்பயிராம். திருவாதிரைமுதலாக நாலுநாளுமிகுமழையாம். மகமுதற்பத்துநாளின் மழையற்பமாதல் அல்லது சுழித்துப்பெய்தலாம். பூராடமுதலொன்பதுநாளும் சுபிட்சகாலமாம். இது சித்திரைவிஷுவம்பிறந்த ஆண்டு—எ-று. (எ)

இதுவுமது.

மீனரிவிற்கொறி கன்னிவிடையெழச் சங்கிரமிக்கில்
வானமிகுமஃக மேறுமகரந் துலைகுடமே
லானசமமா மலவன்றடிதேளி லாயிழையா
யீனம்படுமஃக மென்விஷுவாயன மெப்பொழுதே.

(எ-து.) மீனம் சிங்கம் தனு மேடம் கன்னி இடபம் இவையுதயமாக விஷுவாயனம்வரில் அவ்வாண்டு மழையதிகமாய் அஃகமேறிக்காலமுநன்றாம். மகரம் துலாம் கும்பம் உதயமாகில் சமமாம். கர்க்கடகம மிதுனம் விரிச்சிகம் உதயமாகில் மழையுமஃகமுஞ் சுருங்கிக் காலமுநன்றாகாது—எ-று. எப்பொழுதுமென்றதனால் மற்றுள்ள சங்கிரமங்களுக்கு மிப்படியே பார்க்கப்படும். (அ)

கிரகணபலன்.

வாருணமண்டல நீர்பாம்பரன்விற்செக் காடிநாவ
யாரன்முறந்தை பதமகம்பூர மடுப்பனலாக்
தேர்பனைபுட்கேட்டை யோணமுரசு செழுநிலனு
மார்வுறுமல்லாதவை'வாயுமண்டல மாமென்பரே.

(எ-று.) பூராடம் ஆயிலியம் திருவாதிரை மூலம் சதயம் உத்திராடம் இரேவதி இவை வருணமண்டலமான நாட்களாம். கார்த்திகை விசாகம் பூசம் பூரட்டாதி மகம் பூரம் பரணி இவை அக்கினிமண்டலமான நாட்களாம். உரோகிணி அனுஷம் அவிட்டம் கேட்டை திருவோணம் உத்திரட்டாதி இவை பூமண்டலமான நாட்களாம். ஒழிந்த அசுபதி மிருகசீரிடம் புனர்பூசம் அத்தம் சித்திரை சோதி உத்திரம் இவை வாயுமண்டலநாட்களாம்—எ-று. (கூ)

இதுவுமது.

உத்தமம்வாருண மண்டலநாளிற் கிராணமுறின்
மத்திமமாகில மண்டலத்தெய்திடில் வான்பிணியி
னித்தமுநாச முறும்வாயுமண்டலத் தேறினில
மொத்தகண்ணுய்பசி போர்கனன்மண்டல முற்றிடிலே.

(எ-து.) வருணமண்டலமான நாளிற் கிராணமுறின நன்றாம். பூமண்டலமானநாளிற் கிராணமுறின்மத்திமமாம். வாயுமண்டலமானநாளிற் கிராணமுறில் வியாதி பீடையாம். அக்கினிமண்டலமானநாளிற் கிராணமுற்றால் யுத்தமுந்துர்ப்பிட்சமுமாம்—எ-று. (உ0)

சந்திரதெரிசனம்.

மீனுடிடைவெண் மதிதெற்குயரும் விடைகுடத்திற்
றனுஞ்சமமல்லவை வடக்குன்னத மாகினன்றும்
வானோர்பரிமுதன் மூன்றில்வளரும் பிரதமைவரிற்
றனையவ்ஃக முயருமொக்குஞ்சாயு மென்பர்களே.

(எ-து) சாந்திரமானவகையாற் பங்குனிசித்திரைமாதங்களிலே பிறைதெற்குயரும். மாசிவைகாசியி லொத்துநிற்கும். அல்லாதமாதங்களில் வடக்குயரும். இப்படியொழிந்து விபரீதமாய்வரிற் றேசத்துக்குப்பொல்லாது. அசுபதிமுதன்மூன்றுநாளிற் பூருவபக்கப்பிரதமைவரி லடைவே அஃகமேற்றமும் சமமும். குறைவுமாம்—எ-று. (கக)

காலபலன்.

அமைச்சனுடன்சனி சேயுறிலாங்கவற் கேழிடமாஞ்
சமத்தினினிற்றல்செய் தாற்றக்கதென்னிலங் காபுரிக்கு





மிமத்தினுக்குமிடை யாகிலமெங்கணும் போரிநோயிற்
குமைப்புறமஃகஞ் சிறுவிலையாலுங் குறைபடுமே.

(எ-து.) வியாழனுடன் சனி செவ்வா யிருவருங்கூடி நின்றாலும் அல்லதொருவர்கூடி நின்றாலும் வியாழனுக்கேழாமிடத்திலே யவர்களிருவர்நின்றாலும அல்லதொருவர்நின்றாலும் சகலபோகங்களையுடைய இலங்காபுரிக்கும் பொன்மயமாகிய இமயபருப்பதத்துக்கும் நடுவிலுண்டாகிய கூ000 யோசனைக்குட்பட்ட கருமபூமியின் மனுஷரெல்லாரும் போர் நோய் பசி முதலியவற்றாற் பீடைப்படுவார்கள்—எ-று. (கஉ)

இதுவுமது.

சிலைமீன்கலைவிடை சிங்கத்தந்தத்துச்செவ் வேந்தனுட
னிலைசெய்சனிநிற்பிற் சோறின்றிநீடுயிர் வீடுதலான்
மலைசேர்சுரங்களி னூட்டினிலூரின் மனையின்மன்றிற்
றலையோடுங்கொண்டு நடித்திடுங்கூளி தருக்குமிக்கே.

(எ-து.) தனு மீனம் மகரம் இடபம் சிங்கம இவ்விராசிகளின் பின்கூற்றிலேசெவ்வாய்சனி வியாழனுடனே நிற்கில் குருசவுரி ஆர்சவுரி குருஆர் என மூன்று தோஷயோகமுண்டாம். அக்காலம் சம்புத்தீவி லொன்பதிலொரு கூறானபரதகண்டத்தின் மனுடரெல்லாரும் மிகுந்த துர்ப்பிக்ஷத்தினாலே யிறந்துபோவார்கள். அப்போது மலைகளினும் வனங்களினும் தேசங்களினும் ஊர்களினும் மனைகளினும் மன்றுகளினும் இறந்தகபாலங்களையுந் தரித்துக்கொண்டு பிசாசுகள் கொர்வமிகுந்து பாடியாடும்.

இதுவுமது.

வென்றிவிடையரி தன்னடுக்கூற்றின்மீன் றேட்கடையி
னின்றுறநீல னுடன்குருநிற்பிற் குருசௌரியா
மன்றியுந்தீயோர் மடக்கத்துநல்லோ ரதிசாரத்தும்
பொன்றிடுநல்லுயிர் போரிற்பிணியிற் பசியின்மிக்கே.

(எ-து.) இடபம் சிங்கநடுவிற் றிரேக்காணத்தும் மீனம் விரிச்சிகங் கடையிற்றிரேக்காணத்தும்நின்றசனியுடனே வியாழனிற்கிற் குருசவுரியென்று பெயராம். அக்காலத்திலே குரூரகிரகம் வக்கிரிக்கச் சவுமியக்கிரகம் அதிசார

ம் பெற்றகாலத்தும் மனுஷரெல்லாரும் போரினாலும் வியாதியாலும் பசியாலுமிறப்பர்கள்—எ-று. (கச)

இதுவுமது.

தக்கவிடைமீனரி தனுக்கோலிற் சனியுஞ்சேயும்
வக்கிரஞ்செய்திடில் வாரணமானுடர் மாப்பசுக்க
ளுக்கிடுமஃக முலர்ந்திடும்பாம்புட னுற்றசுன்னு
மக்குணஞ்செய்ய வனைத்துமூன்றுமாதொன் றுமென்பரே.

(எ-து) இடபம் மீனம் சிங்கம் தனு துலாம் இவற்றினின்று சனியாதல் செவ்வாயாதல் வக்கிரித்து மேடம் கும்பம் கர்க்கடகம் விரிச்சிகம் கன்னி இவற்றிலேபுகுந்துநின்றால் ஆனை மனுஷர் குதிரை பசுக்கள் இவையிறக்கும். இராகுகேதுக்களுடன் சனி கூடினாலும் வக்கிரித்து நின்றாலும் முன்சொல்லிய பிராணிகள் மூன்றுகூறு நாசமாம் ஒரு கூறிருக்கும்—எ-று. (கரு)

இதுவுமது.

பாந்தளுடன்சேய் படியநடக்கிற் படியரசர்
காந்தியமர்செய்வர் கற்றோனுட னுறிற் காலநன்றாம்
வேந்தனுடனுறில் வானம்விழாது மிகுமழையாம்
பூந்தண்குழலாய் புகருடனிற்பிலிப் பூதலத்தே.

(எ-து.) இராகுகேதுக்களுடன் செவ்வாய்கூடி நடக்கில் யுத்தமுண்டாம். புதன் கூடி நடக்கில் நற்காலமாம். வியாழன்கூடி நடக்கில் மழையில்லையாம்: சுக்கிரன்கூடி நடக்கி லதிகமழையாம்—எ-று. (கசு)

மகக்குறி.

மகத்துக்குத்தெற்காய் வளர்மதியேகி லகமுடியும்
பகுத்திடையேகி லிரட்டிகொண்டோங்கிடும் பாங்குடைய
மிகுத்தவடக்கேகி லஃகங்கடையினின் வீழுமாசி
மகத்தைமதியிழந் தேகிடின்மன்னர் மடிவர்களே.

(எ-து.) மாசிமாதத்துப் பூரணசந்திரன் மகநட்சத்திர * நாலுமீனுக்குந் தெற்கே நடக்கிலஃகங் குறையும்.

* நாலுமீனுக்குத் தெற்கேசந்திரன் செல்லுமாகிலகம் வளருமென்பாருமுளர்.



முதன்மீன் இரண்டாமீன் மூன்றாமீன் உடனடக்கிலஃகமிரட்டியாம். நாலாமீனுட னடக்கில் துர்ப்பிக்ஷமாம். நாலுமீனுக்கும் நடுவேசெல்லுமாகில் இராசாக்களுக்கு மிகவுங்கேடாம்—எ-று. (கள)

மழைக்குறி.

குருவுடன்கூடிக் குசன்முன்செலமழை குன்றும்வெள்ளி
வருபுதன் றன்னொடு கூடின்மழைவெள்ளம் வரன்சுடரோ
னிருதிறத்தோர்க்கு மிடைநிற்கிலில்லை யிரவிபின்சேய்
பொருதெழமுன்பு புகர்நிற்கில்வானம் பொழிந்திடுமே.

(எ-து.) வியாழனுடனே செவ்வாய் கூடி யாதித்தியனுக்கு முன்னடக்கின் மழையில்லையாம். புதனுஞ்சுக்கிரனுங் கூடில்வெகுமழையாம். புதனுக்குஞ் சுக்கிரனுக்கு நடுவே ஆதித்தியனிற்கிற் பானுமந்தியமென்னு மகாதோஷமாய் மழையில்லையாம். ஆதித்தியனுக்குப்பின்செவ்வாயுதிக்க முன்னேசுக்கிர னுதிக்கில் வெகுமழையாம்-எ-று.

இதுவுமது.

என்றுங்கதிர்பின்பு வெள்ளியெழமுன்பு சேயெழுநா
ளொன்றுமழையில்லை யும்பர்குருக்குச னோடுதிக்கி
னின்றிடும்வானம் புதன்பகலுட்டோன்றி னீலன்சேயோ
னன்றியவக்கிர மாயினும்வான மடைத்திடுமே.

(எ-து.) ஆதித்தியனுக்குப்பின் சுக்கிரனுதிக்க முன்பு செவ்வாயுதிக்குங்கால மழையில்லையாம். வியாழன்செவ்வாயுடனே யுதிப்பினும் புதன்பகலுதிப்பினுஞ் சனி செவ்வாய் வக்கிரிப்பினும் மழையில்லையாம்—எ-று. ஆதித்தியனுக்குமுன்பு வருகிறதைப் புதன்பகலுட்டோன்றிலென்றார். (கஅ)

இதுவுமது.

விளக்குத்திரந்தோர்பனை விசாகத்துச்சேய் மேவிநிற்பி
னொளிக்கும்மழைகிழக் கொண்புகர்கோதி முதன்மூன்றினு
மளிக்குமகமுதன் மேற்கைந்தினுநிற்பி னுயிர்மழையாய்
துளிக்குமழையில்லையா மாறிநிற்பிற் சொரிந்திடுமே.

(எ-து) செவ்வாய் சோதி உத்திரம் உரோகிணி அனுஷம் விசாகம் இவற்றினிற்பின் மழைக்குறைவாம். சுக்கிரன் சோதி முதன் மூன்றுநாட் கிழக்கேநிற்பினும் மகமுதலைந்துநாண்மேற்கே நிற்பினும் மழையில்லையாம். இந்நாட்களிற் கிழக்குமேற்கு மாறிநிற்கின் மழைமிகவுண்டாம்—எ-று. (உ0)

இதுவுமது.

நீரிற்புகரு *நெருப்பிற்கதிரு நிலாக்கலைகண்
டார்விற்குடந்தே ளமரின்மழைபெரி தக்காலத்துத்
தேரிற்கதிர்க்கும் புகர்க்குமுன்னேசெய்யோ னேநிற்றாறி
மாரிக்கணையின்றி மண்டலமாமழை யாமென்பரே.

(எ-து.) பூராடத்திலே சுக்கிரனிற்பினும் கார்த்திகையி லாதித்தியனிற்பினும் சந்திரன் மகரம் கர்க்கடகம் தனு கும்பம் விரிச்சிகம் இவற்றில் வருஷகாலத்து நிற்பினும் வெகுமழையாம். ஆதித்தியனுக்கு முன்னேயாதல் சுக்கிரனுக்கு முன்னேயாதல் செவ்வாய்நிற்கின் மழை சுழித்துப்பெய்தல் மண்டலமழையாய்த் தூறிப்பெய்தல் செய்யும்—எ-று. (உக)

மாதமழைக்குறி.

விடையிற்கதிருறு நாளில்விசாக முதலைந்துநா
ளடைவிற்புயன்மாறி லாடிமுதற்றிங்க ளைந்தடைவே
தடையுற்றிடுமோனிப் பஞ்சமியிற்றக்க வாயுவிற்கால்
புடையுற்றொர்சாம முண்டேற்புயல்பெய்யுமிப் பூதலத்தே.

(எ-து.) வைகாசிமாதத்து விசாகம் அனுஷம் கேட்டை மூலம் பூராடம் இந்நாட்களிலே மழைபெய்யாதாகில் ஒருமாதத்துக் கொருநாளாக ஆடிமாதமுதன் மழை குறையும். ஆனிமாதத்துப் பூருவபக்கப் பஞ்சமியிலே வாயுமூலையிற் காற்றொருசாமத்தளவு முண்டாகி லவ்வாண்டு வெகுமழையாம்.

இதுவுமது.

நந்தாவிளக்கு நவமிகடைக்குளத் துப்பூரணை
யிந்தார்பதினைன் கினனுடைவாரத் தெழிலாடியின்

* நெருப்பென்று கேட்டைக்கும் பெயராதலின் கேட்டையி லாதித்தியனிற்கும் காலமும் வெகுமழையென்று சொல்வாருமுளர்.



மந்தாரமாதன் மழையாதலுண்டேல் வளமிகுத்துச்
செந்தாமரைமங்கை நோக்குடைத்தாகாடு தேமொழியே.

(எ-து) ஆடிமாதத்துச் சோதியும் நவமியும் உத்திராடமும் பவுரணையும் சதுர்த்தசியும் ஞாயிற்றுக்கிழமை கூடினும் அன்றித் தனித்துநிற்கினும் இந்நாளிலே மந்தாரம் மழை பரிவேடம் இந்திரதனு முழக்கம் இவையுண்டாகி லவ்வாண்டு சுபட்சகாலமாம்—எ-று. (உஉ)

இதுவுமது.

மழைக்கோளரவம் புதனிடைபான்மதி மன்னுகாலந்
தழைக்குமழைபெரி தாங்கவர்தம்மொடு போரகத்தி
லழைக்கும்புதன்புகர் கான்மழையாமாகி யாதிபனி
யிழைக்கின்மழைதேன் முதலாறுதிங்க ளெதிருறுமே.

(எ-து.) சுக்கிரன் இராகு கேது புதன் இவர்களுடன் சந்திரன் கூடின் மழையுண்டாம். சந்திரனையொழிந்து புதனுக்கும் சுக்கிரனுக்கும் யுத்தமுண்டாய்ப் புதன்செயிக்கிற் காற்றுண்டாம். சுக்கிரன்செயிக்கின் மழையுண்டாம். மாசிமுதலாடியீறாகியாக மாதந்தோறுமூடுபனிபெய்யில் கார்த்திகை ஐப்பசி புரட்டாசி ஆவணி ஆடி ஆனி இம்மாதங்களிலே மழை மிகவுண்டாம். ஆவணிமுதலாகமுன்சொல்லாத மாதங்களிலே மூடுபனியுண்டாகில் அம்மாதங்களினும் மழையுண்டாம். ()

வருஷசெற்பம்.

தேளரிமானிற் கதிர்சேர்பொழுதில்வான் பெய்யிற்பெய்யு
மான்சிலைகோல்பெண்ணி லுண்டேவிலையடுங் கோளதனி
னாளுறிற்சந்தியிற் பகற்சங்கிரமிக்கி னன்றலகோ
ணிர்க்கிளையேகின் மழைமிகவுண்டென் னிளைவளேயே.

(எ-து.) ஆதித்தியன் கார்த்திகை ஆவணி தை இவற்றிற் சங்கிரமித்தகாலத்து மழையுண்டாகின் மழை பெய்யும். மார்கழி ஐப்பசி புரட்டாசி இவற்றின் சங்கிரமகாலத்துமழையுண்டாயின் இல்லையாம். ஞாயிறுசெவ்வாய் சனி இவற்றுதல் சந்தியாகாலமாதல் பகற்காலமாதல் சங்கிரமிக்கின் மழைக்குறைவுண்டாம். ஐந்தாறுகோள் கிளையேசேரநிற்குமாயின் மிகவும் மழையுண்டாம்—எ-று. (உ௫)

### இதுவுமது.

நீரிற்கதிருறு நாளின்மந்தார நிரம்பவுண்டேற்
றேரிற்கதிர்செங்கை பற்றியநாண்முதற் சேரமழை
யார்வுறப்பெய்யு மலைநாட்டிலாறேழு நாளளவில்
வாரித்திரளெழு நாளினில்வேலை மடுத்திடுமே.

(எ-து.) பூராடத்திலே ஆதித்தியன் புக்கநாள்முதல் கரு, நாட் சந்திராதித்தர்களை மந்தாரமறைப்புண்டாகில் திருவாதிரை மூன்றுங்காலிலாதித்தியன் புக்கநாள்முதல் மாதமொன்றுக்கு உவ, நாள்வீதமாகச் சையகிரியிலே மழைபெய்யும். ஆதித்தியகெதியால் ஆறேழுநாளளவும் சமுத்திரத்திலே மழைபிரளயமபாயும்—எ-று. இப்பதின்மூன்றுநாளு நிருமலமாயிருந்தால் நாள்வீதம்பார்த்து அந்தமாதமழையில்லையென்றுகாண்க—எ-று. (உசு)

### விற்குறி பரிவேடக்குறி.

பூரமுரோகிணி யுத்திரமுதலைந்திலும் போர்வில்விடி
லாருமணிநிசை யஞ்சிருபான்பத்து மூவேழாறில்
சேரும்பரிவேட முத்திரம்பூரங் கலஞ்செங்கையில்
வாருமெட்டோரொன்ப தீரொன்பதேழின் மழைவருமே.

(எ-து.) பூரம உரோகிணி உத்திரம் அத்தம் சித்திரை சோதி விசாகம் இந்நாட்களிலே மழைபெய்யும்பொழுது வில்லிட்டால் ரு, உ0, க0, உக, சு, இந்நாட்களுக்குள்ளே மழைபெய்யும். உத்திரம் பூரம் இரேவதி திருவாதிரை இந்நாட்களிலே சந்திராதித்தர்களைப் பரிவேடிக்கில் அ, கூ, கஅ, எ, இந்நாட்களுக்குள்ளே மழைபெய்யும்—எ-று. (உஎ)

### செக்கர்மேகக்குறி.

மூலமடுப்புப் பதநீரெட்டாமுத லஞ்சிற்பன்னொன்
றூத்திராட முரசேழிற்கேட்டையி னைந்துமூன்றிற்
றாலநட்டுச்சியி னிற்செக்கர்மேகந் தரினுமரா
னேல்கொளவெண்முகி லேழ்தினத்துமழை யின்றேற்றீதே.

(எ-து.) மூலம் பரணி பூரட்டாதி பூராடம் இந்நாட்களிலிரத்தமேகமுண்டாகி லெட்டாநாளிலேமழைபெய்யும். அசுபதியிலைந்தாநாள் உத்திராடத்துப் பதினோராநாள் உத்திராட



டாதியிலேழாநாள் கேட்டையிற்பத்தாநாள் அனுஷத்தின் மூன்றுநாள் இவற்றிலேமத்தியான மிரத்தமேகமுண்டாகின் மழைபெய்யும். மத்தியானம் திருவாதிரையிலே வெண்முகிலுண்டாகி லேழாநாள்மழைபெய்யும். இப்படியே இந்திரசாபம் பரிவேடம் இரத்தமேகம் முதலியவற்றின் மழையில்லையாயின் தேசத்துக்குத் தீதுண்டாம்—எ-று (உஅ)

### காற்றுக்குறி.

புந்தியுடன்புகர் சந்திரன்பூமன் பொருந்திபெழ
மந்தன்படப் பன்னிரண்டிற்கதிருறில் வாயுமிகு
மூந்துஞ்சரத்திற் புகர்மாலரவ மெழவொழிந்தோர்
வந்துஞ்சரத்துறில் வாயுப்புடைக்கு மதிநுதலே.

(எ-து.) புதனுடன் சுக்கிரன் சந்திரன் செவ்வாய் கூடிஉதிப்பச் சனி யேழாமிடத் தஸ்தமிக்க ஆதித்தியன் பன்னிரண்டாமிடத்து நிற்பினும், சுக்கிரனும் புதனு மிராகுவும் ஒருசரராசியிலுதிப்ப அல்லாதார சரராசியிலாதல் சராஙசகத்தேயாதல் நிற்பினும் பெருங்காற்றடிக்கும்—எ-று. (உகூ)

### இதுவுமது.

சுத்தக்கதிரினி லோரையொன்றுந்துய்ய பாகைபத்து
மெத்தப்புகவுய்த்து மேவியமண்டலத் திற்களைந்தாற்
சுத்தக்கணிதர்கள் வாயுபுடமென்பர் சந்திரன்மா
லொத்தபுகர்பாந்த ளுற்றவிடத்தேகில் வாயுவுண்டே.

(எ-து.) ஆதித்தியனுடைய சுத்தபுடத்திலே ஓராசியும் பத்துப்பாகையுங் கூட்டி மண்டலராசியிற் களைந்து நின்றசேடம் வாயுப்புடமாம். இதனையும் சந்திரன் புதன் சுக்கிரன் இராகு இவர்களுடைய புடத்தையும்வைத்தால் இவற்றில்வாயுபுடமிகுந்திருக்கிற் பெருங்காற்றடிக்குமெனக் கணிதசாஸ்திரிகள்கூறினர்—எ-று. (ங0)

### பூமிக்கிரணம்.

பட்டுக்கிடக்கச் சனிமதிநீரினைப் பற்றிநிற்ப
மட்டுற்றதார்வெள்ளி வந்தெழுங்காலை மரபில்வந்து
விட்டுக்கிடந்த நிலத்தின்மண்கொள்ளமே வார்கழியத்
தட்டின்றியேதன தாகுமென்றோதுவர் தாழ்குழலே

(எ-து.) சனியேழாமிடத்து அத்தமயமாகி நிற்பச் சந்திரன் நாலாமிடத்து நிற்பச் சுக்கிரனுதயத்துநிற்ப நெடுங்காலம் விட்டுக்கிடந்த நிலத்திற் பிரவேசித்து மிருத்திகை கொள்ளத்தனதாகுமென்று கூறுவர்—எ-று. (கூக)

இதுவுமது.

காரிதன்வாரோ தயவோரையிற்கரு தும்மிருத்தை
சேரவழக்கு நிலமண்கொள்சிவன் றிறத்துமஃதாஞ்
சாருங்குடத்திக் குடக்காலினிற்சனி வாரோதய
நேருநிலத்துறு மண்ணைமருந்துப நேரிழையே.

(எ-து.) சனிவாரத்துச் சனியிராசியான மகரகும்பங்களுக் கடைத்தாள்களிற் சனிநவாங்சகத்திருத்தையில வழக்குண்டானபூமியில் மிருத்திகைமீறிற் கிரகணம்பண்ணுக. வியாழக்கிழமையிலே வியாழனிராசியான தனு மீனங்களுக் கடைத்தநாள்களிலே வியாழன் நவாங்சகத் திருத்தையினுஞ் செய்குக. கும்பத்துக்கும்ப நவாங்சகத்துச் சனிவாரோதயத்துவிவாதநிலத்துமீறிற் கிரகணம்பண்ணவுந் தனதாகும். ()

இதுவுமது.

மகத்தின்மதிக்காலின் மாமதியுற்றெழ மன்னுகாரி
பகுத்தவரவிற் றனுவெழநக்காய்ப் பாந்தடரு
முகுர்த்தமதாயிட முன்னூரத்தாற்றவழ் வுற்றுவாயால்
வகுத்தவழக்குறு மண்ணுகாத்தன தாய்வருமே.

(எ-து.) மகநட்சத்திரத்து நாலாங்காலிற் சந்திரனுநிற்ப விவாதநிலத்துமீறிற் கிரகணம்பண்ணுக. ஆயிலியத்துத் தனுவுதயமாகச் சற்பமுகூர்த்தத்து ஈக்கினமாக மார்பாலேதவழ்ந்துபோய் விவாதநிலத்து மண்ணைப்புசிக்கத் தனதாகும்.

இதுவுமது.

பூவின்கொழுநன் கடைக்காலிற்றேன்பொறி கண்டெழவு
மெவும்விசாகத் தனுஷத்தவிற்றே ளவவனெழ
மாவலிசேயங்ச கத்துவழக்குறு மண்ணுகாக்
காவன்மதிநாளி லாங்கவன்கவெலெட்சி யுங்கருதே.

(எ-து.) திருவோணத்து நாலாங்காலிலே விரிச்சிகம் தனு கர்க்கடகம் உதயமாகவும் விசாகம் அனுஷம் இந்நாளில் தனு விரிச்சிகம் கர்க்கடகம உதயமாகவும் செவ்வாயங்சமாகவும் மிருகசீரிடத்துச் செவ்வாயங்சத்து மிதுனம் உதயமாகவும விவாதநிலத்து மண்ணைப்புசிக்கத் தனதாகும்—எ-று. இப்படி மீறிற்கிரகணமபண்ணப் புசிக்கத்தனதாகுமென்று விருகற்பதிவாக்கிய முண்டென்க. ஆகியுதயத்தையாங்கவன் காலெலெட்சியென்றார். (கூச)



சத்துருவசியம்.

அங்காரகன்கதிர் மாலணியெட்சியி னென்னவரைச்
*சங்காத்தங்கொள்பதம் வற்கோத்தமத்துத் தரும்வெள்ளிபொன்
மங்காதவெட்சியு நீரின்மதிவெள்ளி பொன்னெட்சியுஞ்
†சிங்காதமித்திர ராவர்செறுநரைக் கண்டிடிலே.

எ-து.) செவ்வாய் ஆதித்தியன் புதன் இம்மூவருமுதயத்தினிற்கவாதல் சுக்கிரன் வியாழன் வற்கோத்தமத்துநின்றுதயம் பெறவாதல் சந்திரனும் வெள்ளியும் நாலாமிடத்து நிற்ப வியாழனுதயத்தாதல் சத்துருக்களைக் கண்டு சினேகம்பண்ணக்கு[illegible] வுறவாவர்கள்-எ-று.

இது[illegible]

ஆட்சியின்மேவிப் புகர்நான்கினிற்[illegible]திய
மேட்சியினுற்றிட விவ்விதற்கோர[illegible]லெழிற்பொன்
மீட்சியநோக்குள தாகியகாலத்து பே[illegible]
நாட்பவநோக்கிட மித்திரராவர் தனி[illegible]

(எ-து.) சுக்கிரன் ஆட்சிபெ[illegible]ம் இடத்து நிற்பச்சந்திரனுதயத்தும் வியாழன் [illegible]டத்துநிற்பச் சத்துருக்களைக்கண்டு அவர்கள்பா[illegible]கத்தைப பார்க்க உறவாவர்கள்—எ-று. (கூரு)

மரம்வெட்ட.

சனியரவுற்றெழச் சாற்றியவிட்டி விடயோகத்தி
னினியெழிலோர்மரம் வெட்டவெட்டுண்ணு மெல்லாவிருத்தை
பனிமதிபொன்சுக் கிரன்பார்த்துநிற்குமாண் போரையினிற்
றனிசுநோய்தீரும் பகைகணிதுஞ்சிடிற் சாலநன்றே. (கூஎ)

*சங்காத்தம்-சினேகம்.
†சிங்கல்-குறைவு.

வெள்ளிக்கிழமையில் வெள்ளியுதித்திட வெண்மதிய
மன்னுறுதீக்கோ ளிராசியினினிற்ப வங்கண்மேவித்
தென்னுஞ்சனியிற் றலையுவாவிற்செய்யோ னுயிறெழ
வென்னுமாம் வெட்டமேவா ரழிவரினவளையே. (௩௮)

இவ்விருசெய்யுளுக்கும் ஏனையசெய்யுளைப் போல உரைவரையத்தக்கதன்று. ஆகையால் இவற்றின் பொருளைக் குருமுகமாகப் பெற்றுக்கொள்க.

சுத்தி.

காதன்மணம்புங் சவனமேழிற்காது குத்தன்முடி
யாதிமயிர்கல்வி நூலெட்டில்யாத்திரை யஞ்சிற்பத்தி
லோதருமூண்பன்னி ரண்டெட்டினில்வாத் துவந்திற்புகன்
மேதகுமேழெட்டொ டந்தமுஞ்சுத்தியாய் வேண்டுவரே.

(எ-து.) விவாகத்துக்கும் புங்சவனத்துக்கும் ௭ம் இடமும் கன்னவேதனத்துக்கும் முடிசூட்டன் முதலியவற்றிற்கும் சௌளத்திற்கும் வித்தியா பியாசத்துக்கும உபநயனத்திற்கும் ௮ம் இடமும் யாத்திரைக்கு ௫ம இடமும் அன்னப்பிராசனத்துக்கு ௧௦ ம் இடமும வாஸ்துவுக்கு ௮ ம்இடம் ௧௨ ம் இடமும் கிரகப்பிரவேசத்துக்கு ௭, ௮, ௧௨, இவ்விடங்களும சுத்தியாகக் கொள்வது—எ-று. (௩௯)

இதுவுமது.

மருந்துணர்மூன் றினிலாடையுடாறி னுவிலெட்டில்
விரும்பார்கடாபன மேவாரிரண்டிற் றனதானியம்
பொருந்தாருதயத்து மங்கையர்போகம் பதினொன் றினிற்
சுரும்பார்குழலாய் சிராத்தஞ்செய்யார்கோட்க டென்னிடிலே.

(எ-து.) ஔஷதமுண்பதற்கு ௩ம் இடமும் நவவஸ்திரந்தரிப்பதற்கு ௬ம் இடமும் தெய்வப்பிரதிட்டைக்கு ௪ம்இடம் ௮ம்இடமும் தனதானியங்கொள்ளற்கு ௧௨ம் இடமும் திரிபோகத்துக்கு உதயமும் சிராத்தத்துக்கு ௧௧ம் இடமும் சுத்தியாகக்கொள்வது—எ-று. (௪௦)

இதுவுமது.

மங்கலகாரியம் யாவிற்குமந்தமா றெட்டிடத்துந்
தங்குமதியுந்தவிரப் படுந்தளிர் மெல்லடியா



யிங்குறுசிவ னெழுமேனுநன் றன்றி யாத்திரைக
டங்கவதுவைகெடுஞ் சனித்தாலல்ல வாய்விடுமே.

(எ-து.) சகலமங்கல காரியங்களுக்கும் சந்திரன் ௧௨, ௬, ௮, இவ்விடந்தவிரப்படும். இக்காலம் வியாழனிலக்கினத்து நின்றாலுமகாது. இவ்விடங்களிற் சந்திரனிற்க யாத்திரைபோகி னாசமாம். விவாகஞ்செய்யில் விதவையாம். பிராணிகள் பிறக்கினு நாசமாம்—எ-று. (௪௧)

யோகினிவருந்திசை.

கொடிகரிதூமநாய் சீயங்கொடுவிடை வாயுவீச
னெடுவிண்ணிரய மெனுமடைவேநிறை பக்கத்தாதி
யடைவின்வருமென்ப யோகினியாந்திதி வாரநாளும்
வடுவென்பர்சூது வழக்கொடுபோர்வழி போதற்குமே.

(எ-து.) இந்திரன் குபேரன் அக்கினி நிருதி யமன் வருணன் வாயு இசானன் ஆகாயம் பூமி என்னுபத்துத்திக்கு மடைவே பூருவபக்கப்பிரதமைமுதல் தெசமியந்தம் யோகினிவரும். பின்பு ஏகாதசிமுதல் அபரபக்கப்பஞ்சமி யந்தமிப்படியே வரும். பின்பு சட்டிமுதலிப்படியே வரும். சூது வழக்கு யுத்தம் யாத்திரை இவற்றிற்குத் திதிவாரநாட் பிரதானமல்ல, யோகினிபிரதானம்—எ-று. ()

யோகினிவடிவம்.

நக்கம்விரித்த தலைவெள்ளைபூசிநா ணாரமின்றி
யக்கையணிந்துவெற் றோடேந்தியாரு வமங்கலியாஞ்
செக்கர்நிறத்தொரு சேயிழையோகினி தீயன்முன்னும்
பக்கத்திடத்தும் வலத்துடன்பின்னும் பலந்தருமே.

(எ-து.) யோகினிவடிவமாவது நிருவாணமும் விரிந்தகேசமும் சருவாங்கமும் வெண்ணீற்றுப் பூச்சும் மங்கலாபரணமின்றிச் சங்காபரணமும் கையில்வெறியகபாலமும் தீராதவமங்கலமான சிவந்தவருணமும் உடையயோகினியானவள் முன்னும் இடப்புறமுமாகாது, பின்னும் வலப்புறமு நன்றும்—எ-று. (௪௩)

ஆடல்பாடலரங்கேற்ற.

பூசம்பரணி யிரேவதிபூராடம் புள்ளறுவை
யீசன்கனன்முற நற்றிதியாழ்சிங்கந் தேட்குளிர்வில்

வீசுந்துலைமீ னெழுமதிமால்வெள்ளி பொன்றினத்துப்
பேசுறுமாடரங் கேற்றவும்பாடவும் பெற்றனவே.

(எ-து.) பூசம் பரணி இரேவதி பூராடம் அவிட்டம் சித்திரை திருவாதிரை கார்த்திகை விசாகம் இந்நாட்களிலே சுபதிதிகளில் மிதுனம் சிங்கம் விரிச்சிகம் கர்க்கடகம் தனு துலாம் மீனம் இவ்விராசிக ளுதயமாகத் திங்கள் புதன் வியாழன் வெள்ளி இவர்கள் வாரத்தில் கூத்துக் காப்பிய முதலிய பாட்டுக்களரங்கேற்றுவது—எ-று. (௪௪)

## அங்காதித்தியன்பலன்.

அருக்கனிலைநாண் முதன்மூன்றுமூன்று மைந்தெட்டுமெட்டு
நிரைத்ததலைவாய் வயிறுகைகீழ் கழனிற்பினேரே
தரைக்கிறைவன்பண் டிதன்றனவான்றன நாசனெங்கு
மிரப்புடையோனென் றறிபிறந்தோரை யினவலையே.

(எ-து.) அங்காதித்தியனறியும்படி ஆதித்தியனின்ற நாள் முதலாக யாவனொருவன் செனித்தநாள்வரையாக வெண்ணினால் ௩, நாட்தலையிலும் பின் ௩, நாள்வாயிலும் பின் ௫, நாள்வயிற்றிலும் பின் ௮, நாட்கையிலும் பின் ௮, நாட்காலிலுமாகக் கணித்துப் பிறந்தநாண் முதலாகப்பலன் சொல்லுக. தலையாகிற் பூலோகத்துக்கிராசாவாம். வாயாகில் வித்துவானாம். வயிறாகிற் றனபதியாம். கையாகிற் றனவீனனாம். காலாகிற் சகலவிடங்களிலு மியாசிப்பன்.

## அங்கச்சந்திரன்பலன்.

அண்டந்தொடைகணைக் கால்பதமுச்சிகண் வாய்செவிதோ
டொண்டையுரம்வயி றங்கச்சோமற்குத்தன் னோரைபற்றிக்
கண்டனரின்பநற் காலஞ்சுகநோய் கணிகைதுன்ப
மூண்டிடரின்பமொ டோகையிலாபநோ யுற்றிடுமே.

(எ-து.) அங்கச்சந்திரனறியும்படி சென்மராசி முதலாகப் பன்னிரண்டாமிடத்துக்கும் தலை தொடை கணைக் கால் கால்கள் உச்சி கண்கள் வாய் செவி தோழ்கள் கழுத்து மார்பு வயிறு இதற்கடைவே இன்பம் நற்காலம் சுகம் நோய் திரிசேர்வை துன்பம் உண்டி இடர் இன்பம் பிரியம் இலாபம் நோய் என்றிப்படிப் பலாபலனறிவது. ()



## அங்கச்செவ்வாய்பலன்.

அரைதொடைகாலுச்சி கண்வாயிருதோள் வயிறுநெஞ்சு
நிரையுறுதீக்குண மஞ்சாறுமால்கண் முதலங்கங்கை
தரைமகனுண்முதற் சாவிடர்சேதந் தனப்பேறுநோய்
விரவுறுபோக மகப்பேறிலாபநோய் வெள்வளையே.

(எ-து.) அங்கச் செவ்வாயறியும்படி செவ்வாய்நின்ற நாண்முதல் இருபத்தேழும் ௩, ௩, ௫, ௬, ௧, ௨, ௧, ௪, ௨, என்றடைவே அரை தொடை கால் உச்சி கண் வாய் இருதோள் வயிறு நெஞ்சு இவ்வொன்பதங்கமும் மரணம் இடர் பொருட்சேதம் பொருட்பேறு நோய் போகம் மகப்பேறு இலாபம் நோய் என்றிவ்வொன்பது பலனுமறிவது—எ-று. (௪௭)

## அங்கபுதன்பலன்.

பதந்தொடையண்டம் வயிறாந்தோண்முக முச்சியென்ற
சிதங்கணறிவினை பாலிடநான்குமா றென்றடைவே
புதன்செறிநாண்முதற் போக்குநற்போகம் புதல்வர்பேறு
விதம்படுநோய்பகை வேதனைசாவு மிகவுநன்றே.

(எ-து.) அங்கப்புதனறியும்படி புதனின்றநாண்முதல் இருபத்தேழும் ௧, ௩, ௩, ௨, ௫, ௩, ௪, ௬, என்றடைவே கால் தொடை தலை வயிறு மார்பு தோள் முகம் உச்சி இந்தவெட்டங்கமும் யாத்திரை போகம் புத்திரபேறு நோய் பகை துன்பம் மரணம் நன்மை என்றிவ்வெட்டுப் பலனுமறிவது—எ.று. (௪௮)

## அங்கவியாழன்பலன்.

தலைதோள்கழுத்தூரம் பாதம்வயிறுகண் டன்னில்பொன்
நிலைசேரநான்கு நான்கொன்றைந்துமா றைந்திரண்டிலுறி
லுலைவில்பெரும் போகமுண்டிமிகுதி யுலப்பிறிரு
நலமிகல்பீடை யிலாபஞ்சுகமென்பர் நன்னுதலே.

(எ-து.) அங்க வியாழனறியும்படி வியாழனின்ற நாண்முதல் இருபத்தேழும் ௪, ௪, ௪, ௫, ௬, ௫, ௨ என்றடைவே தலை தோள் கழுத்து மார்பு கால் வயிறு கண் இந்த

வேழுங்கமும் போகம் உண்டி செல்வம் பகை பீடை இலாபம் சுகம் என்றிவ்வேழு பலனுமறிவது—எ-று. (௪௯)

அங்கவெள்ளிபலன்.

உச்சிகண்வாய்கண்டந் தோளுரமுந்தி யிலிங்கமூரு
மெச்சிடுங்காலடி மேல்விரலெங்கணும் வெள்ளிதன்னை
வைச்சிடுமீன முதலுறமோரா வலமிடமா
ணிச்சயமாய்வல நன்றிடந்தீதுச்சி நிற்கைநன்றே;

(எ-து) அங்க வெள்ளியறியும்படி வெள்ளிநின்ற மீனமுதலிய ராசிவலநாளிட நாண்முதல் மீனம் மேடம் இடபம் மிதுனம் கர்க்கடகம் சிங்கம் கன்னி துலாம் விரிச்சிகம் தனு மகரம் கும்பம் என்றடைவே உச்சி கண் வாய் கழுத்து தோள் மார்பு வயிறு இலிங்கம் தொடை புறங்கால் உள்ளங்கால் மேல்விரல் இந்தப் பன்னிரண்டங்கமும் வலப்புறநன்று இடப்புறந்தீது இதிலுச்சிநன்று என்றிப் பன்னிரண்டு பலனுமறிவது—எ-று. (௫0)

அங்கச்சனிபலன்.

ஒன்றுநான்காறுநான் கோரைந்துமூன் றிரண் டேற்றிரண்டு
மென்றும்வாய்கைகா லிடக்கைவயிறுச்சி கண்ணிலிங்கம்
பொன்றுமாணம் வழிபோக்கிடர்திருப் போற்றுநன்மை
நன்றுதீதங்கச் சனிநின்றநாண்முத லெட்டிக்கொள்ளே.

(எ-து.) அங்கச்சனி யறியும்படி சனிநின்றநாண்முதல் இருபத்தேழும், க, ௪, ௬, ௪, ௫, ௩, உ, உ, என்றடைவே வாய் வலக்கை கால் இடக்கை வயிறு உச்சி கண் இலிங்கம் இவ்வெட்டங்கமும் அழிவு மரணம் வழிப்போக்கு இடர் செல்வம் நன்மை நன்று தீது என்றிவ்வெட்டுப் பலனுமறிவது—எ-று. (௫க)

எச்சவினைப்படல முற்றிற்று.

ஆகக்கலித்துறை-௫௩௫.

விதானமாலை
மூலமும் உரையும்
முற்றிற்று.



| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௮௭ | க௫ | க | குனிர் | குளிர் |
| ௮௯ | உஉ | ௭ | சொால்லி | சொல்லி |
| ௯௪ | க௨ | ௯ | இயிராசி | இராசி |
| ௯௫ | க௬ | கக | கோதி | சோதி |
| ,, | ,, | க௫ | வேண்ணி | வெண்ணி |
| ௯௮ | உஉ | க௪ | ரர்ரு | ரரு |
| க௨௭ | க௪ | ௪ | கதித்ரு | கதிருத் |
| க௨௮ | க௬ | ௮ | திருவேணம் | திருவோணம் |
| க௨௯ | க௯ | ௬ | அந்திர | அத்திர |
| ,, | ,, | க0 | கற்ப்ப | கற்கப்ப |
| க௩௫ | ௩௬ | ௪ | மளமே | மனமே |
| க௪0 | க௫ | உ | நொற் | நெற் |
| க௪௪ | அ | ௬ | த்துகு | ந்துகு |
| ,, | க0 | க | கோன் | கோள் |
| க௪௬ | உ | ௯ | றுமத்தி | துமத்தி |
| க௪௮ | எ | ௪ | பொய் | மொய் |
| க௫௪ | க௩ | க | நான் | நாண் |
| ,, | ,, | உ | முரோ | மிரோ |
| க௫௬ | க௯ | உ | லுவாலி | லுவாவி |
| க௫௭ | உ | ௫ | தெள்ளி | தள்ளி |
| க௫௯ | எ | ௫ | மூத்திராட | மூத்திராட் |
| க௬க | உ | எ | யிருக்ருங் | யிருக்குங் |
| க௬௯ | ௪ | எ | ணி இராசி | ளி இராசி |
| க௭0 | ௯ | ௬ | மிருசி | மிருகசி |
| க௭௨ | க௪ | க | வன்ஞளில் | வந்நாளில் |
| க௭௪ | ௪ | ௫ | அக்கினிப்பற் | அக்கினிபற் |
| க௮௩ | க௪ | ௬ | கரண | காண |
| க௮௫ | க௮ | உ | றன்ஞடு | றன்றொடு |
| ,, | உ0 | உ | கோதி | சோதி |
| க௮௮ | உ௬ | ௫ | காள் | நாள் |
| க௮௯ | உ௯ | ௬ | தஸத | தத்த |
| க௯௩ | ௪௩ | எ | மகாதி | மாகாது |
| ,, | ௪௨ | ௬ | என்னுபத்து | என்னும்பத்து |

அச்சுப்பிழையென [...] புலப்படும் பிழைகள் ஈண்டுக் குறி[...]ப்படவில்லை.

0-,194MN51V M81
165404

# பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௨ | ௪ | ௧ | முன்னீர் | மூந்நீர் |
| ௩ | ௫ | ௧௪ | இஷ்மும் | இஷுமும் |
| ௬ | ௧௦ | ௮ | அசுப | அசுவ |
| ,, | ௧௨ | ௭ | றிபுட்கர | ரிபுட்கர |
| ௭ | ௧௪ | ௯ | பொன்ற | பனென்ற |
| ,, | ௨ | ௨ | மாலிங் | மாலுங் |
| ௧௦ | ௨ | ௩ | நற்செயி | செவிநல்லி |
| ,, | ௪ | ௮ | மென்று | மென்றுஞ் |
| ௧௨ | ௮ | ௪ | நீர்கட | நீராட |
| ௧௪ | ௧௩ | ௪ | தார் | தாழ் |
| ௧௬ | ௧௯ | ௨ | முகத்தாண் | முகத்தாங் |
| ,, | ௨௦ | ௭ | பூரம் | பூசம் |
| ௧௮ | ௨௪ | ௧ | மாறுங் | மாறு |
| ,, | ,, | ௧௧ | தேழு | தேழுமாம் |
| ,, | ௨௩ | ௧ | வன்றெ | வங்நா |
| ௨௩ | ௪ | ௭ | திதிரியை | திரிதியை |
| ,, | ௬ | ௨ | சுழகு | சுளகு |
| ,, | ௭ | ௪ | நாயயோக | நாசயோக |
| ௨௫ | ௧௧ | ௨ | ரங்கத்தவிட்ட | ரங்கியவிட்ட |
| ௩௦ | ௨௬ | ௧௦ | கும்பத் | குப்பத் |
| ,, | ௨௭ | ௧ | ரோழிகலை | ரோழிற்கலை |
| ௩௪ | ௪௦ | ௪ | வைப்பென் | வெப்பென் |
| ௩௬ | ௪௫ | ௩ | சிவன் | சீவன் |
| ௩௯ | ௫௩ | ௧ | காணமங்சங் | காணமங்சகங் |
| ,, | ,, | ௫ | காணை | காணை |
| ௪௭ | ௭௫ | ௮ | ஐங்தும் | அனைத்தும் |
| ௫௩ | ௯௧ | ௨ | ரராகு | ராகு |
| ௫௬ | ௧௦௦ | ௧ | மிரண்டிற் | மிரண்டிற்கு |
| ௬௧ | ௧௧௨ | ௮ | மைகு | மைக்கு |
| ௬௩ | ௧௧௯ | ௪ | திடு | திட |
| ௬௬ | ௪ | ௧ | திரித்தெறன் | திரித்தறன் |
| ௭௧ | ௧௧ | ௪ | வாறெழு | வாறேழு |
| ௭௩ | ௧௫ | ௮ | போறனி | போகிற |
| ௭௮ | ௨ | ௩ | காணை | காணை |
| ,, | ,, | ௧௧ | காணை | காணை |
| ௮௦ | ௨ | ௭ | கனிக்கு | சனிக்கு |